www.padippakam.com

# எதுவரை?

பெப். – மார்ச், 2010

மரணத்திலிருந்து வாழ்விற்கு...
















## ஃபஹீமா ஜஹான் கவிதைகள்

எம். ஏ. நுஃமான்

## மிக ஏழ்மையான மக்கள் ஏன் இந்த அமைப்பின் தலைவர்களை கொலைசெய்ய விரும்புகின்றனர்?

## ஜனநாயகத்தையும் பன்முகத் தன்மையையும் உறுதிப்படுத்த தேவை ஓர் அரசியல் வலுமிக்க கூட்டணி

– ஓமர்

## இந்து சமுத்திரத்தில் வல்லரசுப் பலப்பரீட்சை, இலங்கை உள் நாட்டுப் போரின் பூகோள அரசியல்

–மஹ்டி டாரியஸ் நஸெம்றோயா

படிப்பகம்

www.padippakam.com




எதுவரை முதல் இதழ் சிறப்பான வடிவமைப்பில் வெளிவந்துள்ளது. புலம்பெயர்நாடுகளிலிருந்து வெளிவந்த சஞ்சிகைகளுள் இச்சஞ்சிகை வித்தியாசமான தோற்றப்பாட்டையும் வடிவ அழகியலையும் கொண்டுள்ளது. சஞ்சிகைக்கான ஆக்கங்களைப் பெறுவதில் எதிர்கொள்ளும் பிரச்சினை, இதழை நடத்துவதில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாகும். புலம்பெயர்நாடுகளின் படைப்புச் சூழல் என்பது அண்மைக்காலத்தில் பெரும் தேக்க நிலையையே எட்டியுள்ளது. உங்கள் இதழில் அ.மார்க்ஸ், ஜமாலன், போன்றவர்களுடன், நிர்மலா, பி.ஏ.காதர், கலையரசன், சோபாசக்தி, ஆகியோருடன் இலங்கையிலிருந்தும் எழுத்தாளர்கள், படைப்பாளர்கள் எழுதியுள்ளது மிகப் பரந்த வாசிப்புத்தளத்தைத் தருகிறது.

சோபாசக்தியின் சிறுகதை அவரின் சிறந்த ஆற்றலை, புனைவு மனத்தை மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது. ஜமாலனின் கட்டுரையில் அவர் சுட்டிக்காட்டுகின்ற பல்வேறு விடயங்களில் நாம் உடன்பட்டாலும் இலங்கை அரசியல், அதன் உள்விடயங்கள் தொடர்பான அவரது பார்வை குறைபாட்டுடன் உள்ளது. இது ஜமாலனுக்கு மட்டுமல்ல பல வெளிநாட்டு எழுத்தாளர்களுக்கும் பொதுவானதே. இலங்கைப் பிரச்சினையில் சிங்கள அரசியல் தலைமைகள் மட்டுமின்றி தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகளும் இழைத்த, இழைத்து வருகின்ற தவறுகள் நிலைமையைச் சிக்கலாக்கியுள்ளது.

இரண்டாவது இதழில் எஸ்.வி.ராஜதுரை எழுதியுள்ள ஒரு மைய உலகமும் தேசிய இன விடுதலையும் என்ற கட்டுரை மிகவும் முக்கியத்துவமானது. தமிழ்த் தேசியவாதிகள் தங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமானால் இக்கட்டுரையை வாசித்து புரிந்து கொள்வது அவசியம். எஸ்.வி.ஆர்., திருநாவுக்கரசு எழுதிய நூல் தொடர்பாக அவரது முன்னுரையை பிரசுரிக்க மறுத்தமையையும், அதனை இருட்டடிப்புச் செய்ததும் தனிமனித முடிவு என்பதற்கு அப்பால், தீவிர தமிழ் தேசியத்தின் அடிப்படை பண்புகளின் பாற்பட்டதே அது. இதனை எஸ்.வி.ஆர். நன்கு புரிந்து கொண்டிருப்பார். தேசிய இனப்பிரச்சினையில் சர்வதேசத் தலையீட்டை புரிந்து கொள்ளாமல் முன்னே செல்வதற்கு இலங்கை மக்களுக்கு எந்த வழியுமில்லை என்பதே நடைமுறை யதார்த்தமாகும். பாஸ்கரனின் கட்டுரையும் இதனுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.

**கிருபாகரன் வசந்தன், இலண்டன்.**

இதழ் இரண்டின் ஆசிரியர் குறிப்பு இலங்கையின் நிலைமையை மிகத் துல்லியமாக எடுத்தியம்புகிறது. புகலி இணையத்தளமும் ஆசிரியர் கருத்தை மீள் பிரசுரம் செய்திருந்தது." இலங்கையின் இன்றைய அரசானது புலிகளுக்கு எந்த வகையிலும் குறைவில்லாத வகையில் மிக மோசமான பாசிச குணாம்சங்களைத் தனக்குள்ளே மேலும் அதிகரித்து நாட்டு மக்களையும் சமூக, அரசியல் இயக்கங்களையும் அதன் செயற்பாடுகளையும் மோசமாக நசுக்கி வருவது நமக்கு முன்னுள்ள சவாலாக எழுந்துள்ளது" என்கிற கருத்து நடைமுறையில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்தை இன, மொழி, கட்சி நிலைகளுக்கு அப்பால் நின்று அனைவரும் அணுகவேண்டியுள்ளது.


புஸ்பராணியின் நேர்காணல் அவரது உணர்வுகளை, பங்களிப்பை ஆவணப்படுத்தியுள்ளது. சோபாசக்தி அவரை நேர்கண்டுள்ளது சிறப்பானது. அவர் நேர்காணலில் தெரிவித்துள்ள பல கருத்துக்கள், அவரது சகோதரர் புஸ்பராசா எழுதிய "ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்" நூலில் உள்ள கருத்துகள், தரவுகளுடன் பல இடங்களில் முரண்படுகிறது. "இனமொட்டைச் சிறு புழுதியின் " கதியிழந்த மக்கள் அல்லது கடவுளிடமிருந்து எம்மைக்காப்பாற்றிக் கொள்ளல்" எனும் பத்தி, ஆழமான சிந்தனையையும் நாம் கொண்டுள்ள கருத்துக்கள் தொடர்பான அதிர்வையும், மறு வாசிப்பையும் வேண்டி நிற்கிறது. அவர் தொடர்ந்து புனைபெயரிலாவது எழுத வேண்டும்.

களனி பல்கலைக்கழக பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன நேர்காணல் நமக்கு சிங்கள மக்களின் இன்னொரு பிரிவினரின் மன உணர்வை தெளிவாக எடுத்தியம்பி நிற்கிறது. இங்கு புலம்பெயர் நாடுகளில் சிங்களவர்கள் அனைவரும் எதிரிகள் எனத் தமிழ் இனவாத உணர்வை வளர்ப்பவர்கள் யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளத் தயாரில்லாதவர்கள்.

துரோகிகள், எதிரிகள் எனும் கதையாடல்கள் மே 18க்குப் பின் என்ன நிலைமையை அடைந்திருக்கிறது என்பதை பார்த்தால் இவர்களின் காட்டுக் கூச்சல்களின் அபத்தத்தை அறிந்து கொள்ளமுடியும். புதிய வழிமுறைகளையும் சிந்தனைகளையும் கோரும் செயற்பாடுகளே நமக்கு முன்னுள்ள தேவையாகும். இதற்கு முக்கியத்துவம் அளியுங்கள்.

**அருணன், பிரான்ஸ்.**

(தொடர்ச்சி 79ஆம் பக்கம்)




படிப்பகம்

www.padippakam.com

Eathuvarai
Bi-Monthly ■ February-March 2010

# 03

எதுவரை ?
இருமாத இதழ்

பெப்ரவரி-மார்ச் 2010




இதழ்களைப் பார்வையிட
www.eathuvarai.wordpress.com

**03**

ஆசிரியர்
M.Fauzer

உதவி ஆசிரியர்
L.Theva Athiran

தொடர்ச்சியாக
கொணர்வதற்கு பங்காற்றும்
கூட்டு முயற்சி இது.

தொடர்புகளுக்கு:
e-mail: eathuvarai@gmail.com
Tel : 0044-7912 324 634
02, Langley Walk
Crawley
RH11 7LR
U.K.

இலங்கைத் தொடர்புகளுக்கு:
0773112601 (தேவஅதிரன்)

தமிழகத் தொடர்புகளுக்கு:
9443066449 (சிராஜுதீன்)
பாரதி புத்தகாலயம்
7, இளங்கோ சாலை
தேனாம்பேட்டை, சென்னை

வடிவமைப்பு
S.Anurjan
www.dsignslab.com
+94 (0) 775383139

Private Circulation Only

**கட்டுரை:**

31 புறக்கணிக்கப்பட்ட குரல்களின் சரித்திரத்துக்கு பின்னாலிருக்கும் உண்மைகள்
**கரன்**

50 ஈழச் சிக்கலும் புறநாநூற்று வீரம் எனும் புனைவும்
**பாஸ்கர்**

64 மகிந்த ராஜபக்ஸவை சுற்றியுள்ள நெருக்கடிகள் அல்லது ராஜபக்ஸ குடும்பத்தின் எதிர்காலம்
**கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்**

68 ஜனநாயகத்தையும் பன்முகத் தன்மையையும் உறுதிப்படுத்த ஓர் அரசியல் வலுமிக்க கூட்டணி தேவை...
**ஓமர்**

**திறனாய்வு:**

23 ஃபஹீமா ஜஹான் கவிதைகள்
**எம்.ஏ.நுஃமான்**

73 தாமரைச்செல்வி
**கருணாகரன்**

**நேர்காணல்:**

15 மிக ஏழ்மையான மக்கள் ஏன் இந்த அமைப்பின் தலைவர்களை கொலைசெய்ய விரும்புகின்றனர்
**சாய்பாபா**

41 ஒரு விநாடி உணர்வை எழுத எத்தனை பக்கங்கள் , அப்படியும் முழுமை கிட்டுவதில்லை.
**சூந்தன்**

**சிறுகதை:**

09 அரசனும் குதிரை வீரனும் அழியும் காலத்தின் சனங்களும்
**ஜேகன் அபூர்வன்**

**திரைமொழி:**

05 அப்பாஸ் ஹெரொஸ்ரமி
**தமிழில்-ஜி.ரி.கேதாரநாதன்**

**சர்வதேசம்:**

56 இந்துசமுத்திரத்தில் வல்லரசுப் பலப்பரீட்சை இலங்கை உள்நாட்டுப் போரின் பூகோள அரசியல்
**மஹ்டி டாரியஸ் நஸெம்றோயா**

**கவிதை:**

- தர்மினி
- தவ-சஜிதரன்
- யாதுமானவன்
- தீபச்செல்வன்
- சித்தாந்தன்

படிப்பகம்

www.padippakam.com



“இலங்கையின் பெருமளவிலான மக்கள் மோசமான உளவியல் நெருக்கடிக்குள்ளாகி தவிக்கின்றனர்.” என்று சொல்கிறது அண்மையில் வெளிவந்த ஆய்வறிக்கையொன்று. இதன் அர்த்த அடியாழத்தை புரிந்து கொள்ள முயற்சிப்பதே பெரும் கலக்கத்தையும் அச்சத்தையும் நமக்கு தருவதாக உள்ளது. இந்த உண்மைச் சித்தரிப்புக்கு மத்தியில் தான், இந்நிலையை மாற்றுவதற்கான சிந்தனை, செயன்முறைகளையிட்டு பேசவும் உரையாடவுமான வெளிகளை உருவாக்க வேண்டியுள்ளது. இந்த இயங்கியல் விதி வரலாற்றில் நமக்கு மட்டுமான புதியதொரு போக்கல்ல என்பதும் வெளிப்படையானது.

● ● ●

கடந்த முப்பது வருட காலத்திற்குள் இலங்கையில் உருவான பல் மொழிகளில் எழுதக்கூடிய எழுத்தாளர்கள், அரசினாலும் ஆயுத இயக்கங்களினாலும் தனிமனித அதிகாரங்களினாலும் உயிர்கள் பறிக்கப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும், தாய் நாடு இழந்தவர்களாக துரத்தப்பட்டும் நெருக்கடிகளை எதிர்கொண்டபோதும் எழுத்தியக்கம் ஓயவில்லை. இந்த உண்மைக்கு இலங்கையின் தமிழ் மொழிக் களன் விதிவிலக்கானதல்ல.

மூத்த எழுத்தாளர்கள், அடுத்த தலைமுறை எழுத்தாளர்கள், புதிய தலைமுறை எழுத்தாளர்கள் அனைவரும் நெருக்கடிக் காலகட்ட எழுத்தாளர்களாகவே கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். நமது இலங்கை தமிழ் மொழிச் சூழல் மூன்று தலைமுறை எழுத்தாளர்களால் இலங்கை, புலம்பெயர் நாடுகளென பரந்தும் விரிந்தும் கிடக்கிறது. படைப்பூக்கமும் சிந்தனைத் திறனும் துணிச்சலும் வாய்க்கப்பெற்ற புதிய தலைமுறை தமது அனுபவங்களையும் பார்வைகளையும் இணையவழி எழுத்தினூடாக பதிவு செய்து வருகிறது. எழுத்திற்கான களத்தை அகலிக்கவும் மானிட அனுபவத்தை தரிசிக்கவுமான வல்லமை நமது எழுத்தாளர்களிடமுள்ளது. அதன் உச்ச விளைச்சலை இனிநாம் பெறத்தான் போகிறோம்.

இதனை சாத்தியப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாகவே “எதுவரை” இதழ் வெளிவரவேண்டும் என்பதே எமது நோக்கும் இலக்கும். இந்தச் சிறுமுயற்சி தேக்கமுறாது முன்செல்ல உங்கள் அனைவரதும் பங்களிப்புத் தேவை!

தோழமையுடன்

**ஆசிரியர்**

---

எதுவரை இரண்டாவது இதழ் பிரதி தணிக்கையின் காரணமாக இலங்கையில் கிடைக்காதபடியினால் அதன் ஆசிரியர் தலையங்கத்தின் ஒரு சில பகுதிகளை இங்கு மீள் பிரசுரம் செய்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com



# அதிகாரத்தை நோக்கிய மாற்றுக் குரல்கள் தொடர்க.... : எம்.பௌசர்

இலங்கை இன்று மிக மோசமான அரசியல் சூழலுக்குள் தள்ளப்பட்டு நிற்கிறது. உள்நாட்டளவில் தீர்க்கப்பட வேண்டிய பல்வேறு பிரச்சினைகள் விசுவரூபம் கொண்டுள்ள அதேவேளை, உலகின் பல்வேறு நாடுகளின் ஆதிக்கப் போட்டியும் இலங்கை மீது அழுத்தமாய் கால்பதித்து வருகிறது.

தேசிய இனப்பிரச்சினை, யுத்தத்தின் பின்விளைவாய் தோன்றியுள்ள அகதிகள், பொருளாதார நெருக்கடி, ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல்கள், புனர்வாழ்வு புனரமைப்பு, அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் உள்நாட்டளவில் முக்கியத்துவமாக உள்ளன.

சர்வதேச ரீதியாக உலக ஆதிக்கப் போட்டியின் காரணமாக தெற்காசியாவின் பகடைக்காயாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது. இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளின் நலன்களுக்கான அரசியல் போட்டிக் களமாக இலங்கை மாறியும் விட்டது.

இந்த நிலையில், நாம் இலங்கை அரசை முற்றுமுழுதாக ஆதரிப்பதோ, தமிழ்த் தேசியவாதத்தை ஆரத்தழுவி நிற்பதோ இந்த நெருக்கடியை சரியாக அணுகுவதில் பாரிய குறைபாடுகளையும், தவறான அர்த்தப்பாடுகளையும் கொண்டுவந்து சேர்க்கும் என்பது உறுதியானது! நாம் இந்த விடயங்களை அணுகுவதற்கு நமக்குள் பரந்துபட்டதும், பன்மைத்துவமானதுமான சிந்தனைகளைக் கொண்டு தெளிவான அடித்தளத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

**தேசிய இனப்பிரச்சினை**

காலனித்துவ ஆட்சியின் காரணமாக உருவான தேசிய இனப்பிரச்சினை, 60 வருட காலமாக நீடித்து வருகிறது.

மோதல், முரண்பாடுகள், இராணுவ வழிமுறைகள் என தொடர்ந்த, தொடரும் இந்த அடிப்படைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவது அவசியமாகும்.

இலங்கையின் தேசிய சிறுபான்மை இனங்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவவழி மூலம் தீர்வைக் காண முடியாது! அரசியல் தீர்வின் மூலமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டாக வேண்டும். அரசியல் தீர்வை முன்வைப்பதில் இன்றைய மகிந்த ராஜபக்ச அரசு எந்த ஆர்வத்தையும் காட்டவில்லை. அரசியல் தீர்விற்கான நம்பிக்கை அரசிடமிருந்து வெளிப்படாத நிலையில், நாடு நீண்ட காலமாய் எதிர்கொள்கின்ற இனமுரண்பாடு முடிவுக்கு வந்து விடுமென நம்புவது முட்டாள்தனமின்றி வேறில்லை.

விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வி தமிழ் மக்களின் தோல்வி அல்ல. இலங்கை அரசும், விடுதலைப்புலி ஆதரவாளர்களும் இந்த விடயத்தை ஒரே பார்வையிலேயே அணுகுகின்றனர்.

அரசு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவையற்றது என்கிறது. புலி ஆதரவாளர்கள் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டதால் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படாது என்கின்றனர். அரசு, புலிகள் என்கிற இருவேறு அதிகார மையங்களுக்கு இடையில் இந்தப் பிரச்சினை சிக்குண்டு அலைக்கழிக்கப்பட்டது இனிப் போதும்.

யுத்தம் முடிந்துவிட்டது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

ஆனால், இந்த யுத்தம் /முரண்பாடு ஏற்படக் காரணமாயிருந்த அரசியல் சமூகக் காரணிகள் இன்னமும் அழிந்துவிடாமல், முன்பைக் காட்டிலும் மேலும் இறுக்கமடைந்தேயுள்ளது.

இந்த நிலைமையானது நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் இலங்கையின் அனைத்து இன மக்களையும் வெவ்வேறு வழிகளில் மோதலும் முரணுமான சூழலுக்கே கொண்டு சென்று தள்ளும். இது அரசியலின் தவிர்க்க முடியாத விதியாகவும் உள்ளது.

**யுத்தத்தின் விளைவாய் தோன்றியுள்ள அகதிகள்**

அரசு என்ற வகையில் போரின் காரணமாக இடம்பெயரும் மக்களின் பாதுகாப்பினையும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறுவதனையும் உறுதிப்படுத்தி இருக்க வேண்டும் - இந்த மக்களின் இடப்பெயர்வு திடீரென ஏற்பட்டதொன்றல்ல. ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான் - அரசுதான் அந்த மக்களை தமது கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வருமாறு அழைத்தது - வந்த பொதுமக்களை கவுரவமாக நடாத்துவதிலும், பராமரிப்பதிலும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் அரசு முழுமையாகத் தவறிவிட்டிருக்கிறது.

இம்மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களில் இலங்கை படையினரின் பாரிய முகாம்களை நிறுவுவதும், பாதுகாப்பு வலயங்களை உருவாக்குவதும்,



படிப்பகம்

www.padippakam.com



வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிலங்களை ஒதுக்குவதும், வளங்களை கையகப்படுத்துவதும் நடந்து வருகிறது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ள மக்களின் பிரச்சினைகளுடன் வடக்கிலிருந்து புலிகளால் துரத்தியடிக்கப்பட்ட ஒரு லட்சம் முஸ்லிம்கள் இன்னமும் வடக்கிற்கு வெளியில் தான் வாழ்கின்றனர். யுத்தத்தின் காரணமாய் கிழக்கு மாகாணத்திலும் ஏற்பட்ட அகதிகளின் இருப்பு இன்னமும் தொடர்கிறது. யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு வலயம் என்றபோர்வையில் ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்க்கப்பட்டுள்ளனர். இம்மக்கள் அனைவரையும் புனர்வாழ்வளித்து மீள்குடியேற்றம் செய்வது உடனடி அவசியமானதாகும்.

**பொருளாதார நெருக்கடி**

நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் தமது அன்றாட வாழ்வை கொண்டு செலுத்துவதற்கான வாங்கும் சக்தியை இழந்தவர்களாகவே உள்ளனர். விலைவாசி ஏற்றம், உற்பத்தி வீழ்ச்சி, உள்ளூர் சந்தைச் சுருக்கம்,வேலையில்லாத் திண்டாட்டம், தனிநபர் கடன் சுமை அதிகரிப்பு, மக்கள் மீதான வரிச்சுமை என்பன மக்களை பாதித்து நிற்கிறது.

நாடு தழுவிய ரீதியில் போரின் காரணமாகவும், போருக்கு பிந்தியும் அதே இராணுவக் கட்டுமானத்தை தொடர்ந்தும் அரசு பேண முயல்வதால் ஏற்படும் இராணுவச் செலவீனங்கள், வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வளச் சுரண்டல், மூலதனச் சுரண்டல் என முழு நாட்டையும் கபளீகரம் செய்யும் வகையில் பொருளாதார நெருக்கடி மோசமாக தலைவிரித்தாடுகிறது. இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசு, அவசர அவசரமாக செய்கின்ற வெளிநாட்டுக் கடன், பொருளாதார ஒப்பந்தங்கள், சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் ஆகியன நாட்டை திவாலாக்கி பொருளாதார நெருக்கடிக்கே இட்டுச்செல்லும்.

**ஜனநாயக மறுப்பு**

இலங்கை அரசுக் கட்டமைப்பே ஒரு விதத்தில் ஜனநாயக மறுப்பை அடிப்படையாகக் கொண்டதுதான். பல்வேறு இனங்களின், பிராந்தியங்களின், அடையாளங்களின் சமத்துவத்தை மறுத்து ஒற்றைப் பரிமாணத்தில் செயற்படும் தன்மையைக் கொண்டுள்ளது. அதனுடன் சேர்த்து தற்போது மேலோங்கியுள்ள இராணுவவாத அணுகுமுறை, மோசமான ஜனநாயக மறுப்பிற்கு இட்டுச்சென்றுள்ளது. அவசர கால நிலைமை தொடர்ந்தும் நீடிக்கப்படுகிறது. ஊடகங்கள் மோசமாக அடக்கப்படுதலும் கண்காணிக்கப்படுதலும், எந்தவிதமான வரன்முறையும் இன்றி கைது செய்யப்படுதல் தடுத்து வைக்கப்படுதல் கொல்லப்படுதல், எதிர்க்கட்சிகளின் சுதந்திரமான அரசியல் செயற்பாடுகளுக்கு இடையூறு, தொழிற்சங்கங்களின் போராட்டங்களுக்கு காயடிப்பு, இன, மத, அரசியல், சமூக அடையாளங்களை இல்லாது ஒழிப்பதற்கான அரசியலமைப்பு ஏற்பாடுகள், சிவில் பதவிகளில் இராணுவ அதிகாரிகளின் நியமனம் இவைகள் மோசமான ஜனநாயக மறுப்பின் தெளிவான அடையாளங்களாகும்.

**புனர்வாழ்வு - புனரமைப்பு**

பாதுகாப்பு மைய அணுகுமுறையிலான புனரமைப்பு, மீள்குடியேற்றம் நடைபெறுவது தவிர்க்கப்பட வேண்டும். கவுரவமான சிவில் வாழ்க்கை வாழ்வதற்கான அடிப்படையை உருவாக்கும் வகையில்தான் இம்மக்களின் புனர்வாழ்வு மீள்குடியேற்றங்கள் நடைபெற வேண்டும்.

போரில் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ள கைம்பெண்கள், ஆதரவற்றோர், அங்கவீனமுற்றோருக்கு சகல வாழ்வாதார வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். விவசாயிகள், மீனவர்கள், சிறு உற்பத்தியாளர்கள், கைவினைஞர்கள், வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஆதாரமான உதவிகள் செய்யப்படுதல் வேண்டும்.

**இனப்பிரச்சினைக்கு தீர்வு**

இலங்கைவாழ் அனைத்து மக்களும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வும், சமூக இணக்கமிக்க வாழ்வுக்கான வாசல் திறப்பும், தேசிய இனப் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பதில்தான் தங்கியுள்ளது. மோதலற்ற வாழ்வு, பொருளாதார வளர்ச்சி, மனித உரிமையும் சமத்துவத்தையும் நிலைபெறச்செய்தல், நல்லாட்சி என்பன மலர்வதற்கு இலங்கையின் அரசியலமைப்பில் உரிய ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியமாகும்.

தமிழீழம் என்பது சாத்தியமற்ற அரசியல் கோரிக்கை என்பதுடன் தோல்வியுற்ற, மக்கள் மீது அழிவுகளை தொணர்ந்த அரசியல் வழிமுறையுமாகும். அக்கோரிக்கை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே மேலும் முரண்பாடுகளை ஏற்படுத்திய நிலைபாடுமாகும். அதேபோல் ஒற்றையாட்சி என்பதும், சிங்கள அரசு என்பதும் ஏற்கக்கூடியதல்ல. சமஷ்டி அடிப்படையில் பிராந்தியங்களுக்கு சுயாட்சியை வழங்குவதன் மூலமே இலங்கையின் ஒருமைப்பாட்டையும், இனத்துவ, பிராந்திய சமத்துவத்தையும் உறுதிப்படுத்த முடியும்.

(தொடர்ச்சி 49ஆம் பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com






ABBAS KIAROSTAMI

# அப்பாஸ் ஹெரொஸ்ரமி

(ஆங்கில மூலம்) மாயாயாகி தமிழில் - ஜி.ரி.கேதாரநாதன்



அப்பாஸ் ஹெரொஸ்ரமி சினிமாவைப் பொறுத்தவரையில் ஒரு மேதையாவார். அவர் யதார்த்தங்களை முற்றிலும் புதிய பார்வைக் கோணத்தில் அணுகுகிறார். சிறுசிறு, விடயங்கள் மற்றும் சம்பவங்கள் போன்றவற்றின் அடியாழங்களை அவர் தரிசிக்கிறார். அவற்றின் சலனங்களை நன்கு புரிந்து கொண்டு மறுசிருஷ்டியில் இறங்கும் அவருக்கு அது அதி அற்புதமாக சித்திக்கின்றது. இதற்குள் ஒரு அழகியல் அவர் வசப்பட்டுவிடுகிறது. கட்டுப்பாடான தணிக்கை முறைகளில் இருந்து தமது கலைப்படைப்புக்கு பங்கம் நேர்ந்து விடாது முன்கூட்டியே பார்த்துக் கொள்வதில் அவர் மிகுந்த சாமர்த்தியசாலி. சினிமா, இறுதியில் நெறியாளரின் ஊடகம்தான் என்பது அவரை பொறுத்தவரையில் முற்றிலும் மெய்மையானதொரு கூற்றே என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அப்பாஸ் ஹெரொஸ்ரமி 1990இல் தனது 50ஆவது பிறந்தநாளை கொண்டாடவிருந்த வேளையிலேயே வட ஈரானை பூகம்பம் தாக்கியது. அவர் அப்போது தனது மகனுடன் ஈரானின் தலை நகரில் இருந்து தாக்குதலுக்கு இலக்கான பிராந்தியத் திற்கு காரிலே பயணம் செய்து கொண்டிருந்தார். அவரது உன்னதமான படைப்புக்களில் where is the friend's home திரைப்படத்திற்கு அப்பிராந்தியமே களமாகவிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. சிறு வர்களது மன உலகின் மீது தங்குதடையின்றி ஆழ மான பார்வையைச் செலுத்திய திரைப்படம் அது வாகும். வகுப்பாசிரியரின் தண்டனையில் இருந்து தன்னுடன் கற்கும் சகமாணவனை காக்க வேண்டு மென்பதற்காக அம்மாணவனிடம் இரவல் வாங்கிய அப்பியாசக் கொப்பியைத் திருப்பிக் கொடுப்பதற்கு தீவிர முனைப்புக் கொள்ளும் மாணவன் ஒருவனின் கதையே அத்திரைப்படமாகும். அதில் பெரிய வர்களிடம் என்றோ தொலைந்துபோன ஆனால் சிறுவர்களிடம் நிலைத்திருக்கும் கராரானதும் அப்பாவித்தனமானதுமான ஒழுக்கக் கடப்பாட்



படிப்பகம்

www.padippakam.com

டினை வெகு அற்புதமாக சித்தரித்திருந்தார். 1989 லொக்கானோ திரைப்பட விழாவில் அத்திரைப்படம் ஹெரொஸ்ரமிக்கு ஈடற்ற புகழைத் தேடிக் கொடுத்ததை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. பூகம்பத்திற்கு இலக்கான அப்பிராந்தியத்திற்குள் பயணம் செய்தபோது ஆழமானதொரு பாதிப்பு அவரது படைப்பு மனோநிலைக்கு நேர்ந்ததாக அவர் தெரிவித்திருந்தார். நேரடியாகவும் மிக அருகருகாகவும் காண நேர்ந்த இறப்புக்களும் சிதைவுகளும் அவரது அகப்புலத்தில் காத்திரமானதொரு உத்வேகத்தையும் தரிசன வீச்சினையும் ஏற்படுத்தி படைப்புக்கு கனதியைச் சேர்த்ததாக அவர் கூறியிருந்தார். அந்த வகையில் பூகம்பத்தால் சின்னா பின்னமாகிச் சிதைந்து போன "ஹோக்கர்" கிராமத்தை மைய மாக கொண்டு மேலும் உன்னதமான படைப்புக்கள் சிலவற்றை அவர் உருவாக்கியுமிருந்தார்.




அத்திரைப்படங்களின் பின்புலத்தில் காலம் ஒன்று இயங்குவதையும் அவற்றின் இடையே பல அடுக்குகளிலும் ஒருவகையிலான தொடர்ச்சி உட்சரடாக உள்ளோடிக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடியும்.

இப்போது 68 வயதை எட்டியிருக்கும் ஹெரொஸ்ரமி எல்லாமாக இதுவரை 40க்கும் மேற்பட்ட திரைப்படங்களை உருவாக்கியிருக்கிறார். 1979இல் இஸ்லாமிய புரட்சியின் பின்னர் பல கலைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய தருணத்தில் தொடர்ந்தும் ஈரானிலேயே அவர் வசித்து வருகிறார். இத்தகையதொரு பின்னணியில் அவருக்கு நகைமுரண் வாய்ந்ததொரு அனுபவம் ஏற்பட்டது. அண்மையில் தொழிலின் நிமித்தம் "ஒப்பறா" ஒன்றை நெறிப்படுத்துவதற்காக அவர் லண்டனுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அதன் பொருட்டு அவர் விசாவுக்கு விண்ணப்பித்த வேளை, அகதியாக மாற முற்படமாட்டார் என்பதை முன்கூட்டியே உத்தரவாதப்படுத்தும் வகையில் கட்டாய வைப்புச் செய்யுமாறு பிரிட்டனின் விசா காரியாலயம் அவரை வற்புறுத்தியிருந்தது. விசா காரியாலயத்தின் அபத்தமான "கெடுபிடி" நடவடிக்கையினை

அடுத்து பிரிட்டிஷ் தூதுவர் நிலைமையைத் தணிக்க சற்றுப் பிந்தித் தலையிட்டபோதிலும் அவர் தமக்கு நேர்ந்த அவமானகரமான சம்பவத்திற்கு விளக்கம் கோரி அங்கு செல்லாது அத்திட்டத்தில் இருந்து ஒதுங்கிக் கொண்டார். அதனை அடுத்து ஹெரொஸ்ரமியின் இணையாளர் ஒருவரே ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த அந்த லண்டன் "ஒப்பறா" நிகழ்ச்சியினை பொறுப்பேற்று நெறிப்படுத்தினார்.

"முத்திரைகளுக்கு இடமின்றி எனது கடவுச்சீட்டு முற்றாக நிரம்பியிருக்கிறது. எத்தனையோ தடவைகள் வெளிநாடு களுக்குச் சென்று வந்துள்ளேன். எக்கட்டத்திலும் நாட்டை விட்டு வெளியேறும் எண்ணம் எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை." எனத் தெரிவித்த அவர் தன்னுடைய வயதில் இனியா இது ஏற்படப்போகின்றது என உறுதிதொனிக்க கூறிவிட்டுச் சிரித்தார். இந்த விசா பிரச்சினையின் காரணமாகவே லண்டன் பேர்டி ஹிக்ஸ் கலரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவருடைய புகைப்பட காட்சி நிகழ்வின் ஆரம்ப வைபவத்தையும் அவர் தவறவிட நேர்ந்தது இன்னுமொரு துர்ப்பாக்கிய சம்பவமாகும்.

இத்தருணத்தில் அவருடைய புகைப்படத்துறை ஈடுபாடு குறித்து விசாரித்தபோது, திரைப்படங்களுக்கு உரிய பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்வதில் அதிக அக்கறை கொண்ட நெறியாளர் என்ற வகையில் அதில் 1970களில் இருந்தே ஈடுபட்டு வந்துள்ளதாகவும், ஆனால் அவற்றை முறையாக காட்சிப்படுத்துவது 1990 காலப்பகுதியில் இருந்தே கைகூடியதாகவும் விபரித்தார். மேலும் உலகளாவிய ரீதியில் அவற்றின் விற்பனையின் மூலம் ஈட்டும் வருமானம் தனது திரைப்பட அவசரத் தேவைகளுக்கு ஓரளவு உதவுவதாகவும் குறிப்பிட்டார். "அன்றாட வாழக்கையின் போக்கில் இயற்கையான சூழ்நிலைகளில் இடம்பெறுபவையே எனது திரைப்படங்கள். எனினும், சிலர் அவற்றை சினிமாவுக்கு ஏற்றனவெனக் கருதுவதில்லை. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இயற்கையின் ரூபத்தில் வெளிப்படும் அவ்வுண்மைகள் புறக்கணிக்கமுடியாதனவாகும்.

புகைப்படத்துறையைப் பொறுத்தவரையில் தமது புகைப்படங்களில் மனிதக் கூறுகளோ அல்லது உருக்களோ இடம்பெறுவதைத் தவிர்க்கின்றேன்" என்றார். மேலும் சினிமாவைவிடவும் புகைப்பட ஊடகம் தூய்மைவாய்ந்ததெனவும் அவர் கருதுகின்றார். "புகைப்படக் கணம் தன்னிலையிலான உண்மை உணர்வுசார்ந்ததொன்றின் பிரதிபலிப்பு. கதையின் அங்கமல்ல. நிலக்காட்சி ஒன்றில் ஏதோவிருப்பதை நான் உணர்கின்றேன். அதற்குரிய அக்கணமே படைப்பு வசநிலையென நான் கருதுகிறேன்" என்றார்.

வடக்கு ஈரானில் வருமானங்குன்றிய ஆனால் எண்ணிக்கையில் கூடிய அங்கத்தவர்களை கொண்டதொரு பெரிய குடும்பத்தில் ஒருவராக இவர் பிறந்தார். எனினும், நிம்மதிக்கோ சந்தோஷத்திற்கோ குறைவில்லை என்றார். தெஹ்ரான் பல்கலைக்கழகத்தின் நுண்கலை




படிப்பகம்

www.padippakam.com

பட்டதாரியான இவர் ஆரம்பத்தில் விளம்பர நிறுவனம் ஒன்றில் "கிராபிக்" வடிவமைப்பாளராக சிறிது காலம் பணியாற்றினார். பின்னர் குழந்தைகள் மற்றும் இளவயதினர்களுக்கான அறிவுசார் விருத்தி நிலையமொன்றிலும் தொழில் புரிந்தார். அது 1969 காலப் பகுதியாகும். அங்கு திரைப்பட பிரிவொன்றினை நிறுவி 1992ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார்.

அக்காலப் பகுதி அவரைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு காலக்கட்டமெனக் கூறலாம். எத்தகைய வர்த்தக நெருக்கீடுகளுமின்றி பல பரீட்சார்த்த சிருஷ்டிகர முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை அவர் அங்கு உருவாக்கிக்கொண்டார். அதையடுத்து Bread and Alley (1970) போன்ற குறுந்திரைப்படங்களின் தொடர் படைப்புகள் புதிய தடத்தில் வெளிக்கிளம்ப ஆரம்பித்தன. வர்த்தக ரீதியான தடைகளை தற்காலிகமாக அவரால் தாண்ட முடிந்த போதிலும் அக்காலகட்டத்து அரசியலின் குணாம்சமாக விளங்கிய உக்கிரமான கட்டுப்பாடு, தணிக்கை முறைமைகளை எதிர்நோக்குவது பாரியதொரு சவாலாக அவருக்கு உருவெடுத்திருந்தது. அத்திரைப்படங்களில் குழந்தைகளின் உலகு பூடகமான அரசியல் அர்த்தங்களுடன் சித்தரிக்கப்பட்டிருந்தது. பிரசார உருவேற்றல்களையும் கடும் நிர்ப்பந்தங்களையும் கொண்டு இயங்கிய கல்வி அமைப்பின் கீழ், குழந்தைகள் சுயாதீனத்துடனும் தீர்க்கமான முடிவுகளுடனும் இயங்கக் கூடியவர்களாகச் சித்தரிக்கப்பட்டிருந்தனர். அன்றாட வாழ்வுச் சுமையின் நெருக்குதல் காரணமாகக் கண்ணுக்கு புலப்படாது புதையுண்டு போயிருக்கும் உண்மைகளை பார்வையாளர்கள் முன்னே நகர்த்துவதில் கலைக்குரிய பங்கு இருப்பதாகவும் அப்பயணத்தில் கலையின் நோக்கம் நிறைவேறுவது ஆன்மீகம் சார்ந்த தொன்றேயெனவும் வலியுறுத்துகின்றார். இதற்கு ஒப்பான நிலையினைக் கவிதை, இசை ஆகியவற்றின் மூலமும் எய்த முடியும் என்கிறார். மதத்தை அதேநோக்கில் சிலர் பார்த்தாலும் கூட அது சிந்தனை வயப்பட்டோருக்கு ஏற்புடையதாக இருக்கமாட்டாதெனக் கூறுகிறார். மதத்தில் உள்ள கடினத்தை கடக்கும் சாத்தியப்பாடும் வலிமையும் இறுதியில் கலைக்கு மாத்திரமே உண்டெனவும் அவர் கருதுகின்றார்.




1979 புரட்சியின் நியாயத்தை, மத அடிப்படைவாதம் மூழ்கடித்துவிட்டதாகவும் அத்தோல்விக்கு காரணம் அதீத உணர்ச்சித் தளங்களில் வேரோடி நின்றதும் அபத்தமான சிந்தனைப் போக்குகளும் பகுத்தறிவின்மையுமே என்பதை சுட்டிக்காட்டும் ஹெரொஸ்ரமி, சர்வாதிகார அகம்பாவத்தினால் கொண்ட குறிக்கோளும், அதற்கான மார்க்கமும் தடம்புரண்டு போய்விட்டதாகத் தமது அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டார். "ஈரானிய அரசாங்கத்தின் சினிமா தொடர்பான கொள்கையானது படைப்பாளுமைமிக்க கலைஞர்களுக்கு முற்றிலும் விரோதமானதொன்றாகவே இருக்கிறது. அரசாங்கம் சினிமாவை தனது பிரசாரங்களுக்கும் மத நோக்கங்களுக்குமான கருவியாகவுமே பயன்படுத்தி வருகின்றது. 30 வருடங்களுக்கு மேலாக தொடரும் இப்போக்கு மாறக்கூடியதொன்றல்ல. எனவே, சுயாதீனமான, திறந்த சினிமாவை ஒரு போதும் சகித்துக் கொள்ளப் போவதில்லை. இதனை கற்பனையாகக் கூட எண்ணிப் பார்க்க முடியாது. இன்னுமொரு படி கீழ் இறங்கி அவற்றை எப்போதுமே சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றது. ஈரான் பற்றிய வெளியுலகில் பரவியிருக்கும் பய, பீதிகளுக்கும் ஈரானிய மக்களுக்கும் எத்தகைய தொடர்புமே கிடையாது. பல நாட்டு மக்களையும்போல அவர்கள் மிகவும் எளிமையானவர்கள். அவர்களுக்கு எல்லோரையும் போல வேதனைகளும் வலிகளும் இருக்கின்றன" என விபரிக்கும் ஹெரொஸ்ரமி, சமகால ஈரானிய சினிமாவின் வீறார்ந்த புறப்பாட்டிற்கு திடமானதொரு புதிய தடத்தை வகுத்துக் கொடுத்த முன்னோடிகளில் மிகவும் முக்கியமான ஒருவராவார். அந்த வகையில் சமகால ஈரானிய சினிமா அதற்கென தனித்தவொரு அடையாளத்தை சர்வதேச ரீதியில் தனதாக்கிக் கொண்டது.

அவரது படைப்புக்களில் The Bread and Alley, And life goes on, Through the olive trees, Taste of cherry,



படிப்பகம்

www.padippakam.com



Close-up போன்றவை விமர்சகர்களினது ஏகோபித்த பாராட்டுதல்களை பெற்றவை என்பதுடன் சர்வதேச உயரிய விருதுகளை சுவீகரித்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

The Bread and Alley 1970ஆம் ஆண்டு வெளிவந்த தொரு குறுந்திரைப்படமாகும். அது ஒரு சிறுவனை மையமாக கொண்ட திரைப்படமாக இருந்தாலும் அதற்குள் அரசியலொன்று பூடகமாக சொல்லப்படு கின்றது. சுதந்திரம், கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கு, ஒழுங்கீனம் போன்றவை குறித்து சூசகமான முறையில் அலசப்படுகின்றது. Taste of cherry திரைப்படம் 1997இல் வெளிவந்தது. இத்திரைப்படத்தில் தற் கொலை செய்ய முற்பட்டுள்ள நடுத்தர வயது மனிதன் தெஹ்ரானுக்கு தொலைவில் உள்ள மலைப்பாங்கான புறநகர் எல்லைகளில் காரில் அலைந்து திரிகின்றான். அத்தகையதொரு பின்புலத்தில் இறப்பு, வாழ்வு குறித்து தத்துவ விசாரங்களில் இத்திரைப்படம் நகர் கிறது. 1997இல் "கான்" திரைப்பட விழாவில் அதியுயர் விருதினை இத்திரைப்படம் பெற்றுக்கொண்டது. விருது வழங்கும் வைபவத்தில் விருது பெற்ற பரவசத் தில் "கதரீன் டெனுவ்" என்ற பிரபல நடிகையை முத்த மிட்டமையால் ஈரானிய நாட்டு பழைமைவாதிகளின் கடும் விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் அப்பாஸ் ஹெரொஸ்ரமி இலக்கானார். Cose-up திரைப் படம் 1990இல் வெளிவந்தது. வேலையற்றிருக்கும் அச்சுக்கூட தொழிலாளி பற்றியது அதுவாகும். "மோஸன்மக் மல்வ்" என்ற புகழ்பெற்ற ஈரானியத் திரைப்பட நெறியாளர் தாம் எனக் கூறி போலியாக ஏமாற்ற முற்பட்ட அத் தொழிலாளி கைது செய்யப்படு கிறார். நெறியாளரின் அணுகுமுறையில் புனைவுக்கும் ஆவணத்திற்கும் இடையே இருக்கும் நுணுக்கமான மெல்லிய பிரிவெல்லை அகற்றப்பட்டுவிடுகின்றது. அத்தகையதொரு பின்னணியில் நெறியாளரின் பிரசன் னம் காரணமாக யதார்த்திற்கும், சித்தரிப்புக்கும், உண் மைக்கும் புனைவுக்கும், வாழ்க்கைக்கும் கலைக்கும் இடையிலான வெளிகள் மற்றும் எல்லைகள் போன் றவை குறித்து பார்வையாளர்களை நோக்கி கேள்வி களும் விசாரணைகளும் முன்வைக்கப்படுகின்றன. ABC Africa (2001), Ten (2002), Five (2003) மற்றும் Shirin (2009) ஆகியனவற்றை அவரது அண்மைக்கால திரைப் படங்களாக குறிப்பிட முடியும். இவையாவும் ஒரு வகையில் பரீட்சார்த்த திரைப்படங்களாகும்.

தமது திரைப்படங்களுக்காக பெரும்பாலும் முன் பின் திரைப்பட பரிச்சயமற்ற நடிகர்களையும் சில வேளைகளில் தொழில்சார் தேர்ச்சி கொண்டவர்களை யும் பயன்படுத்தும் ஹெரொஸ்ரமி, அவர்களிட மிருந்து அதீதங்களற்ற மெய்மை குன்றாத நடிப்பினை வெளிக்கொணர்வதில் கடும் எச்சரிக்கையும் நிதான மும் கொண்டவராக இருக்கிறார். நடிப்பில் உண்மை யான உணர்வுகளை எட்டுவதென்பது ஒருவகையில் சாத்தியமானதும், அதேவேளை, மிகவும் கடினமானது மானதொரு பணியுமாகும். அதற்காக அவர்களிட மிருந்து ஏற்கனவே அவர்களுக்குள் புதையுண்டிருந்த ஞாபகங்களையும், உறவுகளையும், இழப்புகளையும், ஏக்கங்களையும் "கமரா" முன் மீட்டெடுக்கின்றார்.

வெளிநாட்டு பார்வையாளர்களை முதன்மைப் படுத்தி அவர்களுக்கென்றே அரசியலற்ற ஒருவகையி லான தப்புதல் மனப்பாங்கிலான திரைப்படங்களை அவர் உருவாக்குகிறார் என்பது சில விமர்சகர்களால் ஹெரொஸ்ரமி மீது சுமத்தப் படும் ஒரு குற்றச்சாட்டா கும். இது தொடர்பாக அவரிடம் கேட்டபோது "எனது திரைப்படங்களில் ஒரு விதத்தில் அரசியலின் பங்கு நான் தேர்வு செய்யும் விடயத்திலும், அதற்கான களத்திலுமே உள்ளீடாகப் பொதிந்துள்ளது. உதாரண மாக அனாதரவாக விடப்பட்ட கிராமத்து வறியவர்கள் அல்லது குர்திஷ் ஈரானை குறிப்பிடலாம். சினிமா பற்றி எனது நம்பிக்கை கேள்வி கேட்பதை மாத்திரமே, பதி லளிப்பதை அல்ல என்ற கோட்பாட்டினை அடிப்டை யாகக் கொண்டுள்ளது. அரசியல் என்பது குழுவுக்கான பற்றுறுதிதான் என்றால் நான் ஒருபோதும் அரசியல் திரைப்படத்தை உருவாக்கப்போவதில்லை. நான் இவ் வாறுதான் செய்யுங்கள் என்று மக்களை கூவியழைக்க மாட்டேன். ஆனால், வாழ்க்கை பற்றிய உண்மை யினை அவர்கள் முன் நகர்த்துவேன். இந்த உண்மையை அடைவதற்கான பற்றுறுதி எனக்குள் நிலைக்கும்வரை அது சாரம்சத்தில் அரசியலேயொழிய வேறல்ல" என்றார்.

**1979 புரட்சியின் நியாயத்தை. மத அடிப்படை வாதம் மூழ்கடித்துவிட்டதாகவும் அத்தோல்விக்கு காரணம் அதீத உணர்ச்சித் தளங்களில் வேரோடி நின்றதும் அபத்தமான சிந்தனைப்போக்குகளும் பகுத்தறிவின்மையுமே என்பதைச் சுட்டிக்காட்டும் ஹெரொஸ்ரமி. சர்வாதிகார அகம்பாவத்தினால் கொண்ட குறிக்கோளும். அதற்கான மார்க்கமும் தடம்புரண்டு போய்விட்டதாகத் தமது அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டார். "ஈரானிய அரசாங்கத்தின் சினிமா தொடர்பான கொள்கையானது படைப்பாளுமை மிக்க கலைஞர்களுக்கு முற்றிலும் விரோதமான தொன்றாகவே இருக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com





# அரசனும் குதிரைவீரனும் அழியுங்காலத்தின் சனங்களும்

- ஜெகன் அபூர்வன்




பாழடைந்த நூலகத்தின் படிக்கட்டில் அவன் அமர்ந்திருந்தான். புதர்களும் குப்பைகளுமாக சிதறிக்கிடக்கும் அந்த இடத்தில் சற்றுக்கு முன்புதான் மௌனம் கலையாமல் மரத்தின்கிளைகள் சலசலக்க அந்தப் பட்ஷி பறந்திருந்தது. அவன் நூலகத்தைப் பார்த்தான் புராதன சுவர்களில் எண்ணற்ற வெடிப்புக்களிடையே பசுமை படர்ந்திருந்தது. எல்லா சந்தர்ப்பங்களிலும் கண்டுவிடத்தவறும் ஓவியங்கள் சுவர்களில் மறைந்திருந்தன.

ஏராளமான காலடிகளின் ஓசை படிக்கட்டுக்களில் கேட்டுக் கொண்டிருந்தது. யார் வருகிறார்கள்? அவன் திரும்பிப் பார்த்தான் எவருமேயில்லை. ஆனாலும் இடைவிடாத ஓசை கேட்டபடியிருந்தது. அவன் மேலேறிச் சென்றான். புத்தகங்கள் எங்கும் சிதறிக்கிடந்தன. தாள்கள் காற்றில் எழுந்து பறந்தபடியிருந்தன. யாரோ வாசிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. அவனின் மௌனத்தை விட்டத்தில் தொங்கவிட்டு சவுக்கால் அடிப்பது போன்ற பிரமையை உணர்ந்தான். யாருமில்லாத நூலகத்தில் யாரேனும் எப்போதுமிருந்து கொண்டுதானிருக்கிறார்கள் என நினைத்துக்கொண்டான்.

நேரம் நடுப்பகலைத் தொட்டுக் கொண்டிருந்தது. இத்தோடு அவன் இந்த நூலகத்திற்கு நூறாவதோ அல்லது நூற்றியோராவது தடவையோ வருகின்றான். நூலகத்தின் சுவர்களின் வெண்ணிறம் உதிராத நாட்களில் அவனது அநேக பொழுதுகள் இதனுள்த்தான் கழிந்தன . இப்போது பழுப்பேறிய சுவர்களில் வேர் விட்டிருக்கும் மரங்களும் திறந்துகிடக்கும் கதவுகளும் கூரைகளும் மனதை என்னவோ செய்வது போலிருந்தன.

**நூலகத்தின் வரைபடம்-1**

கனவுகளின் தொலைவின் நீளமும் நினைவுகளின் எல்லை அகலமும் கொண்டது நூலகத்தின் வளவு. பிரதான வீதிகள் குறுக்கிடும் சந்தியில் வெண்ணிற மாளிகையாய் விளங்கியது. போகவும் வரவும் வேறுவேறான பாதைகள். பிரதான வாயிலின் அருகே நீர்க்குழாய். பின்புற வாயிலை அண்டியதாக மலசல கூடம் .காற்று எல்லாப் பொழுதுகளிலும் சுதந்திரமாக வீசியபடியிருந்தது.

**oo**

அவன் அவசரமாக புத்தகங்களையும் கிழிந்த தாள்களையும் பொறுக்கினான். பரிச்சயமற்ற புத்தகங்களின் எண்ணற்ற பக்கங்களையும் சேகரித்தான். இப்போது நேரம் நடுப்பகலைத் தாண்டியிருந்தது. உதிரியாகக்கிடந்த தாள்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கினான். மிகப்பெரும் புத்தகமாக அது இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

**வாசிப்பு-1**

சற்றும் தளராத அரசன் வென்ற நகரங்களைக் கணக்கிட்டபடியே வந்தான். கருமை மூடிய வனங்களையும் எரிந்து கருகிய நிலங்களையும் அவன் கண்டு கொள்ளவில்லை. மிருகங்களையும் பறவைகளையும் கூவியழைத்தான். திசைகள் எட்டல்ல பதினாறு எனச் சத்தமிட்டான். புரவிகளின் குழம்பொலி கலையாத தெருவில் அவன் கம்பீரமாக சென்று கொண்டிருந்தான். மண்மேடான குடிசைகளைக் கணக்கிடத் தவறினான்.

**மறுவாசிப்பு-1**

எப்போதும் சனங்கள் விரட்டப்பட்டபடிதானிருக்கிறார்கள். விரட்டுபவர்களின் முகங்கள் மாறுகின்ற போதும் குணங்கள் மாறுவதில்லை. ஒடுங்கிய குவளைக்குள் தகித்துகொண்டிருக்கும் மதுவைப் பருகியபடி அரசன் சொல்கின்றான் "சிறகுகளில்லாத ஒரு வன தேவதை தன் கனவுகளைக் குடிப்பதாய்". சிதிலமான நிலங்களின் வரைபடங்களின் மீது வழிந்து சிதறிய அதன் வீணீரைத் தன் உள்ளங்கையால் துடைத்தவாறு அரசன் மீண்டும் மதுவைப் பருகினான். தான் பார்த்து வந்த தெருக்களின் மாமிச வாடையை மீண்டும் மீண்டும் உள்ளிழுத்து சுவாசப்பையை நிறைத்தான். அதன் மணத்தில் திளைத்தவாறே உறங்கினான்.

**நூலகத்தின் வரைபடம்-2**

**கிளைக்குறிப்பு**

தொலைவில் சடைத்த மரங்களிடையே வெண்கோபுரமாய்த் தெரிகிறதே அதுதான் நூலகம். படியேறி உட்சுவர்களைப் பார்க்கிறவர்கள் உணர முடிவதெல்லாம் இது ஒரு காலத்தில் நூலகமாய் இருந்தது என்பதைத்தான். சுவர் முழுவதும் ஆபாசக் குறிப்புகளும் படங்களும் வரையப்பட்டிருக்கின்றன. வரைபவர்கள் கரிகளால் வரைந்திருக்கிறார்கள். கரி பிரண்ட கைகளால் அவற்றைத் தழுவியுமிருக்கிறார்கள்.

oo

அவன் புத்தகத்தை வாசித்தபடியேயிருந்தான். தாள்களின் கனம் வற்றிக் கொண்டேயிருந்தது. ஆனால் கதையோ எல்லையற்று விரிந்தபடியிருந்தது. அவன் சலிப்படையவில்லை. வாசிப்பின் வெளி விரிய கடலளவு கதைகளுக்குள் இறங்கி மூச்சுத் திணறியவாறிருந்தான்.

**வாசிப்பு-2**

சாகாவரங்களால் புனையப்பட்டவனின் புரவிகள் கால் மடங்கின. ஆரணியம் எரிந்து கொண்டிருந்தபோது சாகசங்கள் மட்டுமே புகையாய் எழுந்து வானத்தை மூடின. சனங்கள் தண்ணீருக்காக அலைந்துகொண்டிருந்தனர். தானியக்களஞ்சியங்களை வெம்மை தின்று கொண்டிருந்தது.ஒவ்வொரு இரவுகளையும் ஓராயிரம் யுகங்களால் சனங்கள் தாண்டினார்கள். பசித்த வயிறுகளை வானம் நோக்கிக் குவித்திருந்தவர்களின் வாய்களில் தணல் மழை பொழியத் தொடங்கியது. சனங்கள் பெயர்ந்து கொண்டேயிருந்தார்கள். கூடாரங்களைக் காவியவாறே சொற்ப நாட்களில் கணக்கிட முடியாத் தூரங்களைக் கடந்தார்கள். ஆறுகள் வற்றின குளங்கள் பொருக்குலர்ந்தன.

**குறுக்கீடு**

(குரல்வளையில் கத்தி வைக்கப்பட்ட இருவர் தெருமுனையில் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள்)

**அருவம்—** நகரத்தைப் பார்த்தாயா?

**உருவம்—** சிரிப்பால் சிதறிக்கிடக்கிறது. சனங்களின் மகிழ்ச்சியில் கட்டிடங்கள் கோபுரங்களாய் எழுகின்றன. காற்று கீதங்களால் மிதக்கிறது.

**அருவம்—** அதிருக்கட்டும், சனங்களை நன்றாக உற்றுப்பார். அவர்களின் இடுப்பில் மர்மக் கயிறு கட்டப்பட்டிருக்கிறது தெரியவில்லையா? அவர்களின் தூரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. எல்லாக் கயிறுகளின் மைய முடிச்சுக்களையும் வைத்திருப்பவனின் வர்ணம் பூசப்பட்ட முகத்தினுள் உள்ளெரியும் கனலை நீ இன்னும் உணரவில்லையா?

**உருவம்—** நீ ஏன் அர்த்தமற்றுக் குழம்புகிறாய். கயிற்றையும் அதன் மையத்தை வைத்திருப்பவனின் முகத்தையும் ஏன் பார்க்கின்றாய். இந்த நகரத்தின் மினுமினுப்பைப் பார். சனங்களின் புன்னகையைப் பார். சனங்கள் முன்னிலும் அழகாயிருக்கின்றார்கள். வீதிகள் அழகாயிருக்கின்றன. எங்கும் வாகனங்களின் இரைச்சல். எப்படி மாறுகிறது நகரம்.

**அருவம்—** நீ கடந்த காலத்தின் கண்ணீரை மறந்துவிட்டாய். மரணங்களை மறந்துவிட்டாய். வர்ணமடிக்கப்பட்ட புன்னகைகளுக்குள் மூழ்கிக்கிடக் கின்றாய். இந்த நகரத்தின் சுவர்களில் எண்ணற்ற சாவுகளின் சித்திரவதை களின் துயரம் படிந்திருக்கிறது.

oo

அவன் அவர்களின் உரையாட்லையே அவதானித்தபடியிருந்தான். எது பொய்? எது மெய்? பொய்க்கும் மெய்க்குமிடையில் சில நிமிடங்கள் அல்லாடினான். திடீரென வீசிய காற்று, அவன் கைளிலிருந்த புத்தகத்தின் ஒருதாளை தவறுதலாகவோ வேண்டுமென்றோ இழுத்துக் கொண்டு சென்றது.



படிப்பகம்

www.padippakam.com





am rashmy

**கனவு நகரம் கட்டடங்களை இழந்தவாறிருந்தது. இரத்தம் உறிஞ்சுங் காலம், அழகான புன்னகையைச் சூடியிருந்த நகரத்தில் இப்போது துயர் படிந்த முகத்துடன் காற்று தேசாந்திரியாகத் திரிந்தது. எத்தனை பேச்சுவார்த்தைகள், பிரகடனங்கள், சந்திப்புக்கள், வாதங்கள், மனமுறிவுகள், காட்டிக்கொடுப்புக்கள், மரணதண்டனைகள் யாவற்றையும் மௌனமாகப் பார்த்திருந்த நகரம் கைவிடப்பட்ட குழந்தையைப் போல அழுது ஓய்திருந்தது.**

**காற்று வாசித்த கதை**

அலைக்கழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு சிறுவனின் மிரட்சி படர்ந்த கண்களில் ஒரு ஆட்டுக்குட்டி அலைந்துகொண்டிருந்தது. மேய்ப்பனின் தடி தொலைந்துவிட்டது. அவனால் மந்தைகளைக் அடக்கமுடியவில்லை. பச்சை நிலங்கள் எரிந்து போகப்போக மணல்வெளிகளை மேயும்படி கூறிக்கொண்டேயிருந்தான். மந்தைகள் திமிறின. புற்களைத் தேடத் தொடங்கின. மேய்ப்பன் சூழ்ச்சிகளும் சூனியங்களும் புரிந்தான். பொறிகளை வைத்தான். முடியவில்லை. கொலைகளால் அச்சுறுத்தவும் செய்தான். மந்தைகள் திமிறிக்கொண்டேயிருந்தன. இரவுகளில் அவை நழுவத்தொடங்கின.

**மறுவாசிப்பு-2**

அச்சுறுத்தப்பட்ட பொழுதுகளை குதிரைவீரன் உருவாக்குகிறான். எல்லா முற்றங்களிலும் கள்ளிகள் முளையிடுகின்றன. நிராதரவான சனங்களின் பிணங்களால் இடங்கள் யாவும் நிரம்பியிருக்கின்றன. பிணங்களை எண்ணுவோர் சலித்துப் போயினர். ஊடகங்கள் பலவும் சாவையொட்டியிருந்தன. இறந்தவர்களில் பலர் திரும்பிவரவேயில்லை. சிலரின் வருகை அபூர்வமாய் நிகழ்ந்தது. சனங்கள் பிணங்களைக் கைவிட்டுப் போய்க்கொண்டிருந்தனர். அவர்களின் முகங்களில் சாவு காலத்தின் களை மிகுந்திருந்தது.

**கதைசொல்லியின் மனப்பதிவு**

நான் என் தலையில் குளவிக் கூட்டைக் காவித்திரிகின்றேன். எனது நாட்கள் யுத்தத்தின் கால்களினாலையே நடந்தன. மிகப் பெரிய அழிவுகாலத்திலிருந்து மீண்டு வந்த மனிதர்கள் சாபத்தின் மொழியிலேயே உரையாடுகின்றனர். சபிக்கப்படுபவர்களின் தந்திரங்களும், சனங்களை அரணகளாய் மாற்றும் போதெல்லாம் தாங்கள் யுத்தத்தை மூக்கின் மிக அருகில் முகர்ந்ததாய் அவர்கள் சொன்னார்கள். தங்களின் ஒவ்வொரு தப்பித்தல் முயற்சிகளிலும், அவர்கள் தீயைப் பரவவிட்டதாகச் சொன்னார்கள். தப்பித்து வந்தவர்களில் சிலரும் சிறைப்பிடிக்கப்பட்டவர்களில் பலரும் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நகரத்திலிருந்து இந்தக் கதை எழுதப்படுகின்றது.

**வாசிப்பு-3**

அரசன், சரித்திரம் தன்னை அதிவீரனாகப் புனையப்போகும்



படிப்பகம்

www.padippakam.com



அந்த நாளுக்காகக் காத்திருந்தான். தன்னை வானளவு விஸ்பரூபம் கொள்ளவைக்கும் கனவுகளில் மெய்மறந்தான். எத்தனையெத்தனை மன்னர்கள், எத்தனையெத்தனை வெற்றிகள், எத்தனையெத்தனை தோல்விகள். தான் வெல்ல மட்டுமே பிறந்தவன் எனப்பெருமிதம் கொண்டான். எதற்கும் யாருக்கும் எப்பொழுதும் அஞ்சாதவன் தானெனப் பறைசாற்றினான்.

**மறுவாசிப்பு-3**

பாவம் மக்கள். வெற்றிக்கும் தோல்விக்குமிடையில் கிழிபட்டுக்கொண்டிருந்தார்கள். பசி பெரும் தீச்சுவாலையாய் வளைந்து வளைந்து எரிந்தது. உடமைகளை இழந்தனர் உயிர்களை இழந்தனர். நம்பியவர்களாலும் நம்பாதவர்களாலும் கொல்லப்பட்டனர். அவர்களின் விருப்பங்களை, தப்பித்தல் முயற்சிகளை மூடி மூடி போர் வளர்ந்துகொண்டேயிருந்தது. கொட்டித் தீர்க்க முடியாத வேதனைகளோடும் இட்டு நிரப்ப முடியாத மரணங்களோடும் அலைந்தபடியிருந்தனர்.



am rashmy

**நூலகத்தின் வரைபடம்-3**

இரண்டு அடுக்குகளைக் கொண்ட கட்டிடத்தைக் கொண்டது. படிகள் உட்புறமாய் வளைந்து வளைந்து மேலேறுகின்றன. உள்ளே எப்போதும் அமைதியே நிலவுகின்றது. படிப்பவர்களின் கூர்ந்த அக்கறை புத்தகத்தின் உள்ளே அல்லது வெளியே இருக்கும் போதும் அவர்கள் உதடுகளைப் பிரிப்பதில்லை. அறைகளின் பிரமாண்டம் எல்லோர் வாய்களிலும் பூட்டுக்களை மாட்டியிருக்கின்றது. படியேறுவோரும் இறங்குவோரும் நிதானம் தப்பிய கணங்களில் வௌவால்கள் சடசடத்தபடி சுவர்களில் மோதி ஒலியெழுப்பும். மற்றப்படி அவை யாருக்கும் இடையூறு செய்வதில்லை.

**oo**

அவனின் வாசிப்பு தொடர்ந்தது. பொழுதை நிசப்தம் உறிஞ்ச உறிஞ்ச அவன் புத்தகத்தின் எல்லைகளை மேவிமேவிப் பயணித்தபடியிருந்தான். கண்ணுக்கும் மூளைக்குமிடையில் சூரியன் சரிந்துகொண்டிருந்தது. நூலகத்தினுள் இரையும் காற்று அவன் செவிகளை ஊடறுக்கவில்லை. அறைக் கதவுகளை உடைத்தெறியும் வேலை காற்றிற்கும் இருக்கவில்லை. ஏற்கனவே அவை உடைந்துதானிருந்தன.

**வாசிப்பு-4**

தலை துண்டிக்கப்பட்ட காலம் குதிரை வீரனுடையதாக இருந்தது. காவியங்கள் அவனுக்கானதாக இருந்தன. பதிகங்களாலும் பாடல்களாலும் பக்தர்களாலும் கொண்டாடப்பட்டுக்கொண்டிருந்தான். சனங்கள் பற்றிய குறிப்புகள் வரலாற்றுச் சுவடிகளிலிருந்து கிழித்தெறியப்பட்டிருந்தன. எல்லாவற்றையும் யாவரையும் வீரன் தனக்குரியதாக்கினான். இரவுகளும் பகல்களும் அவனிடமேயிருந்தன. யுத்தத்தின் சாகசங்களால் தன்

**இந்தப் போரில் நான் வென்றுவிட வேண்டும். நான் சரித்திரத்தின் தொடக்கமாயிருக்க விரும்புகின்றேன். கடவுளே எனக்கு உன் கருணையைப் போதிக்காதீர். கொல்லப்படும் சனங்கள் குறித்துக் கவலை கொள்ளாதீர். யுத்தத்தில் சனங்கள் கொல்லப்படுவது ஒன்றும் புதுமையில்லை.**

காலத்தை நிறைத்திருந்தான். உச்சமாய்ப் புனையப்பட்ட கோடான கோடிக் கதைகளுக்கும் சொந்தக்காரனாக இருந்தான்.

**மறுவாசிப்பு-4**

அரசனின் மாளிகையில் மந்திரிகள் கூடியிருந்தனர். நகரங்கள் வெற்றி கொள்ளப்பட்ட போதெல்லாம் மந்திரியின் குரல் போதையின் மணமாய் ஒலித்தது. சேனாதிபதி நெஞ்சை நிமிர்த்தியவாறே நின்றான். அரசனின் சிம்மாசனத்தின் பின்னால் இலைகள் உதிர்ந்த ஒரு மரம் வளர்ந்திருந்தது. தன் வம்ச வரலாறுகளின் நாயகர்களை நினைத்துக் கொண்டான். யாராலும் உதைத்து விழுத்த முடியாத சிம்மாசனம் தன்னுடையதென பெருமிதம்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டான்.

சனங்கள் தம் தலையில் தாமே அடித்துக் கொண்டார்கள். எதற்கானது இந்தப் போர்? யாருக்கானது இந்தப்போர்? எத்தனையெத்தனை குருத்துக்கள் கருகிப்போயின. வெற்றிகளால் புனையப்படும் காலத்தின் உண்மை முகம் மிகக் கொடூரமாக இருந்தது. உயிர்களைத் தின்னும் இரண்டு துருவங்களுக்கிடையில் பரிதாபகரமான எண்ணற்ற மனிதர்கள் சுருண்டுகிடந்தார்கள்.

**வாசிப்பு-5**

பிணங்களைக் கணக்கிடுபவர்கள் சோர்ந்து போயினர். வாழிடம் குறுகக்குறுக எல்லா இடங்களுமே மயானங்களாகத்தானிருந்தன. அடையாளங்காணப்படாத சடலங்கள் ஏராளமாயிருந்தன. இறந்தவர்கள் இறந்த இடங்களிலேயே புதைக்கப்பட்டனர். சலிப்படைந்த கணக்கிடுவோர் பிணங்களைக் கைவிட்டு ஓடினர். அவர்களை பிணங்கள் துரத்திக்கொண்டிருந்தன. பாலகப் பருவம் மாறாத பிணங்களின் கைகளில் செயலிழந்துபோன துப்பாக்கிகளிருந்தன.

**௦௦**

அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது. பாழடைந்த கட்டடத்தின் சுவர்களில் மோதித்திரிந்தன இரண்டு வெளவால்கள். அவன் மிகவும் சோர்ந்து போயிருந்தான். கண்கள் களைத்துப் போயின. சற்று எழுந்து காலாற நடக்கலாமென எழுந்தான். பாசி படர்ந்த சுவரின் வெடிப்புகளிலிருந்து வெளிப்பட்ட ஓவியங்களை உற்றுப்பார்த்தபடி நின்றான். மிகவும் கொடூரமான ஓவியங்கள் அவனின் கண்களில் மின்னி மறைந்தன. இரத்தமும் சதைச் சிதறல்களும் ஓவியம் முழுவதிலும் சிதறிக்கிடந்தன. படிக்கட்டின் அரைவாசித்தூரம் வரை இறங்கியவனின் கண்களில் சூரியன் ஒளிமங்கிச் செல்வது தெரிந்தது. அவசரமாகப் படியேறி மீண்டும் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினான்.

**மறுவாசிப்பு-5**

கனவு நகரம் கட்டடங்களை இழந்தவாறிருந்தது. இரத்தம் உறிஞ்சுங் காலம், அழகான புன்னகையைச் சூடியிருந்த நகரத்தில் இப்போது துயர் படிந்த முகத்துடன் காற்று தேசாந்திரியாகத் திரிந்தது. எத்தனை பேச்சுவார்த்தைகள், பிரகடனங்கள், சந்திப்புக்கள், வாதங்கள், மனமுறிவுகள், காட்டிக்கொடுப்புக்கள், மரணதண்டனைகள் யாவற்றையும் மௌனமாகப் பார்த்திருந்த நகரம் கைவிடப்பட்ட குழந்தையைப் போல அழுது ஓய்ந்திருந்தது. விளக்குகள் அணைந்துபோயின. யாவரும் விட்டுப்போயினர். பாடல் பெற்ற பெருந்தலம் ஒப்பாரியில் சுருண்டுபோனது.

**நூலகத்தின் வரைபடம் -4**

எப்படியோ நிகழ்ந்துவிடுகிறது தொன்மத்தின் சிதைவு. நூலகம் சிதைவடையத் தொடங்கிய காலத்தை நினைவுகூர வேண்டியிருக்கிறது. மகாஞானிகள் இங்கிருந்துதான் பிறப்பெடுத்தார்கள். வன்முறையாளர்களும் இங்குதான் பிறப்பெடுத்தார்கள். வித்தியாசம் என்னவென்றால் கடைசியில் மகாஞானிகள் வெருண்டோடினார்கள், விரட்டப்பட்டார்கள், தோற்கடிக்கப்பட்டார்கள். வன்முறையாளர்களோ புத்தகங்களில் மரணத்தின் முகத்தை வரைந்தார்கள். யாருமே நெருங்க முடியாதபடி வாயிலைப் பூட்டினார்கள். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. பூட்டுக்களில் துருவேறி நைந்து விழுந்தது. எனினும் சனங்களுக்கு அன்னியமாயிற்று நூலகம். ரகசியத் திருடர்களாய் சிலர் இங்கு வருகிறார்கள் உடைந்துகிடக்கும் கட்டடத்திற்காகவும் சிதிலமாகிப் போன புத்தகங்களுக்காக வும் அழுகிறார்கள். மகாஞானிகளுக்கு மறுக்கப்பட்ட வழிகளில் வன்மம் படர்ந்த விழிகளுடன் வன்முறையாளர் கள் காத்திருக்கின்றனர். பொறியாயிற்றுக் காலம்.

**வாசிப்பு-6**

குதிரை வீரன் தன் காலத்தின் இறுதிப் போரை நிகழ்த்தினான். குதிரைகளுக்கு நம்பிக்கையூட்டினான். சனங்களோ எதையும் நம்பவில்லை. ஒரு புனைவுக்காலம் தம்முன் சருகாகி உதிர்வதை அவர்கள் பார்த்திருந்தனர். மிரண்ட விழிகளுடன் வார்த்தைகளைக் காலடிகளுக்குள் புதைத்த சனங்கள் மீளமுடியாத துயரில் மூழ்கிப்போயினர். வேறுமார்க்கங்கள் இல்லாத போது குதிரைவீரன் சனங்களை அரண்களாக்கினான். குழந்தைகள் வீரிட வீரிட யுத்தத்தை நிகழ்த்தினான். நாக்குப் பிடுங்கப்பட்ட சனங்கள் கொல்லப்பட்டுக் கொண்டேயிருந்தார்கள். எங்கும் மரண ஓலம். காவியங்களால் விதந்துரைக்கப்பட்ட வீரன் ஒளிந்து திரிந்தான். வீரதீரப் பாடல்கள் நாறிமணத்தன. காடுகள் கைவிட்டன. கடல் கைவிட்டது. வானம் கைவிட்டது. கடைசியில் நம்பிக்கைகளும் கைவிட்டன.

**மறுவாசிப்பு-6**

அரசன் கருணை வடிவமான தன் கடவுளிடம் மண்டியிட்டிருந்தான்.அவனின் கைகளில் வெண்ணிற மலர்கள் மலர்ந்திருந்தன. இரத்தக் கறை படிந்த கைகளால் அவற்றைப் பற்றியிருந்தான். காவியுடை தரித்த மதகுரு அவனை ஆசிர்வதித்தார். வெல்லப்படாதிருந்த யுத்தத்தை வெல்லப் போகும் வீரன் நீ என்றார். அரசனின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அவன் ஏதும் பேசவில்லை. ஒருகணம் கடவுளை ஏறெடுத்துப் பார்த்தான். அவரின் முகத்தில் ஏளனச் சிரிப்புப் படர்வதையுணர்ந்தான். மறுகணம் அவரின் கண்களில் கண்ணீர் பெருகுவதைக்கண்டான். அரசன் கவலை கொள்ளவில்லை இரத்தம் படிந்த கைகளால் அவருக்கு வெண்ணிற மலர்களைச் சாத்தினான். மதகுரு கண் அசைவினால் அரசனைத்தேற்றினான். அது அவர் கடவுளைத் தான் சமாளித்துவிடுவதாய்க் கூறுவதுபோலிருந்தது அரசனுக்கு.

அரசன் கடவுளின் கால்களைப் பற்றியவாறு புலம்பினான் "இந்தப் போரில் நான் வென்றுவிட வேண்டும். நான்





படிப்பகம்

www.padippakam.com



சரித்திரத்தின் தொடக்கமாயிருக்க விரும்புகின்றேன். கடவுளே எனக்கு உன் கருணையைப் போதிக்காதீர். கொல்லப்படும் சனங்கள் குறித்துக் கவலை கொள்ளாதீர். யுத்தத்தில் சனங்கள் கொல்லப்படுவது ஒன்றும் புதுமையில்லை. நான் நிகழ்த்துவது மனிதாபிமான யுத்தம் சந்தேகம் கொள்ளாதீர் இது மனிதாபிமான யுத்தந்தான். எனது வீரர்கள் புனிதர்கள் அவர்கள் குறிகளை அறுத்தெறிந்து விட்டார்கள். சித்திரவதைகளை மறந்துவிட்டார்கள். அவர்கள் எதிரியைக் கொல்ல ஆசிர்வதியும்"

கடவுள் தனக்குள் சிரித்துக்கொண்டார். அவரின் காதுகளுக்குள் ஓலங்கள் கேட்டவாறேயிருந்தன. யுத்தத்தை விரும்பாத தன்னிடமே யுத்தத்திற்காக ஆசிர்வதிக்குமாறு கேட்கும் அரசனை அவரால் என்ன செய்யமுடியும். கருணை என்பதும் இரக்கம் என்பதும் காலாவதியாகிப்போன ஆயுதங்களாகிவிட்டன என சலித்துக்கொண்டார். அவரின் முகம் வெளிறி உறைந்துபோயிருந்தது. அரசனின் வேண்டுதல்களால் நிறைந்திருந்த அவரது செவிகளிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

**கதை சொல்லியின் மனப்பதிவு**

அரசன் இன்றைய தன் புகைப்படங்களில் குழந்தைப் புன்னகையைப் பொருத்தியிருக்கின்றான். அச்சுறுத்தப்பட்டிருக்கும் நகரங்களின் மூலை முடுக்குகள் எங்கும் பொருத்தப்பட்டிருக்கும் உயர்ந்த வர்ணப் புகைப்படங்களில் அவன் சிரித்தபடியிருக்கின்றான். அவற்றில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள் இனச்சுத்திகரிப்பின் வார்த்தைகள். நாக்கு அறுக்கப்பட்ட சனங்களை அவன் ஆசீர்வதிக்கின்றான். வற்றாத கண்ணீரையும் வலியையும் வழங்கியவனின் புன்னகை ஒட்டப்பட்டிருக்கும் நகரத்தின் கட்டடப் புதருக்குள் புதைந்துகிடக்கிறது சூரியன்.

**வாசிப்பு-7**

சுற்றி வளைக்கப்பட்ட பெருமணல் வெளியில் இறுதியுத்தம் நடந்தது. சனங்களை விழுங்கக் காத்திருந்த அரசனின் படைகளிடம் சனங்கள் மண்டியிட்டனர். குதிரைவீரன் தன் வீரர்களாலும் கைவிடப்பட்டான். கடைசியில் ஒளிவட்டக்கனவுகள் சிதையவும் சாகாவரப் புனைவுகளும் சாகசங்களும் அதியற்புதக் கதைகளும் நொருங்கியுடையவும் குதிரைவீரன் தன் கழுத்தைத் தானே ......................

**மறுவாசிப்பு -7**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

oo

அவன் கைகளிலிருந்த புத்தகத்தின் தாள்கள் உதிர்ந்தன. அவற்றை காற்று எற்றியெற்றியடித்தது. பாழடைந்த நூலகமெங்கும் சிதிலமான காலத்தின் கடதாசித்துண்டுகள் பறந்தபடியிருந்தன. மனதுக்குள் ஏதோ அறுபட்ட உணர்வாய் அவனுக்கிருந்தது. பனித்த கண்களைத் துடைத்துக் கொண்டான். மாயங்களாலும் வலிகளாலும் ஆயுதங்களாலும் துயரங்களாலும் வார்க்கப்பட்ட காலம். தியாகங்களாலும் அர்ப்பணிப்புக்களாலும் போர்த்தப்பட்ட காலம், துரோகங்களாலும் சதிகளாலும் பின்னப்பட்ட காலம் கண்ணாடிக் குவளையாய் நொருங்கிக் கிடந்தது. பிள்ளைகளைத் தேசத்தின் பெயரால் ஈர்ந்தவர்களின் கருப்பைகளில் கவிந்திருக்கும் இருள் விலக்கமுடியாதபடி பரவி வருவதையுணர்ந்தான். எல்லாமே பூச்சியத்தில் முடிந்துபோய்விட்டது. கைகளை வான்நோக்கி விரித்தபடி சில நிமிடங்கள் மௌனித்திருந்தவன் படியிறங்கத் தொடங்கினான். தெருமுனையில் அந்த இருவரும் உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

**குறுக்கீடு**

**அருவம் –** குரல்வளை அறுக்கப்பட்டவர்களின் வலியை நீ உணர்கிறாயா?

**உருவம் –** யாருடைய குரல்வளை அறுக்கப்பட்டிருக் கிறது?

**அருவம்–** உன்னுடையதும் என்னுடையதும் எல்லோருடையதுந்தான்.

**உருவம்–** நீ என்ன பிதற்றுகிறாய். சனங்களின் முகம் முன்னரிலும் ஒளிர்கிறது. அவர்களின் எல்லைகள் விரிந்துவிட்டன. கனவுகளில் படபடக்கிறார்கள். நீ ஏன் குழம்பித் தொலைகிறாய்.

**அருவம்–** புலப்படாத அழுகையும் தீர்க்கப்படாத துயரமும் ஒரு உறைவாளைப்போல் அவர்களிடம் உறைந்திருக்கிறது. பறிகொடுத்தவனுக்குத்தான் இழப்பின் வலி புரியும். நீ கனவுகளில் வசிக்கின்றாய். நிஜத்தின் முகம் கொடூரமானது. கைவிடப்பட்டவர்களின் வயிறுகளில் இன்னும் பற்றியெரிந்து கொண்டிருக்கிறது நெருப்பு.

oo

அவன் அவர்களைக் கடந்து சென்றுகொண்டிருந்தான். சிதறிய சில கடதாசித் துண்டுகள் காற்றில் அலைக்கழிக்கப்பட்டவாறிருந்தன. இன்னும் வாசிக்கப்படாத ஏராளம் கதைகள் அவற்றில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

oo



படிப்பகம்

www.padippakam.com



# மிக ஏழ்மையான மக்கள் ஏன் இந்த அமைப்பின் தலைவர்களை கொலைசெய்ய விரும்புகின்றனர்?



**இ**ந்தியாவில் இடம்பெயர்தலுக்கு எதிரான கூட்டமைப்புக்கு தலைமை ஏற்று பல்வேறு போராட்டங்களுக்கு வழிகாட்டுதல் அளிப்பவருமான **புதுதில்லி பல்கலைகழகத்தின் மூத்த நிலை பேராசிரியரான தோழர் GN சாய்பாபா அவர்கள்** கடந்த நவம்பர் மாதம் இலண்டன் வந்திருந்தார். இந்தியா, பிரேசில், ஈரான், பிலிப்பைன்ஸ், துருக்கி மற்றும் பல நாடுகளின் புரட்சிகர அமைப்புக்களின் ஒருங்கிணைப்பாக செயல்பட்டுவரும் சர்வதேசிய அரசியல் கைதிகள் விடுதலை இயக்கம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பங்கெடுக்க வந்திருந்தபோது இந்நேர்காணல் பெறப்பட்டது.

இந்தியாவில் தற்போதைய சூழல், புதிய பொருளாதார மண்டலங்கள், இந்துத்துவா, சர்வதேசிய சூழல், பின் நவீனத்துவம், இனப்படுகொலைகள், மாவோயிஸ்ட் இயக்கத்தின் எதிர்கால போக்குகள் குறித்தும் நீண்ட உரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இவற்றின் முதல் பகுதி இது.

***லால்கர், சட்டீஸ்கர், க்ரீன்ஹண்ட் என்பது குறித்து நீங்கள் என்ன குறிப்பிட விரும்புகிறீர்கள்?***

லால்கர் இயக்கம் ஆதிவாசி மக்களின் தன்னெழுச்சியுடன் நடந்த ஒன்றாகும். 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லால்கர் அருகே கண்ணி வெடி தாக்குதல் ஒன்று நடந்த பின்பு அரசாங்கம் ஆதிவாசி மக்கள் மீது கொடூரமான தாக்குதலை கட்டவிழ்த்துவிட்டது. அந்த கண்ணிவெடி தாக்குதல் சிறப்பு பொருளாதார மண்டலத்தை திறந்து வைக்க வந்திருந்த அன்றைய மத்திய இரும்பு மற்றும் எஃகுதுறை அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வானையும் மேற்குவங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சாரியையும் குறிவைத்து வெடிக்கப்பட்டதாகும்.

இதில் மேற்குவங்க முதலமைச்சரே இலக்காக இருந்ததால் அரசாங்கம் இந்த தாக்குதலை மிகவும் தனிப்பட்ட அளவில், சுய கௌரவமாக கணக்கிட்டு செயல்பட்டது. அது ஆதிவாசிகளின் மீது பழிவாங்கும் நடவடிக்கையை கட்டவிழ்த்துவிட்டது. ஏராளமான காவல்துறை படைகளை அனுப்பியும் அங்கு மாவோயிஸ்ட்டுகள் எவரும் இருப்பதாக அரசாங்கத்தால் கண்டறிய முடியவில்லை எனவே அது ஆதிவாசிகள் மீது தாக்குதலை தொடர்ந்தது.

மக்களின் கோபம் அரசாங்கத்திற்கு எதிராக லால்கர் மற்றும் அதை சுற்றிய 30 கிராமங்களில் தொடங்கி பின்பு நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு பரவியது. இது எவ்வாறு இத்தனை விரைவாக கொழுந்துவிட்டு எரியமுடியும்? இந்த கண்ணி வெடி தாக்குதல் ஒரு குறிப்பான நிகழ்வு என்று அல்ல. 35 ஆண்டுகால மேற்குவங்க (PICM) அரசின் மிகக் கொடூரமான அடக்குமுறையும், ஆதிவாசி மக்களை சுரண்டியும் வந்ததின் எதிர்வினை ஆகும். லால்கர் மட்டுமல்ல ஆதிவாசிகள் வாழும் மேற்குவங்க ஜங்கல்மஹால், ஜார்க்கண்ட், மேற்கு ஒரிசா வடக்கு, சட்டீஸ்கர் மாநில எல்லைகளை ஒட்டி தொடர்ச்சியான ஆதிவாசிகளின் பகுதிகள் அமைந்துள்ளது. இது பிரிட்டிஷ் ஆட்சியினர் காலம் தொட்டே அரசாங்கத்திற்கு எதிரான பெரும் எழுச்சியை கண்டுள்ளது.

மிகவும் பிரசித்தி பெற்ற தேபாகா இயக்கம்



படிப்பகம்

www.padippakam.com



இப்பகுதியில் நடந்தது ஒன்று தான்: இப்பகுதியில் எந்த ஒரு அந்நியரும் தலையிட்டதில்லை. 1947ல் இந்தியா ஆட்சி மாற்றம் அடைந்த பின்பு, இந்திய நிர்வாகம் இப்பகுதியில் நுழைந்து அவர்களை சுரண்டி வருகிறது தற்போதைய கலகம் மிகவும் திட்டமிட்டபடி நன்கு அணித்திரட்டப்பட்டதாகும். இது மாவோயிஸ்ட்டுகளால் அணித்திரட்டப்பட்டது மட்டுமல்ல.



ஆதிவாசிகள் தாமாகவே நன்கு அணித்திரண்டு இருப்பதும் ஆகும். (PICM)ன் தலைவர்கள் காரத்தும் மற்றும் அதன் ஆதரவான சில அறிவுஜீவிகளும், மனித உரிமை அமைப்புக்களும், சில மார்க்சிஸ் - லெனினிஸ் அமைப்புகளும் மீண்டும் மீண்டும் ஒரு கேள்வியை முன்வைக்கின்றனர்.

ஏன் கண்ணிவெடி தாக்குதலை நடத்தி மாநில முதலமைச்சரைக் கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதுதான் அது. சிங்கூரிலும், நந்திகிராமிலும் முதலமைச்சர் கொல்லப்பட வேண்டும் என்று ஒவ்வொரு வீடுகளிலும் மக்கள் வெளிப்படையாகவே சுவரெழுத்துக்களில் எழுத தொடங்கிவிட்டனர் என மாவோயிஸ்டுகள் பதிலளித்துள்ளனர்.

மக்கள் உணர்ச்சி வேகத்தில் எதையேனும் குறிப்பிட்டால், அதை அப்படியே வார்த்தையளவில் எடுத்துக்கொள்ள இயலாது என்று விடையளிக்கப்படுகிறது. ஆனால், மக்கள் அதனை உண்மையாக நம்புவதாலும், மாவோயிஸ்டுகள் மக்களுடன் மக்களாக வாழ்வதாலும் அதனை நடைமுறைப் படுவதாகவும் மாவோயிஸ்டுகள் கூறுகின்றனர். மிகவும் ஏழ்மையான மக்கள் ஏன் இந்த அமைப்பின் அரசியல் தலைவர்களை கொலை செய்ய விரும்புகின்றனர்? அவர்கள் இந்த அரசியல் தலைவர்களை கண்டு வெறுப்படைந்துள்ளனர். அவர்கள் மீது கோபம் கொண்டுள்ளனர். சுதந்திரமடைந்து 62 ஆண்டுகள் கழித்து அவர்கள் எந்த ஒரு அரசியல் தலைவர்களையும் கொலை செய்ய விரும்புகின்றனர். இது ஏதோ நக்சல்பாரிகளால் தூண்டிவிடப்பட்ட உணர்வல்ல. இது அம்மக்களின் சனநாயக ரீதியான உணர்வாகும்.

லால்கர் இயக்கம், நக்சல்பாரியை போன்றதொரு ஒரு புதிய வடிவத்தை பெற்றது. ஆனால், நக்சல் பாரிக்கான கருத்தாக்க பாய்ச்சல் ஏற்கனவே பெறப்பட்டது தான் லால்கரும் அதையொட்டிய ஒவ்வொரு கிராமமும் குழந்தைகளும், வயதானவர்களும் பெண்களும் அணித்திரட்டப்பட்டனர். இதில் மாவோயிஸ்டுகள் மிகவும் வெறும் சிலரே. மக்கள் தாமே அணித்திரண்டு தம்மை மாவோயிஸ்டுகளாக அறிவித்துக்கொண்டனர். காவல்துறையினரின் அட்டூழியங்களுக்கு எதிரான மக்கள் குழு (PCPA) தனக்கான மக்கள் போக்குக் குழு ஒன்றை உருவாக்கிக் கொண்டது. பத்திரிகைகள் யாவும் உடனேயே PCPA ஒரு தீவிரவாத இயக்கமாக மாறி விட்டதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இது தவறான ஒன்றாகும். PCPA தனது தற்பாதுகாப்பிற்கான போர்குழுவையே உருவாக்கி கொண்டுள்ளனர். இப்பகுதியில் கடந்த 12 ஆண்டுகளாக மாவோயிஸ்டுகள் செயல்பட்டு வருகின்றனர். அவர்கள் 50-60 நபர்களாக இருக்கக்கூடும். அது எப்படி லால்கர் இயக்கம் துவங்கியவுடன் 12,000க்கு மேற்பட்ட இளைஞர்கள் ஆயுதம் ஏந்த தயாராக இருக்குமளவு உடனடியாக உருப்பெற்றது? (PICM) அரசின் மக்கள் விரோத போக்கு, தொடர்ச்சியான அடக்குமுறை, இவற்றிற்கு எதிராக அணித்திரள்கின்றனர். நகர்புற அறிவுஜீவிகள் இதற்கு ஆதரவு அளிக்கின்றனர். மக்கள் தனக்கு விருப்பமற்ற இக்கட்டமைப்பை துாக்கியெறிந்து புதிய அமைப்பை கட்டியமைக்க விரும்புவதையே சுட்டிக்காட்டுகிறது.

***லால்கர் குறித்து குறிப்பாக சுட்டிக்காட்டினீர்கள் சட்டீஸ்கர், கிரீன் ஹண்ட் என்பது பற்றி குறிப்பிடவில்லையே?***

சட்டீஸ்கர் சார்ந்த ஆதிவாசி மக்கள் ஏற்கனவே கடந்து 30 ஆண்டுகாலமாக அணித்திரட்டப்பட்டு வந்துள்ளனர். இது தன்னெழுச்சியான இயக்கம் அல்ல, திட்டமிட்டு அணித்திரட்டப்பட்ட இயக்கம் ஆகும். அது ஏற்கனவே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பகுதியாக மாறியுள்ளது. அப்பகுதியில் அலுமினியம், வைரம், தங்கம், போன்ற கனிம வளங்கள் நிறைந்து உள்ளன. ஆதிவாசி மக்கள் இந்த கனிம வளங்களை பாதுகாக்க விரும்புகின்றனர். தாதுப் பொருட்களில் 60% மத்திய இந்தியாவிலும், கிழக்கு இந்தியாவிலும் காணப்படுகின்றன. பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் இந்த கனிமவளங்களை சுரண்ட முயற்சித்தனர். ஆயின், ஆதிவாசிகளின் கடும் எதிர்ப்பின் காரணமாகவே அதனை கைவிட்டனர். இந்திய ஆளும் வர்க்கத்தினர்

**ஆதிவாசி மக்களின் 150 ஆண்டுகால எதிர்பியக்க வரலாறு உள்ளது. ஒவ்வொரு முறையும் புதிய தனிச்சிறப்பு சட்டங்கள் கொண்டுவரப்பட்ட போதும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக அவர்கள் கலகம் செய்தனர்.**



படிப்பகம்

www.padippakam.com

அம்மக்களுக்கான மருத்துவ வசதிக்கான செயல் வீரர்களையும், கல்வியாளர்களையும் அவ்விடம் அனுப்ப வில்லை.


அரசியல் சட்டத்தின் 5வது பிரிவு குறிப்பாக மலைவாழ் ஆதிவாசி மக்களை பாதுகாப்பதற்காக கொணரப்பட்டது. அது ஒரு தனி சிறப்பு வாய்ந்த சட்ட மாகும். அம்மக்களின் கலாசாரமும், மொழியும் பெரு மளவில் மாறுப்பட்டதாக இருக்கின்றது. அவர்களை மற்ற பிற சட்டங்களின் கீழ் பார்ப்பது போன்று கவ னிக்க இயலாது. ஆதிவாசி மக்களின் 150 ஆண்டுகால எதிர்ப்பியக்க வரலாறு உள்ளது. ஒவ்வோர் முறையும் புதிய தனிச்சிறப்பு சட்டங்கள் கொண்டுவரப்பட்ட போதும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக அவர்கள் கலகம் செய்தனர். வரலாற்று ரீதியான போராட் டத்தைக் கணக்கில் கொண்டு 5 வது பிரிவு அரசியல் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. அந்த மக்கள் பிரிவினரின் விருப்பத்திற்கு இணங்க தனியான சட்டம் கொணரப்பட்டது.

இப்பகுதிகள் யாவும் அட்டவணைப்படுத்தப் பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. அதன் ஆளுனர் கள் தனிச்சிறப்பான நடைமுறைகளை உருவாக்கிக் கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள மக்களிடம் இருந்து எதையும் நீங்கள் பிரித்து எடுக்க முடியாது. இப்பகுதியில் உள்ள அசையும் சொத் துக்களும், அசையா சொத்துக்களும் பழங்குடியினர் அல்லாதவர்களால் பிரித்து எடுக்க இயலாது. ஆனால், சட்டத்தைப் புறக்கணித்து ஆளும் வகுப்பினர் பழங் குடியர் அல்லாதோர் கடந்த 62 ஆண்டுகளுக்கு மேல் பழங்குடியினரின் நிலத்தை அபகரித்தும், வாங்கியும், பழங்குடியினருக்கு எதையும் விட்டுவைக்காமல் அழித் தனர்.

இந்த சூழலில் மாவோயிஸ்ட்டுகள் இப்பழங்குடி யினருக்கு குரல் கொடுக்க ஆரம்பித்தவுடன், அவர்கள் பழங்குடியினருடன் ஒருங்கிணைந்தனர். துவக்கத்தில் அவர்கள் ஆந்திர மாநிலத்தில் இருந்து வந்தனர். இன்று இவர்கள்தான் இயக்கத்தை முன்னின்று நடத்துகின்ற னர். "பச்சை வேட்டை" செயல்பாடு அல்லது இராணுவ தாக்குதல் என்ற பெயரில் 2,40,000 இராணுவ வீரர் களும், துணை இராணுவ படைகளும், எல்லைப் பாது காப்பு படையினரும், வான்படையினரும் மாவோ யிஸ்டுகளை ஒடுக்குவதற்காக கொணரப்பட்டுள்ளனர்.

இடதுசாரி தீவிரவாதம் என்ற சொல்லாடலைப் பயன்படுத்தி மாவோயிஸ்டுகளை சட்டவிரோதமான வர்களாகவும், மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போர் எனவும், மாவோயிஸ்ட் இயக்கத்தை தீவிரவாத இயக்க மாகவும் சித்தரிக்கின்றார் இந்திய பிரதமர் மன் மோகன்சிங். கடந்த ஆறு ஆண்டுகாலமாக இடதுசாரி தீவிரவாதம் என்ற சொல்லாடல்களையே பயன்படுத்தி வரு கிறார்.

*முந்தை அரசாங்க நடவடிக்கைக்கும், தற்போது அரசாங்கம் முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கைக்கும் இடையிலான வேறுபாடு என்ன?*



இடதுசாரி தீவிரவாதம் என்ற சொல்லாடலை பயன்படுத்தி மாவோயிஸ்டுகளை சட்டவிரோதமானவர்களாகவும் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போர் எனவும் மாவோயிஸ்ட் இயக்கத்தை தீவிரவாத இயக்கமாகவும் சித்தரிக்கின்றார் இந்திய பிரதமர் மன் மோகன்சிங்.

தற்போது இராணுவப்படை கொண்டுவரப்பட் டுள்ளது. இராணுவ அதிகாரிகள் இதனை வழிநடத்து கின்றனர். விமானப் படையும் விமானங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. போஃபோர்ஸ் துப்பாக்கி கள் பயன்படுத்தப்படுகின்றன. ஹெலிகொப்டர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. ஏழு போர் பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆந்திரப்பிர தேசம், ஜார் கண்ட், சட்டீஸ்கர், பீகார், ஒரிசா பகுதி



படிப்பகம்

www.padippakam.com



களுக்கு 70,000 தாக்குதல் படையினர் கொண்டு இறக்கப்பட்டுள்ளனர். ஆப்கான் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா 50,000 படைவீரர்களை ஈரான் மீதான தாக்குதலுக்கு 100,000 படையினர் களம் இறக்கப்பட்டனர். இந்திய அரசாங்கமோ 2,40,000 படை வீரர்களை அனுப்பி 20,000 மாவோயிஸ்டுகளை ஒடுக்க முயற்சிக்கிறது.

இந்திய மக்கள் அனைவரும் இதனை வேடிக்கை பார்த்து அமைதியாக இருக்கமாட்டார்கள். மக்கள் இவர்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளனர். கடந்த செப்டெம்பர் 9ம் திகதி 10,000 இராணுவ படையினர் தத்தேவாடா பகுதிக்குள் அனுப்பப்பட்டனர். அங்கு சென்று 4 மணி நேரத்தில் அப்படையினர் திரும்ப பெறப்பட்டனர்.

அமெரிக்க படையினர் சதாம் ஹூசைனை கொல்ல முடிந்தது. ஆனால் ஈராக் மீது வெற்றிகாண இயலவில்லை. சிதம்பரமும், மன்மோகனும் மாவோயிஸ்டுகளை ஒட்டுமொத்தமாக ஒழித்து கட்ட இயலாது.

**ஏகாதிபத்தியவாதிகள் பயங்கரவாதத்தின் மீதான போர் என்ற கோஷத்தை முன்வைக்கின்றனர் ஆயின் மக்கள் தான் உண்மையான பயங்கரவாதிகளுக்கு எதிராக போராடுகின்றனர். அவர்கள் பயங்கரவாத துணைக்குழுக்களை உண்மையிலே உருவாக்கும் அரசுகளுக்கு எதிராக போராடி வருகின்றனர்.**

தற்போதைய பிரச்சினை என்னவெனில், அரசாங்கம் மாவோயிஸ்டுகளை முழுமையாக அப்பகுதிகளில் இருந்து விரட்டியடிக்க முயற்சிக்கிறது. ஆனால், மாவோயிஸ்டுகள் யார்? மவோயிஸ்டுகள் அல்லாதோர் யார்? மாவோயிஸ்டுகளையும் ஆதிவாசிகளையும் நாம் பிரித்து பார்க்க இயலாது. மாவோயிஸ்டுகளுக்கு ஒரு சீருடையும், ஆதிவாசிகள் வேறு ஒரு சீருடையிலும் இருப்பதாக கருதுவது தவறாகும். அப்பகுதியைச் சார்ந்த காவல்துறை கண்காணிப்பாளர், ஒருவரின் கூற்றுப்படி ஏதேனும் ஒரு ஆதிவாசியின் கையில் ஒரு டிராசிஸ்டர், மருந்துகள் இருப்பின் அவர் ஜீன்ஸ் உடை அணிந்திருப்பின் அவர் மாவோயிஸ்ட்டாக இருக்க கூடும். எந்த ஒரு அரசாங்கமும் தனது குடிமக்களின் மீது போரை நடத்துவேன் என அறிவிக்க இயலாது.

மாவோயிஸ்ட்டுகளுக்கு என்று ஒரு அரசியல் சட்டம் ஒன்றும் இல்லை. ஆரசாங்கம், அதன் குடிமக்களுக்கு எதிராகவே போர் நடத்த எந்த உரிமையும் இல்லை. அவர்களைக் கைதுசெய்யலாம், சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கலாம். இராணுவ ரீதியாக நடவடிக்கை எடுக்க இயலாது. அம்மக்கள் அவர்களின் உடன்பிறப்புக்கள் என அவர்கள் அறிவர், இராணுவம் இன்று இல்லையேல் நாளை இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கலகம் செய்யும். எந்த ஒரு சட்டமும் மக்கள் மீது போர் நடத்துவதை அங்கிகரிப்பதில்லை. இது சட்ட விரோதமானது அரசியல் ரீதியாக அரசாங்கம் மாவோயிஸ்டுகளை எதிர்கொள்ள இயலாது. மாவோயிஸ்டுகள் கருத்தாக்க ரீதியிலும், அரசியல் ரீதியாகவும் மேன்நிலையில் உள்ளனர். அரசாங்கம் மறைமுகமாக போரை நடத்த முயற்சிக்கலாம். துவக்கத்திலேயே அரசாங்கம் இராணுவ ரீதியாக, சட்டபூர்வமாக தோல்வியை தழுவிவிட்டது.

***மாவோயிஸ்ட்டுகளின் முறை பழைமையாகிவிட்டது என்று பிரகாஷ்கராத் குறிப்பிட்டுள்ளாரே! அவர்கள் விடுதலைபுலிகள் (LTTE) மற்றும் லஷ்கர் இதொய்பா (LET) பாதையை பயன்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளாரே! நீங்கள் இது குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்?***

கராத்துக்கும் அவரை சார்ந்த திரிபுவாதக்குழுக்களுக்கும் தலைமை தாங்கும் இறுகிப்போன திரிபுவாதிகள் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே மார்க்ஸியத்தையும், லெனினையும், மாவோவையும் மறந்துவிட்டனர். அவர்கள் காங்கிரசு கட்சியில் இருந்து எந்த விதத்திலும் வேறுபட்டவர்கள் அல்லர். அவர்களுக்கு வர்க்க போராட்டம் என்பது என்ன என்பதே புரிந்துகொள்ள இயலாது. அவர்கள் மேற்குவங்கத்திலும், கேரளத்திலும் மக்களை ஒடுக்கி வந்துள்ளனர். முதலாளித்துவத்தை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று புத்ததேவ் கோரிவருகிறார். முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்துவதாக இருப்பின் கம்யூனிசக் கட்சி என்று ஏன் அக்கட்சி தன்னை அழைத்துக் கொள்ள வேண்டும்? திரிபுவாதம் ஒன்றும் புதியது அல்ல. உங்களுக்கு வர்க்க போராட்டம் தேவை இல்லையெனில், நீங்கள் ஆளும் வர்க்கத்துடன் அமைதியை நாடவிரும்புகிறீர்கள். ஆயுதம் தாங்கிய போராட்டம் பழமையானதாக மாறிவிட்டது எனில், ஏன் இன்றைய அரசாங்கம் ஆயுதம் தாங்கிய படையை கொண்டு மக்களுக்கு எதிராக பயன்படுத்தி வருகின்றன?

மேற்கு வங்க அரசாங்கமும் நந்திகிராமிலும், லால்கரிலும் மக்களுக்கு எதிராக அரசாங்கத்தின் ஆயுதம் தாங்கிய படையை பயன்படுத்தியது பழமைவாதம் தானோ? மக்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை மேற்கொள்வது சமத்துவத்தை நோக்கிய பாதையில் முன்னேறி செல்வதற்காகவே என்பது அறியப்பட வேண்டும். அதனால் தான் அவர்கள் மாவோயிஸ்டுகளை லஷ்கர் இதொய்பாவுடனும் பிறருடனும் ஒப்பிடுகின்றனர். அவர்கள் மாவோயிஸ்ட்டு கட்சி மீதான தடையை எதிர்ப்பதாக கூறிக்கொண்டனர். ஆனால், மாவோயிஸ்டுகளுக்கு எதிராக பரவலாக தடைச் சட்டத்தை பயன்படுத்துகின்றனர். அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



மாவோயிஸ்டுகளை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள விரும்புவதாக கூறுகின்றனர். ஆயின், அரசியல் ரீதியாக மாவோயிஸ்டுகளை எதிர்கொள்வதற்கு பதிலாக தனியார் ஆயுதம் தாங்கிய படைகளையும் அதிக அளவிலான மத்திய படைகளையும் பயன்படுத்தி மாவோயிஸ்ட்டுகளை ஒடுக்குகின்றனர்.



ஒரு புதிய தத்துவம் உருவாக ஒரு புதிய சகாப்த மாற்றம் இருக்க வேண்டும் என்ற பார்வை தவறானது. புதிய வகையிலான சுரண்டலை ஒழித்துகட்ட புதிய வழியிலான போர் முறை கையாளப்பட வேண்டும்.

இவர்கள் நிலப்பிரப்புத்துவ காலத்தைப் போன்று தனியார் படையை பயன்படுத்தி வருகிறார்கள், ஆனால் மாவோயிஸ்ட்டுகளை பழமைவாதத்தில் தேங்கி க்கிடப்பதாக குறை கூறுகின்றனர். மிகவும் எளிதில் விலைபோகும் அளவு கூட்டு போரர்களாகவும், மிகப் பெரும் பயங்கரவாதிகளாகவும், மாறிவிட்டார்கள் தாம் வர்க்க போராட்டத்தை பழமைவாதமாக்கி விட்டதாக குறிப்பிடுகின்றனர். ஆளும் அரசாங்கம் தான் மிகப் பெரும் பயங்கரவாதி. பயங்கரவாதிகள் அரசு உதவியின்றி தனியாக உயிர்த்து இருப்பதில்லை. அவர்கள் ஏகாபத்தியவாதிகளிடம் ஆதரவு பெறுகின்றனர்.

ஏகாதிபத்தியவாதிகள் "பயங்கரவாதத்தின் மீதான போர்" என்ற கோஷத்தை முன்வைக்கின்றனர். ஆயின், மக்கள்தான் உண்மையான பயங்கரவாதிகளுக்கு எதிராக போராடுகின்றனர். அவர்கள் பயங்கரவாத துணைக் குழுக்களை உண்மையிலே உருவாக்கும் அரசுகளுக்கு எதிராக போராடி வருகின்றனர்.

***மாவோயிசம் என்று ஒரு தத்துவம் ஒன்றும் இல்லை. ஒரு புதிய சகாப்தம் உருவாகும் போது ஒரு புதிய தத்துவம் உருவாகிறது. மாக்ஸியம் என்ற தத்துவம் முதலாளித்துவ காலத்திலும் லெனினிய தத்துவம் ஏகாதிபத்திய காலத்திலும் உருவானது. தற்போது புதிய சகாப்தம் உருவாகாத போது மாவோயிச தத்துவம் என்று எப்படி குறிப்பிடுகின்றீர்கள்? அது பழமையானது என்று சீத்தாராம் யெச்சூரி கூறியது குறித்து உங்கள் கருத்து என்ன?***

மாவோயிசம் என்பது மார்க்சிய தத்துவத்தின் உயரிக்கட்டம் தான் என்பதை யெச்சூரி புரிந்து கொள்ளத் தகுதியற்றவர். முதலாளித்துவம் வளர்ந்த பின்புதான் அதனை எதிர்த்து மார்க்ஸ் தனது தத்துவத்தை முன்வைத்தார். அவரது ஆய்வின் முக்கிய பொருளடக்கம் முதலாளித்துவமாக இருந்தது. அது போன்றே லெனின் காலக்கட்டத்தில் ஏகாதிபத்தியம் வளர்ச்சியுற்றிருந்தது. அவரது தத்துவம் ஏகாதிபத்தியத்தை கேள்விக்குட்படுத்தும் வகையில் அமைந்தது. மாவோயிசம் உருவாகும்போது ஒரு சாகாப்தத்தில் மாற்றம் ஏதும் நிகழ வில்லையா? ஆம்.

நான் ஒரு மாவோயிஸ்டுத்தான். நான் மாவோயிசத்தை இப்படித்தான் புரிந்துகொள்கிறேன். ஏகாதிபத்தியம் ஓட்டம் அற்ற நிலையான ஒன்றாக நிலைத்து இருப்பதில்லை. 20ம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியம் தோன்றிய பின்பு மாற்றம் ஏதும் இன்றி நிலையாக இருப்பதில்லை. மாவோயிசத்தை புரிந்து கொள்ள சகாப்தத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்ற அடிப்படையில் கவனிக்க தேவையில்லை. மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஏகாதிபத்திய சமூகத்தை எதிர்கொள்ளவும், வெல்லவும் மாவோ தத்துவார்த்தமாக தனது பங்களிப்பை செய்தார்.

புதிய சனநாயக புரட்சியின் மூலம் ஏகாதிபத்தியத்தை வென்றுவிடலாம் என்று முன்வைத்தார். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போரில் ஈடுபட முதலாளித்துவம் முழுமையாக வளர்ந்துவரும் வரை காத்திருக்க தேவையில்லை என்று ஏகாதிபத்திய காலகட்டத்தில், முதலாளித்துவம் உலகின் பெரும்பகுதியை நிலப்பிரப்புத்துவ சட்ட அமைப்பினுள்ளேயே கட்டுப்படுத்தி வைத்திருப்பதால் முதலாளித்துவம் வளர்ந்த பின்பு அதை எதிர்த்திட முன்வருவோம் என்பதே வீண்பேச்சாக மாறி வருவதாக உள்ளது.

ஏகாதிபத்திய காலகட்டத்தில் இரண்டு வர்க்கங்



படிப்பகம்

www.padippakam.com



கள் உருப்பெறுகின்றன. அவை ஏகபோக முதலாளித்து வம், தரகு முதலாளித்துவம் ஆகும். மிகப்பெரும் ஆற்ற லைப் பெற்றுள்ள விவசாய வர்க்கம், முதலாளித்துவத் தில் மிகவும் வலிமை குன்றிய பிணைப்பாக உள்ள பகுதியில் இருந்து தனது போராட்டத்தை துவங்கி நீண்ட தொடர் யுத்தத்தை நடத்தி முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்ட எத்தனிக்கின்றது. இந்த நீண்டகால யுத்தத்தை நடத்துவதில் புதிய வழிமுறையை ஏற் படுத்துவதில் மாவோவின் பங்களிப்பு இருந்தது.

ஒரு புதிய தத்துவம் உருவாக ஒரு புதிய சகாப்த மாற்றம் இருக்க வேண்டும் என்ற பார்வை தவறானது. புதிய வகையிலான சுரண்டலை ஒழித்துகட்ட புதிய வழியிலான போர்முறை கையாளப்பட வேண்டும் என் பதே அடிப்படை. அதை வகுத்து கொடுத்தது மாவோ யிசம். அது மாக்சியத்தின் வளர்ச்சி பெற்ற வடிவமா கும். சமாஜ்வாடி கட்சித் தலைவரான அமர்சிங்குடன் இணைந்து தனது மூலதனங்களை எங்கு முதலீடு செய் வது என திட்டமிட்டு திரியும் பெச்சூரிகளுக்கு இது குறித்து புரிந்து கொள்வது கடினமாகவே இருக்கும்.

***தெற்காசியாவில் இந்திய அரசின் பங்கு குறித்து உங்கள் கருத்து என்ன?***

இந்திய அரசு தெற்காசியா முழுவதையும் தம் கட்டுபாட்டிற்குள் கொண்டுவர முயற்சிக்கிறது. அவர் கள் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் கட்டுபாட்டில் இருந்து செயல்படுகின்றனர். அவர்களுக்கு விரிவா திக்க எண்ணம் உள்ளது. அதற்கு தெற்காசிய பகுதியை போட்டிக்கான பிரதேசமாக கருதுகின்றனர். தெற்காசி யாவை பயன்படுத்தி செயல்பட்டு அதனை கட்டுபாட் டுக்குள் வைத்துக்கொள்ள அவர்கள் விரும்புகின்றனர். ஆப்கானிஸ்தானும் அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப் பட்டது. ரஷ்யா மற்றும் சீனாவின் நலனுடன் போட்டி யிட்டு அமெரிக்கா செயல்பட விரும்புகிறது.

ஒபாமாவின் காலத்தில் செயல்பட அமெரிக்கா, ஆப்கானிஸ்தானுக்கு அடுத்தப்படியாக பாகிஸ்தானில் நுழைய முற்படுகிறது. அவர்கள் தாலிபான் மீது போர் நடத்துவதாக கூறி இவ்வாறு தலையீடு செய்கின்றனர். தாலிபான் மீது தாக்குதல் நடத்துவதற்காக என்று கூறிக்கொண்டு, சர்வதேச விதிகளைமீறி அமெரிக்கா பாகிஸ்தானின் உள் பகுதிகளின் மீது குண்டு வீச்சு நடத்துகிறது. அவர்கள் இந்திய இராணுவம் பங்களா தேச இராணுவத்துடன் இணைந்து நேபாளத்தில் தலையீடு செய்ய முயற்சிக்கின்றனர்.

CNP (மாவோயிஸ்ட்) கட்சியினர் அமெரிக்க நல னையும் இந்திய நலனையும் ஆதரிக்கும் வரை அவர்கள் நேபாளத்தில் ஆட்சியில் அமர அனுமதிக்கப்பட்டனர். CNP (மாவோயிஸ்ட்) கட்சியினரின் அடிமட்ட ஊழியர் களும், தலைவர்களும் இந்த தலையீட்டை எதிர்த்து குரல் எழுப்பத் துவங்கிய போது ஆட்சியை கவிழ்த் தனர். இலங்கையில் தமிழர்களை இனப்படுகொலை செய்தது என்பது சீனா, ரஷ்யாவுடன் இணைந்து நடத்தப்பட்டது. இந்திய அரசாங்கம், சீனாவுடன் போட்டி போட்டு இலங்கைக்கு ஆயுதகளை அனுப்பி யது. தமிழக மக்கள் இந்திய இராணுவத்தின் திட்டங் களை அம்பலப்படுத்தினர். இந்திய அரசாங்கம் சீனா வுடன் போட்டி போட்டு இலங்கையில் தலையீடு செய்ய வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வந் தது. இதன் விளைவாக சீன அரசாங்கம் தமிழ் பகுதி களில் உளவு வலைகளை நன்கு விரித்து செயல்பட்டது. இப்பகுதியில் இந்திய அரசு சற்று திறனற்று செய்யப் பட்டது. அது அமெரிக்க விரிவாதிக்கத்திற்கு சாதக மாக செயல்பட்டு வருகிறது.

***இலங்கையில் ஆயுதம் தாங்கிய எதிர்ப்பு நடவடிக்கை கள் தோல்வியுற்ற பின்பு, நேபாளத்தில் ஆயுதம் தாங்கிய CNP (மாவோயிஸ்ட்) கட்சியினர் பாராளுமன்ற பாதையை தேர்வு செய்த பின்பு, ஆயுதம் ஏந்திய போராட்ட வடிவம் மாற்றத்தை கொண்டு வர இயலும் என எவ்வாறு அறுதியிட்டு நம்ப இயலும்?***

போராட்ட வடிவங்கள் மாற்றம் அடைந்த வண் ணம் உள்ளன. இதனை எதிரிதான் தீர்மானிக்கின்றான். ஆளும் வர்க்கம் தாக்குதலுக்கு கோடாரியை பயன் படுத்தினால், போராடும் மக்களும் எதிர்தாக்குதலுக்கு அதையே பயன்படுத்துவர். நீங்கள் எப்போதும் எந்த வர்க்கத்தை சார்ந்து நிற்கின்றீர்கள் என்பதை பொறுத்து தத்துவார்த்தப்படுத்தலை நிலைநிறுத்த வேண்டும். ஆயுதம் ஏந்திய போராட்டம், ஆயுதம் ஏந்தாத போராட்டம் இவையனைத்துமே சனநாயக வழி முறைக்குட்பட்டதுதான். ஆயுதம் தாங்கிய போராட் டத்தை சனநாயகமுறையற்றது எனக் குறிப்பிடுவதாக இருப்பின் பிரெஞ்சு புரட்சியின் போது நடந்தவற்றை சனநாயகமற்றது என சுட்டிக்காட்ட வேண்டிவரும். பிரிட்டிஷ் மக்கள் இளைய அரசு குமாரன் சார்ளஸை தூக்கிலிட்டு அரண்மனை வாயிலில் தொங்கவிட்ட னர். அதுவும் ஒரு சனநாயகத்திற்கான போராட்டமா கத்தான் இருந்தது. அது சனநாயகமா அல்லது சன நாயக மற்ற நிலையா என்ற கேள்வியாகத்தான் அன்று அமைந்தது.

நீங்கள் பேரணி நடத்தலாம், சாலை மறியல் செய்ய லாம். சனநாயக வழிமுறை என ஏற்கப்படும் ஆனால், எதிரிவர்க்கத்தை தாக்குவதாக இருப்பின் அது சன நாயகமற்றது என்று குறிப்பிட்டால் இந்நிலை ஒரு கோணலான பார்வையாக இருக்கும், ஆளும் வர்க்கத் திற்கு எதிரான அனைத்துவிதமான எதிர்ப்பு நடவடிக் கைகளும் வன்முறைக்கொண்டதாக மாறிவிடுகின்றன. ஏனெனில் மிகப்பெரும் அரசு இயந்திரம் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை ஒடுக்க முயற்சிக்கிறது.

இந்த வெளியை நாம் வெகுசன மக்களுக்கான வெளி என குறிப்பிட இயலாது, மிகவும் ஏழ்மையான மக்கள் வெற்றிகரமாக இந்தக் கட்டமைப்பை மாற்றிய மைக்க முயற்சிக்கும்போது பொதுவெளி திறந்துவிடப் பட்டதாக நாம் கருதலாம். அத்தகைய கட்டமைப்பும் முன்பு இருந்து வந்தது. முதலாளித்துவ அமைப்பின் துவக்க நிலையில் இத்தகைய சூழல் நிலவியது. ஏகாதி



படிப்பகம்

www.padippakam.com

பத்திய சூழலில் பொதுவெளி என்பது சுருங்கி போனது. அரை நிலப்பிரபுத்துவ -அரைகாலினிய சமூகத்தில் மத்தியதர வர்க்கத்துடன் நீங்கள் இணைந்து நின்றாலும், மக்களை அணித்திரட்ட முயற்சித்தால், இச்சமூகத்தின் அடியாட்களின் தாக்குதலை எதிர் கொள்ள வேண்டிவரும். இந்த அடியாட்கள் உங்களை கொலை செய்ய முயற்சிப்பர். சனநாயகவெளி எதுவும் கிடைக்கப்பெற வில்லையெனில் மக்கள் ஆயுதம் ஏந்த தயாராகிவிடுகின்றனர். ஏகாபத்திய சகாப்த்தத்தில் எந்த ஒரு இயக்கமும், புரட்சிகர இயக்கமும், சனநாயக இயக்கமும், ஆதி வாசிகளின் நலனுக்காக தலித்துகளின் நலனுக்காக, தேசிய விடுதலைக்காக போராடும், இனப் பாகுபாட்டிற்கு எதிரான இயக்கங்கள் யாவும் ஆயுதம் தாங்கிய போராட்டமாகவே மாறியுள்ளன. நேபாள மாவோயிஸ்டுகளை பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட பிரிவினர் சனநாயக போராட்டங்கள் அரசை ஆயுத எழுச்சியின் மூலம் நடத்திட இயலும் என கணக்கிட்ட னர். எனது கருத்து, அவர்களது அரசியலில் தலையீ டாக கருதப்படக்கூடாது. சர்வதேச பாட்டாளி வர்க்க சிந்தனை என்ற நிலையில் இருந்துதான் இதை குறிப்பிடு கிறேன்.

நேபாளத்தில் ஆயுதப்போராட்டத்தின் அனைத்து தேவைகளும் முற்றுக்கு வந்துவிடவில்லை. ஆயுதப் போராட்டம் என்பது நீங்கள் எப்படி உற்பத்தி உறவு களை மாற்றியமைக்க போகிறீர்கள் என்பது குறித்தும், சமூகத்தை எவ்வாறு மாற்றியமைக்கப் போகிறீர்கள் என்பது குறித்தும், தங்களது உற்பத்தி முறையை எப்படி மாற்றியமைக்கப் போகிறீர்கள் என்பது குறித் தும் சம்பந்தப்பட்டது. வெறுமனே எவ்வாறு சில பிரி வினரைக் கொன்று அதிகாரத்தை நிலைநாட்டுகிறீர்கள் என்பதாக மட்டும் கொள்ளக்கூடாது. இந்தத் தேவை யின் அடிப்படையில் நேபாள புரட்சியில் இன்றும் ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் அவசியம் உள்ளது. நேபாள அரசியலில் தலைமையில் உள்ள சிலர் இதனை இன்று ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம்.

இலங்கையில் 35 ஆண்டு கால போருக்கு பின்னர் உலக அளவில் ஈழ இயக்கத்திற்கு எதிரான குரல் எழுப் பப்பட்டது. இன்று உலகம் முழுவதும் ஆயுதம் தாங் கிய போராட்டத்துக்கெதிரான சூழல் நிலவுகிறது. இலங்கையில் ஈழமக்களின் ஆயுதம் தாங்கிய போராட் டம் நீண்ட மக்கள் இயக்கத்தின் மூலமாக வெளிப்பட் டது.

விடுதலைப்புலிகள், இயக்கம் மக்களை விடுதலை போராட்டத்துடன் ஒன்றிணைப்பதில் தோல்வியை தழுவியது. தேசிய இன விடுதலை பேராட்டம் என்பது மக்களின் பிரச்சினைகளையும் கணக்கில் கொண்டு முன்னெடுத்து செல்லப்படவேண்டிய ஒன்றாகும். வர்க்க பிரச்சினையும் இத்துடன் இணைத்து எழுப்பப் பட வேண்டியதாகும். மக்களும் போராட்டத்தின் ஓர் அங்கமாக கருதப்பட்டிருக்க வேண்டும். மக்கள் வெறு மனே இயக்கத்தைப் பின்தொடர்பவர்களாக ஆக்கப்ப ட் டிருக்கக் கூடாது.

விடுதலைப் புலிகள் ஏகாபத்தியவாதிகளின் உத வியை பெற்று தேசிய விடுதலை பெறுவதாக இருப்பின் அதனையும் ஏற்பதாக இருந்தனர். எந்த ஒரு பிற்போக்கு வாத அரசாங்கமும் தேசிய விடுதலை போராட்டத்தை ஆதரிக்கப் போவதில்லை. தேசிய விடுதலை போராட் டத்தை நாம் புரட்சிகர போராட்டங்களுக்கு சமமான தாக கருத இயலாது .

எல்.டி.டி.ஈ இலங்கை அர சுக்கு எதிரான யுத்தத்தில் சில தவறான கணக்கீடுகளை செய்தது. விடுதலைக்காக குரல் எழுப்பிய பிற சக்திகள் யாவும் விடுதலை போராட்டத்தை ஒரு வளர்ச்சியான நிலைக்கு கொண்டு செல்ல முடியவில்லை. இத்தகைய பின்னடைவுக்கு இட்டுச்சென்ற சூழலைக்குறித்து சரியான அரசியல் புரிதலை எல்.டி.டி.ஈ. கொண்டிருக்கவில்லை. ஆயுத போராட்டமா, ஆயுதம் தாங்காத போராட்டமா? என்பது இங்கு முக்கியமானதல்ல சரியான அரசியல் புரிதல் எப்படி இருந்தது என்பதே முக்கியமானதாக கருதப்படவேண்டியதாகும்.

நேர்காணல்: **சுதாகர்**
தொகுப்பு: **பீட்டர்.**

தமிழ் இலக்கிய முன்னோடிகளான மகாகவி பாரதி, சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் ஆகியோரை ஞாபகத்துக்குக் கொண்டுவரும் வகையில் அவர்களின் ஓவியங்களுடன் அமைந்த 29ஆவது கொழுந்து இதழ் வெளிவந்திருக்கிறது.

மலையகத்தின் கலை, கலாசார, சமூகப் பிரச்சினைகளை வெளிக் கொணஉவதற்காக அந்தனி ஜீவா விடாது கொணரும் கொழுந்து இப்போது பழைய நிலையிலிருந்து மாறி சிறு சஞ்சிகையாக அமைந்திருக்கிறது.

இந்த இதழில் மலையகத் தமிழ் எனும் தலைப்பில் பேராசிரியஉ ஆ.காஉத்திகேயன் வரைந்துள்ள கட்டுரை சிறப்பாக மலையக மக்களின் வரலாற்றுச் சுருக்கத்தினையும் அவஉகளுடைய மொழி சாஉந்த சிறப்புகள் குறித்தும் அவஉகளுடைய மொழிப்பயன்பாட்டு முறைகள் குறித்தும் அதற்காக மலையகத்தைச் சேஉந்த புத்திஜீவிகளும், படைப்பாளிகளும் செய்ய வேண்டியவற்றையும் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

இது தவிரவும் தேசபக்தஉ கோ.நடேசய்யஉ முதல் தொழிற்சங்கவாதி தொண்டமான் வரை தொடஉ, கோப்பிக் காலத்திலே, முல்லோயா போராட்டம், அரிதாரவெளி தாண்டி அதிகார வெறிக்கெதிராக ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதை உலகம் போன்ற கட்டுரைகளும் பெரியசாமி பீ.ஏ.ஆகிவிட்டான் சிறுகதையும் கொழுந்து 29ல் உள்ளன.

மலையக மக்களின் மேம்பாடு சாஉந்தும் அவஉகளுடைய நலன் சாஉந்தும் பத்திரிகைகள் செய்து வருகிற பணிகளை விடவும் சஞ்சிகைகள் நிறையவும் பணியாற்ற முடியும். அதனை அவை தொடஉந்தும் செய்ய வேண்டும்.

தொடர்புகளுக்கு:- அந்தனி ஜீவா, 57, மகிந்த பிளேஸ், கொழும்பு - 06, இலங்கை.
தொலைபேசி:- 0776612315.மின்னஞ்சல்:- kolundu@gmail.com






படிப்பகம்

www.padippakam.com



தர்மினி

## வெறும்வானம்

கொப்புகளிற் பனி படர்த்தி
வெறுங்குச்சிகளை மரங்கள்
கிளை விரித்து நிற்க,
மூடிய சன்னல்கள், கதவுகள்
உறைந்த பனித்துகள்களாகிக் கூரைகள்.
விறைத்து
இறுகி
நிலமெல்லாம் வெறுமை.

கண்கள் உயர்த்த
மாவு பூசிய வானம்
நிறங்களை விழுங்கித் தொங்கியது.

ஒற்றைப் பறவையில்லை
காற்றிற் கிளம்பியலையும்
கடதாசி, சருகில்லை
வீதி ஒன்றைக் கீறிச் செல்லும்
விமானங் கூட வானிலில்லை.

பாதி திறந்த
ஒற்றைச் சன்னலினூடே
விரக்தியில் வரைந்த ஓவியனின்
காட்சியொன்றாய்
அப்பனியுறைவு கொழுவப்பட்டிருந்தது.

வெறுமை படர்ந்து வந்து
என் தோள் போர்த்தி(த்)
தனித்திருக்கும் குளிர் பொழுதை
பாலைவனமொன்றில் பயணிப்பதாய்ச் சொல்லி
என் சன்னலின் ஓவியத்தை
மறுவளமாய்த் திருப்பியது.

நானொரு நாள்
உப்பளத்தில் நின்றதையது
நினைவுறுத்துவதையும் சொல்லி(ச்)
சன்னலை மூடினேன்.

## வேடங்கலைதல்

வீட்டு முற்றத்தில் வந்து நின்று
குடிக்கத் தண்ணீர் கேட்பவரை(க்)
குடம் வெறுமையெனப் பாவனை செய்து
கிணற்றில் அள்ளிக் குடிக்கலாமென்பர்.

துலாவிழுத்து நீரூற்றி
பனையேறிய களைப்பு
கையேந்திக் குடிக்க விடாய் தீருமென்பர்.

மாதா கோயிலில் இட வலம் பிரித்து
சாதிக்கொரு சைற்றிலிருந்து
ஞாயிறு பூசை பார்த்து
பாவந் தீர்ந்ததெனப் பங்கிறைச்சி தின்று
கடன் திருநாள் கழித்தோமென்பர்.

பெருநாள் அவியலை மறுத்து
பசியில்லை
பகிர்ந்துண்ணப் பொசிப்பில்லை எனப்பசப்பி
வெள்ளாங் கோயில் தவிர்த்து
விருந்துண்ண மாட்டார்கள்.

குறிச்சிக்கொரு பள்ளிக்கூடம்
வீதிகள் பிரிக்கும் வீடுகள்.
கதைச்சுப் பேசலாம்
கவனம் கலக்கக் கூடாது
இரத்தமென்பர்.

வெளிநாடு வந்துமென்ன?
ஊரில் வெறுங்காணி விற்கச் சரிப்படாதென்பர்.
“வெள்ளாங் குடிமனையில் வேறையாட்கள்
வாழுறதா?”
இலட்சங்கள் பெறுமதியற்று
அங்கு சாதி எதிர் நிற்கும்.

இவர்கள்
அடையார், கறுப்பி, கள்ளக் கறுவலென்று
பழிப்புச் சொல்வதிலும் விண்ணர்கள்.

உச்சமாய்,
வெள்ளைத் தோல் துவேசத்திற்
கொதித்துக்குமுறி
ரெஸ்ஸிசம் பெருகிய சமூகமென்று பதறும்
சாங்கக் கிணற்றில் வாளி கழற்றிய
கண்டறியாச் சமூகமிது.



படிப்பகம்

www.padippakam.com

திறனாய்வு

# ஃபஹீமா ஜஹான் கவிதைகள்

எம். ஏ. நுஃமான்







ஃபஹீமா ஜஹான் 1990களின் பிற்பகுதியில் எனக்கு அறிமுகமானார். அப்போது அவர் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை மாணவி. கலாசாலை ஆண்டுமலருக்காக என்னிடமிருந்து ஒரு பேட்டி எடுக்கவேண்டும் என அவர் விரும்பினார். என் மனைவி மூலம் தொடர்புகொண்டு பேட்டிக்கான வினாக்களை எழுதி அனுப்பியிருந்தார். அந்த வினாக்களைப் படித்தபோது அவர் ஒரு சராசரி ஆசிரியை அல்ல, நன்கு விபரம் தெரிந்தவர்தான் என்று நினைத்தேன். அவரை நேரில் சந்திக்காமலே தபால் மூலம் நிகழ்ந்த அந்தப் பேட்டி கலாசாலைச் சஞ்சிகையான கலையமுதத்தில் வெளிவந்தது.

அப்போது அவர் கவிதைகளும் எழுதுபவர் என்று எனக்குத் தெரியாது. பின்னர் பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்த அவரது சில கவிதைகளைப் படித்தபோது அவர் மேலெழுந்துவரக்கூடிய கவிஞர் என்பது உறுதிப்பட்டது. மிக அண்மையில்தான் ஒரு கடல் நீரூற்றி என்ற அவரது முதலாவது தொகுப்புப் படிக்கக் கிடைத்தது. அதில் இடம்பெற்றுள்ள கவிதைகள் ஃபஹீமாவின் கவியாளுமை பற்றிய ஒரு மன நிறைவைத் தந்தன.

சமீபத்தில் வெளியான தனது இரண்டாவது தொகுப்பான "அபராதி"க்கு ஒரு முன்னுரை தருமாறு அவர் கேட்டபோது மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டேன். ஆயினும் பதிப்பகத்தாரின் அவசரம் காரணமாகவும், எனது அவகாசமின்மை காரணமாகவும் எனது முன்னுரை இல்லாமலே அபராதி வெளிவர நேர்த்தது. இப்போது தனது முன்னையத் தொகுப்புகளில் இடம்பெற்ற கவிதைகளையும் சேர்த்து தனது மூன்றாவது தொகுப்பை ஃபஹீமா வெளியிடுகிறார். இது எனது முன்னுரையோடு வெளிவர வேண்டும் என்பது அவரது விருப்பம். அவரது கவிதைகளைப் பற்றிய எனது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைவதால் அதை நானும் விருப்புடன் ஏற்றுக்கொண்டேன்.

ஃபஹீமாவின் உடனடியான இலக்கியச் சூழல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் அவரை இன்னும் நேரில் சந்தித்ததில்லை. அவர் இலங்கையில் சிங்களம் பேசுவோர் பெரும்பான்மையாக வாழும் குருணாகலை மாவட்டத்தில், தமிழ் பேசும் முஸ்லீம்கள் சிறுபான்மையினராக வாழும் மெல்சிரிபுரவில் பிறந்து வளர்ந்தவர். அங்கேயே கல்வி கற்று அங்கேயே கணித ஆசிரியராகப் பணிபுரிகிறார். இடையில் ஆசிரிய பயிற்சிக்காக கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக வாழும் சூழலில் இரண்டு ஆண்டுகளைக் கழித்திருக்கிறார். என்றாலும் அவரது தமிழ் மொழி ஆளுமையும் இலக்கிய ஆர்வமும் அபாரமானது. சமீபத்தில் நான் படித்த ஃபஹீமாவின் சில கட்டுரைகளும் விமர்சனக் குறிப்புகளும் அருக்கு ஒரு பரந்துபட்ட வாசிப்புத் தளமும், இலக்கியப் பரிச்சயமும், சுய நிலைப்பாடும் இருக்கின்றன என்பதை உணர்த்தின. இது பெரிதும் அவரது சுயமுயற்சியின் அறுவடை என்று நினைக்கிறேன். எனினும் பள்ளியில் தனக்குத் தமிழ் கற்பித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனது ஆசிரியை பராசக்தி இளையதம்பியை நினைவு கூர்ந்து அவருக்குத் தனது இரண்டாவது தொகுதியை சமர்ப்பணம் செய்திருக்கிறார். தனது மொழித் திறனின் மூலவேரை தனது தமிழாசிரியரிடம் இனங்காணும் இவரது மனப்பாங்கு மகிழ்ச்சிக்குரியது.

ஃபஹீமா 90களின் நடுப்பகுதியிலிருந்து கவிதை



படிப்பகம்

www.padippakam.com



எழுதிவருகிறார் என்று நினைக்கிறேன். என்றாலும் கடந்த சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் இவர் ஏராளமாக எழுதிக் குவித்தவர் அல்ல. அவரது முதல் தொகுதியில் (ஒரு கடல் நீரூற்றி) 28 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இரண்டாவது தொகுப்பில் (அபராதி) 30 கவிதைகள் உள்ளன. பத்திரிகைகளில் வெளிவந்த, வானொலியில் ஒலிபரப்பாகிய அவரது ஆரம்பகாலக் கவிதைகளையும் சேர்த்தால் அவரது மொத்தக் கவிதைகள் சுமார் இருநூறைத் தாண்டியிருக்கா என்று நம்புகிறேன். இத்தொகுப்பில் அவர் தன் எல்லாக் கவிதைகளையும் சேர்த்துக்கொள்ளவில்லை. தான் எழுதிய வரிகள் எல்லாம் பொன் வரிகள் என்று கருதும் மனப்பான்மை அவரிடம் இல்லை. தன் வளர்ச்சிப் போக்கில் ஒரு சுயமதிப்பீட்டையும் சுய விமர்சனத்தையும்கூட வளர்த்திருக்கிறார் என்பது இன்றைய இலக்கியச் சூழலில் முக்கியமானது.

இத்தொகுப்பில் அவர் எழுதியவற்றுள் அவரே தேர்ந்தெடுத்த 60 கவிதைகள் உள்ளன. சுமார் 15 ஆண்டுகால அறுவடை இவை. ஆண்டு ஒன்றுக்கு சராசரி நான்கு கவிதைகள். இலக்கிய உலகில் ஒரு படைப்பாளியின் நிலை எண்ணிக்கையால் தீர்மானிக்கப்படுவதில்லை, தரத்தினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அந்தவகையில் குறைவாக எழுதி தன் இருத்தலை உறுதிப்படுத்திக்கொண்டவர்களுள் ஃபஹீமாவும் ஒருவராகிறார். இளம் தலைமுறையைச் சேர்ந்த ஈழத்தின் முக்கியமான கவிஞர்களுள் ஃபஹீமாவும் ஒருவர் என்பதை இத்தொகுப்பில் உள்ள அவரது கவிதைகள் உறுதிப்படுத்துகின்றன என்பதை நான் அழுத்திக் கூறலாம்.

ஃபஹீமாவை ஒரு பெண் கவிஞர் என்றோ, பெண்ணியக் கவிஞர் என்றோ நான் அடையாளப்படுத்த விரும்பவில்லை. அவர் ஒரு பெண் என்ற உயிரியல் அம்சமும், ஆணாதிக்கச் சமூகச் சூழலில் அவர் தான் பெண் என்ற பெண்ணிய அரசியல் சார்ந்த சமூகநிலைப்பட்ட பிரக்ஞை பெற்றிருப்பதும் அவரது கவிதைகளில் அழுத்தமாக வெளிப்படுவது உண்மைதான். ஆனால், பெண் என்ற அடையாளத்துக்கு அப்பாலும் அவரது கவிதைகள் விரிவுபெற்றுள்ளன. தனது சமூகத்தின், தனது தேசத்தின், தான் வாழும் உலகத்தின் ஒரு உறுப்பினர் என்ற வகையில் அவரது கவிதைகளின் உணர்வுத் தளம் இவை எல்லாவற்றையும் தழுவி நிற்கின்றது.

## 2

**1980**க்குப் பிறகு தமிழ்க் கவிதையில் வலிமையாக ஒலிக்கத் தொடங்கிய பெண்ணின் குரல் - பல ஆண் கவிஞர்களையும், ஆண் முதன்மைச் சிந்தனை வட்டத்தினரையும் அசௌகரியப்படுத்திய அதே குரல் - ஃபஹீமாவின் கவிதைகளிலும் தீர்க்கமாக ஒலிப்பதை நாம் காண்கிறோம். பெண் என்ற வகையில் தனக்கு ஆண்களால் வரையறுக்கப்பட்ட எல்லையை அவர் உடைக்கிறார். அதை அவர் கேள்விக்கு உட்படுத்துகிறார். "அவள் அவளாக" என்ற கவிதை இதுபற்றிய ஒரு பிரகடனமாகவே அமைகின்றது

உனது தேவதைக் கனவுகளில்
அவளுக்குக் கிரீடங்கள் வேண்டாம்
உனது இதயக் கோவிலில்
அவளுக்குப் பூசைப்பீடம் வேண்டாம்
உனது ஆபாசத் தளங்களில்
அவளது நிழலைக்கூட
நிறுத்தி வைக்க வேண்டாம்.
வாழ்க்கைப் பாதையில்
அவளை நிந்தனை செய்திட
உனது கரங்கள் நீளவே வேண்டாம்

அவளது விழிகளில்
உனது உலகத்தின் சூரிய சந்திரர்கள் இல்லை
அவளது நடையில்
தென்றல் தவழ்ந்துவருவதில்லை
அவளது சொற்களில்
சங்கீதம் எழுவதும் இல்லை
அவள் பூவாகவோ தளிராகவோ
இல்லவே இல்லை

காலம் காலமாக நீ வகுத்த
விதிமுறைகளின் வார்ப்பாக
அவள் இருக்கவேண்டுமென்றே
இப்போதும் எதிர்பார்க்கிறாய்........

எல்லா இடங்களிலும்
அவளது கழுத்தை நெரித்திடவே
நெருங்கிவருகிறது உனது ஆதிக்கம்

அவள் அவளாக வாழவேண்டும்
வழிவிடு.

"கிரீடங்களை அவமதித்தவள்" என்ற கவிதையிலும் இதே குரல் இன்னும் உரத்து ஒலிக்கின்றது.

எக்காலத்திலும் இனி
உங்கள் பீடங்களில் முழந்தாளிட வரமாட்டேன்
நீங்கள் ஆராதிக்கும் நாமங்களிலும் சேரமாட்டேன்.

ஆதிமுதல் போற்றிவரும்
அந்தக் கிரீடங்களின்மீது
அவமதிப்பை விட்டெறிகிறேன்
உங்கள் அலங்காரப் பட்டினங்களின்
துர்வாடையையும் பேரிரைச்சலையும்
சகித்திட முடியாமல் அகன்று போகிறேன்.

இந்த வகையான எதிர்ப்புணர்வு ஃபஹீமாவின் பல கவிதைகளில் வெளிப்படுகிறது. பெண்ணின் துயரத்



படிப்பகம்

www.padippakam.com

துடனும், குமுறலுடனும், கோபத்துடனும் அது பதிவாகியுள்ளது. அம்மா, அவளை வழியனுப்பிய இடம், எல்லைக் கோட்டில் தடுக்கப்பட்டவள், காட்டுமிராண்டியிடம் சிக்குண்டவள், ஊற்றுக்களை வரவழைப்ப



வள், பேய்களால் தின்னப்படுபவள், பேறுகள் உனக்கு மட்டுமல்ல, எனது கைமாற்றி ஏந்திக்கொள், அவளுக்குச் சட்டம் வகுத்தது யார்? தற்கொலை, வயற்காட்டுக் காவற்காரி போன்ற கவிதைகளை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். விழிப்புற்ற பெண்மைபற்றிய பிரக்ஞையின் வெளிப்பாடாக நாம் இக்கவிதைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆதித் துயர், ஆதித் திமிர் ஆகிய தொடர்களை சமூகத்தில் வேரோடியுள்ள நெடுங்காலப் பால்நிலைப் பிளவின் குறியீடுகளாகத் தன் கவிதைகள் சிலவற்றில் ஃபஹீமா கையாண்டுள்ளார். இவ்வகையில் "ஆதித் துயர்" என்ற கவிதை மிகவும் கவனிப்புக்குரியது. பாலை வெய்யிலில் ஒரு மூதாட்டியின் வழிநடைப் பயணத்தின் ஊடாக துயர் படிந்த பெண்ணின் வாழ்வு இக்கவிதையில் சித்திரமாகின்றது. பெண்ணின் நெடுங்காலத் துயரின் குறியீடாகவே இச் சிறிய கவிதை அமைகின்றது எனலாம்.

நிழல் மரங்களற்றுச்
சூரியன் தவித்திடும் நெடுஞ்சாலையோரம்
வெய்யிலை உதறி எறிந்தவாறு
நடக்கிறாள் மூதாட்டி

குதி கால்களால்
நெடுங் களைப்பை நசுக்கித் தேய்த்தவாறு
காற்றைப் பின் தள்ளிக்
கைகளை வீசுகிறாள்

வெய்யில்
மிகப் பெரும் தண்டனையை
வழி நீளப் பரவ விட்டுள்ளது
வேட்டை நாய்போல
அவள் முன்னே ஓடிச் செல்கிறது நிழல்

பதிந்தெழும் ஒவ்வொரு சுவட்டிலும்
தேங்கித் துடிக்கிறது
ஆதிமுதல் அவளைத் தொடரும் துயர்

பெண்ணின் துயர் ஆதித் துயரெனின், ஆணின் திமிர் ஆதித் திமிராகின்றது ஃபஹீமாவின் கவிதைகளில். "தற்கொலை" ஆணால் வஞ்சிக்கப்பட்ட பெண்ணைப்பற்றிய கவிதை. வலுவான மொழியில் ஆணின் ஆதித் திமிர் பற்றி அது பேசுகிறது:

அற்ப புழுதான் - நீயெனினும்
வலுத்த குரலுடனும்
ஓங்கிய கரங்களுடனும்
எப்பொழுதும் அவளை விரட்டினாய்
ஆதித் திமிரின் அடங்காத ஆங்காரத்துடன்
எளியவளின் தேவைகளை
எட்டி உதைத்தாய்.....

நீ கொடுத்த சுமைகளையும்
அந்த உடலையும்
உன்னிடமே எறிந்துவிட்டாள்
இனி எக்காலத்திலும்
உன்னெதிரே வரப்போவதில்லை
நீ துன்புறுத்திய அவள் ஆத்மா

ஆணின் ஆதித் திமிரை நிராகரிக்கும் பிறிதொரு கவிதை "கடைசிச் சொல்." "நம்மெதிரே வீழ்ந்து கிடக்கிறது காலத்தின் பிறிதொரு முகம்" என கவித்துவ வீச்சோடு தொடங்குகிறது கவிதை.

நீ உரிமை கொண்டாடிய
எல்லாவற்றிலிருந்தும்
எனை விடுவித்துக்கொண்டேன்
துயரத்தில் பதைபதைத்த சொற்களையும்
துரோகத்தால் நசுங்குண்ட சத்தியங்களையும்
உனது சுவர்களுக்குள்ளேயே விட்டுவிட்டு
வெளியேறிப் போகிறேன்

இப்பொழுதும்
ஆதித்திமிர் தடுத்திட உன்னிடம் எஞ்சியுள்ளது
ஒரு சொல்
விதி தன் கண்ணீரை வழியவிட்ட சொல்
நாம் நமக்குக் கிடைத்திடக்
காத்திருந்த கடைசிச் சொல்

அந்தக் கடைசிச் சொல் எதுவாகவும் இருக்கலாம். அது அவ்விருவரின் இழப்பையும் மீட்டெடுக்கக்கூடிய சொல். ஆதித் திமிர் அதையும் தடுத்துவிட்டது என்கிறாள் பெண். இவ்வாறு ஆணின் ஆதித் திமிருக்கு எதிரான, பெண்ணின் ஆதித் துயரிலிருந்து மீழ்வதற்கான விழிப்புற்ற பெண்ணின் குரலாக அமைகின்றன ஃபஹீமாவின் பெரும்பாலான கவிதைகள்.



படிப்பகம்

www.padippakam.com



காதல் உணர்வு சார்ந்த அவரது சில கவிதைகளிலும்கூட ஆண்மைக்கு அடிமைப்பட்டுப் போகாத சமத்துவமான காதலுக்கான குரலே ஒலிக்கின்றது. மிகையுணர்ச்சியற்று வாழ்வின் முரண்பாடுகளை எதிர்கொள்ளும் குரல் இது.

அன்பு பொங்கிப் பிரவகித்த அபூர்வ நாட்களில்
நிழல்போலப் பிரிவைச் சொல்லிப் பின்வந்தது காலம்
நான் வரச் சாத்தியமற்ற இடங்களில் நீயும்
நீ வரத் தேவையற்ற இடங்களில் நானும்

வாழ்வின் விதிமுறைகள்
எனதுலகையும் உனதுலகையும்
வேறு பிரித்தவேளையில்
விடைபெற்றோம்
ஒன்றித்துப் பறந்த வானத்தையிழந்தோம்
இறுதியாக அன்றுதான் அழகாகச் சிரித்தோம்

எனது சூரியனும் தனித்துப் போயிற்று
உனது சந்திரனும் தனித்தேபோயிற்று
(எனது சூரியனும் உனது சந்திரனும்)

உனது மகிழ்ச்சிகளையெல்லாம்
என்னிடமிருந்தே பெற்றுக் கொண்டாய்
எனது துயரங்களையெல்லாம்
நீயன்றோ ஏற்படுத்தித் தந்தாய்?
தாங்க முடியாத வலிதருகின்ற உன்
தளைகளிலிருந்து
என்னை விட்டுவிடேன் - போகிறேன்...

உனது அதிகாரங்களையும்
எனது அண்டிவாழ்தலையும்
கீழிறக்கிவைத்துவிடுவது
சாத்தியமெனில் ஒன்று சேர்வோம்
(நீ அவனைக் காதலித்தாயா)

நெடுங்காலத் தாமதத்தின் பின்
இப்போது அழைக்கிறாய்
எந்த மன்னிப்புமற்ற வியாக்கியானங்களோடு
பதுங்கிப்பதுங்கி வந்திருக்கிறாய்

முதன் முறையாக உன்னை எறிந்தேன்
இதயத்திலிருந்து சாக்கடைக்கு
மாசற்றவைகளைத் தூக்கியெறிந்திட
இருதடவைகள் சிந்தித்ததேயில்லை நான் ...

சொல்
அன்பானவனாக இருந்தாயா? ..

தாரை வார்த்துத் தந்திட
எவருமே முன்வராத வாசலொன்றில்
தாகித்தக் கிடந்தவளைக்
கைவிட்டுச் சென்றபோதும்
அன்பானவனாக இருந்தாயா?

எனக்கும் உனக்குமான உலகின்
கடைசி வாசலையும் மூடி
முத்திரையிட்டாயிற்று
அந்தப் பிசாசை இருகூறாக்கி
நெஞ்சத்துச் சீசாக்களில் அடைத்தாயிற்று
(உன்னால் நான் நனைந்த மழை)

3

இனத்துவ மோதல், அரசியல் வன்முறை, யுத்தம் என்பவற்றால் நேரடியாகப் பாதிக்கப்படாத தென்னிலங்கைக் கிராமம் ஒன்றை வாழிடமாகக் கொண்டவர் ஃபஹீமா ஜஹான். ஆயினும் ஒடுக்குமுறைக்கு எதிரான, யுத்தத்துக்கும் வன்முறைக்கும் எதிரான மனச்சாட்சியின் குரலாக அவரது கவிதைகள் சில அமைந்திருப்பது அவரது அரசியல் பிரக்ஞையின் விசாலத்தைக் காட்டுகின்றது எனலாம். 1980களிலிருந்து ஈழத்தில் வளர்ச்சியடைந்த - தமிழ் இலக்கிய வரலாற்றில் முற்றிலும் புதுமையான, இன விடுதலை சார்ந்த அரசியல் போராட்ட - எதிர்ப்புக் கவிதைகளில் ஃபஹீமாவின் பங்கு சிறிதெனினும் இது தொடர்பான குறிப்பிடத் தக்க சில கவிதைகளையேனும் அவர் எழுதியுள்ளார்.

இலங்கையின் இனத்துவ அரசியல் சூழல் சிக்கலானது, குழப்பங்கள் மலிந்தது. இனத்துவ முரண்பாட்டையும் மோதலையும் வெள்ளை, கறுப்பு என மிகை எளிமைப்படுத்தி, அதன் ஒரு பக்கத்தைச் சார்ந்து நிற்பது இனத்தேசியவாதிகளைத் தவிர நிதானமான அரசியல் பார்வை உடையவர்களுக்குச் சாத்தியமல்ல. இது தொடர்பான ஃபஹீமாவின் ஒரு சில கவிதைகளில் ஒரு புறச் சார்பு, அதாவது தமிழ்த் தேசிய நோக்குநிலை, வெளிப்படுகின்றது எனினும் பொதுவாக அரசியல் வன்முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிரானவராகவே அவர் இருக்கிறார். "அவர்களுக்குத் தெரியும்" கவிதை அமைதி நிலவிய தமிழ்ப் பிரதேசத்தில் அரச வன்முறை புகுந்தமை பற்றிப் பேசுகின்றது.

அறிமுகமற்ற பேய் பிசாசுகளையெல்லாம்
அழைத்துக்கொண்டு இரவுகள் வந்தடைந்தன
எமது வான வெளியை
அவசரப்பட்டு அந்தகாரம் ஆக்கிரமித்தது
அடர்ந்து கிளைவிரித்துக் காற்றைத் துழாவியபடி
எம் மீது பூச்சொரிந்த வேம்பின்
கிளைகள் முறிந்து தொங்கிட அதனிடையே
அட்டுப்பிடித்த கவச வாகனங்கள்
யாரையோ எதிர்கொள்ளக் காத்திருந்தன

எமதண்ணன்மார் அடிக்கடி காணாமல் போயினர்
எமது பெண்களின் வாழ்வில் கிரகணம் பிடித்திட



படிப்பகம்

www.padippakam.com

எதிர்காலப் பலாபலன்கள் யாவும்
சூனியத்தில் கரைந்தன

தற்போதெல்லாம் குழந்தைகள்
இருளை வெறுத்துவிட்டு
சூரியனைப் பற்றியே அதிகம் கதைக்கிறார்கள்
அவர்தம் பாடக் கொப்பிகளில்
துப்பாக்கிகளை வரைகிறார்கள்
பூக்களும் பொம்மைகளும் பட்டாம்பூச்சிகளும்
அவர்களைவிட்டும் தூரப் போயின

*இத்தகைய சித்திரத்தை 1980க்குப் பிந்திய ஈழத்துக் கவிதைகளில் நாம் அடிக்கடி காணலாம். அரச வன்முறையின் வருகை ஆயுதப் போராட்டத்தின் உடன் விளைவுதான். கடந்த சுமார் முப்பது ஆண்டுகளில் வன்முறை, வன்முறைக்கு எதிரான வன்முறை என தொடர்ச்சியாக ஈழத்து வாழ்வு சிதறடிக்கப்பட்டது. அரச வன்முறையினால் வெஞ்சினமுற்ற இளைஞர்கள் ஆயிரக் கணக்கில் விடுதலை இயக்கங்களில் இணைந்து விடுதலைக்காகத் தம் வாழ்வைத் தியாகம் செய்ய முன்வந்தனர். (இன்னும் ஆயிரக் கணக்கானோர் சுயவிருப்பற்று பலாத்காரமாக இயக்கங்களுள் உள்வாங்கப்பட்டனர் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.) முகவரியற்ற நெருப்பு நிலவுக்கு, ஒரு கடல் நீரூற்றி அகிய ஃபஹீமாவின் கவிதைகள் இவ்வாறு உயிர்த்தியாகம் செய்ய முன்வந்த தமிழீழ விடுதலைப் போராளிகளை மகிமைப்படுத்தி அங்கீகரிக்கும் கவிதைகளாக உள்ளன. முகவரியற்ற நெருப்பு நிலவுக்கு என்ற கவிதையில் ஆதிரை என்ற பெண் போராளி அவளது சக மாணவியால் நெருப்பு நிலவாக உருவகிக்கப்படுகிறாள். அதன் சில வரிகள்:*

........

ஆதிரை
கடைசியாக நீ கல்லூரி வந்த தினம்
அதுவென்றுதான் நினைக்கிறேன்
அன்று சிரித்திடவே இல்லை நீ
சிந்தனை வயப்பட்ட முகத்துடன்
கல்லூரி வளவெங்கும் அலைந்து திரிந்தாய்

பின்னர் நான் பார்க்க நேர்ந்த
போராளிகளின் படங்களிலெல்லாம்
உன் முகத்தைத் தேடித் தோற்றேன்...

துப்பாக்கி வரைந்த
உன் இரசாயனக் குறிப்பேட்டைப்
பத்திரப்படுத்திவைத்துள்ளேன்
பாடத்தை விட்டு
உன் கவனம் திசைமாறிய தருணங்களில்
ஓரங்களில் நீ எழுதியுள்ள வாசகங்கள்
விட்டுவிடுதலையாகும்
உன் சுதந்திரக் கனவைச் சொல்கின்றன
உன் நகர்வுகளை மோப்பம் பிடிக்கும்
அறிமுகமற்ற சப்பாத்துக்கால்கள்
சனியன்களால் ஆட்டுவிக்கப்படும் நாளைகளிலும்
எமது வாழிடங்களில் பதிந்துசெல்லலாம்
நீ கவனமாயிருந்து இலட்சியத்தை வெற்றிகொள்

*ஒருகடல் நீரூற்றி என்ற கவிதை கடற்போரில் மாண்ட போராளிக்காக இரங்கும் அவனது காதலியின் ஆழ்ந்த சோகக் குரலாக அமைந்துள்ளது. அக்கவிதையின் இறுதிப்பகுதி:*

பரணி..
உன் நினைவுகள் தேய்ந்துகொண்டிருந்த வேளை
மாரிக்கால அந்திப்பொழுதொன்றில்
நனைந்த சீருடைகளிலிருந்து நீர் சொட்டச்சொட்ட
மீளவும் வந்தாய்
அலையெழுப்பும் கடல்பரப்பினில்
உனக்கான பணி முடிக்கவென விடைபெற்றுப் போனாய்
வாழ்த்துச் சொல்ல வாயெழவுமில்லை
ஆரத்தழுவிட நீ விரும்பவுமில்லை
வெளியே பெய்த மழை என் கன்னங்களில் வழிந்தோட
மழைப் புகாரினூடே மறைந்து போனாய்

திரைகடல் சென்ற திரவியமானாய்
ஆழிப்பரப்பெங்கும் ஊழித் தீ எழுந்து தணிந்தது – நீ
திரும்பிவரவே இல்லை

இன்று வீரர்கள் துயிலும் சமாதிகள் மீது
காலத்துயரின் பெருமௌனம் கவிந்துள்ளது
சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவனே!
இங்கு ஏதுமற்ற உன் கல்லறையில்
ஒரு கடல் நீரூற்றி நிரப்பிடவோ?

*தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் அதன் முளையிலேயே மக்கள் விரோத அம்சத்தையும் கொண்டிருந்தது. அரச அடக்குமுறைக்கு எதிராக எழுச்சியடைந்த போராட்டம் விரைவிலேயே சகோதர இயக்கங்களுக்கு எதிரானதாகவும், அப்பாவித் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எதிரானதாகவும் வளர்ச்சியடைந்தது. இதன் ஊடாக விடுதலைப் போராட்டம் ஒரு பயங்கரவாதக் குணாம்சத்தைப் பெற்றுக்கொண்டது. அரச பயங்கரவாதம் அதற்கு எதிரான தமிழ் தேசிய பயங்கரவாதம் என இது விரிவடைந்தது. இதுபற்றிய ஃபஹீமாவின் எதிர்வினைகள் தாக்கமானவை. "ஒரு மயானமும் காவல் தேவதைகளும்" என்னும் கவிதை முஸ்லீம்களுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் வன்முறை பற்றிப் பேசுகின்றது. புலம் பெயர்ந்த ஒரு இளைஞனை முன்னிறுத்திப் பேசுவதாக அது அமைந்துள்ளது. அதேவேளை பொதுவாக வன்முறையின் கொடூரம் பற்றியும் பேசுகின்றது. அக்கவிதையின் சில பகுதிகள் இவை:*





படிப்பகம்

www.padippakam.com



சுழலும் சோகச் சூழலிடை
உனக்கு எதை எழுத?
ஆடிப்பாடி பின் அவலம் சுமந்து நீங்கிய
சோலை வனத்தைத் தீயின் நாக்குகள் தின்று தீர்த்தன
நெற்கதிர்கள் நிரம்பிச் சலசலத்த வயல்வெளிகளை
இரும்புச் சக்கரங்கள் ஊடுருவித் தகர்த்தன
எஞ்சிய எமது பள்ளிவாசல்களும் அசுத்தமாக்கப்பட்டன

மண்ணை மீட்டெடுக்கும்
போராட்டத்தில் மனிதர்கள் வீழ்ந்திட
பேய்கள் உலாவிடும் பூமிமாத்திரம்
தரிசுதட்டிக் கிடக்கிறது
இரத்தம் உறிஞ்சிய மண்ணில்
எத்தகைய வசந்தம் துளிர்த்திடுமினி ....

தலைகளை வெட்டியெறிந்திடப் புறப்பட்ட விடுதலைப்
பிரவாகம் உனை வீடுதுறக்கவைத்தது
நீ வாழ்ந்த தேசம் இன்றுன்னை
எந்தப் பாடலைக் கொண்டும்
வரவேற்கும் நிலையிலில்லை ...

உங்கள் மொழியும் எங்கள் வாழ்வும் வேறாக்கப் பட்டபின்... என்னும் கவிதையும் முஸ்லிம் விவசாயிகள் மீது கட்விழ்த்துவிடப்பட்ட புலிகளின் வன்முறை பற்றியே பேசுகின்றது.

அந்த வயல்வெளி மீது வாழ்வும் மொழியும்
வேறுபிரிக்கப்பட்டது
வானமும் திசைகளும் விக்கித்து நின்றிட
விதியெழுதப்பட்டது

எனத் தொடங்கும் கவிதை இவ்வாறு முடிகின்றது:

மாலைப் பொன்னொளி கவியெழுத வரும்
அழகிய வயல்வெளியைச்
சனியன்கள் தம் துயரப் போர்வை கொண்டு மூடின
மரணப் பீதியுடனான ஓலம் திசைகளை உலுப்பிற்று
வயல்வெளி கடந்து அவ்வதிர்வு
நீலம் பூத்த மலைகளையும் அடிவானையும்
நீண்டு தொட்டது

அறுவடைக்குச் சென்ற அப்பாவிகள்
அறுவடை செய்யப்பட்டனர்
பின் உழவு இயந்திரப் பெட்டிகளில்
நெல் மூடைகளுக்குப் பதிலாகத்
துண்டாடப்பட்ட சடலங்கள்
எடுத்துவரப்பட்டபோது
எல்லாம் தடுமாறி நின்றன
இவ்வாறு வன்மமும் வெறுப்பும்
வாரியிறைக்கப்பட்ட
வரலாற்றுக்காயம் நிகழ்ந்தது
எல்லாவற்றையும் வீழ்த்திச் சிதைத்து
அள்ளிப்போனது பிரளயத்தின் பெருங்காற்று

பொதுவாக வன்முறைக்கு எதிரான கவிதை வரிகள் ஃபஹீமாவின் கவிதைகளில் விரவிக்கிடக்கின்றன. என்றாலும், ஈழத்தின் வன்முறைச் சூழல் பற்றிய ஒரு மொத்தமான சித்திரத்தைத் தருகிறது அவரது அடவி - 2007 என்ற சிறிய கவிதை. செறிவான படிமங்களால் நிரம்பிய இக்கவிதை ஈழத்தின் அவலம் பற்றிய ஒரு முழுமையான குறியீடு எனலாம்.

தீ மூட்டப்பட்ட
வனத்தை விட்டுத்
தப்பித்துப் பறக்கிறது
பறவை

சிங்கத்தோடு நரிகளும்
புலியோடு ஓநாய்களும்
அணிதிரண்ட அடவியில்
அபயம் தேடியலைகிறது
மான்குட்டி

வற்றிய குளத்தில்
வந்திறங்கிய கொக்குகள்
நீர் ததும்பும் நதிகளில்
சேர்ப்பிக்கும் கதைகள் பேசி
மீன்களைக் காவிப்
பறக்கின்றன மலையுச்சிக்கு

தேனீக்களை விரட்டியடித்துத்
தேன் சொட்டும் வதையை
அபகரித்துக்கொண்டது
கரடி

அடவியெங்கும்
அதிர்ந்து ஒலிக்கிறது
என் தேசத்து
மானுடத்தின் பேரவலம்

சிங்கத்தோடு நரிகளும் புலியோடு ஓநாய்களும் அணிதிரண்ட அடவியில் அபயம் தேடி அலையும் மான்குட்டி ஈழத்து வாழ்க்கையைக் கச்சிதமாக உருவகிக்கும் படிமமாகும்.

4

ஃபஹீமாவின் கவிதைகள் இயற்கையின் வண்ணங்கள் பற்றிய காட்சிப் படிமங்களால் நிறைந்திருக்கின்றன. அவை தனித்து நிற்காது சங்கக் கவிதையியல் கூறுவதுபோல் முதல், கரு, உரி மூன்றும் பின்னிப் பிணைந்தனவாக உரிப்பொருளுக்கு ஊட்டம் கொடுப்பனவாக அமைகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இனிய குரலெடுத்துப் பாடும் உன் பாடலுடன்
வசந்தகாலமொன்று என் அடவிகளில் வந்துவிழும்

துயரங்கள் நிரம்பித் தாக்கும் வேளைகளில்
வேதனையில் உன் சிரிப்பொலி எழும்போது
அகால இடிமுழக்கத்தில் என் வானம் அதிரும்

ஏதோ ஓர் ஆறுதலில்
நீ என் கிளைகளில் தாவிக் குரலெழுப்பும்போது
கார்காலமொன்று என் வேர்களைச் சூழும்

மரணத்தைப் பற்றியும்
நிலையற்ற வாழ்வின் நியதிகள் பற்றியும்
மகானைப்போல் நீ போதிக்கும் தருணங்களில்
கடும் கோடைகாலமொன்று என்
கால்களைச் சுற்றிவந்து பெருமூச்செறியும்

ஆனாலும் அன்பே!
இலையுதிர் காலத்தில் விக்கித்து நின்றபோது
ஓராயிரம் இலைகளும் உதிர்ந்துபோகையில்
என்னிடம் புன்னகைக்கக் கெஞ்சிய
உன் கீச்சலுடன் பனித்துளிகள் சொரிந்திடலாயின
(குரங்குகள் பிய்த்த கூடு)

பொன்னந்திக் கிரணங்கள் படியத்தொடங்கிய மாலையில்
குளிர்ந்த மலையை விட்டுக் கீழிறங்கித்
தும்பிகள் பறந்து திரிவதும்
தங்கநிறக் கதிர்கள் ஆடுவதுமான வயல் நிலங்களையும்
நீரோடைகளையும் தென்னந் தோப்புகளையும் ஊடுருவி
மனிதர்கள் வடிந்துபோன சந்தைக் கட்டடங்களையும்
மஞ்சள் வண்ணப் பூச்சொரியும் பெருவிருட்சத்தையும்
தாண்டி நீ சந்திக்கு வந்தாய்
(எனது சூரியனும் உனது சந்திரனும்)

பகல் முழுதும்
மலைகளின் சாம்பல் நிறப் போர்வைகள்
தேங்கிக்கிடக்கும் இருள்
மாலையில் பதுங்கிப்பதுங்கி மலையிறங்கி
ஊரின் திசைகளெங்கிலும்
உறைந்திட ஆரம்பிக்கும் கணங்களில்
என்னை வழியனுப்பிவைப்பாய்
(இரகசியக் கொலையாளி)

நட்சத்திரங்கள் பூத்த வானம் விரிந்திருந்தது
எமக்குப் பின்னால்
பாதியாய் ஒளிர்ந்த நிலவு தொடர்ந்து வந்தது
தூரத்து வயல்வெளியை மூடியிருந்தது வெண்பனி
தென்னைகளில் மோதி குடியிருப்புகளை ஊடுருவி
எம் செவிவழி நுழைந்தது
வங்கக் கடலில் எழுகின்ற அலையோசை
சந்தடி ஒய்ந்த தெருவழியே
நீயும் நானும் விடிதிவரை நடந்தோம் (ஒரு கடல் நீரூற்றி)

அழகிய படிமங்களால் நிறைந்த மழை, வெயில் ஆகிய கவிதைகள்கூட தனியே மழையையும் வெயிலையும் பற்றியவை அல்ல. அவையும் பெண்ணுடனும் சமூக யதார்த்தத்துடனும் உறவுபடுத்தப்படுகின்றன.

இறுக மூடப்பட்ட
வீட்டினுள் வரமுடியாது
நனைந்துகொண்டிருக்கிறது
மழை
எனத் தொடங்கும் "மழை" கவிதை

ஓய்ந்திட மாட்டாமல்
இன்னொரு
வெப்ப மழை பெய்துகொண்டிருந்த
அவள் முகத்தில் வீழ்ந்த கணத்தில்
தனது ஆவேசமெல்லாம்
ஒடுங்கிப்போய்விடப்
பெய்வதை நிறுத்திப்
பெருமூச்செறிந்து போயிற்று
அந்த மழை

என முடிகிறது. வெயில் கவிதையின் சில பகுதிகள் வருமாறு:

வெட்டியகற்றப்பட்ட மரம்
விட்டுச்சென்ற வெளியில்
அதிரடியாக
இறங்கிக்கொண்டிருக்கிறது வெயில்...

தாய்த்தேசத்தில் அனாதையாக்கப்பட்ட மகள்
புகலிடம் ஒன்றைத் தேடிப் போகிறாள்
நிழல்களை விரட்டும் பிறிதொரு வெயில்
அவள் பின்னே போகிறது

கண்ணீர் வற்றாத இத்தீவையும்
குறுகுறுக்கும் மனதுடன்
கடக்கிறது வெயில்
ஈரத்தை உறிஞ்சிக்கொண்டு
இரத்தக்கறைகளை அப்படியே விட்டுவிட்டு

"நஞ்சூட்டப்பட்ட மரம்", "அழிவின் பின்னர்" ஆகிய கவிதைகள் இயற்கை அழிக்கப்படுவதை மிகுந்த கோபத்துடனும் சோகத்துடனும் பேசுகின்றன. பெண்ணுக்கும் இயற்கைக்கும் இடையிலான பிணைப்பையும் உறவையும் ஃபஹீமாவின் கவிதைகள் மிக நுட்பமாகச் சித்திரிக்கின்றன. "ஊற்றுக்களை வரவழைப்பவள்", "அவள் வளர்க்கும் செடிகள்", "நிலம்" ஆகிய கவிதைகள் நிலத்தை உயிர்ப்பிக்கும் பெண்களைப் பற்றி மிகுந்த கவித்துவத்துடன் பேசுகின்றன. இந்தக் கவிதைகள் அவரின் இளமைக்கால அனுபவங்களின் வெளிப்பாடு என நினைக்கிறேன். இந்தக் கவிதைகளில்



படிப்பகம்

www.padippakam.com



வரும் சிறுமி அவராகவே இருக்கலாம். இயற்கையை ரசிக்கும் உள்ளத்தில் இருந்துதான் கவிதை ஊற்றெடுக்கும். அவள் வளர்க்கும் செடிகள் ஃபஹீமாவின் சிறந்த கவிதைகளுள் ஒன்று எனலாம். ஃபஹீமாவின் கவிதைகளிலே மிகவும் நீளமானது நிலம் என்னும் கவிதை. இதுவும் அவருடைய சிறந்த கவிதைகளுள் ஒன்று எனத் தயக்கமின்றிக் கூறலாம். நிலத்தை உயிர்ப்பித்து, நிலத்துக்கே தன் வாழ்வை அர்ப்பணித்து, அந்த நிலத்திலேயே அடங்கிப்போன ஒரு பெண்ணைப் பற்றிய "காவியம்" என இதனைக் கூறலாம். இதில் வரும் பெண் அவருடைய அம்மம்மாவாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். தன் சிறு பராயத்தோடு பிணைந்திருந்த அம்மம்மா பற்றி உணர்வு கொப்பளிக்கும் கவிதைகள் சிலவற்றை ஃபஹீமா எழுதியிருக்கிறார். "இரகசியக் கொலையாளி" அதில் முக்கியமானது. அம்மம்மாவின் மரணத்தின் துயர் வழிந்தோடும் கவிதை அது. நிலம் என்னும் கவிதை நிலத்தோடு பிணைந்த பாட்டியைப் பற்றிய சிறுமியின் நினைவுகளாக விரிகிறது. பாட்டி நிலத்துக்கு உயிர் கொடுத்தவரலாற்றையும் அவளது அன்றாட உழைப்புச் செயற்பாடு பற்றியும் பேசுகிறது. அவளது "வியர்வையையும் நீரையும் பருகிப்பருகி அவளைச் சூழப் புதிது புதிதாய்" செழிப்படைந்த நிலத்தோடு அவளுக்கு இருந்த பிணைப்பு பற்றிப் பேசுகிறது. கடைசியாக அவளுடை தனிமைத்துயர் பற்றிப் பேசுகிறது.

> இறுதியில்,
> ஓயாது அழைத்துக் கொண்டிருந்த
> அரூபக் குரல் ஒன்றுக்குப் பதில் அளித்து
> அவள் போனாள்
> புற்களையும் செடிகளையும் வளரவிட்டு
> அந்த நிலம்
> அவளைப் பத்திரப்படுத்திக் கொண்டது

என முடிகிறது கவிதை.

விழிப்படைந்த பெண்மையின் குரலாகவும், அதிகாரத்துக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிரான குரலாகவும், அன்பு, பாசம், சமத்துவமான காதல் என்பவற்றின் குரலாகவும், இயற்கையின் குரலாகவும் அமையும் ஃபஹீமாவின் கவிதைகள் எளிமையானவை, நேரடியானவை, அதிக அலங்காரங்கள் அற்றவை. அதேவேளை, படிமச் செறிவு மிக்கவை. இவை இவரது கவிதைகளின் பலம் என்று சொல்வேன். இளம் தலைமுறையைச் சேர்ந்த முக்கியமான ஈழத்துக் கவிஞர்களுள் ஒருவராக ஃபஹீமாவின் கவிதைகள் அவரை அடையாளப் படுத்துகின்றன.

இன்று எழுதும் பெரும்பாலான கவிஞர்களைப் போல் ஒரேவகையான மொழி நடையையே இவரும் கையாள்கின்றார். பன்முகப்பட்ட கவிப் பொருளும் பன்முகப்பட்ட மொழி நடையும் கவிதைக்கு ஒரு பன்முகத் தன்மையைத் தருவன. ஃபஹீமாவின் எதிர்காலக் கவிதை இப்பன்முகத்தன்மையைப் பெற்று தமிழ்க் கவிதைக்கு மேலும் வளம் சேர்க்கும் என்று நம்புகிறேன். ●

## வெறும் வியாபாரப் பண்டம் தானா?

தமிழ் இலக்கியப் பெருவெளியில் எப்போதுமே விமர்சன மேலாண்மையும் புலமைக்கான கிரீடங்களும் தமிழக ஜாம்பவான்களிடமே இருக்கிறது. இலங்கை, மலேசிய, சிங்கப்பூர் இலக்கியப் படைப்புக்களை அவர்கள் அங்கீகரிப்பதே இல்லை. இலங்கைத் தமிழ் படைப்புகளுக்கு அடிக்குறிப்பு கேட்டவர்கள், இன்று அடிக்குறிப்பு தேவையில்லை வியாபாரமானால் சரி என அவசர அவசரமாக ஈழத்தமிழர் துயரம் / பிணக்குவியல் / அவியல் / புளியல் என்ற வகைகளில் பத்திரிகைகள் வெளியிடுவதையும் நூற்பதிப்புக்களைச்




செய்வதையும் தமிழகத்தில் காணக்கூடியதாகவுள்ளது. ஜூனியர் விகடன் தொடங்கி தமிழில் முக்கியத்துவமான பதிப்பகங்கள் ஒரு சிலவும் இந்தப்பணியில் இறங்கி உள்ளன. (இந்தப் பத்திரிகைகள், நூல்கள் வேகமாக விற்பனையாகிவிடுவதே இதற்குக் காரணமாகும்.) ஈழ அரசியலா, ஈழக் கவிதையா, ஈழச் சிறுகதையா, பிரபாகரன் வரலாறா எந்த ஈழக்குப்பையானாலும் அப்படிப்பட்ட மவுசு (பாவம் தமிழக மக்கள்). தமிழகப் பதிப்பகங்கள் பல இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துக்களை பதிப்பிக்க வருடத்திற்கு பல தடவை என இலங்கைச் சுற்றுலா வேறு.

இப்படி பதிப்பக வியாபார உலகில் ஈழத்தமிழ் எழுத்து இன்று பெரு வணிகமாகிவிட்ட சூழலில், இலங்கை தமிழ் எழுத்து தொடர்பான மதிப்பீடுகளோ, அல்லது தமிழக விமர்சன ஜாம்பவான்களின் பொன் எழுத்துக்களோ, இந்த (வணிக) எழுத்துக்கு எந்த முக்கியத்துவத்தையும் தருவதில்லை. இதற்கு அண்மைய உதாரணமாக காலச்சுவடு இதழ் 119இல், புதிய கவிதை 50 ஆண்டுகள் பற்றிய சுகுமாரணின் கட்டுரையிலோ, ஞானக்கூத்தனின் நேர்காணலிலோ அல்லது அந்த இதழில் தொகுத்து வெளியிடப்பட்ட 50 வருஷகால தேர்வுக் கவிதைகளிலோ இலங்கை தமிழ்க் கவிதை, இலங்கை தமிழ்க் கவிஞர்கள் பற்றி (பிரமிள் நீங்கலாக இது பற்றி விரிவாக எழுதப்படல் வேண்டும்.) ஏன் சிறிதளவேனும் கருத்திற் கொள்ளப்படவில்லை? 50 வருட தமிழ்க் கவிதையில் இவர்களது பங்களிப்பு இல்லையோ?

**பூதந்தேவனார்.**



படிப்பகம்

www.padippakam.com






சிறுபான்மையினரை ஒடுக்குகின்றது. இங்கே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பெரும்பான்மைதான் சிறுபான்மையை ஒடுக்குகின்றது என்று நாம் தனியே மதிப்பிட முடியாது. ஆனால், நமது பொதுப் புத்தியில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருப்பதால்தான் அவர்களால் சிறுபான்மையினரை ஒடுக்க முடிகிறது என்று எப்போதும் விளங்கப்படுகிறது. அப்படியே ஊடகங்கள் பலவும் அநேக அரசியல்வாதிகளாலும் சொல்லப்பட்டு வருகிறது இது தவறு. அந்தந்த சமூகச் சூழலும் வர்க்கப்பின்னணியும் வரலாற்றுப் பாத்திரமும்தான் ஒடுக்குமுறைக்கும் அதிகாரத்துக்கும் காரணமாகின்றன.

இதேவேளை ஒடுக்குமுறைக்குள்ளாகும் தரப்பின் சிந்தனையிலுள்ள மந்த நிலையும், பண்பாட்டு விளக்கங்களும் அந்தச் சமூகத்தின் தலைமைத்துவ சக்திகளின் அரசியற் போக்குகளுமே பலம், பலவீனம் என்பவற்றைத் தீர்மானிக்கின்றன.

பலஸ்தீன விடுதலைப் போராட்டம் 1960களில் சந்தித்த பெரும் பின்னடைவை அப்போது அரபுலகத்தின் படைப்பாளிகள், கவிஞர்கள். அறிஞர்கள் எனப்பலரும் கடுமையான விமர்சனத்துக்குட்படுத்தினார்கள். அதுமட்டுமல்ல, பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் ஆதரவாளராகவும் யாஸிர் அரபாத்தின் நெருங்கிய சகாவாகவுமிருந்த சிரியக் கவிஞர் நிஸார் கப்பானி, அமெரிக்காவின் ஏற்பாட்டின் படி செய்து கொள்ளப்பட்ட இஸ்ரேல் - பலஸ்தீன உடன்படிக்கை பற்றிய தன்னுடைய விமர்சனத்தைச் செய்திருந்தார். அதாவது அந்த உடன்படிக்கை பலஸ்தீனியர்களுக்கு எத்தகைய நன்மைகளையும் தந்துவிடப் போவதில்லை என்று நிஸார் கப்பானி கூறினார். அது மட்டுமல்ல அது ஒரு போதுமே அரபுலகத்தின் நெருக்கடியைத் தீர்க்கப் போவதுமில்லை என்றும் அவர் வலியுறுத்தினார். அதுவொரு அபாயகரமான விளைவைத் தரும் முட்

தென்னாபிரிக்காவில் சிறுபான்மையினத்தவர்களாக இருந்த வெள்ளையர்களே அதிகாரத்தில் பலமாக இருந்தனர். அவர்களே தென்னாபிரிக்காவின் 87.6 வீதம் தொழிற்றுறைகளை வைத்திருந்தனர். அவர்கள்தான் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்திலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இப்போது இந்தக் கணிதம் சற்று வேறுபட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அங்கே பெரும்பான்மையாக இருந்த கறுப்பர்கள் நீண்டகாலமாக அடிமைகளாக ஒடுக்கப்பட்டனர். தங்கள் நாட்டிலேயே அவர்கள் குரலற்றவர்களாக வாழ்ந்தனர்.

ஆனால் இந்த உண்மையை, தங்களின் நிலைமையை அவர்கள் உலகத்துக்கு ஆபிரிக்க இலக்கியங்களின் வழியாகக் கொண்டு சென்றார்கள். தென்னாபிரிக்க மக்களின் போராட்டம், நெல்சன் மண்டேலாவின் சிறையிருப்பு போன்றன ஒரு வகையிலும், இதையெல்லாம் மையப்படுத்திய, வெள்ளையின ஒடுக்குமுறைக்கெதிரான எழுத்துகளும் கலை வெளிப்பாடுகளும் இன்னொரு வகையிலும் அவர்களை உலகின் முன்னரங்குக்கு கொண்டு வந்தது. இன்று கறுப்பர்கள் விடுதலை பெற்றுவிட்டார்கள். அதிகாரத்தில் முன்னிலைக்கு வந்து விட்டார்கள்.

அங்கே சிறுபான்மையாக இருந்த வெள்ளைத்தரப்பே அதிகாரத்திலிருந்தது. அதுவே ஒடுக்கியது. பெரும்பான்மைத் தரப்பு துயரங்களில் அழுந்தியது. ஆனால், இலங்கையில் பெரும்பான்மையினமே

# புறக்கணிக்கப்பட்ட குரல்களின் சரித்திரத்துக்கு பின்னாலிருக்கும் உண்மைகள்

- கரன்



படிப்பகம்

www.padippakam.com



டாள்தனமான செயல் என்றும் அவர் எழு தினார். அவருடைய "ஒரு கோபக்காரக் கவிஞனின் செய்யுள்" என்ற கவிதை இந்த வகையில் புகழ் பெற்றது. இந்தக் கவிதையை ஏறக்குறைய பெரும்பாலான அரபு லகமும் மறைக்க முற்பட்டது.

இதைப்போலவே அவர் "ஒரு பின்னடைவு நூலுக்கு எழுதிய அடிக்குறிப்புகள்" என்று எழுதப் பட்ட கவிதையும் முக்கியம் பெறுகிறது. இந்தக் கவிதையையும் அரபுலகம் தடை செய்தது. இந்த வகை யில் அரபுலகத்தின் இன்னொரு முக்கிய கவிஞர் அடோனிஸ். இவைபோல நிறைய உதாரணங்கள் உண்டு. வரலாற்றை நாம் படிக்கவேண்டிய முறைபற்றி இப்போது அதிகம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இவ்வளவுக்கும் பலஸ்தீன இலக்கியமும் ஆபிரிக்க இலக்கியமும் இன்னும் லத்தீன் அமெரிக்க இலக்கிய மும் தமிழிலும் ஓரளவுக்கு நன்கு அறிமுகமாகியிருக் கின்றன. ஆனால், அவற்றிலிருந்தும் நாம் அதிக பாடங் களைப் படித்துக் கொள்ளவில்லை. இதுதான் மிகத் துயரமானது. இதுவே பெருங் கொடுமையானதும் கூட.

**02**

நாங்கள் படிக்கிற காலத்தில் ஒரு பாடம் இருந்தது. "வருமுன் காப்போம், வரும்போது காப்போம், வந்த பின் காப்போம்" என்று ஒரு பாடம். இந்தக் கட்டுரை இந்தப் பாடத்தை நினைவூட்டலாம். இப்போது இதை எழுதும்போது "வந்தபின் காப்போம்" என்ற நிலை மைக்குப்பின்னர் இப்படி எழுதுவதாகவே எனக்குப் படுகிறது. அப்படி இதை வாசிப்போருக்கும் தோன்ற லாம். ஆனால், "இனி வருவனவற்றுக்காவது" இது "வரு முன் காப்பதாக இருக்கட்டும்" என்ற நோக்கத்தோடு எழுதப்படுகிறது.

**03**

"இருட்டுக்குள் வாழ்ந்தவர்களை வெளிச்சம் சங் கடப்படுத்தும்" என்று சொல்லப்படுவதுண்டு. "பழகிய பாதையில் பயணிப்பதை விடவும் புதிய பாதையில் பய ணிப்பதற்குப் பெரும்பாலானவர்கள் விரும்புவ தில்லை". ஆனால் புதிய பாதையே எப்போதும் எதை யும் விரிவாக்கம் செய்கிறது". ஏனோ இதெல்லாம் இலங்கையின் தமிழ்பேசும் மக்களுக்குப் புரிவதில்லை.

புதிதாக உருவாகியுள்ள இலங்கை நிலவரம் அரசி யலிலும் தமிழ்பேசும் மக்களின் அனுபவப்பரப்பிலும் வாழ்க்கை நிலையிலும் அவர்களுடைய கலை, இலக் கிய வெளிப்பாடுகளிலும் பல விசயங்களை கவனத்திற் குள்ளாக்கியிருக்கிறது. விடுதலைப்புலிகளின் தோல்வி யும் அதற்குப்பின்னரான நிலைமையும் பல விசயங்கள் குறித்தும் ஆழமான சிந்தனைகளைக் கோருகின்றன. புலிகளின் தோல்வி இலங்கைத்தீவின் அரசியற் போக்கி லேயே பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது: கேள்விகளையும் உருவாக்கியுள்ளது.

அதேவேளை இது மக்களின் வாழ்நிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. "புலியை வைத்துக் கொண்டு இனியும் பம்மாத்துக்காட்ட முடியாது" என்று ஒரு நண்பர் சொன்னது மிகச்சரியானது. அதைப் போல புலியைக் கடக்கத் தயங்கிய "தமிழ் அரசியலு"ம் இனியொரு புதிய கட்டத்துக்கு நகர வேண்டியுள்ளது. ஆனால் அது ஆயுதங்களற்று, வன்முறையற்று இருக் கின்ற போதும் புதிய திசை நோக்கி நகரவேயில்லை. தமிழ் ஊடகங்கள் பலவும் தமிழ் அரசியலாளர்கள் பலரும் அதை நகரவிடுவதாகவும் இல்லை. பழைய, புளித்துப்போன சங்கதிகளுடன் களத்தில் இன்னும் ஆட்டங்களை நடத்திக் கொண்டேயிருக்கிறார்கள் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்போர்.

இதற்குத் தமிழ் ஊடகங்களும் தோதாக இருக் கின்றன. இன்னுமின்னும் தோல்விகளுக்கே சனங் களின் தலையைக் கொடுக்கும் வழிமுறைகளே தேர்ந் தெடுக்கப்படுகின்றன. (புலிகளும் தமிழ்த் தலைமை கள் உருவாக்கிய, அறிவியற்பார்வையற்ற உணர்ச்சிகர மான இனமான 1960 களின் அரசியலையே கடைப் பிடித்தார்கள் என்று ஒரு நண்பர் சொன்னது மிகச்சரி யாக இருக்கிறது) இவை போன்றதே முஸ்லிம் கட்சி களின் அரசியலும். அது அடுத்த கட்டத்தை எதிர் கொள்ள வேண்டிய யதார்த்தத்தில் உள்ளது. ஆனால் அதுவும் தேங்கிப்போயே உள்ளது.

ஆனால், மொத்தத்தில் புலிகளை அல்லது பிரபா கரனை கடந்ததொரு அரசியற் போக்கு இப்போது உருவாகியுள்ளது. இனி புலிகளையோ பிரபாகர னையோ முழுதாகக் குற்றஞ்சாட்ட முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. ஆயுதப் பாரம்பரியம் முற்றுக்கு வந் துள்ளது. இதேவேளை பிரபாகரனைக் காவிக் கொண்டு, அவருடைய நிழலையோ ஆவியையோ வைத்துக் கொண்டு அரசியல் நடத்தும் போக்கும் தமிழ்த்தரப்பிலும் சிங்களத்தரப்பிலும் இன்னும் உண்டு. அதாவது வரலாற்றுச் சக்கரம் நகர விரும்பாத இந்தத்தரப்பினர் இனியாவது பல விசயங்கள் குறித்தும் சிந்திக்க வேண்டும். குறிப்பாக கடந்த காலத்தின் அனு பவத்துக்கு அவர்கள் விசுவாசமாக இருக்க வேண்டும். மக்களின் நலன்குறித்தும் நாட்டின் நிலைகுறித்தும் மனமாற்றத்துக்குள்ளாக வேணும்.

கடந்தகால விளைவுகளுக்கு நாமெல்லோரும் ஏதோ ஒரு வகையில் பொறுப்பானவர்களாக இருந் திருக்கிறோம். அந்தப் பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டு இனிமேலாவது மக்கள் விரோத நட வடிக்கைகளை தொடரக் கூடாது. இதற்கு அவர்கள் இலக்கிய ரீதியாகவும் ஏனைய வெளிப்பாடுகளின் வழி யாகவும் ஒரு மூன்றாந்தரப்பின் குரலாக ஒலித்த குரல்களை இப்போது கவனப்படுத்துவது அவசியம். கடந்த காலத் தில் இந்தக் குரல்கள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப் பட்டன. ஆனால் இந்தக் குரல்களை இப்போது மீண்டும் ஒரு தடவை தொகுத்துப்



படிப்பகம்

www.padippakam.com

பார்த்தால் இவற்றின் பெறுமதி தெரியும். அதேவேளை ஒரு பட்டியல்போட்டு இந்தக் குரல்களை ஒன்றிலும் ஏனைய "தமிழ்வாத அதி தீவிரக் குரல்"களை இன்னொன்றிலும் வைத்துப் பார்த்தால் எங்கே தவறு நடந்தது? அது எப்படி நடந்தது என்பது இலகுவாகத் தெரியவரும்.

இடதுசாரிகளும் ஜனநாயகவாதிகளும் எப்போதும் வலியுறுத்தி வந்த விசயம் "வெறும் உணர்ச்சிவசமான, இனமான அரசியல் ஒருபோதும் தமிழ்பேசும் மக்களின் நலனுக்கும் தீர்வுக்கும் உதவாது. அத்துடன் சிங்கள இனவாதத்துக்கு மறுதலையாக தமிழ் இனவாதத்தை வளர்க்கவும் கூடாது" என்று. இதேவேளை சிங்களத்தரப்பிலும் வெகுஜன ஊடகங்களும் செல்வாக்குடைய அரசியற் கட்சிகளும் இந்த மூன்றாங்குரலை விலக்கியே வந்துள்ளன. அங்கேயும் மாற்றுக்குரலாளர்கள் சவால்களைச் சந்திக்கவேண்டியே இருந்துள்ளது. இப்போதும் அபாயங்களின் மத்தியில்தான் அவர்களுடைய செயற்பாடுகளும் வாழ்க்கையும் இருக்கின்றது.




ஆனால், இந்த மூன்றாந்தரப்புத்தான் இலங் கையில் முதன்மைப்பட்டிருக்க வேண்டும். அப்படி இந்தத் தரப்பின் குரலுக்கு உரிய கவனிப்பும் உரிய இடமும் இருந்திருக்குமானால் இதுவரை யிலும் இலங்கைத்தீவு இவ்வளவு பெரிய உயர் இழப்புகளைச் சந்தித்திருக்க வேண்டியிருந்திருக்காது. ஆனால், துரதிருஷ்ரமாக இந்தத்தரப்பு இலங்கையிலிருந்தே வெளியேற வேண்டியிருந்தது. அல்லது வாயை மூடிக்கொண்டு, கண்களையும் காதுகளையும் பொத்திக் கொண்டு கனத்த மௌனம் காக்க வேண்டியிருந்தது. அல்லது உயிர் விலை கொடுக்க வேணும். இதுதான் பொது யதார்த்தம். இது தமிழ் அரசியலில் தொடங்கி இலங்கை முழுவதற்கும் பரவிய ஒரு நோய்.

இலங்கையில் மட்டுமல்ல இலங்கைக்கு வெளியிலும் முன்னரும் இப்படி ஏராளம் சந்தர்ப்பங்கள் அமைந்திருக்கின்றன. ஒடுக்குமுறை நிலவும் ஒரு சூழலில் இந்தமாதிரி மனிதாபிமானக் குரல்கள் அதிகம் விரும்பப்படுவதில்லை. அதைப்போல அதிகாரம் குவிந்திருக்கும் தரப்பும் மனிதநேயத்தையும் ஜனநாயகத்தையும் விரும்புவதில்லை. எனவே, முதலில் வெளியேற்றப்படுவது அல்லது வெளியேறுவது இந்த மூன்றாந்தரப்பாகவே இருக்கிறது. இந்தத் தரப்பைக் கண்டு அதிகார மையமும் ஒடுக்குமுறை இயந்திரமும் அச்சமடைகின்றன. பிற்போக்குத் தனமாகவும் ஜனநாயக விரோதமாகவும் செயற்படும் அதிகார மையமும் ஒடுக்குமுறை இயந்திரமும் தமக்கெதிரான ஒரு பொதுவெளி உருவாகுவதை எப்போதும் விரும்புவதில்லை. இப்படி இறுக்கமான ஒரு நெருக்கடிச் சூழலில்தான் எப்போதும் மூன்றாந்தரப்பே உருவாகின்றது. அப்போதுதான் மூன்றாந்தரப்பின் தேவையும் அவசியமும் ஏற்படுகிறது. அப்படியான நெருக்கடிச் சூழலில் மாற்றுக் குரலாக – மக்களின் பாதுகாப்புக்கும் உரிமைக்குமாக - உருவாகும் மூன்றாந்தரப்பை எப்படி அந்த அதிகார – ஒடுக்குமுறை மையங்கள் விரும்பும்? எனவே இந்த மூன்றாந்தரப்பை அவை எப்போதுமே எதிர்க்கின்றன. அந்த எதிர்ப்பையும் மீறி இந்தத்தரப்பு வலுவோடு மேற்கிளம்பும்போது இதை எப்படியோ அடக்கி ஒடுக்க முயல்கின்றன இந்த ஒடுக்குமுறை அதிகார மையங்கள். அப்படியும் முடியாதபோது இந்தத் தரப்பின்மீது துரோகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி இவற்றைக் களத்திலிருந்து அப்புறப்படுத்த முயல்கின்றன. மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் பாதுகாப்புக்காகவும் குரலெழுப்பும் இந்த மூன்றாந்தரப்பை தேசத்துக்கும் மக்களுக்கும் எதிரான தரப்பாக சித்திரித்துக் காட்டி மக்களிடமிருந்து இதை தந்திரமாக அப்புறப்படுத்துகின்றன இவை. (இங்கே மூன்றாந்தரப்பை எவ்வாறு வரையறை செய்வது என்ற கேள்வியைச் சிலர் கேட்கலாம். கோட்பாட்டளவிலான விளக்கத்தையும் விட இலங்கை நிலவரத்தை வைத்து இதை விளக்குவது பொருத்தம். ஆட்சியிலிருக்கும் தரப்பு ஒன்றாகவும் எதிர்த்தரப்பு இன்னொன்றாகவும் உள்ளன. ஒன்று அதிகாரத்தோடு உள்ளது. அடுத்தது அதிகாரமற்றிருக்கிறது. இதைப்போல அரசாங்கம் ஒன்றாகவும் புலிகள் வேறொன்றாகவும் இருந்தன. எனவே இவை இரண்டையும் தவிர்த்து பொதுத்தரப்பாக - மூன்றாந்தரப்பாக பேசியோர், செயற்பட்டோரே மூன்றாந்தரப்பாக உள்ளனர். ஆனால், மக்களின்



படிப்பகம்

www.padippakam.com



அபிலாசைகளைப் பொறுத்தும் அவர்களின் ஜனநாயக உரிமைகளை மதிப்பதிலும் இவை எல்லாமே ஒரே வகையான அணுகுமுறைகளையே கொண்டிருந்தன எனவே இவற்றுக்கிடையில் எப்படி நாம் வேறுபாட்டைக் காணமுடியும் என்று கேட்போருமுள்ளனர்).

இதற்காக இவை தமது அனைத்து ஊடகப் பலத்தையும் அரசியல், அதிகாரப்பலத்தினையும் பயன் படுத்துகின்றன. சரியோ பிழையோ இந்த அதிகார மையங்கள் மக்களுடன் நேரடியாக தொடர்பைக் கொண்டிருப்பதாலும் மக்கள் தமது தேவைகளை இவற்றினூடாக நிறைவேற்ற வேண்டியிருப்பதாலும் இந்தத் தரப்புகளை அவர்கள் சார்ந்திருக்க வேண்டியிருப்பது இவற்றுக்கு ஒரு வாய்ப்பாகி விடுகிறது. ஆனால், தமக்கெதிரான ஆயுதங்களையே இந்த அமைப்புகள் கொண்டிருக்கின்றன என்று சனங்களுக்குப் புரிவதில்லை. அப்படிப் புரிந்து கொள்ளக்கூடியவர்களும் அவர்களின் வாழ்நிலைகள் காரணமாக எதுவும் செய்யமுடியாமல் மௌனமாக்கப்படுகின்றனர். இவர்கள் ஏறக்குறைய "அதிருப்தியாளர்கள்" என்ற வகையில் இருக்கின்றனர். ஜனநாயக மறுப்புக்கும் அதிகாரத்துக்கும் எதிர்ப்பைக் கொண்டிருந்தாலும் மனதளவில் மட்டுந்தான் எதிர்ப்பைக் கொண்டிருப்பர். ஆனால் செயற்பட முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருப்பர்.

மக்களின் பாதுகாப்புக்கும் அவர்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் குரலெழுப்பும் மூன்றாந்தரப்பு அநேகமாக மக்களிடம் பெருஞ்செல்வாக்கைச் செலுத்த முடியாமலிருக்கிறது. இதற்கு நாம் முன்னரே சொன்னதைப்போல மக்களை தமது கட்டுப்பாட்டுக்குள் இவை வைத்திருப்பதால் இந்த மூன்றாந்தரப்பு சிறு தரப்பாக வெளியிலிருந்தே இயங்கவேண்டியுள்ளது. அல்லது மறைமுகமாக இயங்க வேண்டியிருக்கிறது. சில சமூகங்களில் அல்லது சில நாடுகளில் இந்த மூன்றாந்தரப்பு மக்களிடம் செல்வாக்குச் செலுத்தி பெரும் பலத்தைப்பெற்று ஜனநாயகத்தை நிலை நிறுத்துகின்றன. அதிகாரத்தை முறியடித்து, ஒடுக்குமுறையாளரைத் தோற்கடித்துவிடுகின்றன.

இதற்கு சமூகத்திலுள்ள கல்வி அமைப்புகளும் புத்திஜீவிகளும் மீடியாக்களும் பொதுமக்கள் அமைப்புகளும் தமது பங்களிப்பை வழங்கி இந்த மூன்றாந்தரப்பைப் பலப்படுத்துகின்றனர். ஏறக்குறைய இந்தத்தரப்புகளின் ஒன்றிணைவும் செயற்பாடுமே இந்த மூன்றாந்தரப்பாகவும் இருக்கிறது. இவர்களால் அல்லது இந்தத் தரப்பினரால்தான் மூன்றாந்தரப்பு உருவாகிறது என்பதையும் நாம் இங்கே கவனிக்கலாம்.

மூன்றாந்தரப்பின் உருவாக்கம் என்பது அந்தச் சூழலின் விளைவே. இதை "மக்கள் தரப்பு" என்று விளக்கம் கொள்வது அவசியம். மக்களின் அனைத்து அரசியல் உரிமைகளையும் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் பறித்துக் கொண்டு அவர்களை வெறுங்கையர்களாக, குரலற்றவர்களாக விடுகின்றன இந்த அதிகார மையங்கள். அப்போது சனங்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாகிறார்கள். இந்த நிலையில் மக்களுக்குப் பலமாக, அவர்களுடைய குரலாகவே இந்த மூன்றாந்தரப்பு விளைகிறது. எனவே சனங்களின் ஆதரவுச் சக்தியான இந்தத் தரப்பை மக்கள் தமது தரப்பாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், அதற்கான சந்தர்ப்பத்தை மேற்படி அதிகார மையங்களோ, ஜன நாயக மறுப்பாளர்களோ, ஒடுக்குமுறையாளர்களோ வழங்குவதில்லை.

இந்த இடத்தில் ஊடகங்களும் கல்வி அமைப்புகளும் பொது மன்றங்களும் இந்த மூன்றாந்தரப்பை அடையாளம் கண்டு அதை மக்களிடையே கொண்டு சென்று பலப்படுத்த வேண்டும். ஏனெனில் இவற்றிலிருந்துதான் இந்த மூன்றாந்தரப்பு உருவாகிறது. ஆனால், இதை ஒரு போதும் இலங்கையின் எந்த ஊடகங்களும் செய்யவேயில்லை. ஒரு சில மாற்று ஊடகங்கள் தவிர. சில மாற்று ஊடகக்காரரையும் தவிர. அது சிங்கள ஊடகங்களாக இருந்தாலும் சரி, தமிழ் ஊடகங்களாக இருந்தாலும் சரி, ஆங்கில ஊடகங்களாக இருந்தாலும் சரி எல்லாமே அதிகார எல்லைகளுக்குக் கட்டுப் பட்டேயிருந்தன. அப்படிக் கட்டுப்பட்டிருந்தும் ஒரு கட்டத்தில் இந்த ஊடகங்கள் தமக்கான பாதுகாப்பை உறுதி செய்ய முடியவில்லை. "தேசியப்பணியைச் செய்கிறோம்" என்று தமிழ் ஊடகங்கள் ஒருபக்கத்தாலும் சிங்கள ஊடகங்கள் இன்னொரு பக்கத்தாலும் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டதன் விளைவாலேயே இன்று அவையும் நாடும் அனுபவிக்கின்ற நிலையேற் பட்டிருக்கிறது. கல்வியாளர்களிற் சிலர் மாற்றுக் குரலாக செயற்பட முனைந்து அதற்காக உயிர்ப்பலி கொடுக்க வேண்டியேற்பட்டது இதற்கான தயக்கத்தை உருவாக்கியது உண்மை. ஆனாலும் பலர் எல்லாவற்றுக்கும் "ஜால்ரா" போடவே செய்தார்கள்.

இந்த இடத்தில் இந்த வெகுஜன ஊடகங்கள் தமது நிலைப்பாட்டுக்கான பயன்குறித்து விளங்கிக் கொள்வது அவசியம். இது தனியே ஊடகங்களை மட்டும் சாராது. இந்தப் போக்கை ஆதரித்தும் அனுசரித்தும் எழுதிய எல்லா ஊடகக்காரர்களுக்கும் பொருந்தும். இதற்கு ஆதரவளிக்கும் சகலருக்கும் கூட இது பொருந்தும். ஆனால், அவை எவையும் இது குறித்து அப்படிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இந்த ஊடகக்காரர்களும் இதுபற்றிய அனுபவத்தைக் கொண்டிருப்பதாகவோ, இந்த அனுபவங்களிலிருந்து எதையும் படித்துக் கொண்டதாவோ தெரியவில்லை. அதை இவர்கள் விரும்பவில்லை போலவே தெரிகிறது. இதேவேளை, இந்த மூன்றாந்தரப்பை இந்த ஊடகங்களும் ஊடக வியலாளர்களும் அதிகார மையங்களிடம் காட்டிக் கொடுத்தனர். அல்லது அவர்களைப் பலவீனப்படுத்தினர்.

எனவேதான் இந்தக் குரலாளர்கள் நாட்டை விட்டே வெளியேற வேண்டியேற்பட்டது. அல்லது வாயை மூடவேண்டியிருந்தது. தமது செயற்களத்தை வெளியரங்கிலேயே வைத்துக் கொள்ள வேண்டியதா



படிப்பகம்

www.padippakam.com

கியது. அப்படி இந்த மூன்றாந்தரப்பினர் வெளியேறிக் கொண்டதால் எத்தகைய நேரடி எதிர்ப்பையும் சந்திக்க வேண்டிய அவசியம் இந்த ஒடுக்குமுறையாளர்களுக் கும் அதிகார மையத்தினருக்கும் இருக்கவில்லை.

இது இலங்கை (மக்கள்) நிலவரத்தை மேலும் மோசமாக்கியது. இதுதான் இன்று போர் முடிந்த பின்னரும் அரசியற் தீர்வை எட்ட முடியாமலும் நாட் டின் ஜனநாயகத்தைப் பேணமுடியாமலும் இருக்கும் துன்பியல் நிலையை உருவாகியுள்ளது. எனவே இப்போது இந்த மூன்றாந்தரப்பின் இயங்கு வேகம் அதிகரிக்க வேண்டியுள்ளது. இது மிக மிக அவசியம். அத்துடன், இதன் பரப்பளவும் அகலிக்க வேண்டியிருக் கிறது. இதற்கு கடந்த காலத்தின் சில நிகழ்ச்சிகள் மற்றும் அனுபவங்களையெல்லாம் தொகுத்துப் பார்க்க வேண்டும். இங்கே அதை முழுமையாக இப் போது தொகுத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் அதுவொரு அவசியப்பணி. ஏனெனில் இன்றைய இட றுப்பாடுகள் முன்னரையும்விட அதிகமாக உள்ளன.

பிற்போக்குத் தனமாகவும் ஜனநாயக விரோதமாகவும் செயற்படும் அதிகார மையமும் ஒடுக்குமுறை இயந்திரமும் தமக்கெதிரான ஒரு பொதுவெளி உருவாகுவதை எப்போதும் விரும்புவதில்லை. இப்படி இறுக்கமான ஒரு நெருக்கடிச் சூழலில்தான் எப்போதும் மூன்றாந்தரப்பே உருவாகின்றது. அப்போதுதான் மூன்றாந்தரப்பின் தேவையும் அவசியமும் ஏற்படுகிறது.

இதிலும் சிறுபான்மைச் சமூகங்களின் பலவீனமும் தடு மாற்றங்களுமே அதிகமாகவுள்ளன. எனவே இதற்கு இந்தத் தொகுத்துப் பார்க்கும் காரியம் அவசியமா கிறது. இங்கே இந்தத் தொகுத்தல் பன்முகத்தன்மையை மனதில் முன்னிறுத்திச் செய்யப்படுகிறது. ஆனால், இதுவொரு ஆரம்பநிலைக்குரிய தொடக்கமே. ஆழ மாகவும் ஆதாரங்கள் நிறைந்ததாகவும் விரிவாகவும் இந்தச் செய்ய வேண்டும். அதற்குரிய பொருத்தமான வசதிகளும் அவகாசமும் ஆதாரங்களின் கையிருப்பும் இப்போது என்வசமில்லாத காரணத்தினால் இவை ஞாபகத்தின் ஆதாரங்களைக் கொண்டு மிகச் சுருக்க மாக எழுதப்படுகின்றன.

## 4

இலங்கையின் இனப்பிரச்சினை, வன்முறை வடிவ மாக மேற்கிளம்பிய தொடக்கத்தில் அதற்கெதிராகக் கிளம்பிய இடதுசாரிகளின் குரலை எவரும் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. அப்போது இது குறித்து எழுதியும் பேசியும் வந்த குமாரி ஜெயவர்த்தனா, றெஜி சிறிவர்த்தனா போன்றோரையும் யாரும் கவனிக்க வில்லை. தமிழ்த் தரப்பிலும் சிவசேகரம், தம்பையா, என்.சண்முகதாஸன், டானியல் உள்ளிட்ட பலர் எழுதி யும் பேசியும் வந்தனர். அதாவது இந்த மாற்றுக்குரலா ளர்கள் குறித்த அக்கறை கொள்ளப்படவில்லை. இந்த வளர்ச்சி இனப்பிரச்சினை பெரும் யுத்தமாகியபோதும் தொடர்ந்தது. மட்டுமல்ல, பின்னர் அவ்வாறு குர லெழுப்பியோர் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்ட னர். இனவன்முறை என்பது நாட்டின் ஜனநாயகத் தையே தின்று தீர்த்தது. அப்படி ஜனநாயகம் தின்று தீர்க்கப்பட்டதால்தான் இலங்கையின் திறன் மிக்க ஊடகவியலாளர்களான றிச்சார்ட் டி சொய்சா முதல் நிமலராஜன், ராஜினி திரணகம, சந்திரபோஸ் சுதாகர் (எஸ்போஸ்), தராகி சிவராம், லக்மல் மற்றும் லசந்த விக்கிரமதுங்க வரையில் இதற்கொரு நீண்ட பட்டிய லுண்டு. இதைவிடவும் குரல் முறிக்கப்பட்டவர்கள், வெளியேறியோர் என்றொரு பெரும் பட்டியலு முண்டு. ஜனநாயகத்துக்கான வெளி சுருக்கப்படும் போது மாற்றுக்குரலாளர்களுக்கான அபாயப் பிராந்தி யம் உருவாகியது. இந்த நிலையில் சிங்களத்தில் எழுதி யும் பேசியும் வந்த பலரை புலிகளின் ஆதரவாளர்கள், தேசத்துரோகிகள் என்று அரசாங்கம் பிரகடனப் படுத்தியது. ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற தீவிர வாதக் கட்சிகளும் இவ்வாறே குற்றஞ்சாட்டின.

ஒரு புறத்தில் சட்டரீதியான நடவடிக்கையாகவும் மறு புறத்தில் பாதாளக்கும்பல் என்று சொல்லப்படும் திரை மறைவுப் பயங்கரவாத நடவடிக்கைகளாலும் இந்த மாற்றுக்குரல்கள் நசுக்கப்பட்டன. தமக்கான அபாயவெளி பெருத்துவருவதைக்கண்ட பலர் நாட்டைவிட்டு வெளியேறினார்கள். ஏனையோர் அமைதியாகி விட்டனர். இது அரசியல், கலை, இலக்கி யம், ஊடகத்துறை என்ற சகல நிலைகளிலும் நிகழ்ந் தது.

ஏறக்குறைய இதே நிலைமைதான் தமிழ்ச் சூழலி லும் நடந்தது. இன்னும் இப்போதும் நடந்து கொண் டிருப்பதும் இதுதான். தமிழ்ச்சூழலிலும் விமர் சனத்துக்கான வெளி அநேகமாக இருந்ததில்லை. வசை பாடுதல், எதிர்த்தல், குற்றம் சாட்டுதல், துரோகி எனப் பட்டஞ் சூட்டுதல் என்பனவே தமிழ்ப்பாரம்பரியத் தின் பொது இயல்பு. அரசியலாக இருந்தாலும் சரி, கலை, இலக்கியம் என்றாலும் சரி, ஊடகத்துறையோ, பிற துறைகள் எதுவாயினும் சரி அவற்றை விஞ்ஞான பூர்வமாகப் பார்க்கும் மரபு அதற்கிருந்ததில்லை. விமர்சன மாண்போ, அறிவியல் பூர்வமாக விசயங் களை அணுகும் நோக்கோ, ஜனநாயகத்தை அதன் உச்ச நிலைப் பெறுமானத்துடன் அனுபவிக்க வேண்டும், அதை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எண்ணமோ தமிழ்ப் பொதுப்பண்பாட்டில் இல்லை.

இதன்காரணமாக தமிழ் இனவாதத்தை வளர்த்த வர்களுக்கும் தமிழ் அடிப்படைவாதிகளுக்கும் மாற் றுக்குரலாளர்களின் மீது வசைபாடி, அவர்களைப் புற மொதுக்குவதற்கு இலகுவாக வாய்த்தது. இந்த அடிப் படைவாதிகளே எப்போதும் அரங்கிலும் செல்வாக்





படிப்பகம்

www.padippakam.com



குடையோராக இருந்தனர். எனவே மாற்றுக் குரலாளர்கள் அல்லது ஜனநாயகவாதிகள், மூன்றாந்தரப்பினர் எல்லோரும் துரோகிகளாகச் சித்திரிக்கப்பட்டனர். மாற்று ஊடகங்கள், மாற்று எழுத்துகள் யாவும் துரோகச் செயற்பாடுகளாகக் காட்டப்பட்டன. அவ்வாறு காட்டப்பட்டது மட்டுமல்ல தண்டனையும் வழங்கப்பட்டது. அதுவும் சாதாரண தண்டனையல்ல. கொலை. கடத்தல். இவ்வாறு மிகப் பயங்கரமான தண்டனை.

இந்தத் துரோகப் பட்டஞ்சூட்டி ஒதுக்குதல், அல்லது எதிர்க்கும் மரபை ஆரம்பித்து வைத்தது முன்னரே குறிப்பிட்டமையைப்போல தமிழ்வாதம் கதைத்த தரப்பே. பேராசிரியர் சி.சிவசேகரம் குறிப்பிடுவதைப் போல தமிழரசுக் கட்சியே இதை ஆரம்பித்து வைத்தது. மாற்று அரசியலை, மாற்றுக்குரல்களை ஏற்றுக் கொள்ளவும் எதிர்க்கவும் திராணியற்ற அக்கட்சி இப்படி வசைபாடும் ஒரு உபாயத்தைக் கையாண்டு தன்னைத் தக்கவைத்தது. அதற்காக அது மக்களிடம் எடுபடக்கூடிய “இனமானம்” என்ற ஆயுதத்தைத் தூக்கியது. கருத்தியல் வரட்சியும் அரசியல் வெறுமையும் அதை அப்படிச் செயற்பட வைத்தது.

மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் இன மான உணர்வுகளைத் தூண்டி அதில் அந்தக் கட்சி குளிர் காய்ந்தது. இவ்வளவுக்கும் “நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே” என்று சொல்லும் தமிழ் மரபைப் பெருமையாகச் சொல்லும் அந்தக் கட்சியால் இடதுசாரிகளினுடைய கருத்துகளை ஏற்கவோ மாற்றுக் குரல்களைப் புரிந்து கொள்ளவோ முடியவில்லை.

இந்தப் பாரம்பரியம் பின்னர் வந்த விடுதலை இயக்கங்களிலும் தொடர்ந்தது. ஆனால் விடுதலை இயக்கங்களிற் பலவும் மாற்றுக்குரலாளர்களைக் கையாண்டவிதம் தமிழரசுக்கட்சியைப்போல வெறுமனே எதிர்ப்புடன் மட்டும் நின்று விடவில்லை. அல்லது வசைபாடுவதுடன் குற்றஞ்சாட்டுவதுடன் முடிந்து விடவில்லை. தமிழரசுக் கட்சியைப் போல விடுதலை இயக்கங்கள் வெறுங்கையுடன் இருக்கவில்லை. அவை, கையிலும் மனதிலும் வெடிகுண்டையும் துப்பாக்கிகளையும் வைத்திருந்தன என்பதால், அதற்கேற்பவே அவற்றின் தண்டனை முறையும் அமைந்தன. இது தமிழ்ச்சூழலை முற்று முழுதான ஒரு இருண்டகாலத்துக்குள் தள்ளியது. ஜனநாயகச் சூழலை அப்படியே இழந்த தமிழ்ச் சூழல் ஆயுதக் கலாச்சாரத்துக்குள் நுழைந்து கொண்டது. எனினும் இந்த நிலைகுறித்து தமது கவலைகளையும் கண்டனங்களையும் எதிர்ப்பையும் மாற்றுக்குரலாளர்கள் முன்வைத்தனர். அதற்காக அவர்கள் பெற்ற தண்டனை சாதாரணமானதல்ல. செல்வி, சபாலிங்கம், பல்கலைக்கழக மாணவர் பிரபாகரன், சின்னபாலா, அற்புதன், “புதியதோர் உலகம்“ கோவிந்தன், ரஜினி திரணகம என்று ஒரு பெரும் பட்டியல் இதற்குண்டு.

இதைத்தவிர மாற்று ஊடகங்கள் சகலதையும் ஒதுக்கிய அல்லது தடுத்த நிலையும் இருந்தது. குறிப்பாக திசை, சரிநிகர், பெருவெளி, தினமுரசு, அமுது, தினகரன், உயிர்நிழல், எக்ஸில் போன்ற பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இப்படித் தடுக்கப்பட்டன. இந்த இதழ்களில் எழுதுவோர் கூட விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக எழுதுவோராகவே சித்திரிக்கப்பட்டனர். ஷோபாசக்தி, சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், நட்சத்திரன் செவ்விந்தியன், கற்சுறா, கலைச்செல்வன், லஷ்மி, சக்கரவர்த்தி, திருமாவளவன் இப்படிப்பலர்.

இந்த இதழ்கள் முன்வைத்த அரசியலையோ, அந்த அரசியலின் அவசியத்தையோ மக்கள் அறிந்து கொள்ள இவர்கள் விரும்பவில்லை. மக்களிலும் ஒரு சாரார் இந்த இதழ்களும் இந்தக் கருத்தியலாளர்களும் போராட்டத்துக்கும் மக்களுக்கும் எதிராகவே இயங்குகின்றனர் என்று நம்பினர். ஆனால், உண்மையில், இந்த மாற்றுக் கருத்தாளர்கள்தான் விடுதலையை நெறிப்படுத்துகின்றனர் என்பதை இவர்களில் யாருமே புரிந்து கொள்ளவில்லை. இதுதான் மிகமிகச் சோகமானது.

இந்த நிலைக்கு விடுதலைப்புலிகள் மட்டும்தான் காரணமென்றில்லை. புலிகள் முதன்மைப் பாத்திரத்தை வகித்தவர்கள் என்பதாலும் அவர்கள் இந்த மாற்றுக் கருத்துகளுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டிலும் தண்டனை முறையிலும் ஈடுபட்டவர்கள் என்ற வகையிலும் அவர்கள்மீது இன்று அதிக குற்றச்சாட்டுகள் இருக்கலாம். அதற்கு அவர்கள் பொறுப்பும் கூடத்தான். ஆனால், புலிகளைத் தவிர்த்து அனைத்து இயக்கங்களிலும் விமர்சனங்களுக்குப் பதிலாக துப்பாக்கியை நீட்டுகின்ற பழக்கமிருந்தது.

> கடந்தகால விளைவுகளுக்கு நாமெல்லோரும் ஏதோ ஒரு வகையில் பொறுப்பானவர்களாக இருந்திருக்கிறோம். அந்தப் பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டு இனிமேலாவது மக்கள் விரோத நடவடிக்கைகளை தொடரக் கூடாது. இதற்கு அவர்கள் இலக்கிய ரீதியாகவும் ஏனைய வெளிப்பாடுகளின் வழியாகவும் ஒரு மூன்றாந்தரப்பின் குரலாக ஒலித்த குரல்களை இப்போது கவனப்படுத்துவது அவசியம். கடந்த காலத்தில் இந்தக் குரல்கள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டன. ஆனால் இந்தக் குரல்களை இப்போது மீண்டும் ஒரு தடவை தொகுத்துப் பார்த்தால் இவற்றின் பெறுமதி தெரியும்.

புளொட் இயக்கத்தின் தீப்பொறிப்பிரிவினருக்கெதிரான நடவடிக்கைகள், ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் போன்றவற்றிலும் இந்த மாதிரி இவ்வாறான அமுக்கல்கள் நடந்தன. ஆயுதந்தாங்கிய இயக்கங்களில் மட்டுமல்ல ஆயுதந்தாங்காத அரசியலை நடத்திய அரசியல் அமைப்புகளிலும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் இயல்பிருந்தது. எனவே பொதுவாகவே, எதையும் மறுபார்வை பார்க்கும் வழக்கமில்லாமற் போய்விட்டது. அத்துடன் விவாதங்கள், கலந்துரையாடல்கள், பன்முகத்தன்மை



படிப்பகம்

www.padippakam.com

யான சிந்தனைகள் என எதுவுமே இல்லாத ஒற்றைப் படைத்தன்மையான பார்வையே வளர்ச்சி பெற்றது. இது எந்த வளர்ச்சி பெற்ற சமூகங்களிலும் இல்லாத நச்சுப்போக்காகும்.

ஜனநாயகச் சூழலின் அடிப்படையே பன்முகத் தன்மைதான். ஆனால் தமிழ்ச் சூழலிலோ அதற்கெதிரான போக்கே நிலவுகிறது. இதுதான் அதன் அவலம். இதுதான் எல்லாப் பின்னடைவுகளுக்கும் எல்லாத் துயரங்களுக்கும் காரணமாகியது. இல்லையெனில் இத்தனை கடினமான போராட்டத்தை நடத்திய ஒரு சமூகம் எப்படித் தோற்றுப்போயிருக்க முடியும்? இவ்வளவு தியாகங்கள், இவ்வளவு வீரம் செறிந்த நடவடிக்கைகள், இத்தனை ஒற்றுமையான பங்கேற்புகள் (சத்தியாக்கிரகப் போராட்டம், உண்ணாவிரதம், ஹர்த்தால் தொடக்கம் ஆயுதப்போராட்டம், பொங்குதமிழ், புலம்பெயர்மக்களின் போராட்டங்கள் என அறுபது ஆண்டுகளான நடவடிக்கைகள்) "தோல்விகளிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லப்படுவதுண்டு.

1960களில் பலஸ்தீனப் போராட்டம் கண்ட பின்னடைவு அதை இன்னும் முழு அளவில் நிமிர விடவில்லை. ஆனால், அந்தப் பின்னடைவு குறித்த விவாதங்கள் அப்போது கடுமையாக நடந்தன. இதுதான் அந்தப் போராட்டத்தை ஓரளவுக்காவது சர்வதேசமயப்படுத்த உதவியது. அத்துடன் ஒரு அனுதாபப் பார்வையை சர்வதேச சமூகத்திடம் உருவாக்கியது.

ஆனால், ஈழச்சூழலின் நிலைமையோ வேறு. அது இறுகி மூடுண்ட ஒரு அமைப்பு. இந்த அமைப்பு எதையும் உள்நுழைய அனுமதிப்பதில்லை. எனவேதான் உலகத்தின் எத்தகைய புதிய போக்குகளையும் நவீன சிந்தனைகளையும் மாற்றங்களையும் அது உள்வாங்கவில்லை. இதனால், மிகவும் வீரம் செறிந்த போராட்டத்தை நடாத்தியும் அதனால் ஓர் அடிகூட முன்நகர முடியவில்லை என்று மீண்டும் புரிந்து கொள்வோம். இந்த நிலை தமிழ் அரசியலின் அவலம் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமான தமிழ் சமூகத்தின் பொதுப்போக்கிலும் உறைந்திருக்கின்றது. இது குறித்து துக்கப்படுவோர்கள் மிகச் சிறிய தரப்பாகவே உள்ளனர். ஆனால், அவர்கள் வீரியமாகவே உள்ளனர். எதனிலும் கரைந்து போகாத தனித்தன்மை இவர்களுடையது.

பொதுப்போக்கைப் பொறுத்தவரையில் அது தன்னைப் புனிதப்படுத்தும் ஒரு வகையான தனிமைப்படுத்தலை பிரதான பண்பாகக் கொண்டுள்ளது. இந்தப் "புனிதப்படுத்துதல்" என்பது அடிப்படை வாதம் சார்ந்ததே. எல்லாப் புனிதப்படுத்தல்களும் அடிப்படை வாதத்திலேயே போய் முடிகின்றன. அல்லது அடிப்படை வாதத்திலேயே ஆரம்பிக்கின்றன. தமிழ் சூழலும் இந்தப் பண்பிலேயே உள்ளது.

இது மற்ற எல்லாவற்றையும் நிராகரிப்பது. அவை எத்தகைய நியாயங்களைக் கொண்டிருப்பினும் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பது. இதைத்தான் முன்னரேயே அடிப்படைவாதம் என்றும், ஒற்றைப்படைத் தன்மையானது என்றும், அதிகாரம் குவிந்தது என்றும் குறிப்பிட்டோம். எதையும் பரிசீலிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ விரும்பாத இந்தப் போக்கு எல்லாவற்றையும் நிராகரிப்பதால் பலவீனப்படுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் அல்லது சாத்தியங்கள் ஏற்படுகின்றது. எனவே தான், தமிழ் மக்களுடைய போராட்டங்களும், அவர்களின் வாழ்வும் மிக இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளன.

இதற்கு மிக எளிய ஏராள உதாரணங்களை நமது அண்மைய கடந்த காலங்களிலும் சமகாலத்திலும் காணமுடியும். அறுபதுகளில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கோரிக்கைக்கான போராட்ட வழிமுறை பற்றி முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை யாரவது ஒரு தடவை மீளப்பார்த்தால் நாம் எவ்வளவு அறிவீனர்களாகவும், பிடிவாதமாக கெடுவோர்களாகவும் இருந்திருக்கிறோம் என்று தெரிய வருகின்றது. இதைப் போலவே, பின்னர் ஆயுதப் போராட்ட சந்தர்ப்பத்திலும் ஏராளமான விமர்சனங்கள், விவாதங்கள், மாற்றுச் சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன. இந்தப் பங்களிப்பைச் செய்ததில் இலங்கையில் சரிநிகருக்கு முக்கிய பங்குண்டு. கட்சிப் பத்திரிகைகளாக இருந்தாலும் புதிய பூமி, தினமுரசு போன்றவையும் இங்கே குறிப்பிடத்தக்கவை. அத்துடன், புலம் பெயர் நாடுகளில் உயிர்நிழல், எக்ஸில், சிந்தனை, தமிழீழம் போன்றவை முக்கிமானவை. ஆனால், அவற்றை உள்வாங்குவதற்குப் பதிலாக துப்பாக்கிகளையே நீட்டியதால் எல்லாமே ஓரங்கட்டப்பட்டன. இன்று அவற்றை மீளப்பார்க்கும்போது நமது தவறுகள் தெளிவாகப் புலப்படும்.

இப்பொழுதுள்ள பிரச்சினை என்னவென்றால் இவற்றை மீளப்பார்ப்பதற்கோ கடந்த கால அனுபவங்களைத் தொகுப்பதற்கோ தமிழ் அரசியல் கட்சிகளும் பொது அரங்கில் தம்மை முதன்மைப்படுத்தி பிரகடனப்படுத்தும் ஊடகக்காரர்களும், ஊடகங்களும், கலை இலக்கிய வாதிகளும் விரும்பவில்லை என்பதே.

இது மிக மோசமான நிலை. கடந்த கால தவறுகளைவிட மிகவும் மோசமான, மன்னிக்கமுடியாத தவறு. கடந்த காலத்தின் தவறுகளை அல்லது பலவீனங்களை அல்லது தோல்விகளை ஏற்றுக்கொள்வ தொன்றும் பிழையானதுமல்ல, கூடாததுமல்ல. அது அவசியமானது. வரலாற்றில் தவறுகளைச் சீர்படுத்துவது ஒரு முக்கியமான சிறப்பு நிகழ்ச்சி. அனுபவங்களைத் தொகுத்தே அறிவை விரிவாக்கி, சிந்தனையாற்றலைப் பெற்றது மனித குலம். ஆனால், நாமோ பிடிவாதமாக, இதற்கு எதிரான நிலையிலேயே இருக்கின்றோம். இது ஏன்? தமிழ் ஊடகங்களையும், (குறிப்பாக, பத்திரிகைகள், இணையங்கள் மிக முக்கியமானவை) தமிழ் அரசியல்வாதிகளையும் நன்றாக அவதானியுங்கள். வேண்டுமானால், இரண்டு பட்டியல்களைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

ஒரு பட்டியல் ஏற்கனவே தமிழ் அரசியலின்



படிப்பகம்

www.padippakam.com



தவறுகளையும் பலவீனங்களையும் சுட்டிக்காட்டிய விமர்சனங்களைக் கொண்டது. அடுத்த பட்டியல் எப்போதும் அரசாங்க எதிர்ப்பை பிரதானமாக கொண்டு, ஏனைய தவறுகள், பார்க்க வேண்டிய விசயங்களைக் குறித்த பார்வைகளற்ற ஒற்றைப்படையான பரப்புரையை உடையது. இந்த இரண்டிலும் நீங்கள் பதிவுகளைச் செய்து கொண்டு பின்னர் அவற்றை மீள ஒரு தடவை தொகுத்துப் பாருங்கள். இதில் எந்தப் பட்டியல் எப்போதும் சரியானதைச் சொல்லியிருக்கிறது? எது முன்கூட்டியே பலவற்றையும் எச்சரித்திருக்கிறது.

எது என்னவெல்லாம் செய்யலாம் என்று அறிவுறுத்தியுள்ளது? எது மக்களை முன்னிறுத்தி, அவர்களின் நலனை முதன்மைப்படுத்திப் பேசியுள்ளது என்பது தெரியவரும். அப்படிப் பார்க்கும்போது இதை ஏன் ஏனைய தரப்பினர் நிராகரித்தனர் என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அதுமட்டுமல்ல இந்தத் தரப்பினர் இந்த உண்மைகளுக்காக எவ்வளவு விலை கொடுத்திருக்கிறார்கள் என்பதும் தெரியவரும்.

இதேவேளை அடுத்த தரப்பு, தான் சொல்வதே சரியென்றும் அதற்கெதிரான எத்தகைய மாற்றுப் பாதைகளும், பார்வைகளும் தவறானவை, அவையெல்லாம் துரோகத்தனமானவை என்றும் சொல்லி வந்தது. தமது வெற்றிகள், தமது செயல்கள் எல்லாமே நிரந்தரமானவை என்றும் நிரூபித்தவை. என்றபோதும் இறுதி விளைவு இன்று ஏற்பட்டுள்ள மாபெருந் தோல்வியும் பின்னடைவுமாகும். ஆனால், இதன் பின்னரும் இந்தத்தரப்பு இந்தத் தோல்விக்கான காரணங்களைக் கண்டறிய விரும்பவில்லை. அப்படிக் காரணங்களைக் காணவிளையும்போது இந்தத் தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் தாமே காரணம் என்பது தெரியவரும். அப்படித் தெரியவரும்போது அது தமக்கான மதிப்பிறக்கத்தை ஏற்படுத்தும் என்று இந்தத்தரப்புக் கருதுகின்றது. இது தமது எதிர்கால இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் என்றும் அது அச்சப்படுகின்றது. இது தேவையற்ற அச்சம். தவறுகளைத் திருத்தும் போது புதிய ஆதரவுத்தளமே உருவாகும்.

இதேவேளை, இதனை இன்னொரு வகையாகவும் சிலர் பார்க்கிறார்கள். பெரும்பாலான தமிழர்களின் சிந்தனையில் உள்ள குறைபாடுதான் அவர்களை இப்படிச் சிந்திக்க வைக்கிறது. எப்போதுமே எல்லாவற்றையும் எதிர்மறையாகச் சிந்தித்துப் பழகியதன் விளைவு மற்றவர்களைக் குற்றங் கண்டு அவர்களின் மீது பழியைச் சுமத்திவிட்டு வாழாதிருப்பது. எத்தகைய நல்ல அம்சங்களிலும் சந்தேகங்கொள்வது. அதனால் தான் அவர்கள் அதிகம் தனிமைப்படுகிறார்கள். ஒரு வழிக்குப் பதிலாக பல வழிகளிருப்பதைக் கவனத்திற் கொள்ளல் தேவையானது என்றெல்லாம் சிந்தித்துச் செயற்பட்ட வரலாறே இல்லை என்று.

ஆனால், நாம் புத்திபூர்வமாகவும் விவேகமாகவும் சிந்திக்கும்போது, முற்போக்காக செயற்படும்போது பல கைகள் நம்மைநோக்கி நட்புடன் நீளும். இல்லையென்றால், பிறரின் கால்களின் கீழே நசிபட வேண்டியதுதான்.

எனவே நாம் எதனையும் புத்தி பூர்வமாகவும் சரியாகவும் விவேகமாகவும் செய்ய வேண்டும், மாற்றுப்பார்வைகளுக்கு இடமளிப்பது அவசியம்.

இது மாறவேண்டும். அப்போதுதான் புதிய வழிகள் பிறக்கும். இதற்கொரு செயல்விளைவு தேவை.



படிப்பகம்

www.padippakam.com

# டூ ஃபூ கவிதைகள் (ஆங்கிலம் வழி தமிழில் தவ-சஜிதரன்)

சீனச் செவ்வியல் கவிஞர்கள் வரிசையில் முன்னணியில் வைத்துக் கொண்டாடப்படும் (712 - 770) இனுடைய கவிதைகளில் பல போரின் விளைவுகளைத் துயரோடு பேசுபவை.



## பனியை முகங்கொளல்

போரின் பிறகு
புதிய பூதம் பல அழுதபடி உள,
தனித்த கிழவன் அரண்டு துக்கிக்கிறான்
அந்திப் போதில் பணிந்துறையும் குலைந்த முகில்கள்
சுழல்காற்றில் மூர்க்கித்தாடும் பனி
பச்சையமிழந்த குவளையின் மருங்கில்
வீசப்பட்டுக் கிடக்கிறது அகப்பை
செம்மை குன்றாது ஒளிரும் அடுப்பு
பல இடங்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டாயிற்று
நான் அமர்ந்திருக்கிறேன்
புத்தகத்தைப் புரட்ட மாட்டாத் துயருடன்

## *Facing snow*

After the battle, many new ghosts cry,
The solitary old man worries and grieves.
Ragged clouds are low amid the dusk,
Snow dances quickly in the whirling wind.
The ladle's cast aside, the cup not green,
The stove still looks as if a fiery red.
To many places, communications are broken,
I sit, but cannot read my books for grief.

(Watson, B. (2002) The Selected Poems of Du Fu. New York, Columbia University Press)

## நிலவொளிர்ந்த இரவு

பூஃசௌவில் இன்று நிலவு ஒளிர்கிறது
அறையில் அவள் தனித்துப் பார்த்தபடியிருக்கிறாள்
தூரத்திருக்கும் மகனையும் மகளையும் நினைந்து
மனம்நைகுவன் நான்..
அவர் அறியார், அவள் ஷாங்கானை எண்ணியிருப்பது
ஏனென்று..
அவள்தன் முகிலனைய பனித்த கூந்தல் இனியது
பளிங்கொத்த அவள் கரங்கள் தெளிந்த நிலவில் குளிர்ந்துள ..
ஒன்றாய் ஒளிர்வில் நாம் சாய்ந்திருப்பதும் எப்போதினி-
வெற்றுச் சாளரத்தருகே, விழிநீர் வரண்டு??

## *Moonlit Night*

The moon shines in Fuzhou tonight,
In her chamber, she watches alone.
I pity my distant boy and girl-
They don't know why she thinks of Chang'an.
Her cloud-like hair is sweet with mist,
Her jade arms cold in the clear moonlight.
When shall we lean in the empty window,
Together in brightness, and tears dried up?





படிப்பகம்

www.padippakam.com



## இலையுதிர்கால மழையின் பெருமூச்சுக்கள் (1)

இலையுதிர்கால மழையில் புற்கள் அழுகி மடிகின்றன.
படிகளின் கீழே "யூமிங்கின்" நிறம் செழியது
தண்டினைச் சிறகுபோல் போர்த்தும் வளர்ந்த பசிய இலைகள்
பொன்நாணயம் ஒப்பப் பூக்கும் எண்ணறு மலர்கள்
சோகித்தழும் குளிர்காற்று உனக்கெதிரே ஆக்ரோஷமாய் வீசுகிறது
அதைத் தாங்கி நிற்பது
வெகுவில் உனக்குக் கடினமாய்விடும் என்றஞ்சுகிறேன்
மேலறையில் தனது வெண்கேசத்தை அவிழ.
விடுகிறான் மூதறிஞ்ன்
காற்றை எதிர்கொண்டு அதன் வாசனை முகரும் அவன்
தேம்பியழுகிறான்

## *Sighs of Autumn Rain (1)*

In autumn rain, the grasses rot and die,
Below the steps, the *jueming's colour is fresh.
Full green leaves cover the stems like feathers,
And countless flowers bloom like golden coins.
The cold wind, moaning, blows against you fiercely,
I fear that soon you'll find it hard to stand.
Upstairs the scholar lets down his white hair,
He faces the wind, breathes the fragrance, and weeps.

*The jueming is Chinese senna (cassia obtusifolia or cassia tora)- a plant with small yellow flowers.

## இலையுதிர்கால மழையின் பெருமூச்சுக்கள் (2)

முடிவறு காற்றும் நெடிய மழையும்
ஒன்றாய்ச் சுழலுமிவ் இலையுதிர் காலம்
நாற்கடலும் எண்பாலையும்
ஒரு முகிலால் அணையும்
போவது பரியோ வருவது ஏறோ அறிவது கடினம்
சேறாம் "ஜிங்கும் தெளிந்த" வேயும்
பிரித்துத் தேர்தல் எவ்வண் இயலும்!
நட்ட தானியம் துளிர்விடல் தொடங்கும்
சோளக் காதுகள் கருநிறங் காணும்
உழவர்க்கும் பெண்டிர்க்கும் நற்செய்தி கிடையா
பெறுவோர் தருவோர் பேரம் இணங்க
ஒருகூடை அரிசி பெருநிதி போகும்
சீனத்து நதிகள்?

## *Sighs of Autumn Rain (2)*

Ceaseless wind and lengthy rain swirl together this autumn,
The four seas and eight deserts are covered by one cloud.
A horse going, an ox coming, cannot be distinguished,
How now can the muddy Jing and clear Wei be told apart?
The standing grain begins to sprout, the millet's ears turn black,
Farmers and the farmers' wives have no hopeful news.
In the city, a bucket of rice can cost a silken quilt,
And both the buyer and seller have to agree the bargain is fair.



படிப்பகம்

www.padippakam.com





# ஒரு வினாடி உணர்வை எழுத எத்தனை பக்கங்கள்

## அப்படியும் முழுமை கிட்டுவதில்லை

நேர்காணல்- சாந்தன்

***கட்டடப் பொறியியல் மற்றும் கணனி போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கும் நீங்கள் இலக்கிய ஈடுபாடு கொண்டது எவ்வாறு?***

இலக்கிய ஈடுபாடுதான் முதலில் வந்தது. சிறு வயதிலிருந்து வாசிப்பு நாட்டம் அதன் அடுத்த கட்டமாய் எழுதும் முனைப்பு. பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு எழுதிவிட்டுப் பெறுபேறுகளுக்காகக் காத்திருந்த 66 புரட்டாதியில் என் முதற் கதை "கலைச்செல்வி"யில் பிரசுரமானது. மொறட்டுவை தொழில் நுட்பவியல் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போது முதலாவது சிறுகதைத் தொகுதி "பார்வை" வெளியாயிற்று. 1970இல் தொழில் நுட்பவியல் கல்லூரிக் கால கட்டம் கலை இலக்கியச்செயற்பாடுகளுக்கு வாய்ப்பாக அமைந்ததென நினைக்கிறேன்.

கலை இலக்கியச்செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி அரசியல் ஈடுபாடுகளுக்கும் ஏற்றதாக அமைந்தது. அது தமிழ் மாணவர் பேரவை இயங்கிக் கொண்டிருந்த காலம். மொறட்டுவை தொழில் நுட்பவியல் கல்லூரி நாட்களில் தான் "எழில்" சஞ்சிகையும் வெளியாயிற்று. நான், மாவை நித்தியானந்தன் உட்பட சில மாணவ நண்பர்கள் இணைந்து அதனை வெளியிட்டோம். கலை இலக்கியம், சமூகம் பற்றிய பிரக்ஞையுடன் ஐந்தோ ஆறோ இதழ்கள் வந்தன.

***கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம்?***

அடுத்த கட்டம். எழிலில் இணைந்திருந்த நான், நித்தி போன்றோரும், கொழும்பில் அவ் வேளையில் பணியாற்றிக்கொண்டிருந்த சண்முகன், யேசுராசா முதலிய பலரும் சேர்ந்து செயற்பட்ட அமைப்பு அது. எழுபதுகளின் தொடக்கத்தில் ஏறத்தாழ ஐந்தாண்டுகள் தீவிரமாக இயங்கிற்று. மாதாந்த சந்திப்புகள், நூல் வெளியீடுகள், விமர்சனங்கள் என.


***கொழும்பிலும், திருகோணமலையிலும் பணியாற்றிய காலங்கள் உங்களது எழுத்தாக்க முயற்சிகளில் எந்தளவிற்குத் தாக்கம் செலுத்தின?***

மேற்குறிப்பிட்ட கழகச்செயற்பாடுகளுக்கப் பால், பரந்தளவிலான பரிச்சயங்கள் கொழும்பில் கிட்டின. பொது நிகழ்வுகள், படக்காட்சிகள், கண்காட்சிகள், இவற்றோடு, பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்கன் சென்ரர், சோவியத் நட்புறவுக் கழகம் இவற்றின் நூலகங்களும் செயற்பாட்டு முயற்சிகளுக்கு வாய்ப்பாக அமைந்தன.

திருகோணமலை வாழ்வு ஓராண்டே யெனினும், ஒருவிதத்தில் அது ஒரு திருப்பு முனையுமாயிற்று. "இலங்கையன்" என்று மட்டும் எண்ணிக்கொண்டிருந்தவனைத் "தமிழன்" என்றும் உணர்த்தியது அது. "அந்நியமான உண்மைகள்" அப்போது வெளியான கதைதான். யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடந்த காலமும் அது தான்.

***ஜீவாவுடனான உங்கள் தொடர்பு?***

"மல்லிகை"யில் என் ஆக்கங்கள் வராத இதழ்கள் வலு குறைவு என்னுமளவிற்கு எழுபதுகளில் சில ஆண்டுகள் இருந்தன. ஜீவா





படிப்பகம்

www.padippakam.com



எப்படியோ எழுத வைத்துவிடுவார், அப்படியான தூண்டுதல்களும் எழுதுபவனுக்கு அவசியமென்று தான் இப்போது தோன்றுகிறது. “எழுதப்பட்ட அத்தியாயங்கள்” என்ற என் கதைத் தொகுதியும் சில ஆண்டுகளுக்கு முன்னர் மல்லிகைப்பந்தல் வெளியீடாக வந்தது.

***பேராசிரியர் கைலாசபதியுடன்***

நெருக்கம் என்று சொல்ல முடியாது, குறுகிய காலத் தொடர்புதான். என் ஆக்கங்கள் பற்றி அவருக்கு நல்லபிப்பிராயம் இருந்ததை அறிவேன். பின்னர், சென்னை என்.சி.பி.எச் வெளியீடாக வந்த “முளைகள்” தொகுதிக்கு சிறப்பான அணிந்துரை ஒன்று தந்திருக்கிறார். அறிவில் மட்டுமன்றிப் பண்பிலும் பெரியவர்.

***எஸ்.பொ. வுடன்***

என் முதல் சிறுகதைத்தொகுதி வெளியீடு நடைபெற்ற போது எஸ். பொ. விமர்சன உரையாற்றினார். பின்னர் எனது குறுங்கதைத் தொகுதிக்கும் அவரே முன்னுரை எழுதினார். கொழும்பில் நான் கட்டடத் திணைக்களத்தில் இணைந்திருந்த வேளையில் என் அலுவலகத்திற்கண்மையிலிருந்தது அவர் பணியாற்றிய பாடவிதான அபிவிருத்தி நிலையம். தினசரி மதிய உணவு வேளைகளில் சந்தித்து இலக்கியம் பேசுவது வழமையாயிருந்தது. ஒரு அண்ணன் போல அன்பு கொண்டிருந்தவர்.

***ஏ.ஜே.கனகரட்னாவுடன் தொடர்பு***

அதுவும் எழுபதுகளில்தான் மல்லிகை மூலந்தான் ஏற்பட்டது. கொழும்பிலிருந்து விடுமுறைக்கு நான் ஊருக்குச்செல்கிற போதெல்லாம் அவரைச்சந்திப்பது தப்பாது. மாற்றலாகி மீண்டும் யாழ்ப்பாணம் வந்த பிறகு இத்தொடர்பு நெருக்கமானது. அற்புதமான இலக்கியங்களை அறிமுகப்படுத்தினார். என்னை ஆங்கிலத்தில் எழுதத் தூண்டியவரும் அவரே. இறுதிவரை ஒரு உந்து சக்தியாக இருந்தார். அரசியல், இலக்கியம், ஆங்கிலம், என்று எதில் தெளிவு தேவைப்பட்டாலும் அதை உடனடியாகத் தந்து விடக்கூடிய நடமாடும் கலைக்களஞ்சியமாகத் திகழ்ந்தார். இன்னமும் தினமும் உணரும் இழப்பு அவர் மறைவு.

***"சமர்" இதழ் தொடர்பில் உங்களது பங்களிப்பு என்ன?***

டானியல் அன்ரனியுடனான நெருங்கிய நட்புத் தவிர சமரின் உருவாக்கத்தில் என் பங்களிப்பு பெரிதாக ஒன்றுமில்லை. “மனிதர்களும் மனிதர்களும்” என்ற குறுநாவலும், பிந்தைய இதழ்களொன்றில் ஒரு சிறுகதையும் சமரில் வெளியாகின. இலக்கியகாரனாயிருப்பதற்கு முற்தேவை மனிதனாயிருப்பதுதான் என்பதை வாழ்ந்து காட்டியவர் அன்ரனி.

***முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் செயலூக்கம் மிக்க உறுப்பினராகவிருந்த நீங்கள், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை சார்ந்து நிறைய எழுதியுள்ளீர்கள். அது எவ்வாறு? முரண் என்று சொல்லலாமா?***

எவ்வாறு முரண் ஆகும்? மாறாக, முற்போக்கு இயக்கத்தில் இருந்ததனாலேயே தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை பற்றி அவ்வளவு எழுதமுடிந்தது என நினைக்கிறேன். சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் எதிராக, அது எந்த வடிவத்தில், விதத்தில் வந்தாலென்ன, எதிர்த்துக் குரல்கொடுப்பது தானே முற்போக்கு இலக்கியம்?

முற்று முழுதான ஒரு இடதுசாரியாக என்னை நீங்கள் கருதிக்கொண்டால் அது சரியில்லை. நானும் அப்படி ஒருபோதும் எண்ணியதுமில்லை. இடது அபிமானியாகத்தானிருந்தேன் என்பதே உண்மைக்குக் கூடுதல் நெருக்கம். ஒரு சித்தராக வாழ்ந்த அண்ணாமலை என்கிற என் பாட்டனாரின் பாதிப்பு, எங்கள் இலக்கியப் போக்குகளில் இடம் பெற்றிருந்த இடதுசாரித் திசையமைவு ஆகியவை இந்த அபிமானத்திற்குக் மூலங்களாயிருந்திருக்க வேண்டும். இடது பாதையைத் தேர்ந்தெடுத்தமைக்கு இனப் பிரச்சினைதான் முக்கிய காரணம்.

தொழில் நுட்பவியல் கல்லூரிக்காலப் பிரக்ஞை, திருகோணமலை அநுபவங்கள் இவற்றின் தொடர்ச்சியாய் வந்த - எதையாவது செய்தாக வேண்டும் என்ற இளமை அவதி. தோழர் வ.பொன்னம்பலத்துடன் சேர்ந்து,“செந்தமிழர் இயக்க”த்தை அமைத்தோம், தோழர்கள், சிவா சுப்பிரமணியம், பரராஜசிங்கம், ரங்கநாதன் போன்ற பலர். நான் அமைப்பின் கட்டுப்பாட்டுக் குழுவிலிருந்தேன். எப்படியோ, சிறிது காலத்திலேயே செந்தமிழர் இயக்கம் செயலற்றுப் போக நேரிட்டது. எனினும் இந்தச் சமயத்தில் மாத்தறை மாநாட்டைத் தொடர்ந்து கம்யூனிஸ்ற் கட்சி தன் கடந்த கால செயற்பாடுகளைச் சுயவிமர்சனம் செய்ததுடன், தமிழர்கள், பிரிந்து போகும் உரிமை உட்பட்ட சுய நிர்ணய உரிமை கொண்ட ஒரு தனித்தேசிய இனம் என்றும் அறிவித்திருந்தது. என் அபிலாஷைகளுக்கும் போக்குகளுக்கும் ஏற்ப, கட்சியில் சேர்வது இயல்பானதே ஆயிற்று.

***கம்யூனிஸ்ற் கட்சியின் உறுப்பினரா யிருந்த அநுபவங்கள் பற்றிச் சொல்லுங்கள்?***

எண்பதுகளில் ஏழோ எட்டோ ஆண்டுகள் இருந்தேன். கட்சியின் உறுப்பினராக மட்டுமன்றி, கம்யூனிஸ்ற் வாலிபர் கழகத்தின் யாழ். மாவட்டத் தலைவராகவும், அகில இலங்கை உப தலைவராகவுங் கூட இருந்து முனைப்பாகச் செயற்பட்ட காலம் அது. எண்பத்து மூன்றில் இன வன்முறையை அடுத்து ஜே.ஆர். வஞ்சகமாக கம்யூனிஸ்டுகள் மீது பழியைப்போட்டுக் கட்சியைத் தடை செய்த வேளையில் இருந்த பரபரப்பு, பின்னர் இந்திய ராணுவ ஆக்கிரமிப்பின் போது, எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில் கொழும்பு சென்று வாலிபர் கழக மாநாட்டில் கலந்து கொண்டமை இவற்றை மறக்க முடியாது. பின்னர், பாரம்பரிய தாயகம் பற்றிய கொள்கை முரணால் விலக நேர்ந்தது.

***தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகப் பாரம்பரிய இடதுசாரிகள் தவறிழைத்துள்ளார்கள் என்பதை***

www.padippakam.com

*ஏற்றுக்கொள்வீர்களா?*

இலங்கையிலும் சோஷலிஸத்தைக்கொண்டு வந்துவிட்டால் பிறகு தேசிய இனப்பிரச்சினையே இருக்காது என்ற நம்பிக்கையில் அந்த சோஷலிஸத்தை எவ்விதத்திலாவது கொண்டு வந்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் சில விட்டுக் கொடுப்புகளை அவர்கள் செய்தமை உண்மையே. அது தவறாகிப்போனது. அவர்கள் எடுத்த அந்த முயற்சி தொடர்ந்த தோல்வியாய் விட்டது துரதிர்ஷ்டந்தான்.

***ஈழத்தின் இனப்பிரச்சினை இவ்வாறு ஆனதற்குக் காரணம் எதுவென்று கருதுகிறீர்கள்?***

முதலாவது, பிராந்திய வல்லரசு முனைப்பு தமது பூகோளஅரசியல் நலன்களுக்காக, அப்பாவி ஈழத் தமிழ் இனத்தையே பலிக் கடாவாக்கியவர்களின் நய வஞ்சகம். இப்போது சமரசம், அமைதித்தீர்வு என்றெல்லாம் சொல்கிற அவர்கள், இருபதாண்டுகளுக்கு முன் எம் இளைஞர்களைக் கொண்டு போய் ஆயுதப்பயிற்சி

**ஆங்கிலப் படங்களைத் தமிழில் டப் செய்வதற்காக உரையாடல்களை மொழி பெயர்க்கும் பணியும் சில காலம் பார்த்திருக்கிறேன். எப்படியிருப்பினும், புத்தகங்களைத் தேடி அலைகிற அளவுக்கு படங்களைத்தேடி அலைவதில்லை என்பது உண்மை.**

கொடுத்தது இங்கத்திய நிலைமையைத் தமது கட்டுப் பாட்டில் வைத்திருப்பதற்கில்லாமல் வேறெதற்கு? கால் நூற்றாண்டு காலமாக பல்லாயிரக்கணக்கான உயிர்கள், எண்ணற்ற வாழ்வுகள், கோடிக்கணக்கான வளங்கள் எல்லாவற்றையும் நாசம் பண்ணியிராமல், அப்போதே இவற்றை ஏன் சொல்லவில்லை? இக் கபடத்தைப் புரிந்து கொள்ளாமல் எமக்குள்ளேயே மோதி அழிந்தோம், அழித்தோம். பொதுப்பிரச்சினைகள் கவனம் பெறாது போய்க்கொண்டிருந்தன.

இரண்டாவது, அரசியல் - இராணுவம் மக்கள் - இயக்கம் என்ற முறையிலிருந்திருக்க வேண்டிய இரண்டு விஷயங்களிலும் மாட்டுக்கு முன்னால் வண்டியைக் கட்டியமை.

***பொதுப்பிரச்சினைகள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறீர்கள்?***

எல்லாந்தான். இயற்கை உட்பாதங்களையே எடுத்துக்கொள்ளுங்கள், சுனாமி வந்த போது தமிழ் ஈழம், ஸ்ரீ லங்கா என்றெல்லாம் பார்க்கவில்லை. இப்போது கூடாங்குளம் அணுமின் நிலையம் இருக்கிறது, அங்கு ஏதும் அனர்த்தமென்றால், இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புத்தான் அதிகமாக இருக்குமென்று ஆய்வாளர் பலரும் கூறுகிறார்கள். கதிர் வீச்சு, தமிழர், சிங்களவர் என்றெல்லாம் பார்க்கப்போவதில்லை. குரொசவாவின் "கனவுகள்" குறும்படத் தொகுதியைப் பார்த்த பின் பல நாட்கள் இந்தக் கூடாங்குளமே கனவில் வந்து மிரட்டியது!

***இனப்பிரச்சினையின் மூலம் எதுவென்று கருதுகிறீர்கள்?***

ஆரிய மாயை! ஆம், தமிழர்களும் சிங்களவர்களும் ஒரே இன மூலத்தைக்கொண்டவர்கள் என்பது மறைக்கப்பட்டு அல்லது திரிக்கப்பட்டு, அவர்கள் ஆரியர்கள் என உருவாக்கப்பட்ட கருத்து. பின்னர் வெற்று வேட்டுத்தனமான பாராளுமன்ற ஜனநாயக அதிகாரப் போட்டியின் விளைவாய் ஆப்பிறுக்கப் பட்ட பிரிப்பு, அது.

***அவ்வாறில்லை என்று கருதுகிறீர்களா?***

உண்மையில் சற்றே வேறுபடும் இருவேறு மொழிகளைப்பேசும் ஓரினத்தவர்களே இவர்கள் என்று பலரும் சொல்லியிருக்கிறார்கள். இருவேறு இனம் என்று கொண்டாலுங்கூட, யார் தமிழர்? யார் சிங்களவர்? தமிழர் என்போர் யாவரும் தமிழருமல்லர், சிங்களவர் என்போர் யாவரும் சிங்களவர்களுமல்லர். இந்தச் சிறிய தீவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பிணைந்து வாழ்ந்த வரலாறு எம் பின்னால் உள்ளது. இந்தப் போரே கூட, ஒரு கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான போட்டி போலத்தான் ஆனால் உயிர் கொல்லிப் போட்டியாயிருந்தது, அது!

***இதே தொனிப்பொருளைக்கொண்ட உங்கள் ஆங்கிலக்கவிதை ஒன்று தென்னிலங்கையில் பரவலாகக் கவனம் பெற்றது?***

ஆம். The Bigger Match என்கிற, போரையும் கிரிக்கட்டையும் ஒப்பிடுகிற கவிதை. சரி, இப்படியெல்லாம் சொல்வதால், ஒரு பிரிவு, இன்னொன்றின் மேல் ஆதிக்கம் செலுத்துவதை எந்த விதத்திலாவது ஏற்றுக்கொள்ளலாம் என்பதல்ல.

***ஆங்கிலத்தில் ஏன் எழுதத் தொடங்கினீர்கள்?***

அம் மொழியில் பெரும் ஆற்றல் பெற்றவன் என்றெண்ணியோ, என் எழுத்தால் ஆங்கில இலக்கியம் வளம் பெற்று விடுமென்றோ ஆங்கிலத்தில் நான் எழுதத் தொடங்கவில்லை. இங்கு கால் நூற்றாண்டு காலம் தொடர்ந்த எரியும் நிலைமைகளின் போது, தமது எப்போதையோ, ஏதேதோ தொடர்புகளை மட்டும் வைத்துக்கொண்டு, இதுதான் இலங்கையின் இனப் பிரச்சினை என்று, உண்மைக்குச் சற்றும் கிட்டவராத வகையில் எழுதப் புறப்பட்டவர்களின்- அனுபவத்தில் துளியேனும் சுவறாமல் நனையாமல் கதை புனைய வெளிக்கிட்டவர்களின் - ஆக்கங்களைப் பார்த்த





படிப்பகம்

www.padippakam.com

போது, உண்மையான களச்சூட்டை, இருத்தலுக்கான அந்தப் போராட்டத்தின் மெய்ம்மையை எள்ளளவே யெனினும் வெளியுலகிற்கு, முக்கியமாகத் தென்னிலங் கைக்கு அறியத்தர வேண்டுமென்றுதான் முனைந்தேன்.

***பேராசிரியர் குணதிலக, ரெஜி சிறிவர்தன, காள் முல்லர், வின் ஒக்கஸ், போன்றவர்களினது சிறப்பான கவனத்தை ஈர்த்தமை, நீங்கள் அந்த நோக்கில் வெற்றி பெற்றதைக் குறிக்கிறது. In Their Own Worlds தொகு திக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை, ஆங்கில ஆக்க இலக்கியத்திற்காக அப் பரிசைப் பெற்ற முதல் தமி ழர் என்ற அடையாளத்தையும் தந்துள்ளது. பரிசுச் சேதி அறிந்தபோது உங்களது மன நிலை எப்படியிருந்தது?***



ருஷ்ய இலக்கியங்களை அவற்றின் மூலத்திலேயே படித்துப் பார்க்கலாமென்ற ஆர்வம்தான் காரணம். அது ஓரளவுதான் நிறைவேறிற்று. முன்னர் குறிப்பிட்ட சோவியத் நட்புறவுக் கழகத்தில் இரண்டாண்டுகள் பயின்றேன்.

நான் அதை எண்ணியிருக்கவில்லை, பரிசு நூற் தேர்வுக்காகப் பிரதிகளை அனுப்பியிருக்கவுமில்லை. வெளியீட்டாளர்களான கொழும்பு கொடகே நிறு வனத்தினர் தங்கள் வெளியீடுகள் எல்லா வற்றையும் அனுப்பியபோது அதுவும் போய்ச் சேர்ந்திருக்கிறது. பரிசுச் சேதி மகிழ்ச்சியானதுதான். எனினும் அன்றி ருந்த நிலைமைகளின் கீழ் அப்பரிசை ஒப்புக்கொள்ள லாமா என்ற தர்மசங்கடமும் கூட எழவே செய்தது. பிறகு, உரிய நண்பர்களின் ஆலோசனையோடு, அதனை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தேன். யாழ்-கொழும்பு போக்குவரத்து மிகச்சிரமமான அவ்வேளை யில், கலாசாரத் திணைக்களத்தினர் இரு வழி விமானப் பயணச்சீட்டை அனுப்பி அழைத்தார்களென்பதையும், விழாவிலும் விசேட கௌரவம் தந்து நடத்தினார்க ளென்பதையும் கூடக் குறிப்பிடத்தான் வேண்டும்.

***மொழி பெயர்ப்புகளிலும் ஈடுபட்டு வருகிறீர்கள்?***

வெவ்வேறு துறைசார் கட்டுரைகளைத் தேவை கருதிச்செய்ய நேர்ந்திருக்கிறது. ஆனால், இலக்கியம் என்று வரும் போது, குறிப்பிட்ட ஆக்கத்தை மொழி பெயர்த்துப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை, உந்து தல் ஏற்பட்டால் மட்டுமே செய்கிறேன்.

***இலக்கியத்திற்கும் மொழிகளுக்குமான தொடர்பு எதுவரை?***

மொழிகள் பலவாயினும் இலக்கியம் என்பது ஒன்றுதான். சமயங்கள் பல, கடவுள் ஒன்று என்று தத்துவவாதிகள் சொல்வதைப்போலத்தான் இதுவும். உண்மையில் எந்த மொழியும் மட்டுப்படுத்தப்பட் டது, பலவீனமானது. ஒரு வினாடி உணர்வை எழுத எத்தனை பக்கங்கள்! அப்படியும் முழுமை கிட்டுவ தில்லை.

***ருஷ்ய மொழியை ஏன் படிக்கத் தொடங்கினீர்கள்?***

ருஷ்ய இலக்கியங்களை அவற்றின் மூலத்திலேயே படித்துப் பார்க்கலாமென்ற ஆர்வம்தான் காரணம். அது ஓரளவுதான் நிறைவேறிற்று. முன்னர் குறிப்பிட்ட சோவியத் நட்புறவுக் கழகத்தில் இரண்டாண்டுகள் பயின்றேன். பிறகு குறுக்கிட்ட இன வன்முறைப் பிரச் சினைகளால் யாழ்ப்பாணம் மாற்றலாகிச்சென்றதுடன், அப்படிப்பை மேலே தொடர முடியாது போனது.

***உங்களது ருஷ்யப்பயணம் எவ்வாறு அமைந்தது?***

அக் காலத்தில் புலமைப்பரிசில் பெற்று ருஷ்யா வுக்குச் செல்கிற மாணவர்களுக்காக தொடக்க நிலை மொழி வகுப்புகளை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டி வந்தது. அதே வேளையில், இலங்கை-சோவி யத் நட்புறவுச் சங்கத்தின் வெள்ளி விழாவும் வந்தது. அதையொட்டி, தமிழிலும் சிங்களத்திலும் கட்டுரைப் போட்டிகளை நடத்தினார்கள், ஒவ்வொன்றுக்கும் முதல் பரிசு சோவியத் சுற்றுலா. தமிழில் எனக்கு அது கிடைத்ததால், அச் சந்தர்ப்பத்தையும் மொழி ஆர்வத் தையும் இணைத்து, மாஸ்கோ ருஷ்ய மொழி நிலையத் திலும், லுமும்பா பல்கலைக்கழகத்திலும் இடம் பெற்ற ஆசிய, ஆப்பிரிக்க லத்தீனமெரிக்க நாடுகளைச்சேர்ந்த ருஷ்ய மொழி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியில் பங்கு பற்றும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்கள். அந்த



படிப்பகம்

www.padippakam.com



அனுபவங்கள், "ஒளி சிறந்த நாட்டிலே" என்ற பயண நூலாகவும், பின்னர், "உறவுகள் ஆயிரம்" என்ற குறு நாவலாயும் பதிவு பெற்றன.

***கென்யப் பயணம்?***

அது கன காலத்தின் பின், 2003ல். அதுவும் ஒரு போட்டியில் கிடைத்த வாய்ப்புத்தான். மத்திய கிழக்கு யுத்த நெருக்கடி, துரத்திக்கொண்டிருந்த ஸார்ஸ், இவற்றின் மத்தியில் போய் வரமுடிந்தது. மூன்றே பேருக்காக ஒரு முழு SAFARI. நல்ல அனுபவங்கள். அவற்றைக் "காட்டு வெளியிடை" என்ற தொடராக வெள்ளி நாதத்தில் எழுதினேன். அது சென்னை, இருவாட்சி வெளியீடாகப் பின்னர் நூலுருவில் வந்தது. ஒரு மணி நேர documentary யும் கூட உருவாக்க முடிந்தது.

***பிற மொழிப்படைப்புகள் மீதான ஈடுபாடு எவ்விதம் உருவானது?***

எல்லாவற்றையும் நான் இலக்கியமாகவே நாடினேன், பிறமொழிப் படைப்புக்கள் என்றல்ல. தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலுமே அவற்றைப் படித்தேன். என் வாசிப்புத்தேடலில் யாவும் தாமாகவே சிக்கின. க.நா.சு. மொழி பெயர்த்த "நல்ல நிலம்", ஜானகிராமன் மொழி பெயர்த்த "அன்னை" இரண்டும் வீட்டிலிருந்ததால் பள்ளிக்காலத்திலேயே அவற்றைப் படிக்க முடிந்திருக்கிறது. பின்னர் தலை சிறந்த ருஷ்ய மற்றும் சோவியத் இலக்கியங்கள் தமிழில் நிறையவே கிட்டின. தொடர்ந்து, ஆங்கிலம் ஊடான வாசிப்பில் ஒரு முழு உலகமே திறந்து கொண்டது.

***உங்களை மிகவும் பாதித்த பிறமொழிப்படைப்புக்கள் பற்றிக்கூறுங்கள்?***

செக்கோவ், அம்புறோஸ் பியஸ், ஹெமிங்வே சிறுகதைகள், ஷொலக்கோவ் நாவல்கள், ஃப்றொஸ்ட்டின் கவிதைகள், அனேகமான ஆபிரிக்க இலக்கியங்கள், குறிப்பாக தற்போது அடிச்சியின் ஆக்கங்கள் வரை. இப்போது இவற்றை உடனடியாகக் குறிப்பிட்டாலும், இன்னும் சொல்ல உண்டு.

***உங்கள் "இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்" நூலுக்கான தரவுகளை எவ்வாறு சேகரித்தீர்கள்?***

அது, ஆய்வல்ல. நினைவுகளும் உணர்வுகளுமான ஒரு பதிவு. "சஞ்சீவி" இதழில் ஐந்தாறு வாரங்களில் எழுதி விடலாமென்று தொடங்கிய கட்டுரை, தன் பாட்டில் இருபத்தெட்டு வாரங்கள் தொடர்ந்தது. பிறகு பௌசர் அதனை "மூன்றாவது மனிதன்" வெளியீடாகக் கொண்டு வந்தார். அந் நூலில் நான் குறிப்பிட்ட புத்தகங்களில் முக்கால்வாசி என் சேகரத்திலேயே இருந்தவைதான். ஆனால், கட்டுரைத் தொடரை எழுதிய வேளையில் கால்வாசி கூட இருக்கவில்லை.

***இடப்பெயர்வோடு ஏராளமான புத்தகங்களை இழந்துவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்?***

சரியாகச் சொன்னால் இடப்பெயர்வைத் தொடர்ந்து வந்த நெருக்கடியில். என்றாலும் ஒவ்வொருவரும் தொலைத்தவற்றுடன் - கடந்த கால் நூற்றாண்டாக எம் மக்கள் இழந்தவற்றுடன் - பார்க்கையில் அது ஒரு பொருட்டா, என்ன?

***தீவிர சினமா மீதான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?***

தீவிரம் என்று பெரிதாகச் சொல்ல முடியுமோ தெரியவில்லை. சினமா என்றதுமே மனதில் ஓடும் படங்கள் உள்ளன. மூன்றோ, நாலோ வயதில் பார்த்த ஔவையார், பராசக்தி போன்றவற்றில் தொடங்கி, பள்ளிப்பருவத்தில் ஜெமினி, உயர் நிலைப் பருவத்தில் சிவாஜி என்று ஆகிற்று. என்னைப் பொறுத்தளவில் சிவாஜி இன்னும் என் இளமைக்கால nostalgia வை மீட்டுபவராக உள்ளார் என்பதை ஒப்புக்கொள்வ தில் எந்தத் தயக்கமுமில்லை. ஆங்கிலப்பட ஆர்வம், "by night" தொடர்களோடு தொடங்கியிருக்க வேண் டும். பிறகு, உலகப் போர்க்காலப் படங்கள் ஆர்வமூட்டின. Guns of Navaroneஇல் பரிச்சயங் கொண்ட

> **இந்தியத் தலையீடு. ஆக்கிரமிப்பு பற்றிக் குறிப்பிடப்பட்டவை கவனம் பெற்ற வேளையில், தனி நாடு முகம் கொடுக்கும் சவால்கள். சாத்தியம், இவை பற்றிக் கேள்விகளை முன் வைத்தவை கவனிக்கப்படவேயில்லை. காலம் காட்டியுள்ளது.**

அந்தனிக்யின் பின்னர் Zorba the Greek வரை ஈர்த்துக்கொண் டிருக்கிறார். ஒரு விதத்தில், கதை, கலை இவற்றுக்கு மேலாய் நடிகர்கள் ஈர்த்த காலம் அது என நினைக் கிறேன். றொக் ஹட்சன், க்ரெகரி பெக், ஓமர் ஷரிஃப் என்று.

மெஜஸ்டிக்கில் ஓரிரவு இரண்டாம் காட்சி Dr.Zhivago பார்த்தது வித்தியாசமான அனுபவம், எக்கச்சக்கமாய் இயங்கிய ஏஸி ஒரு விதத்தில் ருஷ்யக் குளிரின் simulation ஆகி ஒன்றிக்கச் செய்தது. பிறகு, ரே, குரொசவா. தமிழில் ஜெயகாந்தன், பாலு மகேந்திரா வில் தொட்டு சமீபத்தில் முதல் குரல், குப்பி, வெயில், இவைபோல...

The Pianist, Turtles can Fly, Scent of the Green Papaya, Hotel Rwanda....

ஆங்கிலப் படங்களைத் தமிழில் டப் செய்வதற்காக உரையாடல்களை மொழி பெயர்க்கும் பணியும் சில காலம் பார்த்திருக்கிறேன். எப்படியிருப்பினும், புத்தகங்களைத் தேடி அலைகிற அளவுக்கு படங்



படிப்பகம்

www.padippakam.com

களைத்தேடி அலைவதில்லை என்பது உண்மை. அத்தோடு ஏதோ சமயக்கடமை போல் குறிப்பிட்ட நாட்களில் படக்காட்சிகளை பார்ப்பதும் ஒத்துக் கொள்வதில்லை. பிரதி கிடைத்தால் வீட்டில் போட்டு, ஆறுதலாக சாய் மனைக்கதிரையில் சாய்ந்து அனுப விப்பதிலேயே லயிக்க முடிகிறது.

'Script Net' ***அமைப்பின் திரைக்கதைப்பயிற்சி முகாமில் பங்கேற்ற அனுபவம் எப்படி?***

முழுப்பயிற்சி நெறியிலும் பங்கேற்க முடிந்தமை நல்ல அனுபவம். பல விஷயங்களை அறிந்து கொள்ள முடிந்தது,சில கலைஞர்களை இனங்காண முடிந்தது, சில நல்ல படங்களைப்பார்க்க முடிந்தது. என்றாலும் சில இடை வெளிகளிருந்தன. போருக்கிடையிலான எம் வாழ்வு, இருத்தல் பற்றிய சவால்களை எதிர்கொள் ளல், இவை பற்றிப்புரிந்து கொள்வதில் பயிற்றுனர்கள் எல்லைப்பாடு கொண்டவர்களாயிருந்தார்கள் என்ப தைக் குறைபாடாகச் சொல்ல முடியாது.

***புலம் பெயரும் எண்ணம் ஏன் ஏற்படவில்லை?***

அதற்கான ஆசை, தேவை, நிர்ப்பந்தம் எதுவு மிருக்கவில்லை. வாழ்க்கைக்கும் கடமைக்கும் மேலாய் என்ன எழுத்து? உணர்வுகளும் உணர்தல்களும்தான் முக்கி யம், வெளித்தோற்றங்கள் மேலோட்டந்தான். தவிர, தலைக்கு மேலே குண்டும் ஷெல்லும் தாண்டிச் சென்ற போது ஏற்பட்ட இருத்தலும் இன்மையும் பற்றிய அர்த்தம், அபத்தம், இவற்றை விட வெளிநாட்டு அனுபவம் வேறென்ன தரிசனத்தைத் தந்து விட்டிருக்க முடியும்? ஆழமறிய ஊரே போதும், அகலமறியத்தான் உலகு.

***நாவல்கள் எழுதுவதை "ஒட்டுமா"வுடன் நிறுத்தி விட்டீர்களே, அதில் ஏன் நாட்டமில்லை?***

இந்த இடத்தில் - அதை எவ்வளவு ஒப்புக்கொள் ளலாமென்று தெரியாவிட்டாலும்- சினுவ அச்செபே ஒரு கட்டத்தில் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. "நாவல்களின் காலம் முடிந்து விட்டது, இனிச் சொல்ல வேண்டியவற்றைச் சுருக்கமாகக் கதையிலோ கட்டுரை யிலோ சொல்லவேண்டிய காலம்", என்று.

ஆனால், உங்கள் கேள்விக்கு, என் இயல்புதான் காரணமாயிருக்கலாம் என்பதுதான் பதிலென நினைக் கிறேன். மேலும், என் எல்லாக்கதைகளும் ஒரே நாவ லின் வெவ்வேறு பகுதிகளே என்பதும் காரணம். தற் போதுதான் ஆங்கிலத்தில் ஒரு நாவலை முடித்திருக் கிறேன் என்பதையும் தகவலுக்காகச் சொல்லலாம்.

***கவிதை?***

இந்த GENRE பற்றிய பிரிவுகள், எல்லைகள் எல் லாம் இலக்கியப் பாடம் நடத்தும் விரிவுரையாளர் களுக்குத்தான் தோது என எண்ணுகிறேன். மற்றும்படி, இலக்கியம் என்றால் இலக்கியம்தான், வகைப்பாடு எல் லாம் வசதி கருதித்தான்.நீங்கள் சொன்ன பெயரில் ஆரம்ப நாட்களிலும் பின்னர் அவ்வப்போதும் சில வற்றை எழுதியிருக்கிறேன். தொகுதியெல்லாம் கூடக் கிடையாது. ஆனால், ஆங்கிலத்தில் ஒரு "வசன கவி தை"த் தொகுதி வெளியானதை அறிவீர்கள்.

***எழுதுவதன் நோக்கம் என்னவாக இருந்தது?***

எப்போதுமே ஒரே நோக்கமாயிருக்கவில்லை. காலத்திற்குக் காலம் மாறுபட்டது. முதலில் தொடங் கியபோது எழுதி அச்சில் பார்த்துவிட முடியுமா என் கிற ஆசை. பிறகு, கலை, சமூகம், கலையும் சமூகமும்.



**சாதியிலும் பொருளாதார நிலையே வலியது என இன்னமும் நான் நம்புகிறேன். இங்குள்ள இன்றைய நிலை அதை நிரூபிப்பதாகத்தான் தெரிகிறது.**

இப்போது சில விஷயங்களைப் பதிவு செய்து விட வேண்டுமென்பது ஓரளவு என்னையே பார்க்கிற முயற்சி. மீதி. காதல் கதைகள், பாலியல்கதைகள், சமூகப்பிரச்சினைக் கதைகள், தேசிய ஒருமைப்பாட்டுக் கதைகள், தேசிய இனப்பிரச்சினைக் கதைகள், போர்க் காலக்கதைகள் என்று- இந்த வகைகளிலெல்லாம் எழுத வேண்டுமென்றில்லாமல் இயல்பாகவே - வந்த இந்த வரிசையில். இனி, ஆன்மீகக் கதைகள், தத்துவக் கதை கள் என்றெல்லாம் வந்தாலும் வியப்பதற்கொன்று



படிப்பகம்

www.padippakam.com

மில்லை. அந்தந்த நேரத்தில் அது உண்மை! எப்படியோ எல்லாமே வாழ்வின் முகங்களும் கட்டங்களும்தாம். காலம், பருவம், முதிர்ச்சி, சூழல், நோக்கு, இவற்றால் தீர்மானிக்கப்படுபவைதாம் எழுத்துகளும். ஏன், எல்லாமும்.

***இலங்கைத் தமிழ்ச் சூழலில் பரிசுகள் மற்றும் விருதுகள் தொடர்பாக எழும் விமர்சனங்களைப்பற்றிய உங்கள் கருத்தென்ன?***

இவற்றைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இங்கு இப்போது அர்த்தம் நீர்த்துப் போய்விட்ட பல சொற்களைப் போலவே இந்தப் பரிசு, விருது என்ற சொற்களும் ஆகிவிட்டிருக்கின்றன. அடுத்தது, ஒரு தேர்வு என்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்பின் தரத்தைக் காட்டுகிறதோ இல்லையோ, தேர்வுக் குழுவின் தரத்தைக் காட்டிவிடுகிறது. தவிர, தரம் என்பதற்கப்பால், தேர்வைத் தீர்மானிக்கும் வேறு பல காரணிகளுமுள்ளன என்றும் தெரிகிறது.

***உங்கள் "கிருஷ்ணன் தூது", மற்றும் "அசோக வனம் அல்லது வேலிகளின் கதை" ஆகிய படைப்புக்கள் இனப்பிரச்சினை மற்றும் போர்ச்சூழல் பற்றிய முக்கியமான ஆக்கங்கள் எனச் சொல்லப்படுகின்றன. அக்கதைகள் எழுந்த பின் புலம் பற்றிக்கூறுங்கள்?***

என் சொந்த அனுபவங்கள் பற்றி மட்டுமே என்னால் எழுத முடிவது என் பலமா, பலவீனமா தெரியவில்லை. நீங்கள் கூறிய இரண்டு கதைகளுங்கூட அப்படித்தான், முற்று முழுதாக என்று கூற முடியாவிட்டாலும் தொண்ணூற்றைந்து விழுக்காட்டிற்கு மேல் என வைத்துக்கொள்ளலாம். முதலாவது, கொழும்பில் நான் கடமையாற்றிய ஒருஅலுவலகத்தில் இடம் பெற்றது. நலன்புரிச் சங்கக் கடிதத்தலைப்பில் தமிழையும் சேர்த்துக்கொள்வதற்காக முயன்று தோற்ற தமிழ் அலுவலர்கள், கடைசியில் வேறு வழியின்றி அச் சங்கத்திலிருந்தே விலகுகிற இக் கதை, இனப் பிரச்சினையின் குறியீடாகவும் microcosm ஆகவும் அமைந்தது. மற்றது, "அமைதிப்படை" காலத்தில் எங்களூரில் இடம்பெற்ற சம்பவம். ஊரின் பெயர் சுதுமலை என்பதைக் குறிப்பிடுவது கனதியைப் புரிய வைக்கும். இரட்சிக்க வந்தோரின் வஞ்சகப் பொறியொன்றிலிருந்து தப்பி வந்த ஒரு மனிதனின் கதை அது. இப்போது நான் எழுதி முடித்ததாக மேலே கூறிய ஆங்கில நாவல் இதன் விரிவுதான்.

***"ஒரு முக்கியமான படைப்பு" என விமர்சகர்களால் குறிப்பிடப்படும் "எழுதப்பட்ட அத்தியாயங்கள்" குறு நாவலில், இனப்பிரச்சினை வரலாற்றில் எழுதப்பட்ட வற்றைப் பற்றி மட்டுமன்றி, எழுதப்பட வேண்டியவை பற்றியுங் கூடக் காத்திரமான எதிர்வு கூறல்களை வைத்திருந்தீர்களே, அவை கவனிக்கப்பட்டனவா என இப்போது கேட்பது பொருந்தும் என நினைக்கிறேன்.***

சில கவனிக்கப்பட்டன, சில கவனிக்கப்படவில்லை. இந்தியத் தலையீடு, ஆக்கிரமிப்பு பற்றிக் குறிப்பிடப்பட்டவை கவனம் பெற்ற வேளையில், தனிநாடு முகம் கொடுக்கும் சவால்கள், சாத்தியம், இவை பற்றிக் கேள்விகளை முன் வைத்தவை கவனிக்கப்படவேயில்லை. காலம் காட்டியுள்ளது.

***அண்மைய நிகழ்வுகள் உங்களளவில் தாக்கத்தை ஏற்படுத்தினவா?***

இல்லாமல்? பாரதி பாட்டொன்றுதான் ஒரு மாதமாய் ஓயாமல் காதில் ஒலித்தபடியிருந்தது. எப்படியோ, ஏற்கனவே பயாஃப்ரா சரித்திரம், பாரி கதை, வாலி வதம் எல்லாம் படித்துத்தானே இருக்கிறோம், இல்லையா?

***எது?***

தண்ணீர் விட்டோ?... இந்த இடத்தில் மீண்டும் அச்செபேயைத்தான் குறிப்பிட வேண்டியுள்ளது. பயாஃப்ரா நிலைப்பாட்டுடன் உடன்பட்டு நின்ற அவர், அது நசுக்கப்பட்ட சோகத்தைத் தொடர்ந்து, "மீண்டும் நைஜீரியனாய் இருப்பதில் திருப்தியே" என்று சொல்ல வேண்டி வந்தது அதிலும் பெரிய சோகம்.

***இது பின்னடைவு என்று கருதுகிறீர்களா?***

வரலாற்றில் பின்னடைவு என்ற சொல்லே கிடையாது எல்லா நிகழ்வுகளுமே முன்போதல்கள் தாம். என்னதானிருந்தாலும் தயங்கித் திகைக்க எதுவுமில்லை. மேலே நடக்க வேண்டியதுதான். தொடர்வதுதானே வாழ்க்கை?

***என்ன தீர்வாயிருக்க முடியும் ?***

வலு தெளிவான ஒரே தீர்வுதான்: எல்லா மக்களையும் -எம் மக்களையும் - சமமாய், சந்தோசமாய் வாழவிடுவது! ஓரிடத்தை அடையப் பல வழிகளையும் பல சாத்தியப்பாடுகளையும் கொண்டது உலகம். போய்ச் சேருமிடம் ஒன்றேயாயிருக்கும்வரை, பாதைகள் முரணானவையாக முடியாது. இதில், ஈடாட்டம் தடுமாற்றம் என்றெல்லாம் சொல்வதற்கில்லை. பாருங்கள், தனி ஈழம், ஈழமுந் தமிழகமும் சேர்ந்த பரந்த தமிழ் நாடு, தமிழரும் சிங்களவரும் மனமொன்றி வாழும் இலங்கை, இந்தியப் பேரரசில் இரு புதிய மாநிலங்கள், எந்தத் தனித் தேசமுமற்ற - எல்லையில்லா - ஒரே உலகு. இவை ஒவ்வொன்றிலுமே ஒவ்வொரு அழகுண்டு, ஒவ்வொரு பலமுண்டு. ஆனால் எது என்பது சாத்தியங்களைப் பொறுத்தது. எப்படித்தானிருப்பினும் எதற்கும், எல்லாவற்றுக்கும் அடிப்படையானது ஒன்றேதான், எல்லா மனிதரும் சமமாய், சந்தோசமாய் வாழ்வது!

***யாழ்ப்பாண சமூகம் இப்போது எப்படியிருக்கிறது?***

பெருங்காயம் இருந்த பாண்டமாய் இருக்கிறது. மாறும் விழுமியங்கள், சமூகத்துடனோ அறிவுடனோ தொடர்பில்லாத கல்வி, பணவீக்கம் போல பட்டம் பதவி வீக்கங்கள், வெற்றுச்சடங்குகளாயும் வைதீக மீட்பாயும் ஒலிபெருக்கி ஓலங்களாயும் மாறிவிட்ட சமயம்... பல வேளைகளில் எலியட்டின் The Hollow



படிப்பகம்

www.padippakam.com



Men கவிதையை நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.

***சாதியம்?***

சாதியிலும் பொருளாதார நிலையே வலியது என இன்னமும் நான் நம்புகிறேன். இங்குள்ள இன்றைய நிலை அதை நிரூபிப்பதாகத்தான் தெரிகிறது.

***கல்வி பற்றிக் குறிப்பிட்டீர்கள். இருபதாண்டுகளுக்கும் மேலாகத் தொழில் நுட்பக் கல்வி விரிவுரையாளராயிருக்கும் பின்னணியில் என்ன கூற விரும்புகிறீர்கள்?***

தொழிற் கல்விக்கும் தொழில் நுட்பக்கல்விக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டிய ஒரு சமூகத்தில் நிலைமை எதிர்மாறாய்த்தானுள்ளது. தொழிலும் அறிவியலும் சுயமாய் வளராத ஒரு நாட்டில் தாய் மொழிக் கல்வி என்று பேசுவதே கூட வெறும் மொழி பெயர்ப்பு வித்தாரந்தான்.

***ஆங்கில இலக்கியமுங் கூடக் கற்பித்திருக்கிறீர்கள்? அது எவ்வாறு?***

நிலைமைகள் சீரற்று, கட்டுமான வேலைகள் போன்றவையெல்லாம் முடங்கியிருந்த காலத்தில் வேறெதுவும் செய்ய இயலாமல் வெளிவாரி, தொலைக் கல்வி போன்றவை மூலம் என் ஆர்வத்தை ஆங்கிலத்தில் நாலு எழுத்துக்களாகவும் ஆக்க முடிந்திருந்தது. யாழ் ATI யில் HND நெறிகளுக்கு ஆறு ஆண்டுகள் வருகை விரிவுரையாளனாக இருந்தேன். படிப்பித்தேனா தெரியாது, மாணவர்களுடன் இலக்கியம் பேசினேன், அவர்களைப் பாடத் திட்டத்திற்கு வெளியே கொண்டு வரவும் பார்த்தேன். கொடுத்ததாலும் நிறையப் பெற முடிந்தது.

***உங்கள் அடையாளமென்று எதைக் கருதுகிறீர்கள்?***

பதில் சொல்ல முடியாத கேள்வி கேட்டிருக்கிறீர்கள். என் அடையாளம் என்பது வலு ருசிகரமான விஷயம், என்னையும் என்னைத் தெரிந்தவர்களையும் எப்போதும் குழப்பிக்கொண்டிருப்பது. புதியவர்கள் யாராவது "நீங்கள் யார்" என்று கேட்கும் போது எதைச் சொல்வதென்று தெரியாமலிருக்கிறது. "நான் யாரென்று எனக்கே தெரியவில்லை," என்று ஓரிரு தடவை சொன்ன போது இருவர் அப் பதிலை ஒரு தத்துவ மொழிவாய் எடுத்துக்கொண்டு பாராட்டாகப் புன்னகைத்த போதும், இன்னொருவர் கிண்டலாய் நினைத்து முறைத்த போதும் ஒரே விதமான ஏமாற்ற உணர்வே ஏற்பட்டது என்பதுதான் உண்மை.

***நீங்கள் கடந்து வந்த பாதை பற்றி?***

திருப்தியென்றுதான் சொல்ல வேண்டும். இப்படியான ஒரு காலகட்டத்தில், இந்த இவ்வளவு நன்மை தீமைகளோடும், இத்தனைக்கும் சாட்சியாய், வாழ முயன்றிருப்பதும், முடிந்திருப்பதும்! எல்லாக் காலங்களிலும் எல்லா நெருக்கடிகளிலும் என் மண்ணில், என் சனங்களோடு நின்றேன். எனக்குச் சரியென்று பட்டதை, என்னாலானதை - எழுத்தில் மட்டுமன்றி - செய்தேன். சொந்த மண்ணில் இன்னும் நின்று பணியாற்றும் சில நூறு இளம் தொழில் நுட்பவியலாளர்கள், சுகாதார அலுவலர்களின் உருவாக்கத்தில் கணிசமாகப் பங்களித்தேன்... நிறைவுதான்.

***இன்றைய நிலையில் இலக்கியத்தின் பணி என்னவாக இருக்குமென்று நினைக்கிறீர்கள்?***

இலக்கியம் சமூக மாற்றத்திற்கான உந்து சக்தியாய் அல்லது குறைந்த பட்சம் ஒரு காரணியாய் ஆவது இருக்க முடியுமா என்ற கேள்வி எழுவது இயல்புதான். ஆனால், இறந்த காலத்திற்கும் நிகழ் காலத்திற்கும் ஊடாக எதிர்காலத்தைப் பார்ப்பதுதான் இலக்கியம். எனவே நம்பிக்கையின்மைக்கு இலக்கியத்தில் இடமேயில்லை. "அரசியல் ரீதியான தமது கையாலாகாத்தனத்தைப் பதிவு செய்ய மட்டுந்தான் இன்றைய எழுத்தாளர்களால் முடிகிறது," என்று லே கிளேசியோ கடந்த ஆண்டு கூறியது ஒப்புக் கொள்ளக் கடினமானது. "கவிதைகள் ஒரு நாட்டை உருவாக்கி விட முடியாதுதான். ஆனால் மக்களின் மனதில் தாயகம் பற்றிய ஒரு விம்பத்தை அவற்றால் உருவாக்கிவிட முடியும்" என்று மஹ்மூட் தர்விஷ் சொன்னதும் பத்தாண்டுகளுக்குள்தான். இலக்கியத்தின் பணி என்றைக்குமே எதிர்காலத்தின் மீது நம்பிக்கையூட்டுவதாகத்தான் இருக்க முடியும்.

***புலம்பெயர் இலக்கியம் குறித்து?***

சமகாலத் தமிழ் இலக்கியத்தின் செழுமையை அது பல மடங்கு அதிகரித்தது என்பதில் ஐயத்திற்கிடமேயில்லை. ஆனால் அது எவ்வளவு காலம் தமிழ் இலக்கியமாயிருக்கும் என்பதுதான் ஐயமாயுள்ளது.

*** *** ***

**சந்திப்பு- ராகவன்**

**சாந்தனின் நூல்கள்**

* பார்வை -(சிறுகதைத் தொகுப்பு)1970

* கடுகு (குறுங் கதைகள்)1975

* ஒரே ஒரு ஊரிலே(சிறுகதைத் தொகுப்பு) சாகித்திய மண்டல பரிசு பெற்றது 1975

* ஒட்டுமா (நாவல்) -வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம் 1978

* முளைகள் (சிறுகதைத் தொகுப்பு) சென்னை என்.சி.பி. எச். 1982

* கிருஷ்ணன் தூது (சிறுகதை தொகுப்பு) பாளையங் கோட்டை, இலக்கியத்தேடல் 1982

* ஆரைகள் - (நெடுங் கதைகள்) ரஜனி பிரசுரம், யாழ்ப்பாணம் 1985



படிப்பகம்

www.padippakam.com

* ஒளி சிறந்த நாட்டிலே (சோவியத் பயண நூல்) ஈழமுரசு வெளியீட்டகம், யாழ்ப்பாணம், 1975
* இன்னொரு வெண்ணிரவு (சிறுகதைத் தொகுப்பு) வெண்புறா வெளியீடு யாழ்ப்பாணம் 1988
* காலங்கள் (சிறுகதைத் தொகுப்பு) வெண்புறா வெளியீடு, யாழ்ப்பாணம் 1994
* யாழ் இனிது (சிறுகதைத் தொகுப்பு) சென்னை, கோரி வெளியீடு, 1998
* ஒரு பிடி மண் (சிறுகதைத் தொகுப்பு) சென்னை, நர்மதா 1999
* எழுதப்பட்ட அத்தியாயங்கள் (சிறுகதைத் தொகுப்பு) மல்லிகைப்பந்தல், கொழும்பு 2001
* இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்- (இலக்கியக் கட்டுரை) மூன்றாவது மனிதன் வெளியீடு, கொழும்பு 2005
* பூமியின் மையத்திற்கு ஒரு பயணம் (மொழி பெயர்ப்பு-Journey to the centre of the earth- Jules Verne) யாழ் - ஃப்ரெஞ்சு நட்புறவுக்கழக வெளியீடு, 2006
* சாந்தனின் எழுத்துலகம் (தேர்வுத்தொகுப்பு)- சென்னை, அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் 2006
* விளிம்பில் உலாவுதல் (குறு நாவல்கள்) சென்னை, அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் 2007
* காட்டு வெளியிடை (கென்யப் பயண நூல்) - சென்னை, இருவாட்சி, 2007
* The Sparks (Collection of Short Stories) 1990
* In Their Own Worlds(Collection of Short Stories) Godage Bros. Colombo (State Literary Award Winner) 2000
* Survival and Simple Things (Prose Poems) 2002

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் முதற்கட்டமாக, 13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி, மாகாண சபைகளை சுயாதீனமாக இயங்கச் செய்வதுடன், சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இணக்கம் கண்ட "பெரும்பான்மைக் குழுவின் அறிக்கையை அமுல்படுத்தவும் வேண்டும். இதன் தொடர்ச்சியாகவும், அடுத்தகட்டமாகவும் "சமஷ்டி"யை நோக்கி முன்செல்வதற்கான அரசியல் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இந்தப் பணிக்காக அனைத்து அரசியல் நிறுவனங்களும், சமூக இயக்கங்களும், சமூகசக்திகளும், தனிநபர்களும், கூட்டாகவும், தனியாகவும் இணைந்து பணி செய்வது அவசியமாகும். சிங்கள மக்கள் மத்தியில் இதற்கான அறிவூட்டல்கள் அவசியம் செய்யப்பட வேண்டியுள்ளது. தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் சிங்கள மக்களின் அரசியல் ஒருமைப்பாடும், பங்களிப்பும் மிக மிக முக்கியமானதுதாகும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு மிக மோசமான, மக்கள் விரோத, பாசிசப் பண்புகளை உள்ளடக்கிய அமைப்பாகவே வளர்ந்து இன்று முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. அதன் ஆதிக்கமும் இருப்பும் முற்றாக இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகளின் அரசியல்தோல்வி எப்போதோ எழுதப்பட்டதொன்று. ஆது இராணுவ ரீதியாக தோல்வியடைந்துள்ளது. விடுதலைப்புலிகளை சர்வதேச நாடுகளின் துணையுடன் தோல்வியுறச் செய்த அரசானது மிக மோசமான பாசிச குணாம்சங்களை தனக்குள் மேலும் அதிகரித்து நாட்டு மக்களையும், சமூக அரசியல் இயக்கங்களையும், செயற்பாடுகளையும் மோசமாக நசுக்கி வருவது நமக்கு முன்னுள்ள அடுத்த சவாலாக இன்று எழுந்துள்ளது.

ஏற்கனவே, நாம் சுட்டிக்காட்டியதுபோல், ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல்கள், பௌத்த-சிங்களத் தேசியவாதம், சிறுபான்மையினரின், இன, மத அடையாளங்களை மறுத்தல், அவர்களது அரசியல் உரிமைகளை நிராகரித்தல், குடும்ப ஆதிக்கம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என தன்னை ஸ்திரப்படுத்தி அனைத்து மக்களின் குரல்களையும் நசுக்க முற்படுகிறது.

நாம் அனைவரும் எதிர்கொள்கின்ற ஒன்றோடொன்று தொடர்புற்ற இந்தப் பிரச்சினைகளை தெளிவாகவும், நேர்மையாகவும் அணுகுவது ஊடாகத் தான் இலங்கை மக்கள் நீண்டகாலமாய் எதிர்கொண்டு வருகின்ற நெருக்கடி களுக்கும், முரண்பாடுகளுக்கும், தலையீடுகளுக்கும் தீர்வை கண்டுகொள்ள முடியும். இந்த முக்கியத்துவமான விடயங்கள் மீது நம் அனைவரினதும் கவனத்தை குவிப்பதும் நிலைமைகளை மாற்றியமைப்பதற்கு செயற்படுவதும் அவசியமாகியுள்ளது. ●



படிப்பகம்

www.padippakam.com



# ஈழச் சிக்கலும் 'புறநானூற்று வீரம்' எனும் புனைவும்

- பாஸ்கர் (தமிழ்நாடு)

ஈழச் சிக்கல் இத்தனை ஆண்டுகள் ஆனபின்னரும் தீர்ந்தபாடில்லை, 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்திற்கு பிறகும் தீரவில்லை, தீராததோடு மிகவும் சிக்கலான நிலையில் இருக்கவும் செய்கிறது. அனுபவமும் படிப்பினைகளும் இருப்பதுதான் கிடைத்த ஒரே பலன். எது சரி, எது தவறு என்பது தெளிவாகிவிட்டது. தவறு என்று சொல் லப்பட்ட விசயங்கள் தடுக்கப்பட முடியாமல் போய் சரியான மாற்று எதையும் மேற்கொண்டு நடை முறைக்கு கொண்டு போக முடியாமல் போயிற்று.

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான விமர்சனங்கள் மார்க்சிய அமைப்புகள், முற்போக்காளர்கள், ஜனநாயக சக்திகள் ஆகியோரால் வைக்கப்பட்டு அவை சரியென்றே நிருபணமாயின. இதற்கு இவ்வளவு பெரிய இழப்பை, பாதிப்பை, பின்னடைவை விலையாக கட்டாயமாக கொடுக்க வேண்டியதாயிற்று.

விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் வழியில் வெளிப்பட்ட இராணுவவாதம் இத்தகைய விலைக்கு காரணமாக இருந்தாலும் "புறநானூற்று வீரம்" எனும் புனைவு கருந்தாக்கமும் இந்த இராணுவ வாதத்தில் முக்கிய பங்காற்றி இருக்கிறது.

பேரினவாத, ஏகாதிபத்திய சுரண்டல் அரசியல் நலனுக்காக விளைந்த இச்சிக்கலை எதிர்கொண்ட தமிழ் மக்கள் / அமைப்புகளின் போராட்டங்கள் இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஒடுக்கப்பட்டன. இதை அரசியல் ரீதியாக எதிர்கொள்ளாமல், அரசியல் வழியின் அங்கமாக இராணுவ நடவடிக்கைகளைப் பார்க்காமல் இராணுவ நடவடிக்கைகளே அரசியல் நடவடிக்கை என்பதாக வெளிப்பட்ட அரசியல் வழியே இன்றைக்கு ஏற்பட்டுள்ள இழப்பிற்கு பிரதான காரணியாகும்.

விடுதலைப் புலிகளுக்கு அரசியல் இல்லையா என அவர்களின் தீவிர ஆதரவாளர்கள் கோபப்படலாம். புலிகள் பல பத்திரிகைகளை நடத்தினர் செய்தித் தொடர்பாளர்களை வைத்திருந்தனர் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்று போர் நிறுத்தங்களைச் செய்திருக்கின்றனர் அனைத்திற்கும் மேலாக தனியரசை அமைத்து பல துறைகளை திறம்பட நடத்தினர் என அவர்கள் வாதிடலாம். இவையெல்லாம் விவரம் என்ற வகையில் உண்மைதான்.

விடுதலைப் புலிகள் இவற்றையெல்லாம் தமது அரசியலால் செய்யாமல் இராணுவ ஆற்றலால் மட்டுமே வளர்ந்து இவற்றை செய்ய முடிந்ததாக கருதினர். இவற்றை தவிர்க்க முடியாததாக வேலைப் பிரிவினைகளாக மட்டுமே பார்த்தனர். இவற்றின் அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட்டதில்லை. இவை புலிகளின் வீரத்தை புகழ்பாடும் தன்மையான தாகவே இருந்தன. இங்குதான் "புறநானூற்று வீரம்" எனும் புனைவு கருத்தாக்கத்தினுடைய பாத்திரத்தின் பங்கைப் பார்க்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் இந்தப் புனைவுக் கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே தொடக்கத்திலிருந்து இறுதி வரை செயற்பட்டனர். அவர்களின் தீவிர ஆதரவாளர்கள் தமிழ்நாட்டில் மே 17-க்குப் பின்னரும் இந்த அடிப்படையிலேயே பேசுகின்றனர் எழுதுகின்றனர் செயற்படுகின்றனர். இதனால் இந்த ஆதரவாளர்கள் ஏற்பட்ட கடும் இழப்பை இராணுவ மற்றும் அரசியல் அடிப்படைகளில் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். வெறுமனே உயிரிழப்பு என்ற வகையில் மட்டுமே வெளிப்படையாக ஒப்புக் கொள்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் மே 16 வரையிலும் விடுதலைப் புலிகளின் பின்னடைவை, இழப்பை பின்வாங்கல் எனவும் போர் உத்தி எனவும் அனுபவம் வாய்ந்த படைத்தலைவர்கள் உயிரோடு இருப்பதால் பெரிய இழப்பு எதுவும் இல்லை எனவும் திட்டமிடப்பட்ட வகையில் பின்வாங்கி சுற்றி வளைத்து எப்படியாவது வலிந்த தாக்குதலின் மூலம் வெற்றி பெற்று விடுவார்கள் என்றே பேசி வந்தனர்.

இதில் எந்த மாறுதலும் இல்லாமல் மே 17க்குப் பின்னரும் பேசி வருகின்றனர். அப்படியானால் மே 17 அன்று என்னதான் நடந்தது? இதைச் சொல்வதில் "புறநானூற்று வீரம்" எனும் புனைவுக் கருத்தாக்கம் தடுக்கிறது.

இந்தக் கருத்தாக்கம் ஈழத்தில் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் ஏன் புலம் பெயர் ஈழத் தமிழர் வாழும் நாடுகளில் அவர்களிடையேயும் செங்கோல் ஆட்சி செலுத்துகிறது.

ஈழப் போரின் மூன்று கட்டங்களிலும் விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த வெற்றிகள் மேலும் இதை உறுதிப்படுத்தின. இந்த வெற்றிகளுக்கு பின்னால் விடுதலைப் புலிகளின் இராணுவ ஆற்றல் மற்றும் அறிவுக்கு முக்கிய பாத்திரம் இருந்தது. ஆனால் இவற்றுக்கு அப்பால் இருந்த காரணிகளின் பாத்திரத்தை அவர்கள் பார்க்கவில்லை.

விடுதலைப் புலிகள் என்ற அகநிலைக் காரணி ஒரு புறம் இருக்க, மறுபுறத்தில் உள்ள புறநிலைக் காரணிகள் அந்த வெற்றிகள் ஈட்டப்பட்டதில் அதற்கேயுரிய பாத்திரத்தை ஆற்றின.

சர்வதேச சூழல் (80களில் முந்நாளைய சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் நிலவிய கெடுபிடிப் போர் முதலானவை), இலங்கை ஆளும் வர்க்கத்திற்கும் / இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு, இலங்கை ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடு, இலங்கை ஆளும் வர்க்கத்திற்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான முரண்பாடு (கடைசி 1980களில் நடந்த ஜே.வி.பி. கிளர்ச்சிகள் இதன் வெளிப்பாடே) ஆகியன அந்த புறநிலைக் காரணிகள் ஆகும்.

தவிர, இலங்கை ஆளும் வர்க்கத்திற்கு விடுதலைப் புலிகளை எதிர்கொள்வதற்கு போதிய அனுபவம் இல்லாமல் இருந்ததும் ஒரு காரணம்.

*1970 / 1980*களில் அமெரிக்காவிற்கும் முந்நாளைய சோவியத் ஒன்றியத்திற்கும் இடையில் கெடுபிடிப் போர் நிலவியது. பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC), சாம் நுஜோமா தலைமையிலான நமீபிய விடுதலை இயக்கம் உள்ளிட்ட அமைப்புகள் இதைப் பயன்படுத்தி முந்நாளைய சோவியத் ஒன்றியத்தின் ஆதரவு மற்றும் உதவியை பெற்றுக் கொண்டன.

அதேபோல் ஆப்கானிஸ்தான் முஜாஹிதீன்களும் அங்கோலாவில் யுனிட்டா அமைப்பினரும் அமெரிக்காவின் ஆதரவு மற்றும் உதவியைப் பெற்றுக் கொண்டன.

*1983 - 1987* வரையிலான காலகட்டத்தில் இந்திய ஆளும் வர்க்கம் விடுதலைப்புலிகள், டெலோ, ஈ.பி. ஆர்.எல்.எப். புளொட் ஆகிய அமைப்புகளுக்கு எல்லா விதமான உதவிகளையும் செய்து, ஈழ விடுதலைப் போராட்டம் சுயமாக வளர்ந்து விடக்கூடாது எனவும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் இலங்கையில் அப்போது இருந்த ஜெயவர்த்தனே அமெரிக்க சாய்வாக இருந்ததால் அவரை அடக்கி வைக்கவேண்டும் எனவுமே ஈழப் போராளிகளுக்கு இத்தகைய உதவியைச் செய்தது.

இலங்கையில் *1987 - 90* காலப் பகுதியில் இந்திய இராணுவம் அமைதி காப்புப்படை என்ற பெயரில் இருந்தபோது அதை வெளியேற்ற வேண்டும் என்பதற்காக அப்போது இலங்கை ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசாவின் இராணுவ உதவியை விடுதலைப்



புலிகள் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறாக, விடுதலைப் புலிகள் தமது சொந்த முயற்சியில் வளர்த்துக் கொண்ட இராணுவ அறிவு மற்றும் ஆற்றல் மட்டும் இல்லாமல் இந்திய அரசாங்கம் மற்றும் இலங்கை ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசாவின் இராணுவ உதவியையும் பயன்படுத்திக் கொண்டனர்.

இதில் சர்வதேச அளவில் அமெரிக்காவிற்கும் முந்நாளைய சோவியத் ஒன்றியத்திற்கும் இடையிலான முரண்பாடு, இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் இலங்கை ஆளும் வர்க்கம் / இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான முரண்பாடு ஆகியவற்றை பயன்படுத்திய அரசியல் பார்வை வெளிப்படுவதே அல்லாமல் புலிகளின் இராணுவ ஆற்றல் மற்றும் அறிவு மட்டுமே வெளிப்படவில்லை. இங்கு "புறநானூற்று வீரம்" என்ற புனைவுக் கருத்தாக்கத்திற்கு அறவே இடம் இல்லை.

இதைச் சொல்லும்போது ஒரு புறத்தில் புலிகளிடம் அரசியல் பார்வை இருக்கிறது அல்லவா எனவும் மறுபுறத்தில் 21ஆம் நூற்றாண்டிலும் முப்படைகளை



படிப்பகம்

www.padippakam.com



யும் வைத்திருந்த ஒரே விடுதலை இயக்கம் புலிகள் தானே எனவும் கேள்விகள் எழலாம்.

முதலில் உள்ள கேள்விக்கு பதில் என்னவென்றால், புலிகளிடம் உத்தி, என்ற வகையில்தான் ஆளும் வர்க்க முரண்பாட்டை பயன்படுத்தும் அணுகுமுறை இருந் ததே அல்லாமல் பார்வை என்ற வகையில் அல்ல என் பதே ஆகும்.

பார்வை என்ற அளவிற்கு அது இருந்திருந்தால் ஆளும் வர்க்க முரண்பாட்டை பயன்படுத்தும் விதமாக நான்காம் கட்ட ஈழப் போருக்கு முன்பாகவோ தொடங்கிய பின்போ சீனாவிடமோ பாகிஸ்தானி டமோ சென்றிருப்பர்.

> தமிழ் மக்களை ஆண்டு சுரண்டி கொழுக்கவேண்டும் என்பதற்காக நடந்த இனக்குழு மோதல்களையும் பிற்காலச் சோழப் பேரரசர்களின் படையெடுப்புகளையும் ஆக்கிரமிப்புகளையும் எவ்வாறு தமிழனின் வீரம் என்றோ, புறநானுற்று வீரம் என்றோ கொண்டாட முடியும்? இவ்வாறு கொண்டாடுவோர் எல்லோருமே சுரண்டல் வர்க்கத்தின் பிரதிநிதிகளாகவே இருக்கின்றனர்.

இரண்டாம் கேள்விக்கு பதில் என்னவெனில், தரவு என்ற வகையில் அது உண்மைதான். ஆனால் அரசியல் இல்லாததால் அதைக் காப்பாற்றிக் கொள்ளாமல் போய்விட்டது. நேபாள மாவோயிஸ்ட் கட்சியோ முப்படைகள் இல்லாமல் (தரைப் படையை மட்டும் வைத்திருக்கின்றது) அமெரிக்காவும் / இந்தியாவும் எல்லா வகையிலும் தலையிடுவதற்கு தயாராக இருந்த போதும் / இருக்கும்போதும் தனது அரசியல் பார்வை யால் அத்தகைய தலையீடுகளைத் தள்ளிப்போட வைத்தது அல்லது அதன் தீவிரத்தை மட்டுப்படுத்தும் அரசியல் செயலுத்தியை மேற்கொண்டு தனது படை யையும் தலைமையையும் காபபாற்றிக் கொண்டது / காப்பாற்றிக் கொள்கிறது.

விடுதலைப் புலிகள் நான்காம் கட்ட ஈழப் போரில் புறநிலைக் காரணிகள் மாறியதையும் அவை தங்களுக் குப் பாதகமாக இருப்பதையும் ஆழமாக உணரத் தவறி விட்டார்கள்.

இந்தியாவிற்கு ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நலன் ஏற்கெனவே இருந்து வருவதுடன் அது வெளிப்படவும் செய்தது. அது இந்த நான்காம் கட்ட ஈழப் போரில் இலங்கையின் மீதான மேலாதிக்கப் போட்டியில் சீனா இறங்கியதாலும் ராஜபக்சேவுக்கு உதவாவிட்டால் அவர் சீனா அல்லது பாகிஸ்தானின் உதவியை அதிகமாக பெற்று தனது பிடி அவர் மீது தளர்ந்துவிடும் என்ற கவலை இந்தியாவிற்கு இருப்ப தாலும் அவருக்குதவிய இந்த முக்கிய புறக்காரணியை புலிகள் பார்க்கத் தவறிவிட்டனர். மே 16 வரையிலும் இதனுடைய முக்கியத்துவத்தைக் காணத் தவறினர்.

கடந்த 10 ஆண்டுகளாக தனியரசை நடத்தியதில் பலப்பட்ட "புறநானூற்று வீரம்" எனும் புனைவுக் கருத்தாக்கம் இயங்காவியலை (MetaaPhysics) அடிப் படையாகக் கொண்டதால் அது நிலைமைகள் எப் போதும் மாறிவருவதை பார்ப்பதைத் தடுத்தது.

தாங்கள் வெல்லப்பட முடியாதவர்கள் எனவும் அழிக்கப்பட முடியாதவர்கள் எனவும் சாசுவதமாக இருந்ததால் இப்படித்தான் இருக்க முடிந்தது.

மேலும் ஒபாமாவின் வெற்றியையும் ஹிலாரி கிளிண்டனின் செல்வாக்கையும் சாசுவதமானதாகவும் முழுமுதலானதாகவும் அனைத்துந்தழுவியதாகவும் பார்த்தது.

அனைத்திலும் முக்கியமாக எதிரியை நண்பனாக பாவித்தது என்பது இந்தியா மீதான அதீத எதிர்பார்ப் பில் வெளிப்பட்டது.

*1983 - 87* காலகட்டம் வரையில் நண்பனாக நடித்த இந்திய ஆளும் வர்க்கத்தின் நிறம் மாறிய பின்னரும் இன்று வரையிலும் அதனை பொதுவாக நண்பனாக வும் துரோகியாகவும் குறிப்பாக வழி தவறிய நண்பனா கவும் வழி தவறிய துரோகியாகவும் கருதி அதை மனம் மாற வைக்கமுடியும் எனவும் எண்ணுகிறது.

இந்திய ஆளும் வர்க்கம்தான் ஈழ மக்கள் - புலி களுக்கு விரோதமான ராஜீவ் / ஜெயவர்த்தனே ஒப் பந்தத்தை ஏற்படுத்தி இந்திய ஆக்கிரமிப்பு படையை அனுப்பி புலிகளை ஒழித்துக் கட்ட முற்பட்டது. ராஜீவ் கொலைக்கு பின்னர் புலிகளின் அமைப்பை இன்று வரையிலும் தடை செய்து வருவதுடன் புலி ஆதரவுச் செயற்பாட்டை தடுத்து வருகிறது. வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் புலிகள் யாழ்ப்பாணத்தை கைப் பற்ற முற்பட்டபோது அதைத் தடுத்தது. கருணாவை உடைத்தது. இறுதியாக நான்காம் கட்ட ஈழப் போரின் தொடக்கம் முதற்கொண்டு இன்று வரையிலும் ராஜ பக்சேவுக்கு ஆதரவாக இருந்து வருகிறது.

நண்பனாக நடித்து எதிரியாகிப் போன இந்தி யாவை 20 ஆண்டுகள் ஆகியும் அதைப் புரிந்துகொள்ள தடையாக இருந்து வருவது இயங்காவியல் அணுகு முறையே ஆகும்.

இப்பொழுது. "புறநானூற்று வீரம்" என்றால் என்ன என்பதைப் பார்ப்போம்.




படிப்பகம்

www.padippakam.com

சங்க இலக்கியத்தை அதிகமாக மேற்கொள் காட்டி பேசப்படுகின்ற "புறநானூற்று வீரம்" என்பது உண்மையிலேயே அந்த காலத்தில் தமிழ் பேசிய பல்வேறு இனக் குழுக்களிடையே நடந்த சண்டைகளும் மோதல்களுமே ஆகும். முற்கால மூவேந்தர்களிடையே ஏற்பட்ட சண்டைகளுமே ஆகும்.

இந்தச் சண்டைகள் தமிழ் பேசிய மக்களை ஆண்டு சுரண்டுவதற்காகவே நடந்தன. தமிழ் பேசிய இந்த மக்கள் மீது வேற்று இனம் / மொழியினர் படையெடுத்து வந்து அதை முறியடிப்பதற்காக இந்தச் சண்டைகளோ போர்களோ நடக்கவில்லை. இதற்கு பின் இருந்த பிற்கால சோழர் ஆட்சியும் பிற்கால பாண்டியர் ஆட்சியும் கூட தமிழ் மக்களை சுரண்டுவதற்காக சண்டையிட்டு நிறுவப்பெற்ற ஆட்சிகளே. இதில் பிற்கால சோழ மன்னர்களோ ஈழத்தையும் இன்றைய தென்கிழக்கு ஆசிய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, கம்போடியா ஆகிய நாடுகளையும் ஆக்கிரமித்து (தமிழ்நாட்டை ஆண்ட தமிழ்ப் பேரரசர்கள் என சிலாகிக்கப்படும் பிற்கால சோழப் பேரரசர்கள் ஈழத்தை ஆக்கிரமித்தனர் என்றே சொல்ல வேண்டும்) ஆண்டு கொழுத்தனர். இந்த ஆட்சிகள் எவையும் தமிழ் மக்களுக்கு நன்மை எதுவும் செய்யவில்லை. மாறாக சுரண்டவே செய்தன. இதில் பிற்கால சோழப் பேரரசர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் / ஈழத்தில் சாதியம் நன்றாக நிறுவன மயமாகி கோலோச்சியது.



நிறுவனமயமாகி இறுகிப்போன அந்தச் சாதியத்தின் கொடுமையிலிருந்தோ சிந்தனையிலிருந்தோ இன்றும் தமிழ்நாடு மற்றும் ஈழம் விடுபடவேயில்லை. இத்தகைய பிற்கால சோழப் பேரரசர்களில் ஒருவரான இராஜராஜ சோழனைத்தான் "புறநானூற்று வீரம்" பேசும் பயந்தாங்கொள்ளி கருணாநிதி போற்றிப் புகழ் பாடுவார். எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தமிழக அதிகார வர்க்கம் / அரசு எந்திரம் 1000ஆம் ஆண்டு விழாவை நடத்தியது.

ஈழத்தையும் ஆக்கிரமித்து அங்கு சாதிய சமூகத்தை நிலைநாட்டிய இந்தப் பிற்காலச் சோழப் பேரரசர்களின் இலச்சினை புலி ஆகும். அதைத்தான் புலிகள் அமைப்பு தமது அமைப்பின் பெயராக சூடிக் கொண்டது. ஈழ மக்களின் சுதந்திரத்தை காலில் போட்டு நசுக்கி அதை ஆக்கிரமித்து அங்கு சாதிய நிலவுடைமையை அமைத்த சோழர்களின் இலச்சினையையே புலிகள் அமைப்பு தனது அமைப்பின் பெயராக வைத்துக் கொண்டது வரலாற்று முரணே ஆகும். மேலும் புலிகள் ஈழத்தில் வாழ்ந்து போராடிய மக்களை கதாநாயகர்களாகப் பார்க்காமல் அவர்களை சுரண்டி ஆட்சி நடத்திய எல்லாளன், சங்கிலியன் போன்றவர்களையே கதாநாயகர்களாகவும் குறியீடுகளாகவும் சித்தரித்தனர்.

சங்க இலக்கியம் சித்தரிக்கும் காலப்பகுதியில் நடந்த இனக்குழுச் சண்டைகள் போன்றே இன்றைய ருவாண்டாவில் கடந்த 10 - 15 ஆண்டுகளுக்குமுன் 5 - 10 இலட்சம் பேர் இறக்கின்றவாறு ஹட்டு (outu) என்ற இனக் குழுவிற்கும் டுட்ஸி (Dutsi) என்ற இனக்குழுவிற்கும் சண்டைகள் நடந்தன. இந்தச் சண்டைகளை எப்படி வீரம் என்று சொல்ல முடியாதோ அதுபோன்றே தொடக்ககால தமிழகத்தில் நடந்த இனக்குழு சண்டைகளையும் வீரம் என்று சொல்ல முடியாது.

தமிழ் மக்களை ஆண்டு சுரண்டி கொழுக்கவேண்டும் என்பதற்காக நடந்த இனக்குழு மோதல்களையும் பிற்காலச் சோழப் பேரரசர்களின் படையெடுப்புகளையும் ஆக்கிரமிப்புகளையும் எவ்வாறு தமிழனின் வீரம் என்றோ, புறநானூற்று வீரம் என்றோ கொண்டாட முடியும்? இவ்வாறு கொண்டாடுவோர் எல்லோருமே சுரண்டல் வர்க்கத்தின் பிரதிநிதிகளாகவே இருக்கின்றனர். கருணாநிதி, வைகோ, தொல். திருமாவளவன், ராமதாஸ் மற்றும் பல்வேறு தமிழ்த் தேசிய அமைப்புகளின் நிர்வாகிகள் இவ்வாறே செயற்படுகின்றனர்.

"புறநானூற்று வீரம்" என்று சொல்லப்படும் காலப் பகுதியில்தான் பௌத்தமும் சமணமும் இங்கு வந்து உயிர்களின் கொல்லாமையை வலியுறுத்திப் பேசின.

உழவர்களாகவும் கால்நடை மேய்ப்போராகவும் கைவினைஞர்களாகவும் இருந்த தமிழக உழைப்பாளி மக்கள் இதற்கு ஆதரவை அளித்தனர். உழைக்கும் மனித உயிர்களையும் கால்நடைகளையும் இத்தகைய இனக்குழு மோதல்களில் பலி கொடுத்த தமிழக உழைக்கும் மக்கள் அதை தவிர்க்கும் முகமாக இந்த நிலையை மேற்கொண்டனர். மறுபுறத்தில் முற்கால மூவேந்தர்களும் பௌத்த, சமண கருத்தியல்களை வரவேற்றனர். ஏற்கனவே சுரண்டல் நலனுக்காக பெற்ற மேலாதிக்கத்தை தக்க வைக்கும் முகமாக போர்கள் இல்லாத சமூகம் தற்காலிகமாகவேனும் பயனைத் தரும் என்ற வகையில் அந்தக் கருத்துகளை ஆதரித்தனர். இந்த



படிப்பகம்

www.padippakam.com

வகையில் "புறநானூற்று வீரம்" என்ற வகையிலான மோதல்கள் குறைந்து பேரரசுகள் வகையிலான ஆட்சி வந்தது.

பின்னர் தமிழ் மன்னர்களின் "புறநானூற்று வீரம்" காணாமல் போய் நாயக்கர் ஆட்சியும் மராத்தியர் ஆட்சியும் ஆற்காடு நவாப் ஆட்சியும் வெள்ளைக்காரர்களின் ஆட்சியும் நடந்தன.

வெள்ளைக்காரர்களின் ஆட்சியை எதிர்க்க வக்கற்ற புதுக்கோட்டை தொண்டைமான், இராமநாதபுரம் சேதுபதி போன்ற "புறநானூற்று வீரம்" மன்னர்கள் அவர்களோடு சமரசம் செய்து தமிழ் மக்களை சுரண்டி கொழுத்தனர். சேதுபதி மன்னருக்கு நான்காம் தமிழ்ச் சங்கம் அமைக்கத் தெரிகிறது. வெள்ளைக்காரர்களை எதிர்க்கத் திராணியில்லை. அதன்பிறகோ கடந்த 60 ஆண்டுகளாக தமிழக மக்கள் விரோத இந்திய அரசாங்கத்தின் நுகத்தடி ஆட்சிதான் நடந்து வருகிறது.

> மனிதகுல வரலாற்றில் எந்த இனமும் வீரத்திற்கு குத்தகை எடுத்துக் கொண்டது கிடையாது. எல்லா இன மக்களும் வீரத்துடன்தான் இருந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் நடந்ததைப் போன்ற இனக்குழு மோதல்கள் எல்லா நாடுகளிலும் நடந்திருக்கின்றன. ஆனால் இங்கு தான் (ஈழம் / தமிழ்நாடு) வீரம் பற்றிய புனைவுக் கருத்தாக்கம் இந்த அளவுக்கு செல்வாக்கு செலுத்தி வருகிறது. இதுதான் தமிழ் மக்களை போராட விடாமல் தடுக்கிறது. தலைவர்கள் / கதாநாயகர்கள் கிடைக்க மாட்டார்களா என ஏங்க வைக்கிறது.

தமிழ்நாட்டில் 60 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தி.மு.க. வின் தலைவர்கள் அன்றிலிருந்து இன்று வரை "புறநானூற்று வீரம்" பேசியே தமிழக மக்களை மழுங்கடித்தனர். அந்தப் பரம்பரையில் தோன்றிய வைகோவும் இதையே சிரமேற்கொண்டு செய்து வருகிறார். வன்னிய ஷத்திரிய பரம்பரையில் சித்ரா பௌர்ணமி போல உதித்த ராமதாசுவும் திமுகவாக அவதாரமெடுத்துள்ள தொல். திருமாவளவனும் இதற்கு விதிவிலக்கல்ல. மாவீரன் நெடுமாறனோ ஒரு தமிழனைக் கூட வீரனாக்காமல் இருந்து வருகிறார்.

மேலும் பெரும்பாலான தமிழ் தேசிய அமைப்புகளின் செயற்பாடுகளோ அரங்க கூட்டத்தை தாண்டுவதில்லை. அரங்கத்திற்குள்ளேயே "புறநானூற்று வீரம்" பேசிப் பேசி சுய திருப்தி அடைந்து வருகின்றனர்.

இந்தப் "புறநானூற்று வீரம்" என்ற புனைவுக் கருத்தாக்கத்தில் இன்னொரு அம்சமும் உண்டு. அதாவது உலகிலேயே தமிழினத்தை போல் வேறு எந்த இனமும் வீரமான இனம் இல்லை என்பதே அது. அவ்வாறு உண்மையாக இருக்குமானால் தமிழ்நாட்டிலோ, ஈழத்திலோ கடந்த நூற்றாண்டுகளாக தமிழர்கள் ஏன் வேற்றினத்திற்கு அடிமையாக இருக்கிறார்கள்?

மனிதகுல வரலாற்றில் எந்த இனமும் வீரத்திற்கு குத்தகை எடுத்துக் கொண்டது கிடையாது. எல்லா இன மக்களும் வீரத்துடன்தான் இருந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் நடந்ததைப் போன்ற இனக்குழு மோதல்கள் எல்லா நாடுகளிலும் நடந்திருக்கின்றன. ஆனால் இங்கு தான் (ஈழம் / தமிழ்நாடு) வீரம் பற்றிய புனைவுக் கருத்தாக்கம் இந்த அளவுக்கு செல்வாக்கு செலுத்தி வருகிறது. இதுதான் தமிழ் மக்களை போராட விடாமல் தடுக்கிறது. தலைவர்கள்/ கதா நாயகர்கள் கிடைக்க மாட்டார்களா என ஏங்க வைக் கிறது. "புறநானூற்று வீரம்" பேசும் புனைவர்கள் என்ன புனைவை புனைந்தாலும் நம்ப வைக்கிறது. கேவலம் சீமான் போன்றவர்கள் ஈழ விடுதலையை வாங்கித் தர மாட்டார்களா என அவரின் வாய்ச்சவாடால் கூட்டத்திற்கு அணி திரள வைக்கிறது. சீமான் போன்றவர்கள் தமிழின உணர்வு பற்றி பேசுவதற்கு தமிழ் மக்கள் பல ஜென்மங்களுக்கு முன்செய்த பாவச் செயல்தான் காரணம் எனத் தோன்றுகிறது.

மேலும் இந்தப் புனைவுக் கருத்தாக்கம் உண்மையை உரைக்காது. தான் செய்கின்ற எதையும் நியாயப்படுத்தும். அனைத்தும் வீரச் செயலே என வீராப்பாக பேச வைக்கும். தோல்வியை (அ) பின்னடைவை ஒப்புக் கொள்ளாது.

உண்மையை உணர்ந்தால்தானே, தோல்வியை (அ) பின்னடைவை ஒப்புக்கொண்டால்தானே படிப்பினையை எடுத்துக் கொள்ளமுடியும்.

அவ்வாறு வரும் படிப்பினை இந்த புனைவுக் கருத்தாக்கத்திற்கு சம்மட்டி அடி கொடுக்கும். அதனால் தான் இந்த புனைவுக் கருத்தாக்கத்தை பேசிப் பேசியே தமிழ் மக்களை மதி மயங்க வைத்து நிரந்தர அடிமைகளாக ஆக்குகின்றனர்.

இந்தப் புனைவுக் கருத்தாக்கத்திலிருந்து விடுபட்டால்தான் தமிழ்நாடு / ஈழ மக்கள் அனைத்து அடிமைத் தனங்களிலிருந்தும் விடுதலை அடையமுடியும்.

மனித குல வரலாற்றில் முன்னெப்போதையும் விட 21ஆம் நூற்றாண்டில்தான் அரசியல் தேவைப்படுகிறது. அரசியலின் மூலமே இந்த நூற்றாண்டை புரிந்து கொள்ளவும் ஆளவும் முடியும். அரசியலுடன் பொருளாத அடிப்படையுடன் அமைந்த வீரமும் இருந்தால் தான் இதைச் சாதிக்க முடியும்.



படிப்பகம்

யாதுமானவன்

# கடவுளாலும் கைவிடப்பட்டவனுக்கான பிரார்த்தனை



கடவுள் உன்னை ஆசிர்வதிக்கட்டும்
உன் பாவங்கள் எல்லாம் நீக்கப்படுவதாக
நானும் உனக்காய்ப் பிரார்த்திக்கிறேன்
இனியேனும் அமைதி கொள்
மௌனம் பாவங்கள் செய்யாதிருக்கக் காக்கட்டும்
குருதிச் சுவையறிந்த மகனே
உதட்டோரக் குருதியை துடைத்துக் கொள்
எல்லோரும் உன்பால் அச்சம் கொள்கிறார்கள்
அவர்கள் மீதொரு புன்னகை வீசு
நரபலி எடுப்பதனைக் குறைந்த பட்சம்
தவிர்த்துக் கொள்
ஒவ்வொருவர் குருதியும்
சுவை பார்த்தவன் நீ
வேட்டைநாய் அடங்காது
நானறிவேன்
உன் பந்தியில் ஏன்
பாலகர்களைப் பரிமாறுகின்றாய்
அவர்களின் குருதியில் தோய்ந்த
தங்கவாளை எடுத்து
வெற்றியின் சின்னமாய்
பறைசாற்றுவதற்கு இத்தனை பிராயத்தனம்
மௌனம் கொள் மகனே
எல்லோர் பாவங்களும் உன்னையே சுற்றுவதாக
குடுகுடுப்பைக்காரர்கள் சொல்லித் திரிகிறார்கள்
எல்லோர் சிலுவைகளையும்
நீ சுமப்பதாகச் சொல்லியபடி
உன் சிலுவைகளையும் முட்கிரிடத்தையும்
எல்லோர் மீதிலும் சுமத்திவிட்டுள்ளாய்
உனது சிலுவைகளையும் முட்கிரிடத்தையும்
மீளவும் பெற்றுக் கொள்
அவரவர் சிலுவைகளை
அவரவர் சுமப்பதே நல்லது
அமைதி கொள் மகனே
உனக்கான நான்கு ஆணிகளையும் வாங்கிக் கொள்
மாதாக்கள் எல்லோரும்
புன்னகைக்கும் ஒரு காலத்தை
பரிசளிக்கப்போகும்
உனது கல்லறை தயாராக உள்ளது
நீ உயிர்த்தெழாமல் இருக்க
இறைவன் ஆசிர்வதிப்பாராக ஆமென்.

19.12.2008



படிப்பகம்

www.padippakam.com



ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களின் உயிரைக் காவுகொண்ட, தமிழ்ப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்குமான, கொடூர யுத்தத்தின் பால் வெவ்வேறு வெளிநாட்டு அரசுகள் காட்டிய ஆதரவும் நிலைப்பாடுகளும், இந்த அந் நிய அரசுகளின் பூகோள - போர்த் தந்திரோபாய அக்கறை கள் பற்றிப் பெருமளவில் கூறுகின்றன. இந்திய அரசினதும் மற்றும் சுற்றயல் (PERIPHERY) என்று குறிப்பிடக்கூடிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற ஒரு குழுவைச் சேர்ந்த நாடுகளின் அரசுகளினதும் நிலைப்பாடு தமி ழீழ விடுதலைப் புலிகளுக்கு வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ ஆதரவாக இருந்தது. யுத்தம் முடி வுக்கு வந்தபின் இலங்கையின் உறவுக்கான ஏதாவது எதிர்கால சாத்தியம் கருதி இந்த அரசுகளிற் பெரும் பாலானவை இந்த ஆதரவை மௌனமாகவும் வழங் கின.



# இந்து சமுத்திரத்தில் வல்லரசுப் பலப்பரீட்சை, இலங்கை உள் நாட்டுப் போரின் பூகோள அரசியல்

**-மஹ்டி டாரியஸ் நஸெம்றோயா**

2009ல் இலங்கை உள் நாட்டுப் போரின் கடைசி அத்தியாய மானது அனேகமாக அமைந்தது.

இதற்கு மாறாக, யுரேஷியா எனக் கூட்டாகக் குறிப் பிடப்படக் கூடிய, ஈரான், ரஷ்யா போன்ற ஒரு தொகுதி நாடுகளின் அரசுகள் இலங்கை அரசை ஆதரித்தன. இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் போரிடும் இரு பகுதிகளுக்குமான இந்த யுரெஷியா மற்றும் சுற்றயல் இவற்றின் ஆதரவுகளின் துருவத்தன்மையானது, உண் மையிலேயே இன்னமும் பரந்துபட்டதான ஒரு போராட்டத்தின் வாசனையை முகர்ந்தறிவதைத் தடுத்து விடுகிறது. இலங்கைத்தீவின் எல்லைகளுக்கும் இப் பிராந்தியத்தின் எல்லைகளுக்கும் மிகவும் அப்பால் பரந்தகன்ற ஒரு போராட்டமது.

இது ஏன் அவ்வாறுள்ளது? இப்படியான ஒரு கேள் விக்கான விடையிற் பெரும்பகுதி, அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளினதுமான சர்வதேச மேலாதிக்கத் திற்கெதிராக யுரேஷிய பெரு நிலப்பரப்பில் வளர்ந்து வரும் ஒரு கூட்டின் உருவாக்கத்துடன் தொடர்புபட் டது. பிறிமாக்கோவ் கோட்பாடு கொடுத்த உற்சாகத் தினால் மொஸ்கோ, தெஹ்ரான், பீஜிங் மற்றும் அவர்களின் கூட்டாளிகளிடையே வளர்ந்து வரும் ஒற்றுமையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது இந்த யுரேஷியன் கூட்டு. "கிழக்கின் நேட்டோ" என சில வெளியுறவுக் கொள்கை வட்டாரங்களிடையே குறிப்பிடப்படும், உண்மையான இராணுவப் பரிமா ணங்களைக்கொண்ட ஒரு பாதுகாப்புக்கூட்டான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO), இந்தப் பூகோள- அரசியல் செயலூக்கத்தின் ஒரு மெய்யான குறியீடா கும். இச் செயற்பாட்டின் ஒரு களமாகத்தான்

### சீனப்பூதத்தின் நுழைவு: அமெரிக்கா மற்றும் இந்தியாவிடமிருந்து இலங்கை விலகுவதன் ஆரம்பம்.

இலங்கையைப் பொறுத்தளவில் 2007 ஒரு முக்கிய மைல் கல் ஆண்டு. 2007 மார்ச் 12 அன்று, தன் பிரதேசமான அம்பாந்தோட்டையில் சீனர்கள் ஒரு மிகப் பெரிய துறைமுகத்தை நிர்மாணிப்பதை அனு மதிப்பதற்குக் கொழும்பு ஒப்புக் கொண்டது. இத் துறைமுகத்தைக் கட்டுவதற்கான ஒப்பந்தம், இலங் கைத் துறைமுக அதிகார சபையால் சீனத் துறைமுகப் பொறியியல் கம்பனி மற்றும் சைனோ ஹைடோ கார்ப்பரேஷன் ஆகிய இரண்டு சீனக் கம்பனிகளுடன் முடிவு செய்யப்பட்டுக் கைச்சாத்திடப்பட்டது. பொருளாதார நன்மைகள் மற்றும் தங்கள் நாட்டுப் போரை முடிவிற்குக்கொண்டு வருவதற்கான சீன உதவி- அனேகமாக இவற்றின் அடிப்படையிலேயே இலங்கை அரசின் தீர்மானம் அமைந்தது.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவுடனும் இந்தி யாவுடனுமான இலங்கையின் நட்பில் விரிசல் ஏற்பட் டது. சீனாவைச் சுற்றி வளைப்பதும் தன் எல்லை களுக்கப்பால் சீனா ஏதாவது துறைமுகங்களையோ, தளங்களையோ அமைப்பைத் தடுப்பதும் அமெரிக் காவின் கொள்கையாக இருந்து வந்தது. இதன் விளை வாக இலங்கை இராணுவத்திற்கான தன் உதவிகளை



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்கா குறைத்துக் கொண்டது. இலங்கையை ஒரு சமஷ்டி நாடாக்கி, தமிழர்களுக்குச் சுயாட்சியை வழங்க வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொழும்பின் மேல் பிரயோகித்ததன் மூலம் தமிழ்ப் புலிகளுக்கான இந்தியாவின் ஆதரவும் அதிகரித்தது. பீஜிங் தனது அரசியல் செல்வாக்கைக் கொழும்புக்கு ஆதரவாகப் பயன்படுத்தியதுடன், இலங்கைக்குப் பெருமளவிலான ஆயுதக் கப்பல்களை அனுப்பவும் தொடங்கிற்று. ஒரு மேலதிக ஒப்பீடாக, 2008ல் இலங்கைக்கான அமெரிக்க உதவி வெறும் 7.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த வேளையில், சீன உதவியோ ஏறத்தாழ ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தமையைச் சுட்டலாம்.

சீனாவுடனான ஒப்பந்தத்தாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அமெரிக்கா மற்றும் இந்தியாவுடனான விலகலாலும் 2007லிருந்துதான் இலங்கை யுரேஷியக் கூட்டில் ஒரு பகுதியாயிற்று. 2007

புதுடில்லியிலிருக்கும் கொள்கை ஆய்வுக்கான மத்திய நிலையத்தைச் சேர்ந்த் ப்ரஹ்மா ச்செலானியின் கூற்றுப்படி: "இலங்கையின் உள் நாட்டுப் போரில் இராணுவ முட்டுக்கட்டை நிலையினை முடிவுக்குக் கொண்டு வருவதில் சீன ஆயுத விற்பனைகள்தான் தீர்மானகரமான பங்கினை வகித்தன." இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கும் சீனத் துறைமுகப் பொறியியல் கம்பனி மற்றும் சைனோ ஹைடோ கார்ப்பரேஷன் ஆகிய இரண்டு சீனக் கம்பனிகளுக்கிடையிலான 2007 ஒப்பந்தத்திற்கு சரியாக ஒரு மாதம் கழித்து, ஏப்ரலில், வெடிப்பொருட்கள் மற்றும் பீரங்கிகளுக்கான ஒரு பெரிய பேரத்தில் இலங்கை இராணுவத்துடன் சீனா கைச்சாத்திட்டது. அத்துடன், பீஜிங், தமிழ்ப் புலிகளைத் தோற்கடிப்பதில் தெளிவான பங்காற்றிய பல இராணுவ ஜெற் விமானங்களை இலங்கை இராணுவத்திற்கு இலவசமாகக் கொண்டு சென்று கொடுக்கவும் செய்தது.



இறுதியளவில் ரஷ்யா, ஈரான் மற்றும் சீனாவுடனான பூகோள- போர்த் தந்திரோபாய அரண்களில் இலங்கை தன்னையும் உறுதியாய் இணைத்துக் கொண்டு விட்டது. இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்தி ரேலியா, கனடா ஆகியவற்றின் அரசுகளும் ஐரோப்பிய யூனியனும் ஏதோ ஒரு விதத்தில் தமிழ்ப் புலிகளுக்குக் கொடுத்த ஆதரவிற்கு இவைதான் உண்மையான அடிப்படைக் காரணங்களேயொழிய, மனிதாபிமான அக்கறைகளல்ல.

இலங்கையுடனான சீன இராணுவத் தொடர்புகள் 1990களில் ஏற்பட்டன என்றாலும் சீன - இலங்கை இராணுவ உறவுகள் மலரத் தொடங்கியது 2007ல்தான்.

அம்பாந்தோட்டையில் சீனத் துறைமுகத்தை அமைக்கக் கொழும்பு ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து, ஈரானும் ரஷ்யாவும்கூட இலங்கையுடனான தங்கள் இராணுவத் தொடர்புகளை விரைந்து அபிவிருத்தி செய்யத் தொடங்கின. இந்த விஷயத்தில், பீஜிங், மொஸ்கோ, தெஹ்ரான் எல்லாம் இலங்கையுடன் கூட்டுறவும் இராணுவ ஒப்பந்தங்களும் வைத்துள்ளன. 2007லும், 2008லும் இலங்கையின் தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் தெஹ்ரான், மொஸ்கோ, பீஜிங் ஆகிய இடங்களுக்கு மேற்கொண்ட விஜயங்கள் எல்லாம் இந்த யுரேஷிய நாடுகளின் உதவியுடன் தமிழ்ப் புலிகளின் இராணுவ ஆற்றலை அழிக்கச் செய்வதற்கான இலங்கையின்



படிப்பகம்

www.padippakam.com

முன்னேற்பாடுகளுடன் தொடர்புபட்டவை.

கடைசியில் சீனா, ரஷ்யா, ஈரான் யாவுமே இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்திற்கு முன்பாகவே இலங்கை இராணுவத்தின் ஆயுதபலத்தை மேம்படுத்த உதவின. யுரேஷியக் கூட்டைப் பொறுத் தளவில், இலங்கையின் உள் நாட்டு யுத்தத்தை முடிப்ப தென்பது சீனத்துறைமுகம் நனவாவதை நிச்சயப் படுத்திக் கொள்வதும், சீனா, ரஷ்யா, ஈரானுடன் நட்பைப் பேணும் ஒரு இலங்கை அரசு தொடர்வதை உறுதிப்படுத்துமுகமாகக் கொழும்பில் ஆட்சி மாற்றத் திற்கான எந்த ஒரு சாத்தியத்தையும் தடுப்பதுமாகும். பயமுறுத்தலாக விளங்கும் தமிழ்ப்புலிகள் பலமிழக்கச் செய்யப்பட்டாலன்றி அமெரிக்காவும் அதன் கூட்டளி களும், அனேகமாக இந்தியாவுடன் இணைந்து - சீனாவுடனான இலங்கையின் துறைமுக ஒப்பந்தத்தை இல்லாமலாக்கவும் இலங்கையை யுரேஷிய வட்டத் திலிருந்து விடுவிக்கவுமான நோக்குடன் - இலங்கை அரசைக் கவிழ்க்க முயற்சிக்கலாமென்று இலங்கை அதிகாரிகளுடன் சீன, ரஷ்ய, ஈரானிய அரசுகளும் நம்பினர். இச்சூழலில் 2009 சண்டையின் போது அவர்கள் யாவரும் இலங்கைக்குப் பக்கபலமாக நின்ற துடன், சீனா மற்றும் ரஷ்யாவைப் பொறுத்தளவில் ஐ.நா.பாதுகாப்புச் சபையிலும் ஆதரவாய் விளங்கினர்.

**மேற்குலகம் எனப்படுவதில் இலங்கை உள்நாட்டுப் போரின் கடைசி அத்தியாயத்தைப் பொறுத்தளவில் இரட்டை அளவு கோல்கள் பிரயோகிக்கப்பட்டன.**

**அஸோஷியேற்றட் பிரஸ் (AP) டிசம்பர் 23, 2007ல் அறிவித்தது:**

அமெரிக்க செனற் இலங்கைக்கான இராணுவ உதவியைப் பெருமளவில் குறைத்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப - முன்னெப்போதுமில் லாத வகையில் இராணுவக் கூட்டுறவு பற்றிப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக ஒரு உயர்மட்ட இராணு வத் தூதுக் குழுவைக் கொழும்புக்கு அனுப்பியதன் மூலம்- ரஷ்யா முன்வந்தது. ஜகேணல் ஜெனரல்ஸ விளதீமிர் மோல்தென்ஸ்கொய் தலைமையிலான உயர் மட்ட ரஷ்ய இராணுவ தூதுகோஷ்டி பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, இராணு வத்தளபதி ஜலெப்டினண்ட் ஜெனரல்ஸ சரத் ஃபொன் சேக்கா மற்றும் விமானப்படைத்தளபதி ரொஷான் குணதிலக்க ஆகியோரைச் சந்தித்ததுடன் நாட்டின் பல முக்கிய இராணுவத் தளங்களுக்கும் விஜயம் செய்தது. ரஷ்ய இராணுவத்தின் ஒரு மூத்த போர்த்தளபதியான கேணல் ஜெனரல் விளதீமிர் மோல்தென்ஸ்கொய் முன்னர் செச்சென்யாவிலிருந்த ரஷ்யப் படைகளின் இயக்கு நிலைத் தளபதியாக இருந்தவர்.

இலங்கையைப் போலவே ரஷ்ய சமஷ்டி, சீனா, ஈரான் எல்லாம் தத்தம் நாடுகளிலும் பிரிவினைவாத இயக்கங்களை எதிர் கொள்பவை தான். இந்த இயக்கங்கள் எல்லாம் பூகோள போர்த் தந்திரோபாய காரணங்களுக்காக வெளியாரால் ஆதரிக்கப்படுபவை என நாலு நாடுகளுமே நினைக்கின்றன. 2007ல்,சீனத் துறைமுகத்தை அமைக்க இலங்கை ஒப்புக்கொண்ட பின்னர் அமெரிக்க அரசினால் ஏற்படுத்தப்பட்ட இராணுவ உதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு சீனா வைப் போலவே மாஸ்கோவும் முன்வந்தது மட்டு மன்றி, செச்சென்யாவில் பிரிவினைவாதிகளுக்கெதி ரான இராணுவ நடவடிக்கைகளை மேற்பார்வை செய்த கேணல் ஜெனரல் விளதீமிர் மோல்தென்ஸ் கொயையும் க்ரெம்ளின் அனுப்பி வைத்தது. கொழும் பிற்கான ஒரு இராணுவ ஆலோசகராக மோல்தென்ஸ் கொய் இலங்கை வந்தார்.

தெஹ்ரானின் உதவியும் இலங்கை இராணுவத் திற்கு மிக முக்கியமானதாக அமைந்தது. இலங்கையி லுள்ள ஒரு செய்தித்தாளான "த ஐலண்ட்" இவ்வாறு குறிப்பிட்டது: "எல் ரி ரி ஈ /அல்லது தமிழ்ப்புலித் தாக்குதல் ஒன்றினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இலங்கை இராணுவம் நசுக்கப்பட்டு விடக்கூடிய பய முறுத்தலிருந்த போது இலங்கையை மீட்பதற்கு ஈரான் முன்வந்தது. ஈரானியத் தலைமையிடம் இலங்கை உதவி கேட்டதும் பல விமானங்கள் நிரம்ப ஈரானிய இராணுவ சாதனங்கள் உடனடியாகவே அனுப்பி வைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது."

2009ல் ஒரு உயர்மட்ட இராணுவ தூதுக்குழு இலங்கைக்கு வருவதற்கு முன்னரே, "போர்த்திறன் சார்ந்த படகுகளின் பாவனையில் ஒரு முன்னணி வல்லுனர் எனப்பரவலாக நம்பப்படும்" ஈரான் எனவும், இலங்கை" ஓர் ஆண்டு காலத்தில் சிறிய போர்ப் படகுகளின் செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட திறன் களை வளர்த்துக் கொண்டது" எனவுங் கூட "த ஐலண்ட்" தெரிவித்தது.

ஈரான், ரஷ்யா, சீனா ஆகியவை இலங்கைக்கு அளித்த உதவியின் எல்லை 2009ல் தமிழ்ப்புலிகளின் மீதான தாக்குதல்களுக்கான இலங்கை இராணுவத்தின் ஆயத்தங்களுக்கான பொருளாதார ஆதரவையும் கூட உள்ளடக்கியது. ஈரானிடமிருந்து மட்டும் இலங்கை பெற்றுக்கொண்டிருந்த உதவியின் அளவு மற்றும் முக்கியத்துவம் இவற்றின் ஆழத்தை ஓரளவு வெளிப் படுத்தும் கட்டுரையொன்றை "த ஹிண்டு" செப்டெம் பர் 21, 2009ல் வெளியிட்டது.

நவம்பர் 2007ல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈரான் விஜயம் மேற்கொண்ட பின் இலங்கைக்கு வழங்கிய நாலு மாத வட்டியில்லாக் கடன் வசதியை ஈரான் ஓராண்டாக நீட்டித்தது என அரசினால் நடத் தப்படும் "டெய்லி நியூஸ்" அறிவித்தது.

ஈரானிய ஜனாதிபதி மஹ்மூட் அஹ்மதினொத்து டனான பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, ஈரானிய



படிப்பகம்

www.padippakam.com

அரசு அவ் வசதியை ஜனவரியிலிருந்து ஒகஸ்ற் 31வரை வழங்கிற்று.

இவ்வசதியின் கீழ், 2008ல், 1.05 பில்லியன் டொலர் பெறுமதிக்கு- கிட்டத்தட்ட அதன் மொத்தத் தேவையான - மசகெண்ணையை இறக்குமதி செய்து, தமிழ்ப் புலிகளுடனான அரசின் போர் காரணமாக முக்கியத் துவம் பெற்ற ஒரு ஆண்டின் அன்னியச் செலாவணித் தேவைகளிலிருந்த நெருக்கடியை இலங்கை தளர்த்திக் கொண்டது.

இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் செப்டெம்பெர் 3, 2009ல் தெஹ்ரானில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், இலங்கைக்கு சாதகமாக, சலுகை வட்டி வீதத்துடனான ஒரு மேலதிக மூன்று மாதக்கடன் பொதியும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏன் இலங்கையில் ஒரு சீனத் துறைமுகம்? எல்லா இடங்களுமிருக்க ஏன் இலங்கையில்? இலங்கை இந்து சமுத்திரத்தின் கடற் போக்குவரத்துப் பாதையில் ஒரு மிக முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. வர்த்தகம், பாதுகாப்பு, எரிபொருள் வழங்கல், போன்றவற்றுக்கு அத்தியாவசியமான இந்து சமுத்திரத்தின் கடற் பாதைகளின் உயிர்த் துடிப்பான ஒரு சந்திப்பிலுள்ளது இந்த இடம். இதனால்தான், மாஸ்கோ, தெஹ்ரான், பீஜிங் எல்லாம் இலங்கையின் பின்னால் நிற்கின்றன.

சீனத் துறைமுக நிர்மாணம் அம்பாந்தோட்டையில் நடை பெற்றுக்கொண்டிருக்கையில், எரிபொருள் பாதைகளைக் கைப்பற்றும் ஒரு புதிய பனிப்போரின் பகுதியும் உருவாகிறது. ஆசியாவுக்குச்செல்லும் அனேகமான எரிபொருள் வினியோகங்கள் இலங்கையின் தென்முனையைத் தாண்டியே செல்கின்றன. இதன் காரணமாகத்தான் சீனர்கள் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவிலிருந்து வரும் தங்கள் எரிபொருள் வினியோகங்களைப் பாதுகாப்பதற்காக இந்து சமுத்திரத்தில் ஒரு சங்கிலித் தொடராய்க் கடற்படைத் தளங்களை உருவாக்கும் அவர்களின் திட்டத்தில் இலங்கையையும் இணைத்துள்ளார்கள். இத் திட்டத்தில் மியான்மார் (பர்மா)வும் ஒரு பங்காளி. அத்துடன், இவ்விரு நாடுகளிலும் அனேகமான விஷயங்களில் அரசுகளின் மேல் இருக்கும் அழுத்தங்கள்,அவை சீனத் துறைமுகங்களைக் கட்டுவதற்காக பீஜிங்குடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களுடன் நேரடித்தொடர்புள்ளவை.

சீனாவுடன் கூடவே ஈரானும்- தனக்கும் சீனாவுக்குமிடையிலான கடற் பாதைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியின் ஒரு பகுதியாய்- இலங்கையிலும் பரந்த இந்து சமுத்திரத்திலும் கடல்சார் அக்கறைகளைக் கொண்டுள்ளது. சீனா, ஈரான், இரண்டுமே தங்கள் கடற்படைகளைப் பெருக்கிக் கொண்டுள்ளன. இது வளர்ந்து கொண்டு வரும் முனைப்பொன்றின் அறிகுறி. பால்டிக் கடல், கருங்கடல், செங்கடல், ஏடன் வளை குடா, பாரசீக வளை குடா மற்றும் அரபிக் கடலிலிருந்து வங்காள விரிகுடா வரை, தென் சீனக் கடல், கிழக்குச் சீனக்கடல், என முழு யுரேஷியாவையும் சுற்றியுள்ள கடல்கள், நீர்ப்பரப்புகள், யாவும் பல ஆண்டுகளாகவே கடுமையான இராணுவ மயப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளன. சரித்திரத்தின் எக்கால கட்டத்திலாவது ஒரே நேரத்தில் இவ்வளவு பெருந் தொகையான போர்க் கப்பல்களை சமுத்திரங்கள் கண்டிரா. யுரேஷிய நீர்ப்பரப்புக்களிலான இந்த இராணுவ மயப்படுத்தல் நடவடிக்கையானது, அடிப்படையில், எதிர்காலத்து மோதலொன்றின் போது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடனும் யுரேஷிய நிலப்பரப்பை வளைத்துக் கொள்வதுடனும் சம்பந்தப்பட்டது.

பெலாறுஸ்ஸைப் போலவே, இலங்கையும் 2009ல் SCOவில் இணைந்து கொண்டது. இந்த யுரெஷிய அமைப்பினுள் இலங்கை வந்தமை, யெக்கத்தறீன் பேர்க்கில் நடைபெற்ற - ஈரான் தேர்தல் கலவரங்களையடுத்து மஹ்மூட் அஹ்மதி நிஜாத் மீது கவனம் படிந்திருந்த - SCO மகா நாட்டில் அறிவிக்கப்பட்டது. ஈரானிய ஜனாதிபதியை மீளத்தெரிவு செய்வதில் SCO தனது முழு ஆதரவையும் செலுத்திக் கொண்டிருந்த வேளையில், தமிழ்ப் புலிகளுக்கெதிரான கூட்டு ஆதரவிற்காக இலங்கை நன்றி தெரிவித்துக்கொண்டது.

இலங்கை மற்றும் - ரஷ்யத் தலைமையிலான கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பிலும் (Collective Security Treaty Organization, CSTO) உறுப்பினராயிருந்த -பெலாறுஸ் ஆகிய இரண்டும் SCO வில் பேச்சுவார்த்தைப் பங்காளிகளாக (dialogue partners) கலந்து கொண்டிருந்தன.

SCOவில் பேச்சுவார்த்தைப் பங்காளியாக இலங்கை கலந்து கொண்டமை, ரஷ்யா, சீனா மற்றும் ஈரானுடனான அதன் போர் முக்கியத்துவம் வாய்ந்த தொடர்புகளையும் கூட்டையும் உறுதி செய்கிறது. SCOவின் பேச்சுவார்த்தைப் பங்காளி என்கிற அந்தஸ்து இலங்கையை சீன மற்றும் ரஷ்யாவின் ஆதரவுக் குடையின் கீழ்க் கொண்டு வருகிறது.

SCO சாசனத்தின் சரத்து 14ல் கூறப்பட்டிருக்காவிடினும் ஒரு பேச்சுவார்த்தைப் பங்காளி, அந்த உறவின் கீழ் தனக்கான பாதுகாப்பையும் தற்காப்புக்கான உதவியையும் கோர முடியும். பேச்சுவார்த்தைப் பங்காளிகள், SCOவுடன் பொருளாதார ரீதியிலும் பிணைக்கப்பட்டுள்ளமையானது, ரஷ்யா, சீனா, ஈரான் மற்றும் அவர்களின் பங்காளிகளின் ஐக்கியத்தால் தோன்றவிருக்கும் யுரேஷியன் ஒன்றியத்துள் இணைவு கொள்வதையும் சாத்தியமாக்குகிறது.

## இலங்கையும் யுரேஷியாவிலுள்ள பரந்த முரண்பாடும்.

மேற்குலகம் எனப்படுவதில் இலங்கை உள்நாட்டுப் போரின் கடைசி அத்தியாயத்தைப் பொறுத்தளவில் இரட்டை அளவு கோல்கள் பிரயோகிக்கப்பட்டன. 2008ல் தன் பிரதேச ஒருமைப்பாட்டைப்



படிப்பகம்

www.padippakam.com



பாதுகாத்துக் கொள்வதற்காக வலுக் கட்டாயத்தால் தென் ஒஸெற்றியாவையும் அப்காசியாவையும் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கான ஜோர்ஜியா வின் இராணுவ நடவடிக்கைகளை ஆதரித்த அமெரிக் காவும் அதன் தோழமை நாடுகளும், அதனை இலங்கை யைப் பொறுத்தளவில் 2009ல் செய்யவில்லை. சாராம் சத்தில், இலங்கை மற்றும் ஜோர்ஜிய அரசாங்கங்களின் செயற்பாடுகள் அனேகமாகத் துல்லியமான ஒத்த தன்மை கொண்டவை : பிரிந்து போன பகுதியில் இராணுவ பலத்தால் அரசாங்கக் கட்டுப்பாட்டை நிறு வுதல். என்றாலும் இரண்டு விஷயங்களிலும் அமெரிக் காவினதும் அதன் கூட்டாளிகளினதும் எதிர்வினை



முற்றிலும் வேறுபட்ட விதமானதாக இருந்தது. ஜோர்ஜியா ஆதரவைப்பெற்றது. இலங்கை பெற வில்லை.

மேலும், உள் நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த இராணுவ பலத்தையும் பிரயோகிக்க முடியா தென சர்வதேச ஒப்பந்தப்படி ஜோர்ஜியா சட்டபூர்வ மாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இலங்கை அவ்வாறல்ல. சட்ட மொழியில் சொல்வதானால், பிரச்சினைக்கு முன்னர், அப்காசியாவும் தென் ஒசெற் றியாவும் ஜிஜோர்ஜிய ஆட்சி முறைக் கட்டமைப்பி னுள் சுயாட்சி அந்தஸ்துகளையும் கொண்டிருந்தவை. இப்படிச் சொல்வது இலங்கையில் இடம்பெற்ற எந்தச் சாவையும் நியாயப்படுத்துவதாகவோ அல்லது ஜோர்ஜியாவில் இடம்பெற்ற சண்டையை நியாயப்படுத்துவதாகவோ ஆகாது. ஆனால் பிரயோகிக்கப்பட்ட இரட்டை அளவுகோல்களை இது விளக்கும்.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஜோர்ஜி யாவை ஆதரித்தமைக்கும் இலங்கையை ஆதரியா மைக்குமான காரணம் யுரேஷியாவை சுற்றிவளைத்துக் கொள்வதுடன் சம்பந்தப்பட்டது. இலங்கையில் சீனத் துறைமுகம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கவில்லை யெனில் அல்லது இலங்கை அரசுக்கும் சீனாவுக்கும் வேறெந்தத் தொடர்புகளும் இல்லையெனில், அமெ ரிக்க அரசின் எதிர்வினை பெருமளவில் மாறுபட்டதா யிருந்திருக்கும். பாலஸ்தீனியப்பொது சனங்களுக் கெதிராக இஸ்ரேல் செயற்படும் போது இருப்பது போலவோ, சதாம் / ஹூஸெய்ன் அமெரிக்காவின் நண்பனாயிருந்த வேளையில் ஈராக்கிய குர்துஸ் மக்கள் மீது நச்சு வாயுப்பிரயோகம் நடத்தியபோது இருந்தது போலவோதான் அமெரிக்காவின் எதிர்வினை அனேக மாக இருந்திருக்கும்.

தமிழரிலிருந்து சிங்களவர் ஈறாக இலங்கை மக்கள் யாவரும் இதிலும் பெரியதும், எல்லாவற்றையும் உள்ள டக்கியதுமான, முழு உலகளாவிய ஒரு பிரச்சினையின் இலக்கில் இருக்கிறார்கள். அமெரிக்காவுடனும் சுற்றயல் நாடுகளுடனும் முரண் ஏற்படக்கூடிய ஒரு நிலைமையில், இலங்கையின் அருகாமையில் தாண்டிச் செல்கிற கடற்பாதையானது சீனர்களுக்கு எரிபொரு ளுக்கான உயிர்வழி என்கிற முறையில் இன்றியமை யாததாயிருக்கும். இலங்கையை சீனா மற்றும் அதன் நட்பு நாடுகளின் வட்டத்திலிருந்து வெளியே எடுப் பதன் மூலம் சீனாவுக்கு இப்பாதையைப் பாதுகாப்புக் குறைந்ததாக உறுதிப்படுத்திக்கொள்ள அமெரிக்கா வும் அதன் கூட்டாளிகளும் முனைவார்கள். இலங்கை பகைக்குமுவாக்கம் (balkanization) செய்யப்படுவது கூட, அனேகமாக அமெரிக்காவுடனும் இந்தியாவுட னும் நட்புக் கொள்ளச் சாத்தியப்பட்ட - இலங்கையி லிருக்கும் சீன நிலைகளை அண்மித்த இராணுவத் தளங்களை அவர்களுக்கு அளிக்கக்கூடிய - ஒரு தமிழ்த் தேசம் உருவாகுவதற்கு இட்டுச்செல்லலாம்.

**மஹ்டி டாரியஸ் நஸெம்றோயா - உலக மயமாக் கல் ஆய்வு நிலையத்தில் (CRG-Centre for Research on Globalization) பூகோள அரசியல் மற்றும் போர்த்தந்தி ரோபாய விவகாரங்களில் சிறப்புத் திறன் விழையும் இணை ஆய்வாளராக உள்ளார்.**

**[தமிழில்: தங்கதேவன்]**

ஆதாரம்: http://www.marketoracle.co.uk/ Article 14477.html



படிப்பகம்

www.padippakam.com



தீபச்செல்வன்

## 01. அப்பத்தின் கதை பற்றிய இரண்டாவது உரையாடல்

எப்பொழுதும் அந்த முதல் உரையாடலை
நீ ஞாபகப்படுத்தியபடியிருப்பாய்.
சிகரட் குறைத்துண்டுகள் ஒதுங்கி குவிந்திருக்கும்
அந்தச் பாதிச்சுவரில்
அமர்ந்துகொண்டு மீளவும் மீளவும்
நாம் பேசியிருக்கிறோம்.
ஒவ்வொரு இரவும் கடைசியில் நம்மை
தனித்து பேச வைத்திருக்கிறது.
அப்பங்களை தூக்கிச் செல்லும்
உனது காலையும்
அதற்கான மாவை இடித்துக்கொண்டிருக்கும்
மாலை நேரத்தையும் நாம் இழந்துபோயிருக்கிறோம்.
போரினால் நாம் வாழ்வை இழந்து போயிருக்கிறோம்.

சிகரட் புகைக்கும் தேனீர்க்கடையின்
அருகிலிருக்கிற ஓடையில்
வரிசையாய் படிந்துபோயிருக்கிறது சாம்பல்.
அசாத்தியமாக வளர்ச்சி பெற்ற நமது நகரத்தில்
பியரை அருந்தியபடி நாம் அலைந்திருக்கிறோம்.
சாரயக் கடைகளில்
மதுக்கிண்ணங்களை தூக்கி வைத்திருத்தபடி
இருவரும் அப்பங்களை விற்கும் அனுபவங்களை
பகிர்ந்திருக்கும்பொழுது
நமது நகரம் வசீகரமான வெளிச்சத்தில்
ஒளிர்ந்தபடியிருந்தது.
நமது நகரத்திற்காக நாம் உழைத்திருக்கிறோம்.
அதை மிகவும் நேசித்திருக்கிறோம்.
கடைகளின் பின்புறமாக குந்தியிருந்து
உரையாடிக்கொண்டிருந்த பொழுது
விமானங்களுக்கு அஞ்சி பதுங்கியிருந்தபொழுது
நீ எனக்குப் பக்கத்திலிருந்தாய்.
நண்பனே சிகரட்டிற்காய் அடிபடுகிறவர்களாகத்தான்
எப்பொழுதுமே இருந்திருக்கிறோம்.
எல்லாவற்றையும் போலவே இப்பொழுது
நீ அப்பங்களை கூவி விற்பதற்கான
நமது நகரமும் இல்லை.
உனது அப்பங்களும் இல்லை.
சிகரட்டுக்களும் இல்லை.
மாவை இடித்துக்கொண்டிருக்கிற
மாலை நேரமும் இல்லை.
ஆனால் நீ நெருக்கத்தின் பெரிய உரையாடலாய்
முடியாத சிகரட்டாய்



படிப்பகம்

www.padippakam.com





எனக்குள் புகைந்து கொண்டிருக்கிறாய்.
அந்தப் பாதிச்சுவரின் சிதைவில்
சிகரட் துண்டுகள் என்னவாகியிருக்கின்றன?
போர் எல்லாவற்றையும் அழித்து விட்டது.
உன்னை இழந்திருக்க கூடாது.
உன்னுடன் நாம் எல்லாவற்றையும் இழந்திருக்கிறோம்.

கைவிடப்பட்ட உனது சடலத்தை
யாரோ கண்டு வந்ததாக சொல்லுகிறபோது
உனது அப்பம் பற்றிய
இரண்டாவது உரையாடல் தனித்துத் தொடங்கி
முடிவற்று நீளுகிறது.
எங்கு தவறிப் போயிருக்கிறாய்?

தகர்ந்து போயிருக்கிற நகரத்திற்கு நான் திரும்பப்போவதில்லை
யாரேனும் அங்கு அப்பங்களை கூவிக்கொண்டிருப்பார்களா?
அப்பங்களை வாங்க யார்தான் காத்துக்கொண்டிருப்பார்கள்?
மூட்டத் தொடங்கும் ஒவ்வொரு சிகரட்டும்
உனக்காக புகைந்துகொண்டிருக்கிறது.
உனக்காக மது நிறைக்கப்பட்ட கிண்ணம்
எப்பொழுதும் எனக்கு முன்னாலிருக்கிறது.

08.09.2009 கிளிநொச்சி நகரத்தின் நண்பர்களில் மிகவும் பிரியமான எனது நண்பன் ஸ்ரீ கஜானாந். இறுதிப் போரில் சிக்குண்டு இறந்து போயிருப்பதாகவும் அவனின் சடலத்தை கண்டு வந்தாகவும் கூறுகிறார்கள். தடுப்பு முகாங்கள் எங்கும் தேடிய பொழுது கிடைக்கப்பெறவில்லை)

## 02. இரத்தம் வடிகிற உரையாடலுக்காய் மூடப்பட்டிருந்த பக்கம்



01

எல்லாக் கதவுகளையும் இழுத்து சாத்தும்
மிக ரகசியமான அழைப்பை
ஏதேனும் ஒரு குறிப்பில் எழுதி வைத்திருக்க நினைத்தபோதும்
தாமதமாக செல்கிற ஒரு குறுந்தகவலில்தான்
சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது.
மிக ரகசியமாகவே
முகத்தில் வழிந்துகொண்டிருந்த குருதியை
துடைத்துக்கொள்ளுகிறேன்.

மிகவும் தடித்த படங்குகளால் எல்லாவற்றையும்
மூடிக்கொண்டபடி
எனக்கு எதிராக நிகழும் எந்த நடவடிக்கைகளையும்
வெளியில் காட்டாதிருக்கிறேன்.
மூன்று மணிநேரமாக வலைப்பதிவு மூடப்பட்டிருந்தது.
மீளவும் இறுக்கமான சொற்களை தேடினேன்.
நமது ஆதி வீட்டில்



படிப்பகம்

www.padippakam.com

வரையப்பட்டிருந்த சித்திரங்களும்
பொறிக்கப்பட்டிருந்த பெரு எழுத்துக்களும்
மிகவும் சாந்தமானவை என்றே
அவர்களிடம் கூறியிருக்கிறேன்.
வந்த எல்லா தொலைபேசி அழைப்புக்களையும்
திருப்பி விட்டுக்கொண்டிருந்தேன்.


இந்தக் கவிதைகள் வாயிலாக இனி ஒன்றையும்
உங்களுக்கு சொல்லப்போவதில்லை.
அந்த இரத்தம் படர்ந்த கம்பளத்தில் நடத்திய
உரையாடலை
சொற்களில் வடிந்து காய்ந்துபோன இரத்தத்தை
எதையும் பகிரவும் எண்ணமில்லை.
விளக்கமளிக்கப்படவேண்டிய
பக்கம் வெளித்துக்கிடக்கிறது.

02
நானும் எனது தோழனும் சிரித்துக்கொண்டேயிருந்தோம்.
எல்லா விதமான பயங்கரமான
சொற்களின் பொழுதும்
கண்களையும் முகத்தில் படர்ந்த  தோல்வியையும்
வேலிகளுக்கு கீழாக முட்கம்பிகளின் ஊடாக
அடுத்த காணிக்குள் எறிந்துகொண்டிருந்தோம்.
அவர்கள் எங்களை
மிக வேகமாக விழுங்கிக்கொண்டிருந்தார்கள்.

யாரும் எங்களை மிரட்டவில்லை
என்பதை நாங்களாகவே வெளியிட்டிருக்கிறோம்.
துவக்கு முகத்தை குத்தி கிழிப்பது
கீறிக்கொண்டு உரையாடுவது இரத்தம் உறிஞ்சி செல்வது
முழு அச்சங்களும் நிறைந்த சொற்கள்
உரையாடலின் பிறகு
இந்த மோட்டார் சைக்கிளின் பின்னால்
எதுவரை வடிந்துகொண்டிருக்கப்போகிறது.

எனக்கெதிரான நடவடிக்கைகள் மிகுந்த இனிமையானவை
என்பதை அன்றை பின்மாலைப்பொழுதில்
இந்த பக்கத்தில்  விரிவாக எழுதியிருந்தேன்.
நானும் எனது நண்பனும்
மூடப்பட்டிருந்த வலைப்பக்கம் குறித்து ஒன்றையும்
சொல்லப்போவதில்லை.
எதற்காகவும்
காலம் மிக அழகாக தரப்பட்டிருக்கிறதாக
நாம் சொல்லியிருக்கிறோம் என்று

அவர்கள் அன்றைய இரத்தம் வடிகிற உரையாடல்
குறித்து பேசுகிறார்கள்.



25.11.2009



படிப்பகம்

www.padippakam.com





-கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

# மகிந்த ராஜபக்ஸவை சுற்றியுள்ள நெருக்கடிகள் அல்லது ராஜபக்ஸ குடும்பத்தின் எதிர்காலம்?



## நாடு எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள்

இலங்கைத் தீவில் இப்பொழுது மகிந்த ராஜபக்ஸ அல்லது ராஜபக்ஸ குடும்பம் இரண்டாவது வெற்றியை பெற்றிருக்கிறது. ஒன்று புலிகளுடனான போரின் போது கிடைத்த வெற்றி. அடுத்தது ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வெற்றி. இந்த இரண்டு வெற்றிகளும் அநேகமாக யாருமே எதிர்பார்த்திருக்காதவை. ஏன் வெற்றி வெற்றவர்களே எதிர்பார்த்திராத வெற்றிகள் இவை. அதிலும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது. அதேவேளை இந்த வெற்றி இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளிலும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தவுள்ளன. உண்மையில் இந்த விளைவுகள் சாதகமாவதும் பாதகமாவதும் வெற்றி பெற்ற ராஜபக்ஸ குடும்பத்தின் கைகளில் இல்லை. பதிலாக எதிர்த்தரப்புகளின் கைகளிலேயே அது தங்கியுள்ளது.

இப்பொழுது வெற்றி பெற்றிருப்பவர் மகிந்த ராஜபக்ஸ அல்ல. அவர் இப்போது நெருக்கடி என்ற பெருங் குழியின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளார்.

இனிவரும் நாட்கள் அநேகமாக மகிந்த ராஜபக்ஸவுக்கான நெருக்கடியாகவும் ராஜபக்ஸ குடும்பத்தின் நெருக்கடியாகவும் இருக்கப் போகின்றன. அதேவேளை இதனை மக்களும் ஏனைய அரசியற் கட்சிகளும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் சரியாகக் கையாளாதுவிட்டால், அது மக்களின் மீதான நெருக்கடியாகவும் மாறக்கூடிய அபாயமுண்டு. எதிர்க் கட்சிகள், எதிரணிகள், ஊடகங்கள் மீது ஏற்படக்கூடிய பெரும் அபாயநிலையாகவும் மாறக்கூடும். எது நடந்தாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை நாடு பெரும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படவே போகிறது.

இப்போது புலிகளுடனான போர் முடிந்த பின்னர், அது சிங்கள அரசியற் கட்சிகளின் போராக மாறியுள்ளது. சிறுபான்மை மக்களின் மீது செலுத்தப்பட்ட நெருக்கடிகள் தளர்வடைந்து அது, பெரும்பான்மைச் சமூகத்துக்குள்ளேயான நெருக்கடியாக மாற்றமடைந்துள்ளது. புலிகளை முற்றாக அழித்தால் மகிந்த ராஜபக்ஸ தன்னுடைய கையைத் தானே சுட்டுக் கொண்டதாகத்தான் அமையும் என அரசியல் ஆய்வாளர் ஒருவர் புலிகளின் வீழ்ச்சிக்கு முன்னே குறிப்பிட்டது இங்கே நினைவுக்கு வருகிறது. இப்போதைய நிலை ஏறக்குறைய அப்படித்தானிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஸவின் நான்காண்டுகால ஆட்சியானது இலங்கைத் தீவின் நீண்டகாலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது என்பதைத் தவிர ஏனைய எல்லா விதத்திலும் எதிர்நிலையான விசயங்களையே உருவாக்கியுள்ளது. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்குப் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் உள்ள அத்தனை அதிகாரங்களையும் சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிராகவும் பிற அரசியற்கட்சிகள், மக்களுக்கெதிராகவும் பாவிக்கக் கூடியவராக மகிந்த ராஜபக்ஸ இப்போதிருக்கிறார். ஜே.ஆரின் காலத்தில் அவருக்குத் தோதாக சிறில் மத்யூ, காமினி பொன்சேகா, லலித் அத்துலத்முதலி போன்றோர் இருந்தனர். மகிந்த ராஜபக்ஸவுக்குத் தோதாக அவருடைய சகோதரர்கள் இருக்கிறார்கள்.

ஜே. ஆர் சிறுபான்மைச் சமூகங்களின் ஜன நாயக



படிப்பகம்

www.padippakam.com

உரிமைகள் அத்தனையையும் நிராகரித்து அவர் களின் மீது கேள்விக்கிடமில்லாத வகையில் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்தார். எதிர்க்கட்சியான சிறி லங்கா சுதந்திரக் கட்சியைச் சிதறடித்து, அந்தக் கட்சி யின் தலைவியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக் காவின் குடியுரிமையையும் பறித்தார். ஏறக்குறைய இதைப் போன்றதொரு கையாளல் முறைமையைத் தான் மகிந்த ராஜபக்ஸவும் மேற்கொள்கிறார். ஜே.ஆர். தன்னுடைய இரண்டாவது பதவிக்காலத்தில் முடிவில் லாத நெருக்கடிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார். இந்தியப் படைகளை வெளியேற்ற முடியாமை, பொரு ளாதாரா நெருக்கடிகள், வேலையில்லாப் பிரச்சினை களைத் தீர்க்க முடியாமை, இவற்றை வைத்து ஜே.வி.பி மீள் எழுச்சி கொண்டமை என்ற நெருக்கடிகளால்

> எத்தகைய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிகளையும் திசை திருப்பிச் சமாளித்துக் கொள்வதற்கும் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் ஆட்சியாளருக்கு கடந்த காலங்களில் போர் என்ற விவகாரம் வாய்ப்பாக இருந்தது. ஆனால், அது இப்போது இல்லை. ஆகவே இன்று மகிந்த ராஜபக்ஸ வெட்ட வெளியில் நிற்கிறார். எதிலும் மறைந்து கொள்ள முடியாத, எதைச் சொல்லியும் திசைதிருப்ப முடியாத ஒரு பகிரங்க வெளியில் நிற்கிறார்.

அவர் திணறினார். இறுதியில் வேறு வழியின்றி பிரேம தாஸவிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்து ஒதுங் கிக் கொண்டார். மகிந்த ராஜபக்ஸவின் இரண்டாவது பதவிக்காலமும் அத்தகையதொரு கொந்தளிப்புக் காலமாகவே மாறக்கூடிய நிலையே உண்டு. ஆனால், தன்மைகள், வடிவங்கள், தரப்புகள்தான் மாற்றமடை யப் போகின்றன.

போரில் பெற்ற வெற்றியைப் பகிர்ந்து கொள்வதற் குப் போட்டியாக ஜெனரல் சரத் பொன்சேகா இப்படித் திடீரென வருவார் என திரு. மகிந்த ராஜபக்ஸவோ ராஜபக்ஸ குடும்பமோ எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால், அந்த மாபெரும் நெருக்கடியை முறியடித்து அவர் அல்லது அவர்கள் வெற்றியடைந்து விட்டனர். அதுவும் அதிகப் பெரும்பான்மையான வாக்கு வித்தி யாசத்தில் இந்த வெற்றி கிடைத்திருக்கிறது. மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்குக் கிடைத்த மகத்தான வர வேற்பு இது என்று அரசாங்கத் தரப்பில் சொல்லப்படு கிறது. இவர்கள் எல்லோரும் என்னதான் சொன்னா லும் இந்த வெற்றியை நிராகரிப்போரும் இருக்கிறார் கள். இந்த வெற்றியைக் கடுமையாக எதிர்ப்போரும் இருக்கின்றார்கள். இந்த நிராகரிப்பும் எதிர்ப்பும் தனியே எதிர்க்கட்சிகள், எதிரணிகளின் எதிர்ப்பு என்று கொள்ள முடியாது. அது பொதுமக்களின் மன எதிர்ப் பாக இருப்பதை இங்கே நாம் கவனிக்க வேண்டும்.

இதுதான் இங்கே நமது கவனத்திற்குமுரியது. இந்த எதிர்ப்பு அல்லது அதிருப்திதான் இனிவரும் நாட் களின் இலங்கைத் தீவின் நிலவரமாகவும் அரசியலாக வும் இருக்கப் போகிறது. இதுதான் ராஜபக்ஸ குடும்பத் தின் எதிர்காலமாகவும் இருக்கப்போகிறது.

அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை, எதிர்ப்பை திசை திருப்பி விடுவதற்கு முன்னர் போர் என்ற தேசிய விவகாரம் இருந்தது. இப்பொழுது அது இல்லை. முன் னர் எதிர்க்கட்சிகளோ ஊடகங்களோ அரசாங்கத்தின் மீது போர்க்கொடி தூக்கினால், தேசவிரோதக் குற்றஞ் சாட்டி அவற்றை அடக்கிவிடுவதற்கு அரசாங்கத்துக்கு வாய்ப்பிருந்தது. பயங்கரவாதத்துக்கெதிரான போர் என்ற போர்வையில் அரசாங்கத்தை எதிர்ப்போர் எவரின் மீதும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடு வதற்கு வசதி கிடைத்தது. எத்தகைய ஜனநாயக மறுப் பையும் வெற்றிகரமாகச் செய்யவும் முடிந்தது. புலிகளு டன் தொடர்புடையவர்கள் என்ற ஒரேயொரு குற்றச் சாட்டுகளின் மூலம் எவரையும் கட்டிப்போடவும் காணாமற் போகச் செய்யவும் கூடியதாக இருந்தது.

இதன் மூலம் எத்தகைய அரசியல், சமூக, பொருளா தார நெருக்கடிகளையும் திசை திருப்பிச் சமாளித்துக் கொள்வதற்கும் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற் கும் ஆட்சியாளருக்கு கடந்த காலங்களில் போர் என்ற விவகாரம் வாய்ப்பாக இருந்தது. ஆனால், அது இப் போது இல்லை. ஆகவே இன்று மகிந்த ராஜபக்ஸ வெட்ட வெளியில் நிற்கிறார். எதிலும் மறைந்து கொள்ள முடியாத, எதைச் சொல்லியும் திசைதிருப்ப முடியாத ஒரு பகிரங்க வெளியில் நிற்கிறார். அதே வேளை அவருடைய கடந்த காலம் என்பதும் பெரும் பாரங்களையுடையதாகவே இருக்கிறது. குடும்ப ஆதிக்கம், ஊழல், போர்க்குற்றங்கள், ஊடக வன்முறை, ஜனநாயக மறுப்பு என்ற பல விசயங்கள் அவருக்கு இந் தச் சுமையைக் கொடுக்கின்றன. இந்தக் குற்றச்சாட்டு களையெல்லாம் வெற்றி கொண்டு, வெளியே அவர் பல மான நிலையில் இருப்பதைப் போலத் தென்பட்டா லும் அவருடைய கட்டமைப்பினுள்ளும் அவரைச் சுற்றியும் அவர் நெருக்கடிக் குள்ளாகித்தானிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலை அடுத்து தென்பகுதியில் இந்தத் தேர்தல் தவறானது என்று நடத்தப்பட்ட 02.02.2010 இல் நடத்தப்பட்ட போராட்டமும் 04.02.2010 இல் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தமையும் இங்கே கவனிக்கத்தக்கன.

அதைப் போல இனிவரும் நாட்களில் அவர் எதிர் கொள்ள வேண்டியிருக்கின்ற அபிவிருத்தி, ஜனநாயக மீளமைப்பு, புனர்வாழ்வு, வேலை வாய்ப்புகளை அளித்தல், சம்பள உயர்வு, பொருளாதார உயர்வுக்கான முயற்சிகள், அரசியற் தீர்வு போன்ற முக்கியமான பிரச் சினைகள் எல்லாம் அவருக்கு உவப்பாக இருக்கப் போவதில்லை. அத்துடன், அடுத்து வரவுள்ள நாடாளு மன்றத் தேர்தலுடன் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்த தமிழ்க்கட்சிகளும் சற்று விலகியநிலையில், ஒரு புதிய அரசியற் தொடக்கத்தை மேற்கொள்ள வேண்



படிப்பகம்

www.padippakam.com


டிய நிலையில் இருப்பதால் சிறுபான்மை மக்களின் அரசியற் போராட்டங்களும் இன்னொரு வடிவத்தில் அதிகரிக்கலாம். (இது, சிறுபான்மைக் கட்சிகள் எப்படிக் கையாளப் போகின்றன என்பதைப் பொறுத்தே இருக்கிறது). வடக்குக் கிழக்கில் மீள் கட்டுமானம், புனர்வாழ்வு என்பவற்றுக்கு பெருமளவு நிதி தேவைப் படுகிறது. முன்னரைப்போல இந்தப் பிரதேசத்தை யாருடைய கண்களிலிருந்தும் அரசாங்கம் மறைத்து விட முடியாது.

அத்துடன், சர்வதேச ரீதியாகவும் அரசாங்கத்துக்கு ஏகப்பட்ட நெருக்கடிகள் உண்டு. அதிகாரத்துக்கு மீண்டும் வந்திருக்கும் மகிந்த ராஜபக்ஸவுடன் என்னதான் சமரசங்களைச் செய்தாலும் அடிப்படைமுரண்கள் நிழலாகவே இருக்கப்போகின்றன. இது அபிவிருத்திக்கான உதவிகள், கடன்களில் தாமதங்களை ஏற்படுத்தும். பொதுவாக எந்தத் தரப்பையும் லாவகமாகக் கையாளும் அரசியல் மரபு மகிந்தவின் கூட்டணியிடம் இல்லை என்று சொல்லப்படுவதுண்டு. போரின்போது இந்தக் கரடுமுரட்டுத் தனத்தை பிறர் அனுசரிக்கவே வேண்டியிருந்தது. அதற்குக் காரணம், புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற அவர்களின் தேவைகள். ஆனால், இனிமேல் அந்தமுறைமை சரிப்படாது.

ஆனால், இதையெல்லாம் சிலர் வேறுவிதமாகப் பார்க்கிறார்கள். மகிந்த ராஜபக்ஸவும் குழுவினரும் இப்போது நெருக்கடிகளால் தாம் சூழப்பட்டிருப்பதை நன்கறிவார்கள். இதனால், அவர் களுடைய உளவியல், முன்னரை விடவும் எதிர்நிலையில் - எச்சரிக்கையுணர்வு அதிகரித்த நிலையில் தான் இருப்பார்கள். அதாவது அபாயங்கள் தங்களை நோக்கி வருவதைத் தடுப்பதற்கான காரியங்களை முற்கூட்டியே செய்ய முனைவார்கள் என்கின்றனர் இவர்கள். எதிர்ப்பாளர்களை மடக்குதவற்கான உபாயங்களில் ஏற்கனவே தேர்ச்சி பெற்றிருக்கும் ராஜபக்ஸ வினர் இந்தத்தடவை அதை உச்சநிலையில் பயன்படுத்துவர் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர். அப்படியான நிலையில் பொதுமக்களும் எதிரணிகளும் மோசமான எதிர்விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். குறிப்பாக தன் மீது வரும் நெருக்கடியைத் திசை திருப்பி, மக்களின் நெருக்கடியாக மாற்றும் ஒரு உபாயத்துக்கும் ஜனாதிபதி போகக் கூடும். இது நாட்டின் ஜனநாயகத் துக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தும்.

ஆக, இப்போது இரண்டு பக்கமும் கூருள்ள ஒரு கத்தியைப் போன்ற அரசியல் நிலைமையே இலங்கைத் தீவில் உருவாகியிருக்கிறது. இதை மிக நுட்பமாகவும் விவேகமாகவும் கையாள வேண்டிய பொறுப்பில் அரசாங்கத்துக்கு வெளியே இருக்கும் சகல தரப்பினரும் இருக்கின்றனர். முன்னைய ஜனாதிபதிகளுக்கு வெளியே இருந்த அதிருப்தியாளர்கள், எதிர்ப்பாளர்களின் மனதிலிருந்த கோபம் வேறு. இப்போதிருக்கும் கோபம் வேறு. இது தீவிரம் நிறைந்தது. காட்டமானது. ஆகவே மக்களை ஒருங்கிணைப்பதற்கு அதிக சிரமப்படப் போவதில்லை.

குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகள் எதற்கும் அவசரப்படாமல் களநிலைமைகளைச் சரியாக மதிப்பிட்டு காரியமாற்ற வேண்டிய சந்தர்ப்பம் இது. தமிழ் பேசும்



மக்களின் அரசியல் உரிமை தொடக்கம் போரில் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் அந்த மக்களின் வாழ்க்கை தொடர்பான ஏராளம் முக்கிய மையப்பிரச்சினைகள் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் முன்னே இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை பற்றிய சிந்தனை இந்தக் கட்சிகளுக்கு இன்று அவசியம். ஒரு பக்கத்தில் தேசியப் பிரச்சினைகளில் அரசாங்கத்தை தீர்வு நோக்கி அழைத்துச் செல்வது. மறுபக்கத்தில் வடக்குக் கிழக்கின் பிரச்சினைகளில் தேசியத் தரப்புகளை அழைத்து வருவது. இந்த இரண்டு வகையான அணுகுமுறைகள் தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்குத் தேவையாக இருக்கின்றன. இதற்கு இந்தக் கட்சிகள் தமக்குள் கடக்க வேண்டிய பல தடைக்கோடுகளை இவை கடக்க வேண்டும். அப்படிக் கடக்கவில்லை என்றால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் என்பது இந்தக் கட்சிகளுக்கான பொறியாகி விடும்.

பெரும் நெருக்கடி வளையத்தால் சூழப்பட்டிருக்



படிப்பகம்

www.padippakam.com

கும் மகிந்த ராஜபக்ஸ ஒரு போதும் சும்மா இருக்கப் போவதில்லை. வியூகங்களை வகுப்பதிலும் போர்களை உருவாக்குவதிலும் வெற்றி கொள்வதிலும் அவர் ஒரு ஓயாத மனிதராக இருக்கிறார். அவரைத் தோற் கடிப்பதற்கான கணிதங்களோடு, வியூகம் அமைக்க வுள்ளவர்கள் அவரையும் விட வேகத்தோடும் விவேகத் தோடும் இருப்பது அவசியம். தவிர, அரசு என்ற பல மான ஒரு அதிகார மையம் ஜனாதிபதியின் கைகளில் இருக்கிறது. எனவே எதிர் வியூகம் என்பது சாதாரண மாக இருக்கப்போவதில்லை.

இங்கே வெற்றி தோல்வி என்பது தனி நபர்களுக் கிடையிலானது — அல்லது அமைப்புகளுக்கிடை யிலானது என்று அர்த்தப்படுத்தப்படவில்லை. மாறாக அரசாங்கத்தை மக்களின் நலன்களை நோக்கியும் பிரச் சினைகளை நோக்கியும் பணியவைப்பது, ஜனநாய கத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் போரிடுவது என் பதாகவே கொள்ளப்படவேண்டும். இதுதான் இன் றைய நிலையில் இலங்கைத் தீவின் மிகப் பெரிய சவால் களாக கருதப்படுகின்றன. இவையே இலங்கையின் ஆகப் பெரும் அச்சுறுத்தல்களாகவும் எதிர்காலம் குறித்த கவலைகளாகவும் பலருக்கும் இருக்கின்றன.

## அம்பலம்




யாழ்ப்பாணத்தில், சற்று இடைவெளிவிட்டு "அம்பலம்" ஆறாவது இதழ் (ஜனவரி, 2010) வெளிவந்துள்ளது. இந்த இதழின் முக்கிய அம்சம் "பாக்கு" என்பவர் எழுதியிருக்கும் ஒகஸ்ரர் போலின் அரங்கைப் பற்றிய கட்டுரையாகும். 1990 களில் ஒகஸ்ரா போலை (அவருடைய அரங்க முறைமையை) ஈழத்துக்குச் சிதம்பரநாதன் அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து சிலகாலம் போல் பற்றி யாழ்ப்பாணத்தில் பேசுவது வழக்கமாக இருந்தது. சற்று இடைவெளி விட்டு இப்போது மீண்டும் ஒகஸ்ரா போல் பேசப்படுகிறார். போலின் அரங்கு பிரதானமாக அரசியல் விழிப்புணர்வை அடிப்படையாகக் கொண்டது என்பதால், அவர் இன்னும் நீண்டகாலத்துக்கு ஈழத்தில் பேசப்படுவார்.

பாக்குவின் இந்தக் கட்டுரை, அதிகம் பேசாமல், சாராம்சத்தை மையப்படுத்தி, உட்தளங்களில் அதிக விரிவுடன் பல விசயங்களைச் சொல்கிறது. யாழ்ப்பாணத்தில் நாடக இயக்கம் ஒரு தேக்கநிலையில் - அரசியல் அரங்குக்கான தவிப்போடு இருப்பதால்தான் இப்படியொரு கட்டுரையை எழுதத் தூண்டியதோ என்று எண்ண வைக்கிறது. ஏனெனில், போலின் அரங்கை ஒட்டியதாக யாழ்ப்பாணத்தில் சிதம்பரநாதன் தன்னுடைய அரங்களிக்கைகளை நிகழ்த்தியதன் பின்னர் எழுதப்படும் இந்தக் கட்டுரையில் அது பற்றிய தொடக்கநிலை அறிமுகக் குறிப்புகள் மட்டுமே உண்டு. மற்றும்படி போல் தன்னுடைய அரங்கை எப்படி வடிவமைத்தார் என்பது பற்றிய ஒரு பாடக்குறிப்பாகவே அமைந்திருக்கிறது.

தவிர, "வேட்டை" என்ற குறும்படத்தைத் தயாரிக்கும்போது கிடைத்த அனுபவங்களை அதன் இயக்குநர் க.ரதிதரன் பதிவு செய்திருக்கிறார். கவிஞர் முருகையனைப்பற்றிய கருணாகரனின் கட்டுரை, ஜெயமோகனின் சுஜாதாவின் நாடகங்களைப்பற்றிய கட்டுரை, ந.சத்தியபாலனின் கவிதைகளைப் பற்றிய கட்டுரை, மரபுரிமைச் சொத்துகளாக இருக்கும் வெண்கல விளக்குகளைப் பற்றிய பாக்கியநாதன் அகிலன் ஆகியோரின் கட்டுரைகள் விரிவானவையாக உள்ளன. அத்துடன் யதீந்திராவின் கட்டுரை ஒன்றும் இந்த இதழில் இடம்பெற்றிருக்கிறது.

இந்த இதழில் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம், மலர்ச்செல்வனின் சிறுகதை. பின்நவீனத்துவப் பண்பில் எழுதப்பட்டிருக்கும் இந்தச் சிறுகதைதான் இந்த இதழில் தாக்கமாக அரசியலையும் சமகாலத்தையும் பேசும் ஒரேயொரு படைப்பு. மேலும் கோகுலராகவன், ஓட்டமாவடி அரபாத் ஆகியோரின் சிறுகதைகளும் உள்ளன. இந்த இதழில் அதிகமாக இருப்பது கவிதைகள்தான். சலனி, தீபச்செல்வன், கிண்ணியா எஸ். பாயிஸா அலி, தானா. விஷ்ணு, பெண்ணியா, யாதவன் கண்ணன், பா.அகிலன், எம்.ரிஷான் ஷெரிப், தபின், பஹிமா ஜஹான் என பத்துப் பேரின் பதினெட்டுக் கவிதைகள் உள்ளன. கூடவே பயணி, சண்முகன் ஆகியோர் எழுதிய பத்திக்கட்டுரைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பயணியின் பத்தி திசையில் வெளிவந்த தூவானம் பகுதியை நினைவூட்டுகிறது. ஆனால் இது மிகப்பயனுள்ள பத்தி. சற்றுத் தாமதமாக வந்திருந்தாலும் அழகாகவும் (முன்னர் வந்த சுபமங்களா இதழ்களை நினைவூட்டுகிறது) பல விசயங்களை உள்ளடக்கியதாகவும் அம்பலம் வந்திருப்பது மகிழ்ச்சியே. ஆனால் இந்த இதழை அவதானிக்கும்போது எரியும் பிரச்சினைகளிலிருந்து விலகியிருப்பதாகவும் விவாதங்களுக்கான புள்ளிகள், மையங்கள் குறைவாக இருப்பதாகவும் படுகிறது. அதற்கான விளக்கத்தை ஆசிரியர் தலையங்கம் சுட்டியிருக்கின்ற போதும் அது பொருத்தமானதாகப் படவில்லை.

அம்பலம், 41, இராஜா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஜனநாயகத்தையும் பன்முகத் தன்மையையும் உறுதிப்படுத்த ஓர் அரசியல் வலுமிக்க கூட்டணி தேவை

- ஒமர்



விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றிக்கு பகாரமாக சிங்கள மக்களின் பெரும்பான்மையினர் மகிந்த ராஜபக்சவின் மறுபடியும் ஜனாபதியாக்கியுள்ளனர். தற்போதுள்ள ஜனாதிபதி முறையினை இல்லாமலாக்கப் போவதாக 2005 இல் ஜே.வி.பி இன் ஒத்துழைப்புடன், வெற்றி பெற்ற மகிந்த தரப்பு அந்த வாக்குறுதியினை பாதுகாக்கத் தவறியது மாத்திரமல்ல, இதற்கு மேல் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப் பது என்ற பேச்சுக்கு இடமேயில்லை என பிரகடனம் செய்து விட்டது. மறுபுறம் தமிழ், முஸ்லிம், மலையத் தமிழ் மக்கள் செறிவாகவுள்ள ஆறு மாவட்டங்களிலும் மகிந்த தோல்வி யைத் தழுவியுள்ளார். சிரித்துச் சிரித்தும், தமிழில் பேசிய வாறும் அடுத்த கட்டப் பழிவாங்குதல் அடுத்தடுத்து நடை பெறும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. கிண்ணியா, மூதூர் போன்ற பிரதேங்களில் இரவு நேர மீன்பிடி தடைசெய்யப் பட்டுள்ளது.

ஆறு வருடங்கள் அல்ல எட்டு வருடங்கள் ஆதிக்கத் தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு உச்ச நீதிமன்றினை நாடப் போவதாகவும் அறிவிக்கப்பட்டு இப்போது கிட்டத்தட்ட ஏழு வருடங்கள் ஏகபோக அதிகாரத்தில் வீற்றிருப்பது உறுதி யாகிவிட்டது. லங்கா பத்திரிகை சீல் வைக்கப்பட்டது. நல்ல வேளை நீதித்துறைக்கு இன்னமும் சற்று உயிர் இருப்பதனால் தடை நீக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலின் வெற்றியைத் தொடந்து அரசியல் எதிர்ப்பாளர்களின் மீதான பழி வாங்குதல் ஆரம்பமாகிவிட்டது. அரசியல் விமர்சனங்களுக்கு ஆப்பு வைக்கும் முயற்சிகள் தீவிரமயப் படுத்தப்பட்டுள்ளது. பொன்சேகா பாதுகாப்புகள் அனைத்தும் நீக் கப்பட்டு தனியாளாக்கப்பட்டுவிட்டார். அவர் எதிர்நீச்சல் போட்டுத் தப்பிப்பிழைப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். நிச்சயமாக அவருக்கு எதிரான குற்றப்பத்தி ரிகை தயாராக்கப்பட்டுக் கொண்டிருக்கும். இதனால்தான் அவர் நாடுகடந்து செயற்படாதவாறு தடுக்கப்பட்டுள்ளார். அவருடன் தோளுடன் தோள் நின்று போரிட்ட இராணுவ அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தம்முடன் இருப்பவர்கள் யாவரும் தேசாபிமானிகள் மற்றவர்கள் அனைவரும் தேசத்துரோகிகள் என்ற மகிந்த ஆளுங்குழுமத்தின் கூராயுதம் தேர்தலுக்கு முன்பும் பின்பும் மிகவும் இயல்பாக அரசியல் எதிரிகளை குறிவைப்பதற்குப் பயன்படுத்தப்படு கின்றது.

மங்கள சமரசிங்க கூறுவது போல, தேர்தல் முடிவுகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படும் கணணிப் பொறிமுறையில் மோசடி செய்யப்பட்டு மகிந்த ஜனாதிபதியாக்கப்பட்டி ருப்பது உண்மையானால், இதற்கு



படிப்பகம்

www.padippakam.com

மேல் ஜனநாயக முறைமை என்பது இலங்கையில் கேள்விக்குறியாகவே இருக்கும். மேலும் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிர்ப்பாளர்கள் குறிப்பாக ஜே.வி.பி.யினர் பழிவாங்கப்படுவார்கள் எனின் ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்ட அவர்களோ அல்லது அவர்களைப் போன்ற வேறு சக்திகளோ மறுபடியும் ஆயுதப் போராட்டம் நோக்கி தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஜனநாயக பூர்வமான நல்லாட்சியின் மீது நம்பிக்கையிழக்கப்படுகின்ற போது ஆயுத வழிமுறையின் மீது நம்பிக்கையேற்படுவது தவிர்க்க முடியாததாகும். தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாறு ஆயுத வழிமுறைக்குத் தள்ளப்பட்டதற்கான பொறுப்பினை அரச பயங்கரவாதம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனையொத்த விளைவைத்தான் தென்னிலங்கையும் விரைவில் மீண்டும் சந்திக்க வேணடியிருக்கும்.

2010 ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கு மற்றும் மத்திய பிரதேசங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான தமிழ், முஸ்லிம், மலையக தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ச ஆட்சியின் மீதான தமது ஆழமான அச்சத்தை



வெளிப்படுத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளுடனான இரண்டு தசாப்த கால யுத்தத்தினை முடிவிற்குக் கொண்டுவந்து மேற்படி மூன்று சமூகங்களின் மீதான அரசபடைகளின் கெடுபிடிகளையும் விடுதலைப் புலிகளின் கெடுபிடிகளையும் முடிவிற்குக் கொண்டு வந்ததற்குப் உபகாரமான முஸ்லிம், தமிழ் மற்றும் மலையத் தமிழ் மக்கள் உண்மையில் மகிந்த ராஜபக்சவிற்கு வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் வெளிப்படுத்திய செய்தி வேறுவிதமாக உள்ளது. மகிந்த ராஜபக்ச, ஹெல உறுமய கூட்டின் ஆட்சியின் மீதான ஆழமான அச்சம்தான் அது. விடுதலைப் புலிகளின் தொடர் தோல்வி ஆரம்பித்த 2007 தொடக்கம் 2009 யுத்தம் முடிவடைந்த பின்னுள்ள ஆறு மாதங்கள் வரைக்கும் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட மேலாதிக்க நகர்வுகள் இத்தகைய ஆழமான அச்சத்தை இந்த மக்களுக்கு கொடுத்துள்ளது.

குடும்ப ஆட்சி ஒழிக்கப்படும், ஜனநாயகம் மீட்டெடுக்கப்படும், வீண் விரயம் ஒழிக்கப்படும் என்ற பொன்சேகா வின் கொள்கைகளுக்கு மேற்படி தமிழ், முஸ்லிம், மலையத் தமிழ் சமூகங்கள் வாக்களித்துள்ளனர் என்பதைவிட, எண்ணிக்கைச் சிறுபான்மைச் சமூகங்களுக்கு ஒரு மூச்சுவிடும் அவகாசம் கிடைக்கும் என்ற அற்பமான எதிர்ப்புத்தான் அவர்களின் வாக்களிப்புக்குக் காரணம் என்பது நமது கள ஆய்வுகளின் போது கிடைத்த பொதுவான கருத்துக்களாகும். (சில தரப்பினர் இதனைத் தந்திரோபாய ரீதியான வாக்களிப்பு என்றும் கூறுகின்றனர்)

நான்கு வருட மகிந்த குடும்ப ஆட்சி இந்த சமூகங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆக தம்மை ஆள்வதற்கான ஆணையினை மகிந்த ஆளுங்குழுமத்திற்கு இந்த சமூகங்கள் வழங்கவில்லை. இது வெளிப்படையான உண்மை. மகிந்த இதனை ஏற்றுக் கொள்வதுடன், இந்த பிரதேசங்களில் தனக்கு வாக்களித்த மக்களும்



இருக்கின்றார்கள் எனவே குறிப்பிட்ட பிரதேசங்களின் மீள்கட்டமைப்பு, மற்றும் நீண்டகால அபிவிருத்திக்கு தான் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டினை மேற்கொள்ளப் போகின்றாரா அல்லது அரசியல் பழிவாங்கலை செய்யப் போகின்றாரா என்பது தான் கேள்வி. இரண்டாவது நிலைப்பாட்டினை எடுப்பாராயின், அடுத்து வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலையும், ஏழு வருடங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குழுத்தின் ஆட்சியையும் எப்படி முகங்கொடுக்கப் போகின்றார்கள் என்பதை எண்ணிக்கைச் சிறுபான்மையான முஸ்லிம், தமிழ், மலைத் தமிழ் சமூகங்களும் மிகவும் எச்சரிக்கையுடன் தீர் மானிக்க வேண்டும்.

மகிந்த ஆளும் குழுமத்திற்கு இரண்டு விதமான சிந்தனைப் போக்குகள் உள்ளது. ஒன்று ஒற்றை ஆட்சி



படிப்பகம்

www.padippakam.com

முறையினை உறுதிப்படுத்திக் கொள்வது: வடக்கு கிழக்கில் எண்ணிக்கைச் சிறுபான்மை சமூகங்களின் இன ரீதியான அரசியலை முடிவிற்குக் கொண்டு வருவது: இன ரீதியான கட்சிகளைப் பலவீனப்படுத்துவது: சனத்தொகை வீதத்தை மாற்றியமைத்து இன ரீதியான தனித்துவத்தை இல்லாமல் செய்வது, சித்தாந்த ரீதியில் சிங்கள சமூகத்திற்கு இருக்கும் அச்சத்தைப் போக்கி அவர்களைத் திருப்தி செய்து, மிகப் பெரும் பாலான சிங்கள மக்களின் வாக்குப் பலத்தில் ஆட்சியதி காரத்தை என்றென்றைக்கும் உறுதிப்படுத்திக் கொள்வது. இரண்டாவது போக்கு, நிலவுகின்ற ஜனநாயக முறைமைகளையும் அரசியல் எதிர்பாளர்களையும் ஆட்களை அச்சுறுத் தியும் விலைக்கு வாங்கியும் சலுகைகளை வழங்கியும் தமக் கான உறுதியான அரசியல் தளத்தினை நிறுவிக் கொள்வது இந்த வழிமுறையானது இலங்கை தழுவிய அளவில் மேற் கொள்ளப்படுகின்றது.

இப்படிப்பட்ட ஒரு மோசமான அரசியல் சக்தியை எதிர்கொண்டு முறியடிப்பதில் இரண்டு வகை மாற்று அரசியல் சக்திகள் களத்தில் உள்ளன. ஒன்று, வழமையான சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளும் அதன் கூட்டுகளும். இரண்டாவது, மெய்யான முற்போக்கு, ஜனநாயக சக்திகள் இவர்கள் முதலாவது தரப்பை விடவும் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளனர்.



எதிரியின் கொடூரத்தன்மையைக் கருத்தில் கொண்டு, சமயங்களில் இந்த இரண்டு பிரிவினர்களுக்கு இடையிலும் கூட தற்காலிகமான ஒரு ஐக்கிய முன்னணி தேவைப்படலாம். அது போன்ற ஒன்றிற்குத்தான் மக்கள் விடுதலை முன்னணி போன்ற அமைப்பு முயற்சிக்கின்றது.

ஆக, அரசியல் எதிரி மோசமானவன் என்பதை இனங் கண்டு கொண்டால், அவனைத் தொலைத்துக் கட்டுவதற்கு பலமான கூட்டணி அவசியமாகும். கூட்டணியின் பிரதான இலக்கு எதிரியை எவ்வளவு விரைவாக ஒழித்துக் கட்ட முடியுமோ அவ்வளவு விரைவாக அதனைச் செய்து முடிக்க வேண்டும். இந்த பிரதான இலக்கினை அடைவதற்காக எந்தவகையான விட்டுக் கொடுப்புகளையும் செய்ய கூட்டணியின் உறுப்பினர்கள் தயாராக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் வழவழா கூட்டணி ஒருபோதும் சரி வராது. இக் கூட்டணி மூலமாக எனக்கு என்ன கிடைக்கும் என்பதை விட பொதுவில் மக்களுக்கு என்ன கிடைக்கும், நாட்டுநலனுக்கு என்ன கிடைக்கும் என்பதுதான் கூட்டணிக் கான அடித்தளமாக இருக்க வேண்டும். இவ்வாறாக பலமான கூட்டணியினை அமைப்பது முடியாது போனால், எதிரி உங்கள் ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்தி தனித்தனியாக ஒழித்துக் கட்டி விடுவான். இதற்கு ஈரமான உதாரணம், 1987ம் ஆண்டு, விடுதலைப் புலிகள் டெலோவிற்கு எதிராக துப்பாக்கி

**2010 ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கு மற்றும் மத்திய பிரதேசங்களைச் சேர்ந்த பெரும்பான்மை யான தமிழ், முஸ்லிம், மலையக தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ச ஆட்சியின் மீதான தமது ஆழமான அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளுடனான இரண்டு தசாப்த கால யுத்தத்தினை முடிவிற்குக் கொண்டுவந்து மேற்படி மூன்று சமூகங்களின் மீதான அரசபடைகளின் கெடுபிடிகளையும் விடுதலைப் புலிகளின் கெடுபிடிகளையும் முடிவிற்குக் கொண்டு வந்ததற்குப் உபகாரமான முஸ்லிம், தமிழ் மற்றும் மலையகத் தமிழ் மக்கள் உண்மையில் மகிந்த ராஜபக்சவிற்கு வாக்களித்திருக்க வேண்டும்.**

களை திருப்பிய கணமே, இதர தமிழ்ப் போராட்ட அமைப்புக்கள் தமக்குள் வலுவான கூட்டணியினை அமைத்து தமது சக்திகளை ஒருங்கு திரட்டியிருந் தால், விடுதலைப்புலிகளின் அழித்தொழிப்பு போக்கினைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம், விடுதலைப் போராட்டத்தின் திசைவழியும் இன்று வேறு விதமாக இருந்திருக்கக் கூடும்.

இன்று மகிந்த ஆளும் குழுமம் அனைத்து வகையான ஜனநாயக மீறல்களையும் செய்து கொண்டு அதன் உச்சமாக, தேர்தல் முடிவுகளை கணணி நுட்பத்தைப் பயன்படுத்தி அல்லது அச்சுறுத்தி வெற்றியை தன்பக்கம் திருப்பியிருக்கும் என்பது உண்மையானால், இக் குழுமத்தின் ஆபத்தான பண்பினை இதர அரசியல் கட்சிகள் சரியாகக் கணிப்பிட்டுக் கொள்ள வேண்டும். முதலாவதாக வலுவாக கூட்டணியினை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆதாரங்களைக் கொண்டு பரந்துபட்ட மக்கள் முன்பாக, குறிப்பாக சிங்கள மக்கள் முன்பாக அம்பலப்படுத்தல் வேண்டும், சர்வதேச சமூகத்திற்கு உண்மைகளைக் கொண்டு செல்ல வேண்டும். மக்களைத் தொடர்ச்சியாக வீதிக்கு இறக்க வேண்டும். இவற்றைச் செய்யத் தவறினால் மிக விரைவில் எதிர்க் கட்சிகள் ஒவ்வொன்றாக அழித்தொழிக்கப்பட்டு விடும். இதற்கென அரச பயங்கரவாதத்தினால் பல்வேறு வழிமுறைகள் - சாம, பேத, தான, தண்டம் பயன்படுத்தப்படும். இந்த வழிமுறைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன. இப்போதும் கூட எதிரணிகள் விழித்துக் கொள்ளாவிட்டால், அவர்களின் அரசியல் முடிவு இப்போதே எழுதப்பட்டுவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com



# புதைக்கப்பட்டவர்களின் மௌனம்

சித்தாந்தன்

ஒரு குழலின் ஆழத்துள் இறங்கும் குருதி
இசையை மூழ்கடிக்கிறது
அதன் கதவுகளை மூடி
சுரங்களை இருளடையச் செய்கிறது.

பூர்வகத்தின் அதிபுனைவுக் கதைகளை
இசையாக வாசிப்பவர்கள்
பிணங்களைப் புணருகிறார்கள்
நிணத்தைப் பருகுகிறார்கள்
மலத்தைச் சுற்றும் ஈக்களாய் இரைகிறார்கள்
உண்மையிலவர்கள்
காற்றின் நறுமணத்தை முகர்வதில்லை.

நண்பனே
இலைகளாயும் கனிகளாயும்
உதிர்ந்துள்ள
உன்னையும் என்னையும் பற்றி
இசையின் துளியாக யாரும் பேசவில்லை
மலைகளில் உறைந்திருக்கிறது சரித்திரம்
சூரியனோ
பல நூறு பிணங்களாய்ச் சிதறிக்கிடக்கிறது.

நம்மில் யார்
காலப் பிரக்ஞை ஊறிய முதிர்சுவடுகளின்
ஆழ்வேர்ச் சுனையைத் திறப்பது.

ஒரு சொட்டுக் கண்ணீரை வியர்வையை
ஒரு வேளை உணவை பாதைகளை
குழந்தைகளுக்கான தாலாட்டை
நிலாவெழும் வானத்தை
விதியென முள்வலைக்கு இரையாக்கிவிட்டு
மறுக்கப்பட்ட சொற்களின் வலியறியாது
மனிதர்கள் அலைகிறார்கள்.

நண்பனே
கடவுளின் பானத்தில் சிதறிய துளியை
அவரின் உணவின் பருக்கையை
நீயோ நானோ உண்ணவில்லையாயினும்
சரித்திரம் உண்மையைத் தின்றுவிட்டது.

வானம் விரியும் மையத்தில்
அலகு குத்தும் பறவை
சரித்திரத்தைக் குருதியென உறிஞ்சுகிறது
தாழாத சிறகுகளினால் தன் ஒலியை எழுப்புகிறது.

22.05.2007



படிப்பகம்

www.padippakam.com





சித்தாந்தன்

# காய்ந்துபோன சுனையூற்றின் அடியில் உக்கியிருக்கும் புன்னகை

திறந்து வைத்திருக்கிறேன் என் தெருவை
நீயோ புறக்கணித்துத் திரும்புகின்றாய்.

நண்பா
யன்னல் கண்ணாடிகள் உடைந்து
சில்லுகளாய்ச் சிதறியிருக்கும் வீட்டின்
உட்புறமாய்
இன்னும் மீதமாயிருக்கிறது அந்திமப் புன்னகை!

எதற்காக
என் கைகளை விடுவித்தாய்
புழுக்களாய் நெளிகின்றன உன் சொற்கள்
தேகத்தில்.

மனந்திறக்காத வீட்டின் வரைபடத்தில்
தொங்கும் தூக்குக் கயிற்றில்
சருக்கிடப்பட்டிருப்பது
நீயுமல்ல நானுமல்ல நம் நினைவுகள்

பருதி தாண்டாத சில பொழுதுகளை
சுமந்திருந்தோம் தோள்களில்.

முடிவற்ற பேருந்துப் பிரயாணத்தில்
யன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்த
என்முகத்தில் அறைந்த காற்று
பரிசுத்தமற்ற மனத்தின் இழைகள்
அறுந்து போனதாய்ச் சொல்லிச் சென்றது.

நீ போய் யாரிடமாவது சொல்லப்போவதில்லை
கருணையின் கடலளவு வலியை

நான் காலியாக இருக்கும் நாற்காலியைப் பார்த்துப்
புன்னகை செய்கிறேன்.

என் தெருவில் நடந்து செல்கிறது
யாரோ வளர்க்கும் நாய்.





படிப்பகம்

www.padippakam.com

திறனாய்வு



# தாமரைச்செல்வி

- கருணாகரண்

1970களின் பிற்பகுதி. ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துகள் அதிகமாக வாசிக்கப்பட்ட காலம் அது. இதற்கான வாய்ப்பை வீரகேசரி உருவாக்கியிருந்தது. அப்போது ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்களை வீர கேசரி, மாதம் ஒரு நாவல் என்ற அடிப்படையில் வெளி யிட்டு வந்தது. அதில் பல புதிய எழுத்தாளர்களும் அறி முகமானார்கள். அப்பொழுதுதான் தாமரைச்செல்வி யின் "சுமைகள்" என்ற நாவலையும் வாசித்தேன். அந்த நாவலை வாசிக்கும்போது எனக்கு வயது இருபது அல் லது இருபத்தொன்றாக இருக்கலாம். அந்த நாவல் அதி கம் என்னைக் கவர்ந்ததற்கு இரண்டு காரணங்களிருந் தன. ஒன்று, நாவலில் இடம்பெறும் களத்தின் அறி முகம். அடுத்தது, எழுதிய தாமரைச்செல்வி எங்கள் ஊருக்கு அண்மையில் இருந்தார் என்பது.

இதற்குப் பின்னர் தாமரைச்செல்வியின் எழுத்து களில் ஒரு கூடுதல் அவதானிப்பு. அவர் அநேகமாக விவசாயிகளின் பிரச்சினைகளை, விவசாயக் கூலிகளின் பிரச்சினைகளையே எழுதினார். நாங்களும் ஒரு விவ சாயக் குடும்பம் என்பதால் எங்களின் பிரச்சினைகள், எங்களுடைய கதைகளாகவே இருந்தன அவருடைய கதைகள். இதனால், எங்களின் குடும்பத்தில் தாமரைச் செல்வியின் எழுத்துகளுக்கு உச்ச வரவேற்பு. அவரு டைய சிறுகதைகள் பத்திரிகைகளில் வரும்போது இந்த வரவேற்பின் உற்சாகத்தை எங்களின் வீட்டில் காண லாம்.

இந்தக் காரணங்களால் தாமரைச்செல்வியைச் சந்திக்க வேணும் என்று விரும்பியிருந்தேன். எங்கள் சித் தப்பா, பெரியக்கா இருவருக்கும்கூட அந்த ஆவலிருந் தது. அந்த நாட்களில் நாங்கள் தாமரைச்செல்வி இருந்த பரந்தனுக்கு அடிக்கடி செல்வது வழக்கம். பரந்தனில் இருந்த சந்தைக்கு எங்களின் தோட்டத்துப் பொருட் களைக் கொண்டு வருவோம். அந்தச் சந்தையிலிருந்து ஒரு கிலோ மீற்றருக்குள்தான் - குமரபுரத்தில் - தாம ரைச்செல்வியின் வீடிருந்தது. ஆனால், ஏனோ அவ ரைச் சந்திக்க வாய்த்ததில்லை. சந்திக்க வேணும் சந் திக்க வேணும் என்று காலம் கடந்ததே தவிர, அவரைக் காண்பதற்கு வாய்க்கவில்லை. 1980 களில் நான் வேறு களங்களுக்கு மாறிவிட்டேன். நாட்டு நிலைமைகளும் மாறியிருந்தன. தாமரைச்செல்வியின் எழுத்துகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. அவர் ஏராளமாக எழுதிக் கொண்டிருந்தார். வாழ்க்கையின் பாதிப்புகள், சூழலின் நெருக்கடிகள், சனங்களின் மனதிலிருந்த உணர்வுகள் என எல்லாவற்றையும் அவர் எழுதினார். அவருடைய கதைகள் யதார்த்தச் சித்திரிப்புடையவை என்பதால் அவை பரந்த வாசிப்புக்கும் கூடுதலான கவனத்திற்கு முரியனவாக இருந்தன. அத்துடன் வன்னிப் பகுதியின் - கிளிநொச்சிப் பிரதேசத்தின் அடையாளத்தை அவரு டைய கதைகள் மேற்கொண்டு வரும்போது அது இன் னும் கூடுதலான கவனத்தைப் பெற்றன. அறியப்படாத பிரதேசத்தின் அறியப்பட வேண்டிய கதைகளாக அவை இருந்ததே இதற்குக் காரணம்.

"தாமரைச்செல்வியின் கதைகளில் நெல்லின் வாச னையை, வயல் நிலத்தின் மணத்தை, விவசாயக் குடும் பங்களின் விருப்பங்களை, அவர்களின் தேவைகளை, அவர்களுடைய பிரச்சினைகளை, அந்தக் குடும்பங் களின் சந்தோசங்கள், துக்கங்களை எல்லாம் காணமுடி யும்" என்று செம்பியன் செல்வன் அடிக்கடி சொல்வார். இது மிகச் சரியான கூற்றே. தாமரைச்செல்வியின் குடும்பமும் ஒரு விவசாயக் குடும்பமே. அவருடைய வாழ்க்கை அனுபவங்கள் முழுவதும் அந்த விவசாயக் குடும்பச் சூழலில் பெற்றுக் கொண்டவையே. ஆக, அவருடைய பெரும்பாலான கதைகளும் தன்னனுப வத்தை அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொண்ட வையே. என்றபடியால் அந்தக் கதைகள் அதையொத்த அனுபவப் பரப்பைக் கொண்டவர்களிடம் அதிக ஈர்ப் பைப் பெற்றன. தவிர, தாமரைச்செல்வியின் கதை சொல்லும் முறையும் மிகச் சாதாரணமானது. ஆனால், நுட்பங்கள் நிறைந்தது. பேராசிரியர் சிவத்தம்பி அடிக்கடி சொல்வது மாதிரி, "மொடேர்ண் ஆர்ட் டைப் பார்ப்போருக்கு அதை மிகச் சுலபமாக வரைந்து விடலாம் போலத் தோன்றும். ஆனால், நாம் நினைப் பதைப்போல அதை அத்தனை இலகுவாக வரைந்து விடமுடியாது. ஏனெனில், அது உச்சமான படைப்பாற் றலின் வெளிப்பாடு என்பதை அதை வரையத் தொடங் கும்போதே நாம் உணர்ந்து கொள்வோம்" என்பதைப் போல தாமரைச்செல்வியின் கதைகளைப் படிக்கும் போது அதைப்போன்று, ஏராளம் கதைகளை நாம் எழுதிவிடலாம் போலத் தோன்றும். ஆனால், நாம் அப் படி எழுதமுனைந்தால் அது அத்தனை எளிய விசய மில்லை என்று புரியும். இதுதான் தாமரைச்செல்வியின் கதைகளின் தரத்தையும் நுட்பத்தையும் உணர்த்துகின்ற விசயம்.

மிக எளிய மொழியில், மிகச் சாதாரணமான முறையில் அவர் தனது கதைகளைச் சொல்லி விடுவார். யதார்த்தவாத எழுத்துமுறையிலேயே நின்றியங்கியவர் தாமரைச்செல்வி. அந்த எழுத்து முறையில் நின்றுதான் அவர் இப்போதும் எழுதுகின்றார். தாமரைச்செல்வி எழுதத் தொடங்கிய பின்னரான 1970 – 2010 வரை யான இந்த நாற்பது ஆண்டுகாலத்தில் தமிழ்ச்சூழலில் பல எழுத்துமுறைமைகள், கோட்பாடுகள் எல்லாம் வந்து விட்டன. பல பரிசோதனை முயற்சிகள் நடந் திருக்கின்றன. பல படைப்பாளிகள் புதிய வடிவங் களில், புதிய கோட்பாடுகளில் எழுதி வெற்றியடைந் திருக்கிறார்கள். இதனால் யதார்த்தவாதம் செத்துவிட் டது என்ற குரல்கள் கூட எழுந்தன. ஆனால், இன்னமும்



படிப்பகம்

www.padippakam.com








யதார்த்தவாதம் தன்னுடைய பலத்தை இழக்காமலிருக்கிறது. யதார்த்தவாதத்தில் பல படைப்பாளிகள் மிக உச்சமான படைப்புகளைத் தந்திருக்கிறார்கள். அவர்களைப்போல, எத்தகைய எதிர்க்குரல்கள், மாற்றுப் படைப்பு முறைமை என்றெல்லாம் புதிய அலைகள் வந்தபோதும் அவற்றைப் பற்றிய கவலைகளில்லாமல் தனக்கெனச் சாத்தியப்பட்ட முறைமையில் எழுதிக் கொண்டிருந்தவர் தாமரைச்செல்வி. அதேவேளை அந்தவகைப் படைப்புகளை அவர் புறக்கணிக்கவும் இல்லை.

பொதுவாகவே தாமரைச்செல்வியிடம் இருக்கும் ஒரு இயல்பு, விவாதங்கள், சர்ச்சைகள், குற்றச்சாட்டுகள், அதிதீவிர நிலைப்பாடெடுத்தல் போன்றவற்றில் இருந்து விலகியிருத்தலாகும். அவர் எழுதத் தொடங்கிய காலம் இலங்கையில் பெண்கள் அமைப்புகள், பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வுகள் மேற்கிளம்பத் தொடங்கிய காலகட்டம். என்றபோதும் இந்த அமைப்புகள் எதிலும் அவர் நேரடியாகத் தொடர்போடிருந்தார் என்பதற்கான ஆதரங்களைக் காண முடியவில்லை. ஆனால், பெண்கள் பற்றி, பெண் அடையாளம் பற்றி, பெண்களின் பிரத்தியேகமான பிரச்சினைகளைப் பற்றி அவர் நிறைய எழுதியிருக்கிறார். நானறிந்தவரையில், இனப்போரில், இடம்பெயர்வுகளில் அதிகமதிகம் பிரச்சினைகள் பெண்களுக்கே என்று இலக்கியத்தின் வழி (சிறுகதைகளில்) வெளிப்படுத்திய முக்கியமான படைப்பாளி தாமரைச்செல்வி. இந்த வகையில் அவருடைய பதிவுகள் முக்கியமானவை. ஒரு காலகட்டத்தின், ஒரு பிரதேசத்தின் (போர்ப்பிரதேசத்தின்) சமூக வரலாற்று ஆவணங்கள் அவை. பெண்ணுரிமை பற்றிய பிரக்ஞை அவரிடம் அதிகமுண்டென்பதற்கு அவருடைய எழுத்துகள் ஆதாரம். ஆனால், பெண்ணுரிமை பற்றிய விவாதங்கள், சர்ச்சைகள், மற்றும் பெண்கள் அமைப்புகளுடன் அவர் எப்போதும் நேரடியாகத் தொடர்போடிருந்து அவற்றில் ஈடுபடவில்லை. மேற்குறிப்பிட்ட அவருடைய பொது இயல்பு இதற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும்.

தாமரைச்செல்வியின் காலகட்டத்தில் எழுதிய ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், பவானி, தமிழ்ப்பிரியா, ஜனகமகள் சிவஞானம், குறமகள் போன்றோரில் மற்றவர்களை விட்டு தாமரைச்செல்வி விலகிய இடம் அவருடைய கதைப்புலமும் தொனியும் நிலையும் நிலைப்பாடுமாகும்.

தார்மீக அடிப்படைகளை நோக்கிய, மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்ட படைப்புலகத்தை தமது எழுத்துக்கு அவர் ஆதாரமாகக் கொண்டிருந்தபோதும் அவர் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்த எந்த இலக்கியப் போக்கிலும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை தாமரைச்செல்வி. மட்டுமல்ல, எந்த இலக்கிய அணிகளிலும் அவர் சேர்ந்திருந்ததுமில்லை. அப்பொழுது முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தேசிய கலை, இலக்கியப் பேரவை, எஸ்.பொவின் நற்போக்கு அணி, அலை, பூரணி, சமர் இதழ்கள் சார்ந்த அமைப்புகள் எனப் பல இலக்கிய இயக்கங்கள் இருந்த போதும் எதிலும் தாமரைச்செல்வி தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. இது ஈழச்சூழலில் ஒரு அபூர்வமே. அத்துடன் எந்த வரையறைகளையும் தன் எழுத்துக்கும் இயக்கத்துக்கும் அவர் வைத்துக்கொள்ளவில்லை. அவருடைய நோக்கமெல்லாம் சனங்களிடம் அதிகமாகச் சென்று சேரக்கூடிய ஊடகங்களின் வழியில் தன்னையும் தனது எழுத்துக்களையும் கொண்டு செல்வதே. இதில் அவர் அதிக வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால், அவர் எந்த அணிகளிலும் சேரந்து கொள்ளாதிருந்ததன் காரணமாக அவரை விமர்சன அரங்கில் கவனப்படுத்துவதற்கு சற்றுக் காலம் பிடித்தது. தாமரைச்செல்வியின் கதைகள் ஈழத்துப் படைப்புச் சூழலில் தவிர்க்க முடியாதவை என்று உணரப்படும்வரை அவர் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், இதுபற்றி அவர் என்றும் கவலைப்பட்டதாக இல்லை. அவருடைய கவனம் எல்லாம் தனது எழுத்துகள், அவற்றை வாசிக்கும் வாசகர்கள் என்பதே. இறுதியில் அவர் பெரும் வெற்றியைப் பெற்றார்.

“தாமரைச்செல்வி எழுதத் தொடங்கிய பின்னரான நாற்பது ஆண்டுகால சமூக இயக்கங்கள் எதிலும் இணைந்து கொள்ளாமல், அல்லது அவற்றைப் பற்றிய எதிர்வினைகள், அபிப்பிராயங்களில்லாமல் எப்படி ஒரு படைப்பாளியால் இருந்திருக்க முடியும்?” என்று ஒருவர் கேட்டார். ஏனெனில் இந்தக் காலகட்டம் என்பது ஈழத்தின் சமூக, அரசியல் விசயங்களில் பெருந்தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. இவற்றில் சேர்ந்தியங்காமல் அல்லது, இவற்றுடன் மிகக் குறைவு. அதிலும் வடபகுதியில் எந்த முத்திரையும் இல்லாத படைப்பாளிகள் இருந்திருக்கவே முடியாது. ஆனால், விதிவிலக்காக இருந்த ஒரு சிலரைப் போல தாமரைச்செல்வி இருந்தார். என்றபோதும் எதிலும் ஒட்டிக் கொள்ளாமல், எரியும் பிரச்சினைகளில் சம்மந்தப்படாமல், எதிர்வினையாற்றாமல் அவர் இருக்கவில்லை. சமூக ஏற்றத்தாழ்வுகள், இனப்பிரச்சினையின் பாதிப்புகள், இராணுவ அதிகாரம், போர், அகதி வாழ்க்கை, தமிழ்பேசும் மக்களின் அரசியல் எண்ணக்கரு என்று அவர் எல்லாவற்றிலும் தன்னைப் பிணைத்துக் கொண்டு எழுதினார்.

குறிப்பாக ஆனையிறவு, பரந்தன் பகுதிகள் ஒரு காலத்தில் இராணுவ வலயங்களாக இருந்த 1985 களிலேயே இடப்பெயர்வுகளையும் அழிவுகளையும் சந்திக்கத் தொடங்கினார். இதனால் அவர் எழுதிய கதைகளின் சேகரிப்புகளையே அவர் இழந்திருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் தாமரைச்செல்வியின் எழுத்து ஊக்கம் தணிந்து விடவில்லை. இது இன்னும் ஊக்கம் பெற்றது. இதற்கு அவருடைய குடும்பச் சூழல் ஒரு பிரதான காரணம் என்று சொல்லலாம். அவர் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதும் அவருடைய குடும்பத்தினர் அவருடைய இலக்கிய ஈடுபாட்டையும் எழுத்து முயற்சியையும் எப்போதும் ஊக்கப்படுத்தியே வந்திருக்கின்றனர். தாமரைச்செல்வி எழுதத் தொடங்கிய தொடக்க காலத்தில் அவருடைய தந்தை அவரை ஊக்கப்படுத்தியிருக்கிறார். பின்னர் அவருடைய சகோதர, சகோதரிகள் ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள். அதன்பின்னர் கணவரின் ஊக்கம், பிள்ளைகளின் ஊக்கம், ஒத்துழைப்பு என்று இந்த உற்சாகமூட்டல் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

தாமரைச்செல்வியின் குடும்பம், கூட்டுக் குடும்ப அமைப்பைக் கொண்டது. பொதுவாக விவசாயக் குடும்பங்களில் இது தவிர்க்க முடியாத ஒரு அம்சமாக இன்னும் பல இடங்களிலும் இருக்கிறது. அது விவசாய வாழ்க்கையின் தேவை. இந்த அமைப்பு முறையில் கனிவும் பொறுமையும் நிதானமும் முக்கியமானவை. தாமரைச்செல்வி குடும்பத்தில் மூத்தபெண். இயல்பாகவே குடும்பத்தில் மூத்த பெண் - ஏனைய சகோதரர்களுக்கு "அக்கா" என்ற வகையில் வகிக்கின்ற பாத்திரம் தமிழ்க் குடும்ப அமைப்பில் கனிவு நிரம்பியது பொறுப்புகள் அதிகமுள்ளது. தாமரைச்செல்வியின் கனிவு அவருடைய குடும்பத்தின் ஒரு சிறப்படையாளம் என்பதைப் பின்னாளில் அவருடைய குடும்பத்தினருடன் நெருங்கிப்பழகும்போது தெரிந்தேன். 1980களின் முற்பகுதியில் தாமரைச்செல்வியைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பியிருந்தபோதும் அவரைச் சந்திக்க முடிந்தது 1990களின் நடுப்பகுதியில்தான். ஒரு மத்தியானப் பொழுதில், நானும் யோகேந்திரநாதனும் அவருடைய வீட்டுக்குப் போயிருந்தோம். அகதிகள் பெருகியிருந்த காலம் அது. அவர்கள் வீட்டில் எப்போதும் பெரும் சமையல்தான் நடக்கும். எல்லோரையும் வரவேற்கிற, விருந்தோம்புகின்ற விவசாயிகளின் வீட்டில் நடக்கின்ற சமையல் அது. எவ்வளவுதான் பெரிய சமையல் என்றாலும், தினமும் அப்படி சமைப்பதென்றாலும் சலிப்போ சோர்வோ ஏற்படுவதில்லை. அதற்குப்பின்னர் பல ஆண்டுகள் அவருடைய வீட்டில் பார்த்திருக்கிறேன், என்னவெல்லாமோ மாறியிருந்தாலும் இந்தப் பெரும் சமையல் மாறவேயில்லை. இடம்பெயர்ந்து அவருடைய குடும்பம் அகதிநிலையிலிருந்த போதும் இந்தச் சமையல்முறை மாறவேயில்லை.

நாங்கள் காலச்சுவடு வாசகர் வட்டத்தை அக்கராயனில் நடத்தியபோது அநேக கூட்டங்கள் தாமரைச்செல்வியின் வீட்டில்தான் நடந்திருக்கின்றன. புத்தகங்களைப் பரிமாறிக்கொள்வது, அப்போது வெளியாகிக் கொண்டிருந்த சரிநிகர், மூன்றாவது மனிதன், சொல் புதிது போன்ற இதழ்கள் தொடர்பாக கலந்துரையாடுவது என்று ஒரு சிறிய இலக்கிய இயக்கம் தாமரைச்செல்வியின் வீட்டை மையப்படுத்தி நிகழ்ந்தது. அப்போது எல்லோரையும் ஆச்சரியப்படுத்திய விசயம் அவரிடம் நிரம்பியிருந்த கனிவே. மட்டுமல்ல, அந்தக் கனிவுதான், மற்றவர்களுக்கு உதவும் ஒரு இயல்பூக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது. அதாவது இங்கே கனிவு என்பது கருணையாக பண்பு மாற்றமடைந்திருக்கிறது. அகதி வாழ்க்கையில் சனங்கள் துயரப்பட்ட வேளையில், தம்மால் இயலக்கூடிய உதவிகள் அத்தனையையும் செய்தவர் தாமரைச்செல்வி. அவருடைய குடும்பம் கூட்டுக் குடும்ப அமைப்பைக் கொண்டது என்பதால் இந்த உதவிகளை ஒரு மையப்படுத்திச் செய்வற்கு அவருக்கு வாய்த்தது. அவருடைய குடும்ப உறுப்பினர்கள் பல கண்டங்களில் வாழ்ந்தாலும் உள்ளர்த்தத்தில் அவர்கள் இன்னும் கூட்டுக்குடும்பத்தின் பிரதிநிதிகளே.

இதை ஏன் இங்கே குறிப்பிடுகின்றேன் என்றால், அவருடைய கதைகளில் இந்தக் குடும்ப அமைப்பின் தன்மையை நாம் காணமுடியும். இந்தக் கூட்டுக் குடும்பத்தின் மனம், அதன் பங்கேற்பு போன்றவற்றின் வெளிப்பாடாகவும் அவை இருக்கின்றன. குறிப்பாக அவருடைய "பச்சை வயல் கனவு" என்ற நாவல் அவருடைய குடும்பத்தின் கதையைச் சொல்வது போன்ற ஒரு படைப்பே. அத்துடன் கிளிநொச்சி என்ற அமைவிடத்தின் உருவாக்கம், அந்த அமைவிட உருவாக்கத்தின் காலகட்டம், சூழல் என்பவற்றையும் அதனோடிணைந்த வரலாற்று விசயங்களையும் அந்த நாவல் பதிவு செய்கிறது. இது ஒரு விவரணப்பாங்கான நாவல் வகை. பொதுவாகவே தாமரைச்செல்வியின் பிற கதைகளிலும் விவரணப் பாங்கை அவதானிக்கலாம். ஆனால், இந்த விவரணப்பாங்கினூடே தன்னுடைய கலையாக்கத்தை அவர் ஏற்படுத்திவிடுகிறார் என்பதுதான் இங்கே கவனிக்க வேண்டியது. பிரச்சாரத் தொனியற்ற, இயல்புக்கு முரணான வகையில் தன் எழுத்துகளை தாமரைச்செல்வி முன்வைப்பதில்லை என்பது கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான விசயம். உள்ளோட்டங்கள், உள்ளடுக்குகள் அதிகமில்லாத எளிய கதைகளில், எளிமையான கூறுமுறையில் அவர் உணர்த்த முனையும் விசயங்களான அறமே முக்கியம் பெறுகிறது. சரி, ஆனால் இந்த அறம் எதன்பாற்பட்டது என்று யாரும் கேட்கலாம். வாழ்க்கையின் சவால்களை அடைவதற்கு சமனிலையற்ற முறையில் மனிதரை மனிதர் பயன்படுத்தும் அரசியலையும் அந்தச் செயல்முறையையும் எதிர்க்கும் அறம் இது என்பது தாமரைச்செல்வியின் நிலைப்பாடு. இந்த அறத்தை வலியுறுத்தியே அவர் தன்னுடைய படைப்புலகத்தை இயக்குகிறார். அன்பையும் கருணையையும் இரக்கத்தையும் ஆதாரமாகக் கொண்ட ஒருலகத்தைக் காண்பிப்பதன் மூலமாக தான் சுட்டுகின்ற அறத்தை எட்டலாம் என்பது அவருடைய நம்பிக்கை. இதற்காக அவர் கனிவையும் நேசத்தையும் தன் கதைகளில் முடிவுறாமல் எழுதிக் கொண்டிருக்கிறார். அவருடைய பெரும்பாலான கதைகளில் அவருள் ஓடிக் கொண்டிருக்கும் இந்தக் "கனிவு" என்ற குருதிதான் "அறம்" என்ற அடையாளத்தை முன்னிறுத்தத் துடிக்கிறது.

**உ**

**வ**ன்னி விவசாயிகளின் வாழ்க்கை பொதுவாக இரண்டு வகைப்பட்டன. ஒன்று ஒட்டிசுட்டான்,



படிப்பகம்

www.padippakam.com



நெடுங்கேணி, அலம்பில், குமுழமுனை, புதுக்குடியிருப்பு போன்ற பழைய வன்னி விவசாயிகளின் வாழ்க்கையும் அவர்களின் பிரச்சினைகளும். இது காடுசார்ந்த விவசாயம். சேனைப் பயிர்ச் செய்கையும் இங்கே முக்கியமான ஒரு அம்சம். கிளிநொச்சி போன்ற நீர்ப்பாசனக் குடியேற்றங்களின் விவசாயமும் அந்த விவசாயிகளின் வாழ்க்கையும் அவர்களுடைய பிரச்சினைகளும் இன்னொரு வகையானவை. இந்த இரண்டிற்கும் இடையில் சில ஒற்றுமைகள் இருந்தாலும் தன்மை வேறுபாடுகள் உண்டு. ஆனால், விவசாய வாழ்க்கை, விவசாயக்கூலிகளின் பிரச்சினைகள் எல்லாம் ஏறக்குறைய ஒரே அடிப்படையைக் கொண்டவை என்பதும் உண்மையே. தாமரைச்செல்வியின் பெரும்பாலான கதைகள் கிளிநொச்சி விவசாயிகளின், விவசாயக் கூலிகளின் பிரச்சினைகளை மையப்படுத்தியவை. இந்தப் பிரதேசத்தில் போர் தீவிரமடைந்தபோது இங்கிருந்த மக்களின் கதி என்னவாகியது, அப்போது இந்தப் பிரதேசம் எப்படியாகியது என்பதை ஒரு காலகட்டம்வரையில் அவரும் ஒரு அகதியாக வாழ்ந்து எழுதினார். இடம்பெயர்ந்து அகதிகளாக இருக்கும் மக்களின் வறுமை, நிலத்தையே ஆதாரமாகக் கொண்ட விவசாயிகள் அந்த நிலத்தை இழக்கும் போது சந்திக்கின்ற அவலம் எப்படியானது என்பதை இந்தக் கால கட்டத்தில் அவர் எழுதிய கதைகள் வெளிப்படுத்துகின்றன. இதில் முக்கியமான சில கதைகள் உண்டு. அதிலும் முக்கியமானது "இடைவெளி" என்ற சிறுகதை. இந்தக் கதையை கவிஞர் சிவசேகரம் மொழிபெயர்த்திருக்கிறார். செல்வா கனகநாயகம் தொகுத்த ஈழ இலக்கியத் தொகுப்பில் இந்தக் கதை இடம் பெற்றுள்ளது.

இந்தக் கதையை "உதிரிப்பூக்கள்" மகேந்திரன் "1996" என்ற பெயரில் ஒரு குறும்படமாக்கியுள்ளார். முதிய விவசாயி ஒருவர் இடப்பெயர்வினால் சந்திக்கின்ற உள நெருக்கடியே கதையின் மையக்கரு. இதைப் போல தாமரைச்செல்வியின் வேறு சில சிறுகதைகளும் குறும்படங்களாக்கப்பட்டிருக்கின்றன. இதில் "வேலி" என்ற குறும்படம் முக்கியமானது. ஈழத்துத் திரைப் படங்களை எப்படி உருவாக்கலாம், அவற்றுக்கான கதைகள் என இயக்குநர் மகேந்திரனுடன் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார், "தாமரைச் செல்வியின் கதைகள் திரைப்படங்களுக்குரிய கட்டமைப்பையும் கதை கூறு முறையையும் கொண்டுள்ளன. அவருடைய சித்திரிப்பு முறை முக்கியமானது. பாத்திரங்களையும் சூழலையும் இணைத்து கதையை உருவாக்குவதில் தாமரைச்செல்வி கையாளும் உத்தி ஒரு திரைக் கதையாசிரியருக்கு நிகரானது. இந்தமாதிரி நிறையக் கதைகளை மலையாளத்திலேயே அதிகமாகக் காணமுடியும்" என்று. தாமரைச்செல்வியின் "பாதை", "பாலம்" போன்ற கதைகள் திரைக்கதைக்குரிய கூடுதல் அமைவைக் கொண்டவை என்றும் சொன்னார் மகேந்திரன். தாமரைச்செல்வியின் பெரும்பாலான கதைகளை விரும்பிப் படித்தார் மகேந்திரன். மட்டுமல்ல, ஈழத்துச் சிறுகதைகள், நாவல்கள் எனப் பலற்றையும் படித்திருக்கிறார் அவர். தாமரைச்செல்வியின் மேலும் சில கதைகளைப் படமாக்க வேண்டும் என்ற ஆவல் அவருக்குண்டு.

வாழ்க்கையின் அடிப்படைகளை இலக்கியமாக்கும்போது அந்த அடிப்படைகளின் தர்மங்களை தவறாது கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதுகின்றவர் தாமரைச்செல்வி. ஆனால், இதை அவர் எங்கும் சொன்னதுமில்லை பிரகடனப்படுத்தியதுமில்லை. அவருடனும் அவருடைய குடும்பத்தினருடனும் அறிமுகமாகத் தொடங்கியபின்னர் இதனை அவதானித்திருக்கிறேன். எதிலும் பிரிந்து நிற்பதுமில்லை. எதிலும் முழுமையாகத் தோய்ந்து விடுவதுமில்லை என்ற ஒரு இடைநிலை அணுகுமுறை தாமரைச்செல்வியினுடையது. ஒரு படைப்பாளி கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை இது என்பதைப் பின்னர் அதைப் புரிந்து கொண்டேன். கோட்பாடுகள் நிறம்மாறி, அமைப்புகள் ஒளி மங்கிப் போனாலும் என்றும் பிரகாசம் குறையாத ஒரு நட்சத்திரமாக இருக்கக் கூடிய அணுகுமுறை இது. அதற்காக இதைப் பட்டும் படாதிருத்தல் என்று அர்த்தப் படுத்திவிடமுடியாது. காலத்தில் பின்தங்கி விடாத நிலை இது. இத்தகைய நிலைதான் இலக்கியத்தின் அடிப்படையாகவும் இருக்கமுடியும். உலகின் மாபெரும் இலக்கியங்களின் உள்ளோட்டம் அல்லது அடிப் படை இதுவாகத்தானிருக்கிறது. என்றபடியால்தான் அவை காலத்தால் பின்னகர்த்த முடியாதபடிக்கு இயற்கையைப் போல என்றும் புதுமை குன்றாமலும் நிலை பெயராமலும் இருக்கின்றன.

இதுவரையில் சிறுகதைத் தொகுதிகளும் நாவல்களுமாக ஒன்பது புத்தகங்கள் வரையில் எழுதியுள்ள தாமரைச்செல்வியின் எழுத்துகள் நம் சமகாலப் புனைவுலகத்தின் யதார்த்தமா அல்லது யதார்த்த உலகத்தின் புனைவா என்று நம்மைக் கேட்கவைக்கின்றன. ஒன்றையொன்று இடையீடு செய்யும் வகையில் ஒன்றுடன் ஒன்று கலந்திருப்பதாக இவற்றைப் பின்னும் கலையைச் செய்து கொண்டிருக்கிறார் தாமரைச்செல்வி. இனி வரும் நாட்களிலும் அவர் யதார்த்தவாதத்தில் இன்னும் செழுமையான கதைகளை எழுதக்கூடும் என்றே நம்பகின்றேன். அவருடைய மனது நிரம்ப சொல்ல வேண்டிய கதைகளிருக்கின்றன. இப்போது அந்தக் கதைக்ளை எழுதுவதற்குப்பதிலாக அவர் தன் னளவில் தனக்கு வசப்பட்ட கனிவின்படி உதவும் பணிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். வழமையைப் போலவே எந்த அமைப்புகளையும் எந்த அணிகளையும் சாராமல், தன்னளவில் உதவிக் கொண்டிருக்கிறார், பாதிக்கப்பட்ட சனங்களுக்கு. இதிலும் அந்தக் கூட்டுக் குடும்பத்தின் அம்சமே உண்டு. ஆக, இனி வரும் அவருடைய கதைகளும் இந்தக் கனிவினதும் அதைக் கோரும் நிலையினதும் வெளிப்பாடுகளாகவே இருக்கக்கூடும். எப்படியோ சில நிறங்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுத்தான் விடுகின்றன. சிலருக்கு கடுமையான நிறங்கள். சிலருக்கு மென்நிறங்கள். தாமரைச்செல்வியின் நிறம் மென்நிறமாகவே இருக்கிறது. அது பசிய மென்நிறம். ●



படிப்பகம்

www.padippakam.com







# விம்பம்

## தமிழ் குறுந்திரைப்பட விழா - 2009

2009 ஆண்டுக்கான "விம்பம்" தமிழ்க் குறுந்திரைப்பட விழா, நவம்பர் 28ஆம் திகதியன்று கிழக்கு லண்டனில் அமைந்துள்ள Trinity Centreஇல் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இது, விம்பத்தின் ஐந்தாவது குறுந்திரைப்பட விழாவாகும். மண்டபம் நிறைந்த கூட்டம் மகிழ்ச்சியைக் கொடுத்தது. போட்டிக்கென வந்திருந்த 31 படங்களில், முதல் சுற்றில் 19 படங்கள் தெரிவாகின. இரண்டாவது சுற்றில், அந்தப் 19 படங்களுள், 11 படங்கள் மட்டும் தெரிவாகி, விழாவில் திரையிடப்பட்டன. அவற்றுடன், யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் சென்ரரில் இருந்து வந்திருந்த "இவர்கள் வாழ்வும் இனிதே





அமைய...; எனும் 30 நிமிட ஆவணப் படமும் திரையிடப்பட்டது.

சம்பிரதாயபூர்வமாக மங்கள விளக்கேற்றியபின் போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும், வன்முறைகளினாலும் உயிர்நீத்த அனைத்து மக்களுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழச்சிகள் ஆரம்பமாகின. ஊடகவியலாளர்களான நடா மோகன், நவஜோதி யோகரட்ணம் நிகழ்சிகளை தொகுத்து வழங்கினர்.

அறிமுக உரையை வழங்கிய லண்டன் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜெயஅழகி அருணகிரிநாதன் தனது உரையில், இன்றைய இளம் தலைமுறையினர் தமது சமகால அநுபவங்களையும், உள உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் பதிவு செய்து கொள்ள குறுந்திரைப்படம் என்ற இந்த ஊடகத்தை மிக நேர்த்தியாகக் கையாண்டு வருகிறார்கள் என்பதினை அவர்களினது படைப்புகளிற்கூடாகக் காண முடிகிறது என்று குறிப்பிட்டுப் பேசினார். திரைப்படம் சார்ந்த

### போட்டி முடிவுகளும் சில குறிப்புகளும்

தொழில்நுட்பங்களை நன்கு கிரகித்துக் கொண்டுள்ள இவ்விளம் படைப்பாளிகளின் திறமை வியக்க வைக்கிறது என்றார்.

தொழிலதிபரும் சமூகசேவையாளருமான திரு. எஸ். செல்வராஜா , இவ் விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். கலை இலக்கியங்களில் ஆர்வம் மிக்க இவர், விம்பத்தின் செயற்பாடுகள் குறித்துப் பாரட்டிப் பேசுகையில் இவர்களது அரிய முயற்சிக்குத் தன்னுடைய ஆதரவு என்றும் இருக்கும் எனவும் உறுதியளித்தார்.

தமிழ்க் குறுந்திரைப்படங்கள் பற்றிய மீளாய்வினை நிகழ்திய "எதுவரை?" சஞ்சிகை ஆசிரியர் எம். பௌஸர், "தமிழ்க் குறும்படத் தயாரிப்பாளர்களின் உழைப்பினை ஊக்குவிக்கவும் கௌரவிக்கவும், தமிழில் குறும்படங்களுக்கான உரையாடல் களமாகவும், விளைநிலமாகவும் குறும்பட நிகழ்ச்சியை விம்பம் நடத்திவருகின்றது. நமது பன்முகமான பண்பாட்டுத் துறையில் திரைப்பட உருவாக்கம், சாதனம் வகித்து வரும் பங்கு அளப்பரியது எனவும், "தமிழில் குறுந்திரைப்படமென்பது இன்று முக்கிய, புறக்கணிக்க முடியாத துறையாக வந்துவிட்டது. தமிழ்ச் சூழலில் குறுந் திரைப்படத்தின் உருவாக்கம், நல்ல தமிழ் மொழித் திரைப் படங்களுக்குப் பங்காற்றும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. விம்பம் போட்டிக்கென வந்திருந்த படங்கள் இதைக் கோடிட்டுக்காட்டி நிற்கின்றன என குறிப்பிட்டுப் பேசினார்.



படிப்பகம்

www.padippakam.com



**திரையிடப்பட்ட படங்களின் விபரம்:**

*01.* பள்ளிக்கூடம் - *(30.00 நிமி.)* கே. ஸ்ரீசுந்தவேள் *(இலங்கை)*

*02.* The Magical Hole - *(08.00 நிமி.)* சீவந்தி *(இலங்கை)*

*03.* Ash Tray - *(05.30 நிமி.)* ஸ்ரீநிவாஸ் கவிநயம் *(இந்தியா)*

*04.* முதல் நாள் - *(08.00 நிமி.)* ஜே. சைலஜன் *(இலங்கை)*

*05.* Knives - *(08.00 நிமி.)* ஜே.பி.ஜே. அனந்தராமன் *(இலங்கை)*

*06.* The Noon - *(07.00 நிமி.)* முஜீன் *(இலங்கை)*

*07.* பசி - *(09.30 நிமி.)* ஜே. டீ. இமயவர்மன் *(இந்தியா)*

*08.* சருகு - *(03.00 நிமி.)* வி. அநுஜா *(பிரான்ஸ்)*

*09.* Vanni Mouse - *(09.00 நிமி.)* "தமிழியம்" சுபாஸ் *(நோர்வே)*

*10.* Still Life - *(14.30 நிமி.)* சி. குவேரா ரூ நெல்சன் *(இங்கிலாந்து)*

*11.* The Body - *(13.00 நிமி.)* பிரநீத் ஜீவந்தா *(இலங்கை)*

*12.* இவர்கள் வாழ்வும் இனிதே அமைய...(ஆவணப் படம்) *(30.00 நிமி.)* யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் சென்ரூ *(இலங்கை)*

**போட்டி முடிவுகள்:**

**சிறந்த பிரதி:** குவேரா ரூ நெல்சன் சிவலிங்கம் - (Still Life) London

**சிறந்த ஒளிப்பதிவாளர்:** வி. ஜனேஷன் *(சருகு)* France

**சிறந்த தொகுப்பாளர்:** எஸ். மனோஹரா (Knives) Sri Lanka

**சிறந்த நெறியாளர்:** வி. அனுஜா *(சருகு )* France

**சிறந்த குழந்தை நட்சத்திரம்:** ஃபிரான்ஸிஸ் சஞ்ஜிகா *(பள்ளிக்கூடம்)* - Sri Lanaka















**சிறந்த நடிகை:** புத்தினி டினுஷிகா (The Body) - Sri Lanka

**சிறந்த நடிகர்:** நெல்சன் சிவலிங்கம் - (Still Life) London

**சிறந்த படம் (Exile):** Still Life - குவேரா ரூ நெல்சன் சிவலிங்கம் - London

**சிறந்த படம் (Overall):** The Body - ப்பிரநீத் ஜீவந்தா - Sri Lanka

**சிறந்த படம்** *(பார்வையாளர்கள் வாக்கெடுப்பில்):* பசி - செ. தே. இமயவர்மன் - India

**நினைவு விருது வழங்கியவர்கள்:**

திருமதி சிவகெங்கை நாகலிங்கம் நினைவு விருது, வழங்கியவர் - திரு. நா. சபேசன் *(சிறந்த பிரதி)*

திரு ஏ.ஜே.கனகரட்ணா நினைவு விருது, வழங்கியவர் - திரு. ஆர். பத்மநாப ஐயர் *(சிறந்த ஒளிப்பதிவாளர்)*

திரு எஸ்.யோகராஜா நினைவு விருது, வழங்கியர் - திருமதி எஸ். யோகராஜா *(சிறந்த நெறியாளர்)*

கலையொளி முத்தையா பிள்ளை நினைவு விருது, வழங்கியவர் - திருமதி மீனாள் நித்தியானந்தன் *(சிறந்த குழந்தை நட்சத்திரம்)*

திரு கே .கந்தசாமி நினைவு விருது வழங்கியவர் - "விம்பம்" ஆதரவாளர் *(சிறந்த நடிகர்)*

திரு ஏ. பொன்னையா நினைவு விருது, வழங்கியர் - திருமதி ஏ. ஜெயஅழகி *(சிறந்த படம்)*

திரு எஸ் .சிவபாதசுந்தரம் நினைவு விருது, வழங்கியர் — திரு எஸ் .பேரின்பநாதன்

சிறந்த படம் *(பார்வையாளர்கள் தெரிவு)*



படிப்பகம்

www.padippakam.com

இதழ் -01

இலக்கிய சஞ்சிகை ஒன்றுக்கான வெற்றிடத்தையும் தேக்க நிலையயையும் உடைக்கும் விதமாக "எதுவரை" வெளிவந்துள்ளது. இது மூன்றாவது மனிதன் சஞ்சிகையின் இன்னொரு தொடர்ச்சியா அல்லது வேறொரு பரிமாணமா என்பதெல்லாம் இச் சஞ்சிகையின் வருகையினை வாசகர்களாகிய நாங்கள் உறுதிபடுத்தி ஆதரவளிப்பதன் மூலமே கண்டு கொள்ள முடியும்.

இதன் உள்ளடக்கம் இலங்கையின் இன்றைய அரசியல், களநிலவரங்களை தீவிரமாக பேசுகின்றது, இது தணிக்கை காரர்களின் கையில் அகப்பட்டிருந்திருந்தால் சில வேளை நமது கைகளுக்கு கிடைக்காமல் போயிருக்கும் அவ்வாறாக பக்கம் பக்கமாக மாறிமாறி அரசியலை கட்டுரைகள் பேசுகின்றன. ஒரே தன்மையான கட்டுரைகள் ஒன்றிரண்டை தவிர்த்திருக்கலாம் எனினும் ஈழத்தின் இன்றைய அரசியலை பிரதிபலிக்க வேண்டிய கட்டாய தேவையும் ஒரு பக்கம் இருக்கின்றது என்ற யதார்த்தமும் புரிந்து கொள்ளப்பட வேண்டியது

நிர்மலா, பீ.ஏ. காதர், ஜமாலன், அ.மார்க்ஸ் ஆகியோரின் கட்டுரைகளின் அடிநாதம் சமகால அரசியல். இவற்றுக்கு அப்பால் புனைவு சார்ந்த படைப்புகள் இருக்கினறன அவையும் கட்டுரைகளின் மறு வடிவங்கள் தான். சோபா சக்தியின் கதைப் பிரதி, மற்றும் சித்தாந்தன், சி. ஜெயசங்கர் ஆகியோரின் கவிதைகளும் இதனையே போதிக்கின்றன. இனிவரும் காலங்களில் புனைவு சார்ந்த படைப்பாளிகளுக்கு சற்று முன்னுரிமை அளிப்பது சிறந்தது என்றே படுகிறது.

ஒரு சஞ்சிகைக்காக இவ்வளவு கனதியானதும், பெறுமதியானதும் கடதாசியினை பயன்படுத்த தேவயில்லை சாதாரண கடதாசியினை பயன்படுத்தி செலவினை குறைத்துக் கொள்வது சாலச் சிறந்தது. இவற்றுக்கெல்லாம் அப்பால் இலங்கை மக்கள் அனைவரினதும் அடிப்படை சுதந்திரம், உரிமை ஜனநாயகம் என்பன நிலை நாட்டப்பட்ட வேண்டிய தேவை குறித்த விவாதங்களை முன்னெடுத்துச் செல்ல எதுவரையின் வருகையை நாம் வரவேற்போம் தொடர்ந்தும் எமது பங்களிப்புக்களை செய்வோம்.

**அலறி, மருதமுனை**

எதுவரை ஏப்ரல் -மே இதழ் கசப்பும் கடும் துன்பமும் -ஆசிரியர் தலையங்கம் அருமை. எல்லாம் முடிந்து போயிற்று புலிகளுக்கு பிறகு அ.மார்க்ஸின் கட்டுரையைத்தவிர வேறெந்த அரசியல் கட்டுரைகளும் பெரிய பாதிப்பினையும் படிப்பினையும் தரவில்லை

சோபாசக்தியின் பரிமளகாந்தன் பல இடங்களிலும் வாழ்கின்றார் சிறுகதையில் பரிமாகாந்தனை டொனாசிதான் போட்டது என்ற செய்தி காந்தியை போட்ட கோட்சேபோல் எனக்குள் அறுத்தது.

கவிதைகள் சொல்லும்படியாக இல்லை அரைத்த மாவையை அரைக்கின்றன. தீபச்செல்வனின் கவிதை மீண்டுமொருதடவை வாசிக்கவைத்தாலும் அவர் புதிய தளத்தை கண்டடைய வேண்டும். எப்படி இருப்பினும் ஏதுவரை மூன்றாவது மனிதனைத் தொடவில்லை அதற்கான வாசலை கண்டடைய வேண்டும், அரசியல் அஸ்தமித்து விட்டது.

**பு. அரேந். ஆரையம்பதி**

மூன்றாவது மனிதன் சஞ்சிகையின் மூலம் தனித்துவ அடையாளமும் உயர்வான இலக்கிய அரசியலும் கொண்ட ஆளுமையான ஒரு பதிவை இலங்கையின் இலக்கியப் பரப்பில் ஏற்படுத்தியதோடு முஸ்லிம் குரல் பத்திரிகையின் மூலம் முஸ்லிம் சமூகத் தனித்துவம், இருப்பு என்று முஸ்லிம் சமூக அரசியலை மிக விரிவான தளங்களினூடாக இலங்கையில் பதிவு செய்த பௌசர் அவர்களின் இன்னுமொரு இலக்கிய அடையாளத்துவம் எதுவரை என்ற இச் சஞ்சிகை ஆகும். எதுவரை என்ற ஒரு அச்சத்தை இலங்கையின் யுத்த முடிவுகள் உணர்த்துவதாகவுள்ளது. எதுவரையின் உள்ளடக்கமும் இவ்வாறான வெளிப்பாட்டு வழிமுறைகளிலான கட்டுரை அரசியலேயே இறுதிவரை பதிவு செய்திருக்கிறது.

இன்றுள்ள ஊடக அச்சுறுத்தல் மிக வெளிப்படையான ஊடக அடக்கு முறைகளைத் தோற்றுவிக்கும் ஒரு சூழலில் எதுவரை என்ற சஞ்சிகையின் வருகையை நாம் வரவேற்பதோடு அதன் தொடர்ச்சியையும் பாதுகாத்து தொடரச் செய்யும் ஒரு ஒழுங்கையும் ஏற்படுத்தும் பங்களிப்பினை நாம் ஒவ்வொருவரும் உணர்வன்புடன் செய்தல் வேண்டும்.

கடல்கடந்த மண்ணில் தனக்குள்ள பல்வேறு உழைப்புகளுக்கு மத்தியில் எதுவரை சஞ்சிகையை உருவாக்கியிருக்கும் அர்ப்பணிப்பினை நாங்கள் மதிக்கின்றவர்களாக இருப்பின் இச்சஞ்சிகையின் வாசிப்புத் தளத்தினை விரிவுபடுத்தி இச்சஞ்சிகையின் வருகையைத் தொடரச் செய்யும் எழுத்தாக்கங்களின் ஊடாக பல வழிமுறைகளையும் ஏற்படுத்த வேண்டும் என்றும் நான் கருதுகிறேன்.

இன்றைய நவீன வடிவமைப்பு சிந்தனைகளையும், நுட்பங்களையும் மிக உயர்ந்த அளவு பயன்படுத்தி இச்சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கத்திலும் வடிவமைப்பு அழகியலை வெளிப்படுத்துவதில் வழமைபோல் பௌசர் மிகஉயர்ந்த சஞ்சிகை நாகரீகத்தினை முன்வைத்திருக்கிறார் என்பதை இச்சஞ்சிகையும் மிக அழகாக முன்வைத்துள்ளது.

வடிவமைப்பில் உள்ள உயர்ந்த வெளிப்பாட்டுத் தன்மை போலவே சஞ்சிகையில் உள்ள அனைத்துப் பிரதிகளும் மிக உயர்ந்த உள்ளடக்க அழகியலை கட்டுரை, கவிதை, சிறுகதை, புனைவுகள் என்று இலக்கிய அரசியலை பதிவுசெய்திருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினையின் அந்திம காலங்களின் யுத்த அரசியலையும், விடுதலை இயக்கத்தின் எதிர்வினைகளையும் பதிவு செய்கின்ற கட்டுரை இலக்கியங்களையே எதுவரை சஞ்சிகையின் முதலாவது வெளியீடு வெளிப்படுத்தியிருக்கின்றது. இதில் சிறுபான்மையினரின் ஒருமைப்பாடு இன்றைய தேவை எனும் நிர்மலாவின் கட்டுரையும், புலிகளுக்கு பிறகு அ.மாக்ஸின் கட்டுரையும், கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் பிரச்சினைக்கான தீர்வு என்ற எஸ் ரீ.ஆர் இன் கட்டுரையும், தமிழீழமும் தமிழர்களும் உலகமய காலனீயத்தின் சோதனை விளையாட்டுகள் ஜமாலன் எழுதிய கட்டுரையும், மிக முக்கியமான அரசியல், யுத்த இருப்புக்களை நிதானமாக பேசியிருப்பதோடு மிக உயர்ந்த குரல்களையும் தனக்குள்ளிருந்து வெளிப்படுத்துகின்றன.

ஆனாலும் இக்கட்டுரைகளின் வாசிப்பினை முஸ்லிம் சமூகத்தின் மீது ஏற்றி வைத்து வாசிப்பு செய்வதில் முஸ்லிம் சமூகம் குறித்த விடுதலைப் புலிகளின் கடந்தகாலப்



படிப்பகம்

www.padippakam.com



போக்குகள் பல இடங்களில் இடைநிறுத்துகின்றன என்பதும் இக்கட்டுரைகளின் உள் அர்த்தமாக உணரப்படுகிறது.

ஜுனைதா ஷெரீபின் பெரிய மரைக்கார் சின்னமரைக்கார் நாவல் குறித்து இலக்கிய மதீப்பிடு செய்திருக்கும் எம்.ஐ.எம். றவூபின் "பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார்" தனிவரைவா? இனவரைவா? கட்டுரை சம்பந்தமான எழுத்துக்கான மிகச் சிறந்த உதாரணம் என்ற உபதலைப்புடன் எழுதப்பட்டிருக்கிறது. இலக்கியச் செழுமையான செயற்பாடுகளையும், எழுத்துக்களையும் இதன் மூலம் முன்வைத்திருக்கும் எம்.ஐ.எம்.றவூப் சில இடங்களில் அவருடன் அவரே முரண்படும் எழுத்துக்களையும் இக்கட்டுரையின் உள்ளே பேசுகிறார் என்பதை என்னால் புரியமுடிகிறது.

பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் நாவலைக் குறிப்பிடும் போது ஓரிடத்தில் "கதைக் கணங்கள், புனை தருணங்கள் ஷெரீபின் பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் புனைப் பிரதியில் இல்லைதான் என்றபோதும் நிராகரிக்கப்பட்ட எழுத்து வகைக்குள் இப்பிரதியை அடக்க முடியாது என்பது எனது கருத்தாகும்." என்று குறிப்பிடும் றவூப் இன்னுமொரு இடத்தில் தனது கருத்துடன் தானே முரண்படுவது போல் இவ்வாறு சொல்கிறார்.

"நான் ஏற்கனவே சொன்னது போல ஈழத்து நவீன காலத்து மனோபலத்தினால் நிராகரிக்கப்பட்ட எழுத்துக்கு உதாரணமாக ஜுனைதா ஷெரீபின் எழுத்தையும் அங்கிகரிக்கப்பட்ட எழுத்துக்கு உதாரணமாக கவிஞர் சோலைக் கிளியினது எழுத்துக்களையும் சொல்லலாம். இக்கருத்தில் அங்கிகரிக்கப்பட்ட எழுத்துக்கு உதாரணமாக சோலைக் கிளியின் எழுத்தைக் குறிப்பிடுவதில் நான் முரண்படவில்லை, மாறாக நிராகரிக்கப்பட்ட எழுத்துவகைக்குள் இப்பிரதியை அடக்க முடியாது என்று கருத்தை கூறிய அவரே சில நிமிடங்களுக்குள் நிராகரிக்கப்பட்ட எழுத்துக்கு உதாரணமாக கொள்வதன் மூலம் முன்னுக்குப் பின் முரண்படச்செய்கிறார்.

"நான் எம்.ஜி.ஆரும் புண்டையும் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நடந்தேன்" என்று முடியும் ஷோபா சக்தியின் எம்.ஜி.ஆர் கொலை வழக்குச் சிறுகதையின் மொழிப் பயன்பாடு இன்னும் 20 வருடங்களாகக் கடந்து வாசிப்புச் செய்யக் கூடிய ஒரு எழுத்துப் பண்பாட்டை இப்போதே படம் போடுகிறது. ஷோபா சக்தியின் சிறுகதையை மொழிக் கையாள்கையின் ஆளுமையோடு நோக்குவது போல், தீரன் ஆர்.எம். நௌசாத் எழுதியது "விட்டு விடுதலையாகி" எனும் சிறுகதையை கதை செல்லும் நுட்ப ஆளுமையாகவும் மதிப்பிடுகிறேன். இவ்வாறு எதுவரை சஞ்சிகையின் உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்புக் குறித்து நாம் விரிவாகப் பேசவேண்டிய இலக்கிய அரசியல்கள் எமக்குள் பல வழிகளையும் திறந்துவிடுகிறது. இத்தகைய காத்திரமான ஒரு இலக்கிய அரசியலை பேசும் எதுவரையின் குரல் நின்றுவிடாது அதனை யாரும் நசுக்கிவிடாது தொடரும் வல்லமைகளை கொள்ள வேண்டும்.

**நவால் சௌபி சம்ந்தமருது**

எதுவரை சஞ்சிகை படித்தேன். புகலிடச்சூழலில் குடும்பம், இருத்தலுக்கான சம்பாத்தியம், சமூகச்செயற்பாடு போன்ற சுமைகளைத் தாண்டி இலக்கிய ஆர்வலர்களின் தாகத்தை தணிக்கும் பொருட்டு ஒரு சஞ்சிகையை கொணர்ந்துள்ளீர்கள். இதற்கு நன்றி சொல்லி, தங்களை மலினப்படுத்த இயலவில்லை. சமூகங்களின் நல்லிணக்கமும் பல்கூட்டுச்செயற்பாடும் கனவுத்தளத்திலிருக்கும் இத்தருணத்தில் அதை சாத்தியமாக்கத்துடிக்கும் சஞ்சிகையின் உன்னத நோக்கம் நெகிழ்வைத்தருகிறது.

சஞ்சிகையின் பின்புலம் எதுவென்பதை சட்டெனப் புரியும் வண்ணம் கட்டுரைகளும், திறனாய்வுகளும், ஆய்வுகளும் ஆரோக்கியமாக வந்திருக்கின்றன. அவை காத்தரமான விவாதங்களுக்கும், கருத்துப்பகிர்வுகளுக்கும் நம்மை இட்டுச்செல்லும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

நிர்மலாவின் சிறுபான்மையினரின் ஒருமைப்பாடு இன்றை தேவை கட்டுரை காலத்தின் குறிப்பறிந்து எழுதப்பட்ட நல்லதொரு படைப்பு. இன ஒருமைப்பாடு என்பது வெறும் அறிக்கை ஆய்வுகளிலும், குழுக்களின் பயிற்சிப்பட்டறைகளிலும் குறுகிப்போன சூழலில், நிஜமான இன நல்லுறவு என்பது மனங்களின் தூய்மையிலிருந்து பிறக்க வேண்டும் என்பதை எவரும் மறுதலிக்கமாட்டார். அதை அவாவுறும் பல விடயங்களை சஞ்சிகையில் நாம் வாசிக்க முடிகிறது.

அ.மார்க்ஸின் எழுத்தில் விரியும் தேடலும் தூரப்பார்வையும் ஆழமானது. போர் அழிவுகளுக்கு மட்டுமல்ல ஊழல்களுக்கும் வித்திட்டுள்ளது என்ற அவர் வார்த்தைகள் எவ்வளவு சத்தியமானது.

ஊழலைச் சொல்லப்போய்த்தான் லசந்த என்ற பத்திரிகையாளனை இழந்திருக்கின்றோம் இன்னும் சிலரை நாடு கடத்தி அகதிகளாக அலைய வைத்துள்ளோம்.

எதையும் கண்டு கொள்ளாமல் எல்லோர் முதுகையும் சொறிந்து கொண்டு வாழத்தெரிந்தவன் மட்டுமே இங்கு வாழலாம் என்ற நிலை வந்து விட்டது. அனாரின் கவிதைகள் வர்ணக்கலவையாக பல்வேறு அனுபவங்களைத்தந்து வியப்பூட்டுகின்றது.

எனினும் என்வாசிப்பின் அனுபவம், மூன்றாவது மனிதன் தந்த மன நிறைவும், இலக்கியச்செழுமையும் எதுவரை படித்து முடித்த போது ஏற்படவே இல்லை என்பது ஒரு மாபெரும் குறையாகவே மனதை உறுத்திக்கொண்டிருக்கிறது.

**ஓட்டமாவடி அறபாத்**

உங்கள் படைப்புகளை, கருத்துக்களை கணணியில் தட்டச்சு செய்து eathuvarai@gmail.com என்ற எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

படைப்புகளை அனுப்புபவர்கள் தயவு செய்து E.mail. ஊடாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். இதழை உங்கள் நண்பர்கள், நண்பிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள். இளம் படைப்பாளிகளின் படைப்புக்களுக்கு முக்கியத்துவமளிக்கவுள்ளோம். சமூகவியல், பொருளாதாரம் சார்ந்த துறைகளில் அதிக எழுத்துக்களை எதிர்பார்க்கிறோம். நூல் மதிப்புரைக்காக நூல்களை அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்பவும். (ஆ-ர்)



படிப்பகம்

www.padippakam.com

# 'விம்பம்' தமிழ்க் குறுந்திரைப்பட விழா 2009 London

## தரமான சினிமாவிற்கான திடமான தடங்கள்

விம்பத்தின் 5ஆவது தமிழ்க் குறுந்திரைப்பட விழாவிற்கு வந்திருந்த குறுந்திரைப் படங்கள் மிகப் பரந்த தேச எல்லைகளைக் குறித்து நிற்கின்றன. இலங்கை, இந்தியா, கனடா, லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ் ஆகிய நாடுகளிலிருந்து வந்து சேர்ந்த தமிழ்க் குறுந்திரைப்படங்கள், ஆர்வத்தோடு தமிழ்க் குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்படும் நிலையைச் சுட்டிக்காட்டுகின்றன. மிகக் குறுகியகால எல்லைக்குள் ஒரு கருப்பொருளை மையமாகக்கொண்டு, இறுக்கமான கதைப் பிரதியை ஆக்கி, மிகத் தேர்ந்த நடிகர், நடிகைகளைக் கையாண்டு, நுட்பமான கமராத் துணையுடன், குறுந்திரைப்படத்தைத் தயாரிப்பது என்பது, இத்துறையில் காலடி எடுத்து வைப்போருக்குப் புதிய சவாலாகவே அமைகின்றது.

ஆயினும், இலங்கையில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் லண்டன், பிரான்ஸ், நோர்வே ஆகிய நாடுகளிலிருந்தும் நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டு வந்திருந்த தமிழ்க் குறுந்திரைப்படங்கள் மிகப் பிரகாசமான எதிர்காலத்தை உணர்த்தி நிற்கின்றன.

'இந்திய திரைப்பட ஆதிக்கத்தில் இருந்து சிங்கள சினிமா போராடி தனது தனித்துவத்தை நிலை நிறுத்தியிருக்கிறது. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் கதைகள், தொழில்நுட்பம், இயக்குனர்கள், நடிகர்கள், பாடகர்கள் ஆகிய அனைத்துக்கும் சென்னையை நம்பியிருந்த நிலையிலிருந்து பாரதூரமான வளர்ச்சிகளைச் சிங்கள சினிமா கண்டிருக்கிறது.

தர்மசேன பத்திராஜா, பிரசன்ன விதானகே, அசோகா ஹந்தகம ஆகிய சிங்களத் திரைப்பட இயக்குநர்கள் சர்வதேச அரங்கில் இன்று சிங்களத் திரைப்படங்களை முன் நிறுத்தியிருக்கிறார்கள். புகலிட நாடுகளில் மேற்கொள்ளப்படும் திரைப்பட முயற்சிகள் (சில படங்களைத் தவிர) கடந்த சில ஆண்டுகளில் தென்னிந்தியத் தாக்கத்திலிருந்து விடுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட The Body, Knives, The Noon ஆகிய படங்களும் லண்டனில் தயாரிக்கப்பட்ட Still Life படமும், பிரான்ஸில் தயாரான சருகு படமும் குறிப்பிடக்கூடிய படங்களாக அமைந்திருந்தன. தனித்துவமான சினிமாவினை அமைப்பதற்கான திடமான தடங்களை இவ்வாண்டு விழாவில் கலந்துகொண்டிருந்த இலங்கைத் தமிழர்களின் குறுந்திரைப்படங்கள் கொண்டிருக்கின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இலங்கை எழுத்தாளர் தாமரைச்செல்வியின் பசி சிறுகதையை இந்திய படைப்பாளி செ. தே. இமயவர்மன் குறுந்திரைப் படமாக்கியிருந்தார். பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்த இப் பசி படம் பார்வையாளர்கள் தேர்ந்தெடுத்த சிறந்த படத்திற்கான விருதைப் பெற்றுக்கொண்டது என்பது பாராட்டுதற்குரியது.



சிறந்த திரைப் பிரதி
குவேரா & நெல்சன் சிவலிங்கம்



சிறந்த ஒளியமைப்பாளர்
லி. ஜனேஷன்



சிறந்த நெறியாளர்
லி. அனுஜா



சிறந்த குழந்தை நட்சத்திரம்
பிரான்ஸிஸ் சஞ்சிகா



சிறந்த நடிகர்
நெல்சன் சிவலிங்கம்



சிறந்த நடிகை
புத்தினி முனுஷிகா



'பசி' நெறியாளர்
செ. தே. இமயவர்மன



சிறந்த படம் (Exile): Still Life
நெல்சன் & குவேரா சிவலிங்கம்































படிப்பகம்

www.padippakam.com

**இலங்கை, தமிழகம், புலம்பெயர் நாடுகளில் உள்ள சமூகங்களிடையே / கருத்து நிலைகளிடையே தொடர்பையும் ஆரோக்கியமான உரையாடலையும் ஏற்படுத்துவதுடன், முன்னோக்கி செல்வதற்குமான குறைந்தபட்ச முயற்சி!**

## பத்திரிகைகள் / சஞ்சிகைகள் / பிரசுரங்களை வெளியிடல் / நூற்பதிப்பு

சமூகவியல், மானுடவியல், அரசியல், பண்பாட்டு தளங்களில் பங்காற்றக்கூடிய எழுத்துக்களை / ஆவணங்களை நூலுருவாகக் கொண்டு வருதல்.

## நூல் விநியோகமும் நூல் கண்காட்சியும்,

தமிழில் உள்ள தேர்வு செய்யப்பட்ட நூல்கள், பலராலும் விரும்பிப் படிக்கப்படும் நூல்கள், முக்கியமான நூல்களை கிடைக்கச் செய்தல். நூற் கண்காட்சிகளை நடாத்துதல். நூல்கள் தேடுகைக்கான இணையத் தளத்தைக் கொண்டிருத்தல்.

## செயலமர்வுகள் / சந்திப்புக்கள்

முக்கியத்துவமானதும், பேசப்பட்டே ஆகவேண்டியதுமான விடயங்களையிட்டு "இரு மாதத்துக்கு ஒரு முறை" ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் முழுநாள் செயலமர்வு / சந்திப்பு / உரையாடல்களை நடாத்துதல்.



**தெடர்புகளுக்கு:-**
creationofsocities@gmail.com

# சமூகங்களின் செயற்பாட்டகம்

படிப்பகம்